தமிழ்க் கடல் வெளியீடு



# அறப்பளீசுர சதகம்
# குமரேச சதகம்

கா. நமச்சிவாயன்

1932



சாந்தோம், சென்னை.

தமிழ்க்கடல் வெளியீடு

பதிப்பாசிரியர் :

கா. நமச்சிவாய முதலியார்

# அறப்பளீசுர சதகம்

# குமரேச சதகம்

சென்னை :
தமிழ்க்கடல் ஆபீஸ்
சாந்தோம், மயிலை
1932

PRINTED AT
THE 'AURORA PRESS'
MADRAS.

# பொருளடக்கம்

அறப்பளீசுர சதகம் :

குறிப்புரை 1

குமரேச சதகம் :

குறிப்புரை 113



# முன்னுரை :

**அறப்பளீசுர சதகம்** என்பது, அறப்பள்ளி என்னுந் தலத்தில் திருக்கோயில் கொண்டருளியுள்ள சிவபெருமான்மேற் பாடப்பெற்ற நூறு செய்யுட்களை யுடையதொரு நூல். இதனைப் பாடியவர் **அம்பலவாணக் கவிராயர்** என்பவர். இவரைப்பற்றிய வரலாறு நன்கு புலப்படவில்லை.

இப் புலவர், **மதவேள்** என்னும் கொடையாளியை அங்கிதமாகக்கொண்டு, அறப்பளீசுரனை முன்னிலைப்படுத்தி, ஒரு நூறு நீதிகளைக் கூறியுள்ளார். அக் கொடையாளி **மோழைபூபதிக்கு** மகன் என்பது, 'மோழைபூ பதிபெற்ற அதிபன் எம தருமைமதவேள்' (பா. 1) 'மோழை தரும் அழகன் எம தருமைமதவேள்' (பா. 7, 21) என வரும் அடிகளால் தெரிகின்றது. இவன் வேளாண் குலத்தினன் என்பது, 'கங்கா குலத்தலைவன்' (பா. 7) எனவும், 'வேளாள குலதிலகன் ஆகும் எம தருமைமதவேள்' (பா. 73) எனவும் வருவனவற்றால் அறியலாகும். 'கற்ப தரு வாகும் எம தருமை மதவேள்' (பா. 10) என்பதனால் இவன் பெருங் கொடையாளன் எனவும், 'அவனிபுகழ் அருமைமதவேள்' என்பதனால் நல்லிசையுடையவன் எனவும் உணரலாகும்.

மோழை பூபதி என்பது மோழைக் கவுண்டன் எனவும், மதவேள் என்பது (மதவேள் பூபதி) மதவேள் கவுண்டன் எனவும் வழங்கியன என்பாரும் உளர். ‘அருமை மதவேள்’ என்று செய்யுளினைத்தும் உள்ளதனால், இவன்பெயர் ‘அருமைக் கவுண்டன்’ என்றுங் கொள்ளலாம். சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் உள்ள வேளாளர், கவுண்டர் எனக் கூறப்படுவர். பூபதி என்பதும் அவர்க்குரிய பட்டப் பெயர் என்ப.

அறப்பள்ளி என்பது, சதுர கிரியில் (கொல்லி மலையில்) உள்ள ஒரு சிற்றூர். அம்மலை, சேலம் ஜில்லாவில் நாமக்கல் என்னும் நகர்க்குச் சுமார் ஆறு மைல் தொலைவில் உள்ளது. அங்குள்ள சிவபெருமானுக்கு **அறப்பளீசர்** (அறப்பள்ளி + ஈசர்) என்பது திருநாமம்.

## அம்பலவாணக் கவிராயர் காலம் :

அம்பலவாணக் கவிராவியர், சீகாழியில் வாழ்ந்திருந்து இராமாயணத்தை நாடகமாகப் பாடிய அருணாசலக் கவிராயருடைய புதல்வர் மூவருள் மூத்தவர் என அறியப்படுதலின், அவர் காலம், ஏறக்குறைய நூற்றைம்பது வருடங்களுக்கு முற்பட்டதாகும்.

அறப்பளீசுர சதகம் சிறந்த நீதிகளைக் கொண்டிருத்தலால், அதனைக் கிராம பாடசாலைப் பிள்ளைகள் அனைவருக்கும் படிப்பிக்கத் தொடங்கினர். அதனை அச்சிட்டவர்கள் பலபடப் பிழைகள் மலியுமாறு செய்துவிட்டார்கள். அவற்றை யெல்லாம் போக்கித் திருத்தமாக இது வெளியிடப்பட் டுளது. இந்நூலில் சிற்சில இடங்களில் சிதைவுச் சொற்கள் காணப்படுகின்றன. அவை :

வாசல் — 2, 8.
போது — 19.
ஏலாத — 44.
சந்நாசி — 64.
மெத்த — 73.

என்பன போல்வன.

சில வடசொற்கள், தமிழ் விதிப்படி வல்லெழுத்து மிக்கு வந்துள்ளன.

விகடக்கவி — 30.
தேசச்சூனியம் — 34.
கிரகச்சாரம் — 36.

முதலியன.

இந்நூலில், வடசொற்கள் பல, தமிழிலக்கண அமைதி பெறுமல் வடநூல் வழக்குப்போலவே வந்துள்ளன.

புண்யம் — 1.
ம்ருதுபாஷி, லீலை — 2.
வித்யா, சத்ய, ஆதிக்ய, மந்த்ர, தந்த்ர — 5.
வஸ்த்ராபரணம் — 7.
லவணம் — 10.
த்யாகம் — 13.
ப்ரவாகம் — 19.
வர்க்கம் — 24.

இவ்வாறு வருவன பல.

இந் நூல்களைத் 'தமிழ்க் கடல்' என்னும் பெயரால் அச்சிட்டு வெளியிடுகையில், என்னுடனிருந்து ஒப்பு நோக்குதல், பிழை திருத்துதல் முதலிய உதவிகளைச் செய்து வரும் நண்பர் - **வே. வேங்கடராஜுலு ரெட்டியாரிடம்** நன்றி பாராட்டுகின்றேன்.

இந் நன்முயற்சியில் என்னைத் தூண்டித் தோன்றாத் துணையாயிருந்து அருள் புரிந்து வரும் தணிகைப் பெரு வாழ்வை என் மன மொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

'கடலகம்'
மயிலை, சென்னை.

கா. நமச்சிவாயன்.

# அறப்பளீசுர சதகம்

## காப்பு

உம்பர்கோன் எம்பெருமான் ஒங்கறப்ப ளீசுரன்மேல்
பைம்பொருள்சே ருஞ்சதகம் பாடவே — அம்புவியோர்
ஆக்குந் துதிக்கையுளான் அன்புடையார்க் கின்பருளிக்
காக்குந் துதிக்கையுளான் காப்பு.

குறிப்பு: உம்பர் - மேலிடம், அஃது இடவாகு பெயராய் மேலிடத்திலுள்ள தேவரை உணர்த்திற்று. கோன்-தலைவன்; ன் - சாரியை. பைம்பொருள் - சிறந்த பொருள்; நீதியை யுணர்த்திற்று. அம் புவியோர் - அழகிய பூமியிலுள்ளவர், மாந்தர். ஆக்கும் - செய்யும். துதிக்கை - தொழுதல். அன்புடையார் - அடியார், வினையாலணையும் பெயர். இன்பு - இன்பம். துதிக்கை - தும்பிக்கை.

## 1. அரிது இஃது எனல்:

கடலுலகில் வாழுமுயிர் எழுபிறப் பினுள் மிக்க
காட்சிபெறு நரசென்மமாய்க்
கருதப் பிறத்தலரி ததினுமுயர் சாதியில்
கற்புவழி வருதல் அரிது

வடிவமுடன் அவயவம் குறையாது பிழையாது
வருதலது தனினும் அரிது
வந்தாலும் இதுபுண்யம் இதுபாவம் என்றெண்ணி
மாசில்வழி நிற்றல் அரிது
நெடியதன வானுதல் அரிததின் இரக்கமுள
நெஞ்சினோன் ஆதல் அரிது
நேசமுடன் உன்பதத் தன்பனாய் வருதலிந்
நீணிலத் ததினும் அரிதாம்
அடியவர்க் கமுதமே மோனைபூ பதிபெற்ற
அதிபன் எமை தருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : எழு பிறப்பு - தேவர், மக்கள், பறவை, விலங்கு, நீர் வாழ்வன, ஊர்வன, மரம் என்பனவாம். காட்சி - அறிவு. நரஜென்மம் - மனிதப்பிறவி. கருத - நினைக்க. கற்புவழி வருதல் - தூய்மையான வழியில் பிறத்தல் ; கற்பு - தாய்மரபு தந்தைமரபு இரண்டும் பழி பாவங்களடையாமல் தூய்மையா யிருத்தல். வடிவம் - உருவம். குறையாது - குறைவுபடாமல்; குறைதலாவது, கை கால் முதலிய உறுப்புக்கள் அறவே இல்லாதிருத்தல். பிழையாது - பிழைபடாமல்; பிழைபடுதலாவது, கை கால் முதலிய அவயவங்கள் தமக்குரிய தொழில்களைக் கொள்ளாதிருத்தல். மாசில் - (மாசு இல்) குற்றம் இல்லாத. நெடிய தனவான் - பெருஞ் செல்வன். நீணிலத்து - (நீள் நிலம்) நீண்ட வுலகத்தில், அமுதம் - அமிர்தம் போன்றவன், கடவுள் ; உவமையாகு பெயர்.

(க)

## 2. கற்புடைய மனைவியின் பண்பு :

கணவனுக் கினியளாய் ம்ருதுபாஷி யாய் மிக்க
கமலைநிகர் ரூபவதியாய்க்
காய் சினம் இலாளுமாய் நோய்பழி யிலாததோர்
கால்வழியில் வந்தவளுமாய்

மணமிக்க நாணமடம் அச்சம் பயிர்ப்பென்ன
வருமினிய மார்க்கவதியாய்
மாமிமா மற்கிதஞ் செய்பவளு மாய் வாசல்
வருவிருந் தோம்புபவளாய்
இணையின் மகிழ் நன்சொல்வழி நிற்பவளு மாய் வந்தி
யென்பெயர் இலாதவளுமாய்
இரதியென வேலீலை புரிபவளு மாய்ப் பிறர்தம்
இல்வழி செலாதவளுமாய்
அணியிழை ஒருத்தியுண் டாயின் அவள் கற்புடையள்
ஆகும் எம தருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மிருதுபாஷி - மென்மையாகப் பேசுபவள், இது மிருது பாஷிணி யென்னும் சொல் குறைந்து நின்றது. கமலைநிகர் - திருமகளுக்கு ஒப்பான ; கமலை - தாமரையில் தங்குபவள். ரூபவதி - அழகுடையவள், மிக்க என்பதை ரூபவதி என்பதனோடு கூட்டுக. காய் சினம் - வருத்துகின்ற கோபம்; சினம் என்பது, 'கோபத்தின் பின்னுகச் சிறிதுபொழுது இருப்பது' (திருமுருகு-உரை). நோய் - தொழு நோய் முதலிய விட்டுநீங்காத நோய்கள். பழி - பழிப்பு; அஃதாவது, கொலை முதலிய குற்றம் செய்ததனால் உண்டான குடிப்பழிப்பு. கால்வழி - பரம்பரை. மணம் மிக்க - சிறப்பு மிகுந்த.

நாணம் என்பது - பெண்டிர்க்கு இயல்பா யுள்ளதொரு தன்மை. மடம் என்பது - கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. அச்சம் என்பது - பெண்மையில் தான் காணப்படாத தோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது. பயிர்ப்பு என்பது - பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை.

மார்க்கவதி-நல்வழியில் ஒழுகுபவள். இதம்-நன்மை. வாசல் - வீட்டுவாயில். விருந்து ஓம்புபவள் - விருந்தினரைப் பேணுபவள். விருந்து - புதுமை, அது பண்பாகு பெயராய்ப் புதிதாக வந்தவரை

யுணர்த்திற்று. இணை இல் - ஒப்பில்லாத. மகிழ்நன் - கணவன். வந்தி என் பெயர் - மலடி என்னும் பெயர். இரதி - மன்மதன் மனைவி. லீலை புரிபவள் - விளையாடல் செய்பவள். இல் வழி - வீட்டு வழி. செலாதவள் - செல்லாதவள். அணி இழை - பெண், இஃது அழகாகிய ஆபரணத்தை யுடையவள் எனப் பொருள் கொண்டால் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; அணிந்த ஆபரணங்களை யுடையவள் எனப் பொருள் கொண்டால் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; இழை - ஆபரணம். கற்புடையவள் - கற்பித்த வழி யிலே நிற்பவள், அஃதாவது, தாய் தந்தையர் முதலிய பெரியோ ரும் கணவனும் கற்பித்த வழியிலே நிற்பவள். (உ)

### 3. நற்புதல்வர் இயல்பு:

தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
தருமங்கள் செய்துவரலும்
தன்மமிகு தானங்கள் செய்தலும் கனயோக
சாதகன் எனப்படுதலும்
மங்குத லிலாததன் தந்தைதாய் குருமொழி
மறுது வழி பாடு செயலும்
வழிவழி வருந் தமது தேவதா பத்திபுரி
மார்க்கமும் தீர்க்காயுளும்
இங்கித குணங்களும் வித்தையும் புத்தியும்
ஈகையும் சன்மார்க்கமும்
இவையெலாம் உடையவன் புதல்வனும் அவனையே
ஈன்றவன் புண்யவானும்
அங்கச விரோதியே சோதியே நீதிசேர்
அரசன் எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : தருமம்-ஒழுக்கம், கடமை. தன்மம்-சத்திரம் சோலை முதலிய நிலையாயிருக்கத்தக்க அறம். தானம் - அன்னம் வஸ்திரம் முதலியவாக அவ்வப்போது கொடுக்கப்படும் அறம். கனயோக சாதகன்-சிறந்த யோகத்தில் பிறந்தவன். மங்குதல் - அழிதல். மருது - மறுக்காமல். வழிபாடு - வணக்கம், வழிபடு என்னும் முதனிலை திரிந்து தொழிற் பெயராயிற்று. வழிவழி - பரம்பரையாக. புரி - செய்கின்ற. தீர்க்காயுள் - நீண்ட வயது. இங்கிதம் - இனிமை. ஈகை - கொடை. சன்மார்க்கம் - நல்வழி. ஈன்றவன் - பெற்றவன். அங்கச விரோதி - மன்மதனுக்குப் பகைவனான சிவன். அங்கசன் - உடலில் தோன்றுபவன்; மன்மதன். நீதிசேர் அரசன் - நீதி மார்க்கத்தைச் சேர்ந்துள்ள அரசன்; எனவே, நீதிதவருதவன் என்பதாம்.

4. சகோதரர் இயல்பு :

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகம் தஞ்சுகமெனக்
கொண்டுதாம் தேடுபொருள் அவர்தேடு பொருள் அவர்கொள்
கோதில்புகழ் தம்புகழெனத்
தேடுற்ற அவர்நிந்தை தந்நிந்தை தந்தவம்
தீதிலவர் தவமாமெனச்
சீவனொன் றுடல்வே றிவர்க்கென்ன ஐந்தலைச்
சீறரவ மணிவாய்தொறும்
கூடுற்ற இரையெடுத் தோருடல் நிறைத்திடுங்
கொள்கைபோற் பிரிவின்றியே
கூடிவாழ் பவர்தம்மை யே சகோ தரரெனக்
கூறுவது வே தருமமாம்
ஆடிச் சிவந்த செந் தாமரைப் பாதனே
அண்ணல் எம தருமைமத வேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : எய்து துயர் - வரும் துன்பம். கோது இல் புகழ் - குற்றம் இல்லாத கீர்த்தி. தேடுஉற்ற-தேடிக்கொண்ட. ஐந்தலைச் சீறு அரவம் - ஐந்தலை அரவம், சீறு அரவம் எனக்கொள்க; சீறுஅரவம் - சீறுகின்ற பாம்பு. மணிவாய் - மணியையுடைய வாய். கூடு உற்ற - சேர்ந்த. சகோதரர் - உடன்பிறந்தவர்; உதரம் - வயிறு. ஆடி - நடனஞ்செய்து. செந்தாமரைப் பாதன் - செந்தாமரைமலர்போன்ற பாதத்தை யுடையவன்; தாமரை - முதலாகுபெயர், செம்மை என்னும் பண்பு, ஆகு பெயர்ப்பொருளை விசேடித்து நின்றது. அண்ணல் - பெரியோன், பண்பாகு பெயர்; அண்ணல் - பெருமை. (௪)

**5.** சற்குருவின் இயல்பு :

வேதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார
விவ ரிஞ் ஞான பூர்ண
வித்யா விசேஷ சற் குண சத்ய சம்பன்ன
வீர வை ராக்ய முக்ய
சாதா ரணப் பிரிய யோகமார்க் காதிக்ய
சமாதி நிஷ் டானுபவராய்ச்
சட்சமய நிலைமையும் பரமந்த்ர பாதந்த்ர
தருமமும் பரசமயமும்
நீதியின் உணர்ந்து தத் துவமார்க்க ராய்ப் பிரம
நிலைகண்டு பாசமிலராய்
நித்தியா னந்த சை தன்யராய் ஆசையறு
நெறியுளோர் சற்குருவராம்
ஆதார மாயுயிர்க் குயிராகி யெவையுமாம்
அமலன் எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : வேதாந்தம் - வேதத்தின் முடிவு, உபநிடதம். சித்தாந்தம் - முடிவான கொள்கை, வேதாந்தத்தினின்றும் மதாசாரியர்கள்

கொண்ட கொள்கை; இது சைவசித்தாந்தம், வைஷ்ணவசித்தாந் தம் முதலாகப் பலதிறப்படும். ஆசாரம் - ஒழுக்கம். விஞ்ஞானம் - விஜ்ஞாநம், விசேஷஞானம். சம்பன்ன - கூடிய. வைராக்யம் - ஆசையில்லாமை; ராகம் - ஆசை. யோகமார்க்கம் - யோகத்தின் வழி; ஐம்புலன்களையும் ஒருவழிப்படுத்தித் தன்னை யறியும் நெறி. ஆதிக்யம் - உரிமை. சமாதி - சமாதியோகம்; ஐம்புலன்களோடு கூடியிருப்பினும் அவற்றில் பற்றின்றித் தன்னைத் தான் காணுதல். நிஷ்டா அனுபவர் - யோகநிலையில் அநுபவமுள்ளவர். சட்சமயம் - அறுவகை மதங்கள்; அவை: சாங்கியம், நியாயம், வைசேடிகம், யோகம், வேதாந்தம், மீமாஞ்சை என்பன; வேறுவகையாக் கூறுத லும் உண்டு. பர மந்திரம் - மேலான மந்திரம். பாரதந்திர தருமம் - கடவுட்குக் கீழ்ப்பட்டு ஒழுகும் முறை. பரசமயம் - பிறமதங்கள்; அவை: பௌத்தம், ஜைநம், லோகாயதம் முதலாயின; இனி, மேலானமதம் எனவுமாம். தத்துவம் - மெய்யுணர்வு. பிரமநிலை - கடவுளின் தன்மை. பாசம்-அஞ்ஞானம். நித்தியானந்தம்-நிலையான இன்பம். சைதன்னியர் - ஞானமுடையவர். நெறி - வழி. சற் குரவர் - நல்ல குருமார். உயிர்க்கு உயிர் - அந்தர்யாமி. அமலன் - மலமில்லாதவன்; பரிசுத்தமானவன்; அமலன், விளி. (ரு)

### 6. சற்சீடர் இயல்பு:

வைதாலு மோ கொடுமை செய்தாலு மோ சீறி
மாறு திகழ்ந்தாலுமோ
மனதுகூற் றுகிலும் கோணாது நாணாது
மாதா பிதா எனக்குப்
பொய்யாமல் நீயென்று கனிவொடும் பணிவிடை
புரிந்து பொருள் உடல் ஆவியும்
புனிதவுன் றனதெனத் தத்தஞ்செய் திரவு பகல்
போற்றி மல ரடியில் வீழ்ந்து
மெய்யாக வே பாவி உபதேச மதுபெற
விரும்புவோர் சற்சீடராம்

வினை வே ரறும்படி அவர்க்கருள்செய் திடுவதே
மிக்க தே சிகரா துகடன்
ஐயா புரம்பொடி படச்செய்த செம்மலே
அண்ணல் எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மாருது இகழ்தல்-இடைவிடாமல் நிந்தித்தல். நாணுது-வெட்கப்படாமல். கனிவு - அன்பு. பணிவிடை - தொண்டு. புரிந்து - செய்து. ஆவி - உயிர். புனித - தூய்மையானவனே. தத்தம் செய்து - கொடுத்து, உரிமையாக்கி. பரவி - துதித்து. வினை - தீவினை. வேர் அறும்படி - வேரோடு அற்றுப்போகும்படி; அறவே ஒழியும்படி. தேசிகர் - குரு. ஐயா - தலைவனே. புரம் பொடிபட - முப்புரங்கள் எரிந்து பொடியாக. செம்மல் - பெருமையிற் சிறந்தோன், பண்பாகு பெயர் ; செம்மல் - தலைமை. (சூ)

## 7. பொருள் தேடிச் செலவு செய்யும் வகை :

புண்ணிய வசத்திஞல் செல்வமது வரவேண்டும்
பொருளை ரட் சிக்க வேண்டும்
புத்தியுடன் அதுவொன்று நூருக வே செய்து
போதவும் வளர்க்க வேண்டும்
உண்ணவேண் டும் பின்பு நல்ல வஸ்த் ராபரணம்
உடலில் தரிக்க வேண்டும்
உற்ற பெரி யோர் கவிஞர் தமர் ஆ துலர்க்குதவி
ஓங்குபுகழ் தேட வேண்டும்
மண்ணில் வெகு தருமங்கள் செயவேண்டும் உயர்மோக்ஷ
வழிதேட வேண்டும் அன்றி
வறிதிற் புதைத்துவைத் தியாத பேர்களே
மார்க்கம் அறி யாக் குருடராம்

அண்ணலே கங்கா குலத்தலைவன் மோழைதரும்
அழகன் எமது அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : வசம் - சார்பு. ரக்ஷித்தல் - காத்தல். போதவும் - மிகவும். வஸ்திரம் - உடை. கவிஞர் - பாவாணர். தமர் - தம்மவர், உறவினர். ஆதுலர் - வறியவர். ஓங்கு புகழ்-மிக்க புகழ். அன்றி - அல்லாமல். வறிது - வீணே. ஈயாதபேர்கள் - கொடாதவர்கள். மார்க்கம் - நல்வழி. கங்காகுலம் - வேளாண்குலம், கங்கை நதி வேளாண் குலத்திற்கு உரிய நதி. (எ)

8. செய்யவொண்ணாதவை :

வஞ்சகர் தமைக்கூடி மருவொணா தன்பிலார்
வாசலிற் செல்லொணாது
வாதெவ ரிடத்திலும் புரியொணா தறிவிலா
மடையர்முன் நிற்கொணாது
கொஞ்சமே னுந்தீது செய்யொணா தொருவர்மேற்
குற்றஞ்சொ லொண்ணாதயல்
கோதையர்க ளோடுபரி காசஞ்செ யொண்ணாது
கோளுரைகள் பேசொணாது
நஞ்சுதரும் அரவொடும் பழகொணா திருள்வழி
நடந்து தனி ஏகொணாது
நதிபெருக் காகின் அதில் நீஞ்சல்செய் யொண்ணாது
நல்வழி மறக்கொணாது
அஞ்சாமல் அரசர்முன் பேசொணா திவையெலாம்
அறியும் எமது அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மருவொண்ணுது (மருவ ஒண்ணுது) - கலத்தல் கூடாது. புரியொணுது - செய்தல் கூடாது. அயல் கோதையர் - வேறு பெண்கள் ; அயலார் மனைவியர் ; கோதை - மாலை ; கோதையர் - மாலையை அணிந்தவர். நஞ்சு - விஷம். நீஞ்சல் - நீந்தல் என்பதன் போலி. இவையெலாம் அறியும் - இவற்றையெல்லாம் தெரிந்து நடக்கும். ஒண்ணுது என்பது ஒன்ருது என்பதன் மரூஉ. (அ)

9. ஒன்றற்கொன்று அழகு செய்வன :

வாழ்மனை தனக்கழகு குலமங்கை குலமங்கை
வாழ்வினுக் கழகு சிறுவர்
வளர்சிறுவ ருக்கழகு கல்வி கல் விக்கழகு
மாநிலம் துதிசெய் குணமாம்
சூழ்குண மதற்கழகு பேரறிவு பேரறிவு
தோன்றிடில் அதற்கழகுதான்
தூயதவ மேன்மை உப காரம் விர தம் பொறுமை
சொல்லரிய பெரியோர்களைத்
தாழ்தல் பணி விடைபுரிதல் சீல நே சம் கருணை
சாற்றும் இவை அழகென்பர்காண்
சௌரி மல ரோன் அமரர் முனிவர் முச் சுடரெலாம்
சரணம் எமை ரட்சி யெனவே
ஆழ்கடல் உதித்துவரு விடமுண்ட கண்டனே
அண்ணல் எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மனை - வீடு. குலமங்கை - நற்குடியிற் பிறந்தவள். மா நிலம் - பெரிய உலகத்தி லுள்ளவர் ; ஆகுபெயர். தவம் மேன்மை - தவத்திஞலுண்டாகும் மேன்மை. தாழ்தல் - வணங்கல். பணிவிடை புரிதல் - தொண்டு செய்தல். சீலம் - நல்லொழுக்கம்.

நேசம் - அன்பு. கருணை - அருள். சாற்றும் - சொல்லுகின்ற. சௌரி - சூரசேனன் வம்சத்திற் பிறந்தவன், கிருஷ்ணன்; ஈண்டுத் திருமாலைக் குறித்தது. மலரோன் - தாமரைமலரி விருப்பவன்; பிரமன். அமரர்-மரணமில்லாதவர்; தேவர். முச்சுடர் - சூரியன், சந்திரன், அக்கினி. சரணம் - அடைக்கலம். ரட்சி - காப்பாற்றுவாய். என - என்று வேண்ட. விடம் - விஷம். (௯)

## 10. ஒன்று இல்லாமையாற் பயன்படாதவை:

கோவிலில் லாதவூர் நாசியில் லாதமுகம்
கொழுநன் இல் லாத மடவார்
குணமதில் லா வித்தை மணமதில் லாத மலர்
குஞ்சரம் இலாத சேனை
காவலில் லாத பயிர் பாலரில் லாத மனை
கதிர்மதி யிலாத வானம்
கவிஞரில் லாத சபை சுதிலயை யிலாத பண்
காவலர் இலாத தேசம்
ஈவதில் லாத தனம் இயமம் இல் லாத செபம்
இசை லவணம் இல்லாத ஊண்
இச்சையில் லாத பெண் போகநலம் இவை தம்மின்
ஏது பலன் உண்டு கண்டாய்
ஆவினை யாட்கிடம் தந்தவா கற்பதரு
ஆகும் எம தருமை மதவேள்
அநுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: கோவில் - கோயில். நாசி - மூக்கு. கொழுநன் - கணவன். மடவார் - பெண்டிர். மணம் - வாசனை. குஞ்சரம் - யானை; காட்டுப் புதர்களில் வசிப்பது. சேனை - படை. கதிர் மதி - ஒளியுள்ள சந்திரன். கவிஞர் - வித்துவான்கள்; ஞகரம் - பெயரிடைநிலை. சுதி - சுருதி. லயை - கூடியிருத்தல். சுதி லயை - சுரு

திக்கு இயைந்திருத்தல். பண் - இசை. காவலர் - அரசர்; காத்தலில் வல்லவர். ஈவது - கொடுத்தல், கொடை. தனம் - பொருள். இயமம் - கொலை, களவு, பொய் இவற்றில் நீங்கிப் புலனடங்கியிருத்தல். இசை லவணம் - தகுந்த அளவான உப்பு; 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே', 'உப்பு மிகுந்தால் குப்பையிலே' என்பன பழமொழி. ஊண் - உணவு. இச்சை - விருப்பம். பெண்போகம் நலம் - பெண்ணோடு அநுபவிக்கும் இன்ப நலம். ஆவி அனையாள் - உயிரை ஒத்தவள்; உமாதேவி. இடம் - இடப்பாகம். கற்பதரு ஆகும் - கற்பக விருட்சத்தை ஒத்த. கோவில் - கோயில் என்பது வழக்கு. முகத்திற்குக் கண்ணில்லாமையைக் கூறாமல் நாசியில்லாமையைக் கூறியது அழகின்மையை யுணர்த்தற்காகும் என்க. (க0)

**11. தகாத சேர்க்கை:**

பூததயை யில்லாத லோபிய ரிடத்திலே
பொருளை அருளிச்செய்தனை
புண்ணியம் செய்கின்ற சற்சன ரிடத்திலே
பொல்லாத மிடி வைத்தனை
நீதியகல் மூடர்க் கருந்ததி யெனத்தக்க
நெறிமாத ரைத் தந்தனை
நிதானமுள வுத்தமர்க் கிங்கிதம் இலாதகொடு
நீலியைச் சேர்வித்தனை
சாதியில் உயர்ந்தபேர் ஈனர்பின் னேசென்று
தாழ்ந்துபா வச்செய்தனை
தமிழருமை அறியாத புல்லர்மேற் கவிவாணர்
தாம்பாட வேசெய்தனை
ஆதரவி லாமலிப் படிசெய்த தென்சொலாய்
அமல எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : பூத தயை - உயிர்களிடத்து அன்பு. சற்சனர் - நல்லோர். மிடி - வறுமை. நீதி அகல் - நீதிமார்க்கத்தை நீங்கிய. அருந்ததி - வசிஷ்டர் மனைவியின் பெயர், கற்பிற் சிறந்தவள். நெறி மாதர் - நல்லொழுக்கமுள்ள பெண்டிர். நீலி - துஷ்டை; இது, முதலில் நீலநிறமுடைய உமாதேவிக்குப் பெயராகி, பின்பு பழையனூரில் தன் புருஷனைக் கொன்ற பேயுருவமாகிய பெண்ணின் பெயராயினமையின், துஷ்ட ஸ்திரிகளுக்குப் பொதுப்பெயராயது. ஈனர் - இழிந்தவர். கவிவாணர்; வாணர், வாழ்நர் என்பதன் மரூஉ. பாவ-துதிசெய்ய. புல்லர்-அற்பர். ஆதரவு-ஆதாரம். இப்படி செய்தது - இப்படிச் செய்தது என்று இருத்தல் வேண்டும்; செய்யுள் ஓசையைநோக்கி மிகாமல் நின்றது. (கக)

**12.** பதர் எனப்படுவோர் :

மாறாத கலைகற்றும் நிலைபெற்ற சபையிலே
வாயிலா தவன் ஒருபதர்
வாள்பிடித் தெதிரிவரின் ஓடிப் பதுங்கிடும்
மனக்கோழை தான் ஒருபதர்
ஏறு வழக்குரைத் தனைவருஞ் சீசியென்
றிகழநிற் பான் ஒருபதர்
இல்லாள் புறஞ்செலச் சம்மதித் தவளோ
டிணங்கிவாழ் பவன் ஒருபதர்
வேறொருவர் மெச்சாது தன்னையே தான்மெச்சி
வீண்பேசு வான் ஒருபதர்
வேசையர்க ளாசைகொண் டுள்ளளவும் மனையாளை
விட்டுவிடு வான் ஒருபதர்
ஆறாத துயரையும் மிடியையும் தீர்த்தருள்செய்
அமல எமது அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்,
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மாறுத - நிலையான. கலை - சாஸ்திரங்கள். வாயிலாதவன் - பேசமாட்டாதவன். பதர் - நெற்பதருக்கு ஒப்பாவான். கோழை - அச்சம். ஏறு வழக்கு - ஏற்காத வழக்கு; வீண்வழக்கு. இல்லாள் - மனைவி. இணங்கி - சேர்ந்து. வேசையர் - தாசிகள். ஆறுத - தணியாத. (கஉ)

**13.** வேண்டத்தக்கவை :

வாலிபந் தனில்வித்தை கற்கவேண் டும்கற்ற
வழியிலே நிற்கவேண்டும்
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண் டும்தேடி
வளர் அறம் செய்யவேண்டும்
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்பிரிதல்
செய்யா திருக்கவேண்டும்
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டும்கொண்டு
த்யாகங் கொடுக்கவேண்டும்
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண் டும்நாட்டி
நன்றாய் நடத்தவேண்டும்
நம்பன் இணை யடிபூசை பண்ணவேண் டும்பண்ணி
னும் மிகு பத்திவேண்டும்
ஆலமமர் கண்டனே பூதியணி முண்டனே
அனக எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : வாலிபம் - இளமை. வளை கடல் - உலகத்தைச் சூழ்ந்துள்ள கடல். வளர் அறம் - ஓங்கும் தருமம். தியாகம் - ஈகை. ஞாலம் மிசை - உலகத்தில். நாட்டவேண்டும் - நிலைபெறச் செய்ய வேண்டும். நம்பன் - சிவன்; நம்பிச் சரணடைதற்குரியவன். இணை அடி - இரண்டு பாதங்கள். ஆலம் அமர் கண்டன் - நஞ்சு தங்கிய மிடறுடையவன். பூதியணி முண்டன் - விபூதியணிந்த நெற்றியையுடையவன்; முண்டம் - நெற்றி. அநகன் - பாவமில்லாதவன். (கந)

**14. மேன்மேல் உயர்ச்சி :**

தன்மட்டில் இரவாது சீவனஞ் செய்பவன்
சாமர்த்ய முளபுருடனும்
சந்ததம் பதின்மரைக் காப்பாற்று வோன் மிக்க
தரணிபுகழ் தருதேவனும்
பொன்மட்டி லாமல் ஈந் தொருநூறு பேரைப்
புரப்பவன் பொருவில் இந்த்ரன்
புவிமீதில் ஆயிரம் பேர்தமைக் காப்பாற்று
புண்யவா னே பிரமனும்
நன்மைதரு பதினு யிரம்பேர் தமைக்காத்து
ரட்சிப்ப வன் செங்கண்மால்
நாளும் இவன் மேலதிக மாகவெகு பேர்க்குதவு
நரனே மகாதேவனும்
அன் மட்டு வார் குழலி பாகனே ஏகனே
அண்ணல் எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : தன் மட்டில் - தன் வரையில். இரவாது - யாசகஞ் செய்யாமல். சாமர்த்தியம் - கெட்டிக்காரத்தனம். சந்ததம் - எப்பொழுதும். பதின்மர் - பத்துப்பேர். தரணி - உலகம். புகழ் தரு - புகழ்கின்ற. பொன் மட்டு இலாமல் - பொன்னை அளவு இல்லாமல். ஈந்து - கொடுத்து. புரப்பவன் - காப்பவன். பொருவு இல் - ஒப்பில்லாத. புவிமீதில் - உலகத்தில். செங்கண்மால் - செந்தாமரை மலர்போலுங் கண்ணையுடைய திருமால். நாளும் - நாள்தோறும். நரன் - மனிதன். மகாதேவன் - சிவன். அல் மட்டு வார் குழலி பாகன்-இருள்போன்றதும் தேனொழுகப்பெற்றதுமான நீண்ட கூந்தலுடைய உமாதேவியை இடப்பாகத்திலுடைய சிவன். ஏகன்-ஒருவனுயிருப்பவன்; ஒப்பில்லாதவன். (கச)

**15.** முடரைத் திருத்த முடியாதெனல் :

நீர்மேல் நடக்கலாம் எட்டியுந் தின்னலாம்
நெருப்பைநீர் போற்செய்யலாம்
நெடியபெரு வேங்கையைக் கட்டியே தழுவலாம்
நீள் அரவினைப் பூணலாம்
பார்மீது மணலைச் சமைக்கலாம் சோறெனப்
பட்சமுடனே யுண்ணலாம்
பாணமொடு குண்டுவிலகச் செய்யலாம் மரப்
பாவைபேசப்பண்ணலாம்
ஏர்மேவு காடியும் கடையுற்று வெண்ணெயும்
எடுக்கலாம் புத்தி சற்றும்
இல்லாத மூடர்தம் மனத்தைத் திருப்பவே
எவருக்கும் முடியாதுகாண்
ஆர்மேவு கொன்றைபுனை வேணியா சுரர்பரவும்
அமலனே அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : எட்டி - எட்டிக்காய்; முதலாகு பெயர். வேங்கை - புலி. அரவு - பாம்பு. பூணலாம் - அணியலாம். பார்மீது - உலகத்தில். சமைக்கலாம் சோறென என்பதைச் சோறெனச் சமைக்கலாம் என மாற்றுக. பட்சத்துடன் - பிரியத்தோடு. பாணமொடு - அம்பையும்; ஒடு - உம்மைப்பொருளது. மரப்பாவை - மரத்தாற்செய்த பொம்மை. ஏர் மேவு - அழகுபொருந்திய; இதனை வெண்ணெய் என்பதனோடு கூட்டுதல் நேர். காடி - புளித்த நீர். காடியும் - உம்மை இழிவு சிறப்பு. கடையுற்று - கடைந்து. வெண்ணெயும்; உம் - உயர்வு சிறப்பு. சற்றும் - சிறிதும். ஆர் - ஆத்திமலர். கொன்றை - கொன்றைமலர் ; இவ்விரண்டும் முதலாகு பெயர்கள். புனை - அணிந்த. வேணி - சடை. ஆர் மேவு வேணி, கொன்றை புனை வேணி என இருமுடிபாக்குக. சுரர் - தேவர். (கரு)

**16. சற்புருடராவோர் :**

செய்நன்றி மறவாத பேர்களும் ஒருவர் செய்
தீமையை மறந்தபேரும்
திரவியம் தாவரினும் ஒருவர்மனை யாட்டிமேல்
சித்தம் வை யாத பேரும்
கைகண் டெடுத்தபொருள் கொண்டுபோய்ப் பொருளாளர்
கையில் கொடுத்த பேரும்
காசினியில் ஒருவர்செய் தருமம் கெடாதபடி
காத்தருள் செய் கின்றபேரும்
பொய்யொன்று நிதிகோடி வரினும் வழக்கழிவு
புகலாத நிலைகொள்பேரும்
புவிமீது தலைபோகும் என்னினுங் கனவிலும்
பொய்ம்மை உரை யாத பேரும்
ஐயவிங் கிவரெலாம் சற்புருடர் என்றுலகர்
அகமகிழ்வர் அருமை மதவேள்
அநுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : செய்நன்றி - பிறர் தமக்குச் செய்த உபகாரம். திரவியம் - பொருள். தரவரினும் - கொடுக்க வந்தாலும். சித்தம் - மனம். கைகண்டெடுத்த பொருள் - கண்டு கை எடுத்த பொருள் என மாற்றுக; தெருவில் வீழ்ந்துகிடக்கக் கண்டு கையினால் எடுத்த பொருளை. பொருளாளர் - பொருளுக்குரியவர். காசினி - உலகம்; கசியபமுனிவருக்குப் பரசுராமனால் தத்தம் செய்யப்பட்டது என்பதுபொருள் காத்து அருள்செய்தல்-பிறர் ஏற்படுத்திய தருமகாரியங்கள் கெடாதபடி பாதுகாத்து வருதல். பொய் ஒன்று - பொய்யாகிய ; அழிந்து போகத்தக்க. நிதி - செல்வம் ; பொன். வழக்கழிவு - அழிவழக்கு ; நியாயமில்லாத தீர்ப்பு. புகலாத - சொல்லாத. நிலை - மனநிலை. ஐய - தலைவனே. அகமகிழ்வர் - மனமகிழ்ச்சி கொள்ளுவர். (கசு)

**17.** இதுவும் அது :

அடைக்கலம் எனத்தேடி வருவோர் தமைக்காக்கும்
அவனே மகாபுருடனும்
அஞ்சாமல் எதுவரினும் எதுபோகி னும்சித்தம்
அசைவிலன் மகா தீரனும்
தொடுத்தொன்று சொன்னசொல் தப்பாது செய்கின்ற
தோன்றலே மகாராசனும்
தூறிக் கலக்கின்ற பேர் வார்த்தை கேளாத
துரையே மகாமேருவாம்
அடுக்கின்ற பேர்க்குவரும் இடர்தீர்த் திரட்சிக்கும்
அவனே மகாத்யாகியாம்
அவரவர் தராதரம் அறிந்து மரி யாதைசெயும்
அவனே மகாவுசிதனும்
அடர்க்கின்ற முத்தலைச் சூலனே லோலனே
அமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மகா புருடன் - பெரியோன். எதுவரினும் - எத்தீமை வருவதாயினும். எதுபோகினும் - எந்தப்பொருள் போவதாயினும். சித்தம் - மனம். தொடுத்து - அமைத்து. சொன்ன சொல் ஒன்று என மாறுக. தோன்றல் - தலைவன்; இது, ஆண்பாற் சிறப்புப் பெயர். தூறி - பழித்து. மகா மேரு ஆம் - பெரிய மேரு மலைக்கு ஒப்பானவன்; நிலைகலங்காதவன் என்பது கருத்து. இடர் - துன்பம். மகாத்யாகி - பெருங் கொடையாளி. தராதரம் (தரம் + அதரம்) - உயர்வு தாழ்வு. உசிதன் - உத்தமன்; யோக்யன். அடர்க்கின்ற - பகைவர்களைத் தாக்குகின்ற. முத்தலைச் சூலன் - மூன்று தலைகளையுடைய சூலப்படையை யுடையவன்; சிவன். லோலன் - விளையாடல் புரிபவன்; சிவன். (கள)

**18. இவர்க்கு இஃது இல்லை யெனல் :**

காமிக்கு முறையில்லை வேசைக்கு நாணில்லை
கயவர்க்கு மேன்மையில்லை
கன்னமிடு கள்வருக் கிருளில்லை விபசார
கன்னியர்க் காணையில்லை
தாமெனும் மயக்கறுத் தோங்கு பெரி யோர்க்கு வரு
சாதிகுலம் என்ப தில்லை
தாக்ஷணிய முடையபேர்க் கிகலில்லை யெங்குமொரு
சார்பிலார்க் கிடமதில்லை
பூமிக்குள் ஈயாத லோபர்க்கு வளமான
புகழென்ப தென்றுமில்லை
புலையர்க்கு நிசமில்லை கைப்பொரு ளிலாதவோர்
புருடருக் கொன்றுமில்லை
யாமினி தனக்குநிகர் கந்தரத் திறைவனே
அன்புடைய அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : காமி - காமமுற்றவன். நாண் - வெட்கம். கயவர் - கீழ்மக்கள். கன்னம் - கன்னக்கோல்; இது கனனம் என்னும் வட சொற்றிரிபு. விபசார கன்னியர் - தீயொழுக்கமுடைய பெண்டிர். ஆணை - கட்டளை; இஃது, ஆஜ்ஞா என்னும் சொல்லின் சிதைவு. மயக்கு - மயக்கம்; தாம் எனும் மயக்கு - நாம் என்னும் செருக்கு. அறுத்து - நீக்கி. இகல் - பகை. சார்பு - பற்றுக் கோடு; ஆதரவு. பூமிக்குள் - பூமியில். வளம் - சிறப்பு. புலையர் - அற்பர்கள். யாமினி - இரவு; யாமத்தையுடையது என்பது பொருள். கந்தரம் - கழுத்து; தலையைத் தாங்கி நிற்பது; கம் - தலை. யாமினி தனக்கு நிகர் கந்தரம் என்றது, இருள்போன்ற விடத்தையுடைய கண்டம் என்றபடி.

(௧அ)

## 19. உடல் முதலியவை நிலையாமை :

காயமொரு புற்புதம் வாழ்வு மலை சூழ்தரும்
காட்டில் ஆற் றின் பெருக்காம்
கருணைதரு புதல்வர் கிளை மனை மனைவி இவையெலாம்
கானல் காட் டும் ப்ரவாகம்
மேயபுச பலவலிமை இளமை யழ கிவையெலாம்
வெயில்மஞ்சள் உயிர் தானுமே
வெட்டவெளி தனில்வைத்த தீபமென வே கருதி
வீண்பொழுது போக்காமலே
நேயமுட னே தெளிந் தன்பொடுன் பாதத்தில்
நினைவுவைத் திருபோதிலும்
நீர்கொண்டு மலர்கொண்டு பரிவுகொண் டர்ச்சிக்க
நிமலனே அருள் புரிகுவாய்
ஆயும் அறி வாளர் பணி பாதனே போதனே
அண்ணல் எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : காயம் - உடம்பு. புற்புதம் - நீர்க்குமிழி. வாழ்வு - செல்வம். பெருக்கு - வெள்ளம். கிளை - சுற்றத்தார். கானல் - சூரிய வெப்பத்தால் நீர்போலத் தோன்றும் தோற்றம்; பேய்த்தேர். ப்ரவாகம் - வெள்ளம். மேய - பொருந்திய. புசம் - தோள். வெயில் மஞ்சள் - மஞ்சள் வெயில் என மாற்றுக ; அதாவது, மாலை வெயில். வெட்ட வெளி - வெறு வெளி ; இது வெற்ற வெளி என்றாகிப் பின்னர் வெட்ட வெளி என மருவிற்று. இரு போது - காலை மாலை. நீர் - தீர்த்தம். பரிவு - அன்பு ; பக்தி. அர்ச்சிக்க - அருச்சனை செய்ய. நிமலன் - மலமில்லாதவன். ஆயும் - ஆராய்கின்ற. அறிவாளர் - ஞானிகள். பணி - வணங்குகின்ற. போதன் - அறிவுடையவன்.

(கக)

## 20. திருமங்கை இருப்பிடம் :

நற்பரி முகத்திலே மன்னவ ரிடத்திலே
நாகரிகர் மாமனையிலே
நளினமலர் தன்னிலே கூவிளம் தருவிலே
நறைகொண்ட பைந்துளவிலே
கற்புடையர் வடிவிலே கடலிலே கொடியிலே
கல்யாண வாயில்தனிலே
கடிநக ரிடத்திலே நற்செந்நெல் விளைவிலே
கதிர்பெறு விளக்கதனிலே
பொற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே
பொய்யாத பேர்பாலிலே
பூந்தடம் தன்னிலே பாற்குடத் திடையிலே
போதகத் தின் சிரசிலே
அற்பெருங் கோதை மலர் மங்கை வாழ் இடமென்பர்
அண்ணல் எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : பரி - குதிரை. நாகரிகர் - கண்ணோட்ட முள்ளவர்; 'நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்னும் திருக்குறள் காண்க. மா மனை - சிறந்த வீடு. நளினமலர் - தாமரைப்பூ. கூவிளந் தரு - வில்வ மரம். நறை - வாசனை. பைந்துளவு - பசியதிருத்துழாய். கற்பு உடையர் - கற்புள்ள பெண்கள். கொடி - அரசர் உயர்த் தெடுக்கும் கொடி. வாயில் (இல்வாய்) - வாசல்; இலக்கணப் போலி. கடி நகர் - காவலுள்ள நகரம். கதிர் - ஒளி. பொற்பு - அழகு. பொய்யாதவர் பாலில் - பொய் சொல்லாதவரிடத்தில். பூ தடம் - பூக்களையுடைய தடாகம். போதகம் - யானை. அல் - இருளை யொத்த. கோதை - கூந்தலையுடைய. மலர் மங்கை - இலக்குமி.

(உ0)

**21.** மூதேவி இருப்பிடம் :

**மி**தமின்றி அன்னம் புசிப்போ ரிடத்திலும்
மிகுபாஷை யோரிடத்தும்
மெய்யொன் றிலாமலே பொய்பேசி யே திரியும்
மிக்கபா தகரிடத்தும்
கதியொன்றும் இலர்போல மலினங்கொ ளும் பழைய
கந்தை யணி வோரிடத்தும்
கடிநா யெனச்சீறி யெவரையும் சேர்க்காத
கன்னிவாழ் மனையகத்தும்
ததிசேர் கடத்திலும் கர்த்தபத் திடையிலும்
சார்ந்த ஆட் டின் திரளிலும்
சாம்பிண முகத்திலும் இவையெலாம் கவலைபுரி
தவ்வைவாழ் இடமென்பர்காண்
அதிரூப மலைமங்கை நேசனே மோழைதரும்
அழகன் எமதருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மிதம் - அளவு. மிகு பாஷையோர் - மிகைபடப் பேசுபவர். பாதகர் - பாவிகள். கதி - ஆதரவு. ஒன்றும் - சிறிதும். மலினம் - அழுக்கு. கடி நாய் - கடிக்கும் நாய் ; வினைத்தொகை. சீறி - கோபித்து. கன்னி - பெண் ; ஈண்டுப் பொதுவாகப் பெண்கள்மேல் நின்றது. ததி - தயிர். கடம் - குடம். கர்த்தபம் - கழுதை. சார்ந்த - ஒருங்கு சேர்ந்த. ஆட்டின் திரள் - ஆட்டு மந்தை. சாம்பிணம் - செத்த பிணம். கவலைபுரி - துன்பத்தைச் செய்கின்ற. தவ்வை - தமக்கை ; மூதேவி. மலைமங்கை - பார்வதி. (உக)

**22.** குணகுணம் இரண்டினும் பயன்படாமை :

குணமற்ற பேய்முருங் கைத்தழை தழைத்தென்ன
குட்டநோய் கொண்டும் என்ன

குரைக்கின்ற நாய்மடி சுரந்தென்ன சுரவாது
கொஞ்சமாய்ப் போகில் என்ன
மணமற்ற செம்முருக் கதுபூத் தலர்ந்தென்ன
மலராது போகில் என்ன
மதுரமில் லாவுவர்க் கடல்நீர் கறுத்தென்ன
மாவெண்மை யாகில் என்ன
உணவற்ற பேய்ச்சுரை படர்ந்தென்ன படரா
துலர்ந்துதான் போகிலென்ன
உதவாத பேர்க்குவெகு வாழ்வுவந் தாலென்ன
ஓங்கு மிடி வரில் என்னகாண்
அணியுற்ற பைங்கொன்றை மாலிகா பரணனே
ஆதியே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு ; பேய் முருங்கை - பயன்படாத ஒருவகை முருங்கை ; இது உண்ணற்குப் பயன்படாது. தழை - இலை. குட்ட நோய் - இலைகள் அற்றுப்போகும் ஒருவகை நோய். அலர்ந்து - விளங்கினால். மதுரம் - இனிமை. உவர்க் கடல் - உப்புக் கடல். மா வெண்மை - மிக்க வெண்மை. உணவு அற்ற - உண்ணுதற்குத் தகுதியில்லாத. உதவாத - பிறர்க்கு உதவி செய்யாத, மிடி - வறுமை. அணி - அழகிய. மாலிகா - மாலை. கொன்றை மாலிகா ஆபரணன் - கொன்றை மாலையை ஆபரணமாக வுடையவன்; சிவன்.

(உஉ)

**23.** குறைவுற்றும் குணம் கேடாமை :

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினும்
சார்மணம் பழுதாகுமோ
தக்கபால் சுவறிடக் காய்ச்சினும் அதுகொண்டு
சார மதுரம் குறையுமோ

நிறைபட்ட கதிர்மணி அழுக்கடைந் தாலும் அதின்
நீள்குணம் மழுங்கிவிடுமோ
நெருப்பிடை உருக்கினும் அடிக்கினும் தங்கத்தின்
நிறையுமாற் றுக் குறையுமோ
கறைபட்ட பைம்புயல் மறைத்தாலும் அதுகொண்டு
கதிர்மதி கனம்போகுமோ
கற்றபெரி யோர்மகிமை அற்பரறி கிலரேனும்
காசினி தனிற் போகுமோ
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே
ஐயனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : தறிபட்ட - வெட்டப்பட்ட. பழுதாயினும் - பழுது பட்டதாயினும்; போரை முதலியன விழுந்து பழுதுபட்டதாயினும். சார்மணம் - அதனைச் சேர்ந்துள்ள வாசனை. சுவறிட - வற்ற; சுண்ட. அது கொண்டு - அதனால், கொண்டு மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. சார மதுரம் - சாரமாகிய இனிப்பு. நிறை பட்ட - நிறைந்த. கதிர்மணி - ஒளியுள்ள இரத்தினம். நிறையும் மாற்று - நிறைந்த மாற்று. பைம் புயல் - கருமையான மேகம். கதிர் மதி - சூரியனுஞ் சந்திரனும்; இனி, ஒளியுள்ள சந்திரன் எனவுமாம். கனம் - மேன்மை. (உ௩)

**24.** இதற்கு உதவிசெய்வது இதுவெனல்:

வானவர் பிதிர்க்கள்முச் சுடர்மூவர் கோள்கட்கும்
வாழ்வுதரும் உதவி புவனம்
வளமிக்க புவனம் தனக்கு மேன் மேலுதவி
வாழ்வுபெற் றிடு மன்னராம்
தேனமர் நறுந்தொடையல் புனை மன்ன வர்க்குதவி
சேர்ந்தகுடி படைவர்க்கமாம்

சேர்குடி படைக்குதவி விளைபயிர் பயிர்க்குதவி
சீர்பெற வழங்குமழையாம்
மேனிமிர் மறைக்குதவி மடமாதர் கற்பொன்று
வேந்தர்தம் நீதியொன்று
வேதியர் ஒழுக்கமொன் றிம்மூன்று மேயென்று
மிக்கபெரி யோருரைசெய்வார்
ஆனமர் நெடுங்கொடி யுயர்த்த எம் இறைவனே
அதிபனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: வானவர் - தேவர். முச்சுடர் - சூரியன், சந்திரன், அக்கினி. மூவர் - அயன், அரி, அரன் என்னுந் திரிமூர்த்திகள். கோள்கள் - கிரகங்கள். உதவி - உதவி செய்வது. புவனம் - பூமி; அஃதாவது, பூமியில் விளையும் பொருள்கள் தேவர் முதலியோர் பூசனைக்கு உதவுதல். தேன் அமர் - தேன் பொருந்திய. நறுந் தொடையல் - வாசனை யமைந்த மலர்மாலை. புனை - அணிகின்ற. வர்க்கம் - இனம்; அவை, அமைச்சர் நண்பர் முதலானோர். மேல் நிமிர் - மேலெழுந்து செல்லுகின்ற.

'மேல்நிமிர்......உரை செய்வார்';

'வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே' என்பது காண்க.

ஆன் - எருது; ஆன் அமர் நெடுங்கொடி - இடபக்கொடி. (உச)

## 25. இதனைக் கண்டு மகிழ்வது இதுவெனல்:

தந்தைதாய் மலர்முகம் கண்டுநின் றுவிப்ப
தவர்தந்த சந்ததியதாம்

சந்த்ரோ தயங்கண்டு பூரிப்ப துயர்வாவி
தங்குபைங் குமுதமலராம்
புந்திமகிழ் வா யிரவி வருதல்கண் டகமகிழ்வ
பொங்குதா மரைமலர்களாம்
போதவும் புயல்கண்டு கண்களித் தே நடம்
புரிவது மயூர இனமாம்
சிந்தைமகிழ் வாயுதவு தாதா வினைக்கண்டு
சீர்பெறுவ திரவலர் குழாம்
திகழ்நீதி மன்னரைக் கண்டுகளி கூர்வதிச்
செகமெலாம் என்பர் கண்டாய்
அந்தியம் வானனைய செஞ்சடா டவியனே
அமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : ஆலிப்பது - களித்து ஆரவாரஞ் செய்வது. சந்ததி - குழந்தை. பூரிப்பது - நிறைந்து விரிவது. வாவி - தடாகம். குமுதம் - ஆம்பல். இரவி - சூரியன். மகிழ்வ - மகிழ்ச்சிகொள்வன. போதவும் - மிகவும். புயல் - மேகம். மயூர இனம் - மயில் கூட்டம். தாதா - கொடையாளி. இரவலர் குழாம் - யாசகர் கூட்டம். செகம் - பூமி ; பூமியிலுள்ளவர். அந்தி அம் வான் - அந்திக்காலத்து அழகிய ஆகாயம். அனைய - ஒத்த. செம் சடா அடவியனே - சிவந்த சடைக்காடு உடையவனே; சடைக்கற்றையைச் சடாடவி என்றார்.
(உரு)

**26. அது அதுவாகாமை :**

உள்ளன் பிலாதபேர் தித்திக்க வேபேசி
உறவாடு உறவும் உறவோ
உபசரித் தன்புடன் பரிமா றிடாதசோ
றுண்டவர்க் கன்ன மாமோ

தள்ளா திருந்துகொண் டொருவர்போய்ப் பார்த்துவரு
தக்கபயிர் பயிராகுமோ
தளகர்த்தன் ஒருவனில் லாமல்முன் சென்றிடும்
தானையும் தானையாமோ
விள்ளாத போகமில் லாதபெண் மேல்வரு
விருப்பமும் விருப்பமாமோ
வெகுகடன் பட்டபேர் செய்கின்ற சீவனமும்
மிக்கசீ வனமாகுமோ
அள்ளா திருங்கருணை யாளனே தேவர்தொழும்
ஆதியே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : தள்ளாது - தன்னால் இயலாமல். இருந்து கொண்டு - வீட்டிலிருந்துகொண்டே. ஒருவர் - பிறரொருவர். தளகர்த்தன் - படைத்தலைவன். தானை - படை. விள்ளாத - நீங்காத. போகம் - இன்ப நுகர்ச்சி. பெண்மேல் - பெண்ணிடத்தில்; மேல் - ஏழனுருபு. சீவனம் - வாழ்க்கை. அள்ளாத - குறையாத; இஃது உலக வழக்கு. இரு கருணை - மிக்க அருள். (உசு)

## 27. நற்குணங்களுக்கு இடமாகாதவர் :

வெறிகொண்ட மர்க்கடம் பேய்கொண்டு கள்ளுண்டு
வெங்காஞ் சொறிப்புதலிலே
வீழ்ந்துதேள் கொட்டிடச் சன்மார்க்கம் எள்ளளவும்
மேவுமோ மேவாதுபோல்
குறைகின்ற புத்தியாய் அதிலற்ப சாதியாய்க்
கூடவே யிளமையுண்டாய்க்
கொஞ்சமா மதிகார முங்கிடைத் தால்மிக்க
குவலயந் தனிலவர்க்கு

நிறைகின்ற பத்தியும் சீலமும் மேன்மையும்
நிதானமும் பெரியோர்கள்மேல்
நேசமும் ஈகையும் இவையெலாம் கனவிலும்
நினைவிலும் வராது கண்டாய்
அறைகின்ற சுருதியின் பொருளான வள்ளலே
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: வெறி - பைத்தியம். மர்க்கடம் - குரங்கு. வெம்காஞ்சொறிப் புதல் - கொடிய பூனைக்காஞ்சியின் புதர். மேவாதுபோல்- அடையாததுபோல. குவலயம் - பூமி. அறைகின்ற - சொல்லுகின்ற. சுருதி - வேதம்; கேட்கப்படுவது என்பது பொருள். (உஎ)

**28.** இதனால் இன்ன முறையனும் எனல்:

தன்னால் முடிக்கவொண் ணுதகா ரியம்வந்து
தான்முடிப் போன்தமையனும்
தன்றலைக் கிடர்வந்த போதுமீட் டுதவுவோன்
தாய்தந்தை யென்னலாகும்
ஒன்னார் செயுங்கொடுமை யால்மெலிவு வந்தபோ
துதவுவோன் இட்ட தெய்வம்
யுத்திபுத் திகள்சொல்லி மேல்வருங் காரியம்
உரைப்பவன் குருவென்னலாம்
எந்நாளும் வருநன்மை தீமைதன தென்னவே
யெண்ணிவரு வோன் பந்துவாம்
இருதய மறிந்துதன் சொற்படி நடக்குமவன்
எவனெனினு மவனே சுதன்
அந்நார மும்பணியு மெந்நாளு மேபுனையும்
அண்ணலே அருமை மதவேள்

அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : தமையன் - அண்ணன். மீட்டு - மீளும்படிசெய்து. ஒன்னார் - பகைவர். யுத்தி - யோசனை. பந்து - உறவு. இருதயம் - மனம். சுதன் - புத்திரன். நாரம் - தண்ணீர் ; கங்கை. அந்நாரம் - அக்கங்கை ; பகீரதன் வேண்ட வேகமாக வந்த அந்தக் கங்கை. பணி - பாம்பு ; படத்தை யுடையது என்பது பொருள். புனையும் - அணியும். (உஅ)

## 29. அவரவரிடத்து நடக்கும் முறை :

மாதா பிதாவினுக் குள்ளன் புடன்கனிவு
மாறாத நல்லொழுக் கம்
மருவுகுரு வானவர்க் கினியவுப சாரமுள
வார்த்தை வழிபா டடக்கம்
காதார் கருங்கண்மனை யாடனக் கோசயன
காலத்தில் நயபாஷணம்
கற்றபெரி யோர்முதியர் வரு மா துலர்க்கெலாம்
கருணைசே ரருள் விதானம்
நீதிபெறு மன்னவ ரிடத்ததிக பயவிநயம்
நெறியுடைய பேர்க் கிங்கிதம்
நேயமுள தமர்தமக் ககமகிழ் வுடன்பரிவு
நேரல ரிடத்தில் வயிரம்
ஆதிமனு நூல்சொலும் வழக்கமிது வாகுமெம
தையனே அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : கனிவு - நெகிழ்ச்சி ; உருக்கம். உபசாரம் உள வார்த்தை - உபசாரத்தோடு கூடிய வார்த்தை ; முகமன். வழிபாடு -

தொண்டு. காது ஆர் கருங்கண் - காதுவரையில் நீண்ட கரிய கண்ணேயுடைய. சயனம் - படுக்கை. நயபாஷணம் - இனிய சொல். முதியோர் - வயது சென்றவர். ஆதுலர் - வறியர். விதானம் - வணக்கம். விநய நெறி - அடக்கமாகிய முறை. இங்கிதம் - இனிய சொல். நேயமுள - நட்புள்ள. தமர் - தம்மவர்; உறவினர். அகமகிழ்வு - மனமகிழ்ச்சி. பரிவு - அன்பு. நோலர்-பகைவர். வயிரம் - கடும்பகை. ஆதி - முதன்மையான. மனுநூல்-மனு தர்ம சாஸ்திரம். வழக்கம் - முறை. (உகூ)

## 30. குணத்தை விட்டுக் குற்றத்தைக் கவர்தல் :

துட்டவிக டக்கவியை யாருமே மெச்சுவார்
சொல்லுநற் கவியை மெச்சார்
துர்ச்சனர்க் ககமகிழ்ந் துபசரிப் பார் வருந்
தூயரைத் தள்ளிவிடுவார்
இட்டமுள தெய்வந் தனைக்கரு திடார் கறுப்
பென்னிலோ போய்ப் பணிகுவார்
ஈன்றதாய் தந்தையைச் சற்றுமதி யார் வேசை
யென்னிலோ காலில் வீழ்வார்
நட்டலா பங்களுக் குள்ளான பந்துவரின்
நன்ருக வே பேசிடார்
நாளுமொப் பாரியாய் வந்தபுத் துறவுக்கு
நன்மைபல வே செய்குவார்
அட்டதிசை சூழ்புவியில் ஓங்குகவி மகிமைகாண்
அத்தனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: துட்ட - துஷ்டத்தனமுள்ள. விகடக்கவி - ஆசியக்கவி; இது விகடகவி என்றிருத்தல்வேண்டும், ஓசை நோக்கி மிகுந்து நின்றது. நற்கவி - சிறந்த கவிஞர்கள். தூயர் - பரிசுத்தமானவர்.

கருதிடார் - எண்ணமாட்டார். கறுப்பு - கறுப்பண்ணசாமி; பேய் முதலான சிறு தேவதைகள். பணிகுவார் - வணங்குவார்கள். ஈன்ற - பெற்ற. வேசை - தாசி. நட்ட லாபம் - நஷ்டமும் லாபமும்; லாப நஷ்டமென்பது செய்யுள் நோக்கி மாறி நின்றது. ஒப்பாரியாய் - போலியாய். புத்துறவு - (புது உறவு) புதிதாக வந்த உறவினர். அட்டதிசை - எட்டுத்திக்கு. புவி - பூமி. கலிமகிமை - கலிகாலத்தின் பெருமை. காண் - முன்னிலை அசை. அத்தன் - தலைவன். (௩0)

## 31. குணம் காண் குறி :

கற்றோர்கள் என்பதைச் சீலமுட னேசொலும்
கனவாக்கி னாற் காணலாம்
கற்புளார் என்பதைப் பார்க்கின்ற பார்வையொடு
கானடையி னுங் காணலாம்
அற்றோர்கள் என்பதை ஒன்றிலும் வாரா
அடக்கத்தி னாலறியலாம்
அறமுளோர் என்பதைப் பூததயை யென்னுநிலை
யதுகண்டு தானறியலாம்
வித்தோங்கு பயிரைக் கிளைத்துவரு துடியினால்
விளையுமென் றேயறியலாம்
வீரமுடை யோரென்ப தோங்கிவரு தைரிய
விசேடத்தி னாலறியலாம்
அத்தர் குணத்தினாற் குலநலம் தெரியலாம்
அண்ணலே அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : சீலம் - ஒழுக்கம். கனவாக்கு - மேலான சொல். கால் நடை - காலால் நடக்கும் நடை; கற்புடைய மடந்தையர் தலை குனிந்து பூமியை நோக்கி மெதுவாக நடந்து செல்வர் என்பது

கருத்து. அற்ரேர்கள் - பற்றற்ரேர்கள். ஒன்றிலும் - ஒரு செயலிலும். அறமுளோர் - தருமகுண முடையோர். பூததயை - உயிர்களிடத்து அன்பு. வித்து ஓங்கு - விதையினின்றும் வளர்கின்ற. கிளைத்து - தோன்றி. துடியினல் - திடத்தினல். தைரிய விசேஷம் - தைரியத்தின் மிகுதி. குலநலம் - குலத்தின் பெருமை. (நக)

**32. கூடிற் பயன்படல்:**

செத்தைபல கூடியொரு கயிருயின் அதுகொண்டு
திண்கரியை யும் கட்டலாம்
திகழ்ந்தபல துளிகூடி யாருயின் வாவியொடு
திரளேரி நிறைவிக்கலாம்
ஒத்தநுண் பஞ்சுபல சேர்ந்துநூ லாயிடின்
உடுத்திடுங் கலை யாக்கலாம்
ஓங்கிவரு கோலுடன் சிலையுங் கூடினல்
உயர்கவிகை யாக்கொள்ளலாம்
மற்றுமுயர் தண்டுலத் தோடு தவி டுமிகூடின்
மல்குமுளை விளைவிக்கலாம்
மனமொத்த நேயமொடு கூடியொரு வர்க்கொருவர்
வாழின்வெகு வெற்றிபெறலாம்
அற்றகனி யைப்பொருத் தரிபிரமர் தேடரிய
அமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : திண்கரி - பலம் பொருந்திய யானை ; கரி - தும்பிக்கையாகிய கரத்தையுடையது. திகழ்ந்த - விளங்கிய. துளி - நீர்த்துளி. வாவி - குளம். திரள் - கூட்டமான ; இதனைத் திரள் வாவி ஏரி என இரண்டோடும் கூட்டுக ; பல குளங்களும், பல ஏரிகளும் என்றபடி. நுண் - நுட்பமான. கலை - ஆடை. கோல் - நீண்ட

கொம்பு. சீலை - துணி. கவிகை - குடை; கவிகை என்பது, கை விகுதி பெற்ற தொழிற் பெயர்; அது, தொழிலாகு பெயராய்க் குடையை யுணர்த்தி நின்றது. தண்டுலம் - அரிசி. மல்கு மூலை - நிறைந்த மூலை. வெற்றி - ஜயம். அற்ற கனியைப் பொருத்து - மரத்தினின்றும் விழுந்த பழத்தை மீண்டும் அதில் பொருந்தும்படி செய்த. அரி - கிருஷ்ணன்; ஈண்டுத் திருமாலை யுணர்த்தி நின்றது. பொருத்து, பொருந்து என்பதன் பிறவினை. பாண்டவர் வனவாசஞ் செய்கையில், விஜயன் திரௌபதையின் சொற்படி அம்பு எய்து வீழ்த்திய நெல்லிக்கனியைக் கிருஷ்ணன் மரத்தில் மீண்டும் பொருந்தச் செய்தான் என்னுங் கதையை ஈண்டு அறிக. (௩௨)

## 33. அதற்கு வெற்றியிடம் :

கலைவலா ருக்கதிக சயம்மதுர வாக்கிலே
காமுகர்க் கதிக சயமோ
கைப்பொருளி லேவரும் மருத்துவர்க் கோசயம்
கைவிசே டந்தன்னிலே
நலமுடைய வேசையர்க் கழகிலே அரசர்க்கு
நாளும்ரண சூரத்திலே
நற்றவர்க் கதிக சயம் உலகுபுகழ் பொறையிலே
ஞானவே தியர்தமக்கோ
குலமகிமை தன்னிலே வைசியர்க் கோசயம்
கூறிய துலாக்கோலிலே
குற்றமில் லாதவே ளாளருக் கோசயம்
குறையாத கொழுமுனையிலே
அலைவில்குதி ரைக்கு நடைவேகத்தில் அதிகசயம்
ஆமென்பர் அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே.

குறிப்பு : கலைவலார் - கலையில் வல்லவர்கள்; கற்ருேர். சயம், ஜயம்-வெற்றி. காமுகர்-சிற்றின்ப விருப்பமுள்ளவர். மருத்துவர்-

வைத்தியர். கைவிசேடம் - கைவாசி. ரண சூரம் - போர் வீரம். உலகு-உலகத்தவர். பொறை - பொறுமை. வேதியர் வேதத்தை யுணர்ந்தவர் ; அந்தணர். துலாக் கோல் - தராசுக் கோல் - கொழு- கலப்பையின் முனையிலுள்ள கார். அலைவில் (அலைவு இல்)-கெடுத லில்லாத. (௩௩)

## 34. ஒன்று இல்லாமையால் பாழ்படல் :

தாம்பூல தாரணம் இலாததே வருபூர்ண
சந்த்ரன் நிகர் முக சூனியம்
சற்சனர் இலாததே வெகுசனம் சேர்ந்துவாழ்
தரு பெரிய நகர்சூனியம்
மேம்பா டிலாத மன் னவர்கள் வந் தாள்வதே
மிக்க தே சச் சூனியம்
மிக்க சற் புத்திரன் இலாததே நலமான
வீறுசேர் க்ருகசூனியம்
சோம்பாத தலைவர் இல் லாததே வளமுடன்
சொல்லுயர் சபா சூனியம்
தொல்லுலகில் அனைவர்க்கும் மா நிதியம் இல்லதே
சுத்த சூ னியம் என்பர்காண்
ஆம்பல் வத னத்தனைக் குகனை யீன் றருள்செய்த
அத்தனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : தாம்பூல தாரணம் - தாம்பூலந் தரித்துக்கொள்ளுதல். சூனியம் - சூன்யம், அழகின்மை ; இலாததே முக சூன்யம் எனக் கூட்டுக ; வரு பூர்ண சந்திரன் நிகர் என்பதை முகத்திற்கு ஆக்குக. வாழ்தரு - வாழ்கின்ற ; சற்சனர் இலாததே நகர் சூனியம் என முடிக்க. மேம்பாடு - பெருமை. வீறு - சிறப்பு. க்ருகம் - வீடு. சோம்பாத - சோம்பலில்லாத. சபா - சபை. தொல் உலகு -

பழமையான உலகம். மா நிதியம் - மிக்க செல்வம். சுத்த சூன்யம் - வெறும்பாழ். ஆம்பல் வதனத்தன் - யானை முகத்தையுடைய விநாயகன். குகன் - முருகன்; அன்பருடைய மனமாகிய குகையிலே இருப்பவன் என்றும், உயிர்களெல்லாம் அடையத் தக்க குகை போன்றவன் என்றும் பொருள் கூறுவர். (௩௪)

## 35. மூடர் தாரதம்மியம்:

பெண்புத்தி கேட்கின்ற மூடரும் தந்தை தாய்
பிழை புறஞ் சொலு மூடரும்
பெரியோர்கள் சபையிலே முகடேறி வந்தது
பிதற்றிடும் பெரு மூடரும்
பண்புற்ற சுற்றம் சிரிக்கவே இழிவான
பழிதொழில் செய் திடு மூடரும்
பற்றற்ற பேர்க்குமுன் பிணைநின்று பின்புபோய்ப்
பரிதவித் திடு மூடரும்
கண்கெட்ட மாடென்ன ஓடியிர வலர்மீது
காய்ந்து வீழ்ந் திடு மூடரும்
கற்றறி விலாதமுழு மூடருக் கிவரெலாம்
கால்மூடர் அரைமூடர்காண்
அண்கற்ற நாவலர்க் காகவே தூதுபோம்
ஐயனே அருமை மதவேள்
அநுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: புறம் சொலும் - பின்னே சொல்லுகின்ற; அயலாரிடத்தில் தூற்றிப் பேசுகின்ற. முகடு - மேலிடத்தில்; உயர்வான இடத்தில். வந்தது-வாயில் வந்த முறையல்லாத சொற்களை. பிதற்றிடும்-ஒழுங்கில்லாமல் பேசுகின்ற. பண்பு - நற்குணம்; அஃதாவது, நல்லொழுக்கங்களில் வழுவாது நின்று பிறர் இயல்புகளை அறிந்து ஒப்ப ஒழுகுதல். உற்ற - பொருந்திய. பழிதொழில் - பிறர் பழிக்கத்தக்க

செயல். பற்று அற்றபேர் - அன்பு இல்லாதவர். பிணை - உத்தரவாதி; ஜாமீன். பரிதவித்திடும்-வருந்துகின்ற. காய்ந்து-கோபித்து. அண் - அணுகிய ; தம்மைச் சார்ந்த. கற்ற நாவலர் - சுந்தரமூர்த்தி நாயனார். சிவபெருமான், சுந்தரமூர்த்தி நாயனாருக்காகத் திருவாரூரில் பரவையாரிடத்தும், திருவொற்றியூரில் சங்கிலிநாச்சியாரிடத்தும் தூது சென்ற வரலாறு ஈண்டு அறியத்தக்கது. (௩௫)

**36.** இதற்கு இது வேண்டும் எனல் :

தனக்குவெகு புத்தியுண் டாகினும் வேறொருவர்
 தம் புத்தி கேட்க வேண்டும்
தானதிக சூரனே யாகினும் கூடவே
 தளசேக ரங்கள் வேண்டும்
கனக்கின்ற வித்துவான் ஆகினும் தன்னினும்
 கற்றோரை நத்தவேண்டும்
காசினியை யொருகுடையில் ஆண்டாலும் வாசலில்
 கருத்துள்ள மந்த்ரி வேண்டும்
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்யன் ஆகினும்
 சுதிகூட்ட ஒருவன் வேண்டும்
சுடர்விளக் காயினும் நன்றாய் விளக்கிடத்
 தூண்டுகோல் ஒன்று வேண்டும்
அனற்கண்ண னேபடிக சங்கநிகர் வண்ணனே
 ஐயனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தரு சதுர கிரிவளர்
 அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : சூரன் - வீரமுள்ளவன். தளம் - படை. சேகரம் - கூட்டம் ; தளசேகரம் - படைகளின் கூட்டம். கனக்கின்ற - பெருமை அடைகின்ற. நத்தவேண்டும் - விரும்பவேண்டும். வாசல் - வாயில், ஈண்டு கொலுமண்டபத்தைக் குறித்து நின்றது. தொனிக்கின்ற - இனிய குரலோசையுடன் பாடுகின்ற. சுதி - சுருதி. சுடர் -

ஒளி. அனல் கண்ணன் - அக்கினியாகிய கண்ணை நெற்றியிலுடைய சிவன். படிகம் - பளிங்கு. சங்கம் - சங்கு. நிகர் - ஒத்த. வண்ணன்- நிறமுடையவன். சிவன் வெண்ணீறணிந்து வெண்மை நிறமாக விளங்குபவன் என்பது கருத்து.

(ந-சு)

**37. வறுமையின் கொடுமை :**

மேலான சாதியில் உதித்தாலும் அதிலென்ன
வெகுவித்தை கற்றும் என்ன
மிக்க அதி ரூபமொடு சற்குணம் இருந்தென்ன
மிகு மானி யாகியென்ன
பாலான மொழியுடைய ஞயென்ன ஆசார
பாஞு யிருந்தும் என்ன
பார்மீது வீரமொடு ஞானவா ஞயென்ன
பாக்கியம் இலாத போது
வாலாய மாய்ப்பெற்ற தாயும் சலித்திடுவள்
வந்த சுற் றமும் இகழுமே
மரியாதை யில்லாமல் அனைவரும் பேசுவார்
மனைவியும் தூறு சொல்வாள்
ஆலாலம் உண்ட கனி வாயனே நேயனே
அனகனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தரு சதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : உதித்தாலும் - பிறந்தாலும். அதி ரூபம் - மிக்க அழகான உருவம். சற்குணம் - நல்ல குணம். மானி - மானம் உள்ளவன். பாலான மொழி - பால்போன்ற இனிய சொல். ஆசாரபான் - நல்லொழுக்கம் மிகுந்தவன். பார் - பூமி. ஆய் - ஆகி. வாலாயம் - வழக்கம் ; சாதாரணம். பெற்றதாயும் வாலாயமாய்ச் சலித்திடுவள் என மாற்றுக. சலித்திடுவள் - நொந்துகொள்வாள். இகழும் - இகழ்வாகப் பேசும். தூறு - அவதூறு. தூறுசொல்வாள்-

தூற்றுவான். ஆலாலம் - விஷம்; ஹாலாஹலம் என்னும் வடசொல்லின் சிதைவு. அனகன் - பாவம் இல்லாதவன்; அகம் - பாவம். உதித்தாலும் முதலானவற்றில் உம்மைகள், உயர்வு சிறப்பு. (௩எ)

**38.** ஈனத்துவம் :

இரப்பவன் புவிமீதில் ஈனன் அவனுக்கில்லை
என்னுமவன் அவனில் ஈனன்
ஈகின்ற பேர்தம்மை ஈயாம லேகலைத்
திடுமூடன் அவனில் ஈனன்
உரைக்கின்ற பேச்சிலே பலனுண் டெனக்காட்டி
உதவிடான் அவனில் ஈனன்
உதவவே வாக்குரைத் தில்லையென் றேசொலும்
உலுத்தனே அவனில் ஈனன்
பரக்கின்ற யாசகர்க் காசைவார்த் தைகள்சொலிப்
பலகால் அலைந்து திரியப்
பண்ணியே யில்லையென் றிடுகொடிய பாவியே
பாரில்எல் லார்க்கும் ஈனன்
அரக்கிதழ்க் குமுதவாய் உமைநேச னேஎளியர்
அமுதனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே.

குறிப்பு : இரப்பவன் - யாசகம் செய்பவன். ஈனன் (ஹீனன்) - இழிவானவன். அவனில் - அந்த யாசகனிலும்; இல், ஐந்தாம் வேற்றுமை எல்லைப் பொருள். கலைத்திடும் - கெடுக்கின்ற. காட்டி - அறிவித்து. வாக்கு உரைத்து - வாக்குறுதி செய்து. உலுத்தன் - லோபி; லுப்தன் என்னும் வடசொல். பரக்கின்ற - (எல்லா இடங்களிலும்) செல்லுகின்ற. அரக்கு - அரக்குப்போன்ற; சாதிலிங்கம்போன்ற. இதழ் - உதடுகளையுடைய. குமுதம் வாய் - ஆம்பற்பூப்போன்ற வாய். எளியர் - எளியவர்களுக்கு. (௩அ)

**39. மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும் :**

செனமித்த வருடமும் உண்டான அத்தமும்
தீதில் கிர கச்சாரமும்
தின்றுவரும் ஔடதமும் மேலான தேசிகன்
செப்பிய மகா மந்த்ரமும்
புன்மையவ மானமும் தானமும் பைம்பொனணி
புனையும் மட வார் கலவியும்
புகழ்மேவு மானமும் இவையொன்ப தும் தமது
புந்திக்கு ளே வைப்பதே
தன்மமென் றுரைசெய்வர் ஒன்னார் கருத்தையும்
தன்பிணியை யும் பசியையும்
தான்செய்த பாவமும் இவையெலாம் வேறொருவர்
தஞ் செவியில் வைப்ப தியல்பாம்
அன் மருவு கண்டனே மூன்றுலகும் ஈன்றவுமை
அன்பனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

**குறிப்பு :** செனமித்த - பிறந்த. அத்தம் - பொருள். தீது - தீமை. கிரகசாரம் - கிரகநிலை; இஃது இசை நோக்கி, கிரகச்சாரம் என மிக்கு நின்றது. ஔடதம் - மருந்து. தேசிகன் - குரு. செப்பிய - உபதேசித்த. மகா மந்த்ரம் - பெரிய மந்திரம்; அஃது, சைவர்களுக்குப் பஞ்சாக்ஷரமும், வைஷ்ணவர்களுக்கு அஷ்டாக்ஷரமும் போல்வது. புன்மை - தாழ்மை. அவமானம் - அவமதிப்பு. அணி - ஆபரணம். புனையும் - அலங்காரம் செய்கின்ற; அணிகின்ற. மடவார் - பெண்டிர். கலவி - கூட்டம். தன்மம் - தருமம்; முறை. ஒன்னார் - பகைவர்; ஒன்றார் என்பதன் மரூஉ; ஒன்றார் - சேராதவர். அல் - இருள்; கரு நிறமுள்ள விஷத்தைக் குறித்தது; ஆகுபெயர். மருவு - பொருந்திய. மூன்று உலகு - சுவர்க்கம், பூமி, பாதாளம்.

**40 தேவர்கள் கால அளவை :**

சதுர்யுகம் ஓரிரண் டாயிரம் பிற்படின்
சதுமுகற் கொருதினமதாம்
சாற்றுமித் தினமொன்றி லேயிந்த்ர பட்டங்கள்
தாமும் ஈ ரேழ்சென்றிடும்
மதிமலியும் இத்தொகையின் அயன் ஆயுள் நூறுபோய்
மாண்டபோ தொருகற்பமாம்
மாறிவரு கற்ப மொரு கோடிசென் றால்நெடிய
மால்தனக் கோர்தினமதாம்
துதிபாவும் இத்தொகையில் ஒருகோடி நெடியமால்
தோன்றியே போய்மறைந்தால்
தோகையோர் பாகனே நீநகைத் தணிமுடி
துளக்கிடுங் காலம் என்பார்
அதிகமுள பலதேவர் தேவனே தேவர்சட்
காசனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : சதுர் யுகம் - நான்கு யுகங்கள் ; அவை, கிருதயுகம், திருதயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பனவாம். பிற்படின் - கழிந்தால். சது முகன் - நான்கு முகங்களையுடைய பிரமன் ;

'எண்ணும் சதுர்யுகங்கள் ஈரா யிரம்சென்றால்
நண்ணும் பிரமனுக்கோர் நாள்'

என்பது அறிக. சாற்றும் - சொல்லும். ஈரேழ் - பதினான்கு. மதி - மதிப்பு ; எண். மலியும் - மிகுந்த. அயன், அஜன் - பிரமன். மாண்டபோது - இறந்தபோது. நெடியமால் - விஷ்ணு. தோகை - மயில் போன்றவளாகிய உமாதேவி ; உவமவாகுபெயர். அணி - அழகான. முடி - தலை. துளக்கிடும் - அசைக்கின்ற. (௪0)

**41.** தூய்மையிடமும் தூய்மை செய்வனவும் :

வாம்பரி தனக்கதிக புனிதம் முக மதனிலே
மறையவர்க் குயர் புனிதமோ
மலரடியி லே புனித ஒளிகொள் கண் ணுடிக்கு
மாசில் முற் புறம தனிலே
மேம்படும் பசுவினுக் குப் பிற் புறத்திலே
மிக்க மட மாதருக்கோ
மேனியெல் லாம் புனித மாகும் ஆ சௌசமொடு
மேவு வனி தையர் தமக்கும்
தாம்பிர மதற்கும் மிகு வெள்ளி வெண் கலம் அயம்
தங்கம் ஈ யந்தமக்கும்
தரும் புனிதம் வருபெருக் கொடு புளி சுணம் சாம்பல்
சாருமண் தாது சாணம்
ஆம்புனிதம் இவையென்பர் மாமேரு வில்லியே
அனகனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தரு சதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : வாம்பரி - தாவிச் செல்லும் குதிரை; வாவும் என்பதில், உகரம் கெட்டது. புனிதம் - பரிசுத்தம். மலர் அடி - தாமரை மலர்போன்ற பாதம். மாசில் (மாசு இல்) - குற்றம் இல்லாத. மேம்படும் - மேன்மையாகிய. மட மாதர் - மடப்பத்தையுடைய மகளிர். ஆசௌசம் - அசுசி; பூப்பு. வனிதையர் - மகளிர். தாம்பிரம் - தாமிரம் ; செம்பு. அயம் - இரும்பு. பெருக்கு - வெள்ளம். சுணம் - சுண்ணம், சுண்ணும்பு. சாரும் மண் - சேர்ந்த மண். தாது - தாதுப்பொருள்கள் ; கருமணல் முதலானவை. மா மேரு - மகா மேருமலையை. வில்லி - வில்லாக வுடையவன்.

தூய்மை இடம் என்றது - 'மாதருக்கோ மேனியெல்லாம் புனிதம் ஆகும்' என்பது வரையிலுள்ளவைகளே. அதன்மேல், தூய்மை செய்வனவற்றைக் கூறுகின்முர் எனக் காண்க.

ஆசௌச வனிதையருக்குப் பெருக்கு, தாம்பிரத்துக்குப் புளி, வெள்ளிக்குச் சுண்ணம், வெண்கலத்திற்குச் சாம்பல், அயத்துக்கு மண், தங்கத்திற்குத் தாது, ஈயத்திற்குச் சாணம் என முறையே கொள்க. சிவபிரான், திரிபுர சங்காரத்தின் பொருட்டு மேரு மலையை வில்லாகக் கொண்ட கதையை அறிக. (சக)

**42. அடங்காதவற்றை அடக்கும் உபாயம்:**

கொடியபொலி யெருதையிரு மூக்கிலுங் கயிறொன்று
கோத்து வச விர்த்திகொள்வார்
குவலயந் தனில்மதக் களிறதனை அங்குசங்
கொண்டு வச விர்த்திகொள்வார்
படியில்விட வரவைமந் திரதந் திரத்தினாற்
பற்றி வச விர்த்திகொள்வார்
பாய்பரியை நெடியகடி வாளமது கொடுநடை
பழக்கி வச விர்த்திகொள்வார்
விடமுடைய துட்டரைச் சொற்பந் தொகைக்கொண்டு
வீசி வச விர்த்திகொள்வார்
மிக்கபெரி யோர்களும் கோபத்தை யறிவால்
விலக்கி வச விர்த்திகொள்வார்
அடியவர் துதிக்கவரு செந்தா மரைப்பதத்
தையனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: பொலி எருது-மாப்பிள்ளை மாடு. இரு மூக்கிலும்-இரண்டு மூக்குத் துளைகளிலும். வசவிர்த்தி-சொற்படி நடப்பது. வசவிர்த்தி கொள்ளுதல்-சொன்னபடி நடப்பதாகச் செய்துகொள்ளல். குவலயம் - பூமி. மதக்களிறு - மதத்தையுடைய ஆண்யானை. படியில்-பூமியில். விட அரவு-விஷம் உள்ளபாம்பு. தந்திரம்-கிரியை. பற்றி-பிடித்து. பாய்பரி-பாய்ந்து செல்லும் குதிரை. விடம்-தீக்குணம். சொற்பந் தொகை-கொஞ்சம் தொகை; சிறிது பொருள். (சஉ)

43. ஒளியின் உயர்வு :

செழுமணிக் கொளியதன் மட்டிலே அதினுமோ
செய்ய கச் சோதமெனவே
செப்பிடுங் கிருமிக்கு மிக்கவொளி யதனினும்
தீபத்தின் ஒளியதிகமாம்
பழுதிலாத் தீவர்த்தி தீபத்தின் அதிகமாம்
பகல்வர்த்தி அதிலதிகமாம்
'பாரமத் தாப்பினொளி அதிலதிகம் அதினுமோ
பனிமதிக் கொளியதிகமாம்
விழைவுதரு பரிதிக்கும் மனுநீதி மன்னர்க்கும்
வீரவித ரணிகருக்கும்
மிக்கவொளி திசைதொறும் போய்விளங் கிடுமென்ன
விரகுளோர் உரைசெய்குவார்
அழல்விழிகொ டெரிசெய்து மதனவேள் தனைவென்ற
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மணி - இரத்தினம். அதன் மட்டில் - அதன் அளவில். செய்ய கச்சோதம் - அழகாகிய மின்மினிப்பூச்சி ; கத்யோதம் என்னும் வடசொல்லின் சிதைவு. கிருமி - பூச்சி. தீவர்த்தி, திவட்டி என வழங்குகின்றது. பகல் வர்த்தி - பகல் தீவட்டி. அதில் - தீவர்த்தியைக் காட்டிலும். பாரம் - பெரிய. பனி மதி - குளிர்ச்சி பொருந்திய சந்திரன். விழைவு - விருப்பம். பரிதி - சூரியன். மனுநீதி மன்னர் - நீதிதவறாது அரசு செலுத்தும் அரசர். விதரணிகர் - கொடையாளிகள் ; வீரவிதரணி - தானவீரன். விரகு உளோர் - புலவர் ; விரகு = அறிவு. அழல் விழி - நெருப்புக்கண் ; சிவபிரானுக்கு நெற்றியிலுள்ள கண். மதனவேள் - மன்மதன் ; வேள் - விருப்பத்தை யுண்டாக்குபவன். (சங)

44. குணம் குற்றமாதல் :

வான்மதியை நோக்கிடிற் சோரர் கா முகருக்கு
மாறாத வல்விடமதாம்
மகிழ்நன் றனைக்காணில் இதமிலா விபசரிய
மாதருக் கோ விடமதாம்
மேன்மைதரு நற்சுவை பதார்த்தமும் சுரரோக
மிக்கபேர்க் கதிகவிட மாம்
வித்தியா திபர்தமைக் கண்டபோ ததிலோப
வீணர்க்கெ லாம் விடமதாம்
ஈனமிகு புன்கவி வலோர்க்கதிக சபைகாணில்
ஏலாத கொடியவிடமாம்
ஏற்றமில் லாதபடு பாவிகட் கறமென்னில்
எந்நாளும் அதிக விடமாம்
ஆனதவ யோகியர்கள் இதயதா மரை யுறையும்
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : வான்மதி - ஆகாயத்தில் உள்ள பூரண சந்திரன். நோக்கிடின் - பார்த்தால். சோரர் - திருடர். காமுகர் - தூர்த்தர். மாறாத - நீங்காத. வல்விடம் - கொடிய விஷம்; மிக்க துன்பம் தருவது என்பது கருத்து. மகிழ்நன் - கணவன். இதம் - நன்மை. விபசரிய மாதர் - கெட்ட ஒழுக்கம் உள்ள பெண்கள். சுரரோகம் - காய்ச்சல் என்னும் நோய். வித்யாதிபர் (வித்யா அதிபர்)- கல்வியில் தலைவர்; பெரும் புலவர். அதிலோபம் - மிக்க உலோபத்தன்மையுடைய. வீணர் - பயனில்லாதவர். ஈனம் - இழிவு. புன்கவிவலோர் - அற்பமான கவிகளைப்பாடுதலில் வல்லவர். அதிக சபை - சிறந்த சபை. ஏலாத - ஏற்காத. ஏற்றம் - பெருமை. அறம் - தருமம். இதயதாமரை - இருதயமாகிய தாமரைப்பூவில். (சச)

## 45. உயர்வன்றித் தாழ்வும் சிறக்கும் இடம்:

வெகுமான மாகிலும் அவமான மாகிலும்
மேன்மையோர் செய்யிலழகாம்
விரசமே யாகிலும் சரசமே யாகிலும்
விழைமங்கை செய்யி லழகாம்
தகுதாழ்வு வாழ்வு வெகு தருமங்களைச்செய்து
சாரிலோ பேரழகதாம்
சரீரத்தில் ஒரூன மானமெது வாகிலும்
சமர்செய்து வரி லழகதாம்
நகமேவு மதகரியில் ஏறினும் தவறினும்
நாளுமது வோரழகதாம்
நாய்மீதில் ஏறினும் வீழினும் கண்டபேர்
நகைசெய் தழ கன்றென்பர்காண்
அகமாயும் நற்றவர்க் கருள்புரியும் ஐயனே
ஆதியே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: வெகுமானம், பஹுமானம் - நன்மதிப்பு. அவமானம் - தாழ்வு, இகழ்ச்சி. மேன்மையோர் - மேன்மக்கள். விரசம் - வெறுப்பு; ரசம் இல்லாமை என்பது பொருள். சரசம் - விருப்பு; ரசம் உடையது. விழை மங்கை - தான் விரும்பிய பெண். சாரில் - சேர்ந்தால். சரீரம் - உடம்பு; அழியத்தக்கது என்பது பொருள். ஊனம் - குறைபாடு. மானம் - பெருமை. சமர் - போர். வரில் - வந்தால். நகம் மேவும் - மலையில் வாழ்கின்ற; நகம் - நடவாதது என்பது பொருள். மத கரி - மத யானை; கரி - கரத்தை (தும்பிக்கையை) யுடையது. நகை செய்து - சிரித்து. அழகு அன்று - அழகான செயல் அன்று. அகம் ஆயும் - மனத்தில் ஆராய்கின்ற. (சரு)

## 46. நல்வினை செய்தோர்

சரணெனக் காத்தவன் மெய்யினால் வென்றவன்
தானம் இளையாதுதவினோன்
தந்தைசொல் மறாதவன் முன்னவற் கானவன்
தாய்பழி துடைத்தநெடியோன்
வருபிதிர்க் குதவினோன் தெய்வமே துணையென்று
மைந்தன் மனைவியை வதைத்தோன்
மாறான தந்தையைத் தமையனைப் பிழைகண்டு
மாய்த் துலகில் மகிமைபெற்றோன்
கருதரிய சிபியரிச் சந்திரன் மாவலி
கணிச்சியோன் சுமித்திரைசுதன்
கருடன் பகீரதனுடன் சிறுத் தொண்டனொடு
கானவன் பிரகலாதன்
அரியவல் விபீடணன் அனுமகா புருடராம்
அந்தனே அருமை மதவேள
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே.

குறிப்பு: சரண் என - அடைக்கலம் என்று சொல்ல. மெய் - உண்மை. இளையாது - இளைக்காமல்; பின் வாங்காமல். மறாதவன் - மறுக்காதவன். முன்னவன் - அண்ணன்; இராமன். துடைத்த - போக்கிய. பிதிர் - பிதிர் தேவதைகள்; இறந்துபோன முன்னோர்கள். மைந்தன் - மகன். மாறு ஆன - விரோதப்பட்ட. மாய்த்து - அழித்து. கருத அரிய - நினைக்கவும் முடியாத; அகரம், தொகுத்தல் விகாரம். கணிச்சியோன் - மழுப்படையையுடைய பரசுராமன். சுமித்திரை சுதன் - சுமித்திரையின் மகனாகிய லக்ஷ்மணன். கானவன் - வேடன். வல் - வலிமையுள்ள.

சரண் எனக் காத்தவன் - சிபி; மெய்யினால் வென்றவன் - அரிச்சந்திரன்; தானம் இளையாது உதவினோன் - மாவலி; தந்தைசொல்

மருதவன் - கணிச்சியோன் ; முன்னவற்கு ஆனவன் - சுமித்திரை சுதன் ; தாய்பழி துடைத்த நெடியோன் - கருடன் ; பிதிரர்க்கு உதவினோன் - பகீரதன் ; மைந்தனை வதைத்தோன் - சிறுத்தொண்டன் ; மனைவியை வதைத்தோன் - கானவன் ; தந்தையை மாய்த்தோன் - பிரகலாதன் ; தமையனை மாய்த்தோன் - விபீஷணன் என முறையே இயைத்துக்கொள்க. வதைத்தோன், பெற்றோன் ; இவற்றைத் தனித்தனியே கூட்டுக. (சுசு)

**47.** தீவினை செய்தோர் :

வாயிகழ்வு பேசிமிகு வாழ்விழந் தோன் சிவனை
வைது தன் தலைபோயினோன்
மற்றொருவர் தாரத்தில் இச்சைவைத் துடலெலாம்
மாறாத வடுவாயினோன்
தாயத்தி னோர்க்குள்ள பங்கைக் கொடாமலே
சம்பத் திழந்துமாய்ந்தோன்
தக்கபெரி யோர்தமை வணங்கா மதத்தினால்
தந்திவடி வாயலைந்தோன்
மாயனைச் சபையதனில் நிந்தனைசெய் தொளிகொள்நவ
மணிமுடி துணிந்து மாய்ந்தோன்
வருநதுட னெடு தக்கன் அயிராவ தன் குருடன்
மகன் வழுதி சிசுபாலனும்
ஆயுமறி வாளரொடு தேவர்பணி தாளனே
அவனிபுகழ் அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : வாய் இகழ்வு பேசி - வாயினால் இழிவான சொற்களைச் சொல்லி. தாரம் - மனைவி. வடு - தழும்பு. தாயத்தினோர் - தாயாதிகள் ; பாண்டவர். சம்பத்து - செல்வம். பெரியோர் - அகத்தியர். மதம் - கர்வம். தந்தி - யானை ; தந்தத்தையுடையது என்பது பொருள். மாயன் - கிருஷ்ணன். நிந்தனை -

பழிப்பு. துணிந்து - அறுபட்டு. நகுடன் - நகுஷன். தக்கன் - தக்ஷபிரஜாபதி. அயிராவதன் - அயிராவதத்தையுடைய இந்திரன். குருடன் - திருதராஷ்டிரன். குருடன் மகன் - துரியோதனன். வழுதி - இந்திர துய்மன் என்னும் பாண்டியன். தாளன் - திருவடிகளை யுடையவன். அவனி - பூமி.

வாய் இகழ்வு பேசி வாழ்விழந்தோன் - நகுடன்; சிவனை வைது தலைபோயினேன் - தக்கன்; உடலெல்லாம் வடுவாயினேன் - அயிராவதன்; சம்பத்திழந்து மாய்ந்தோன்-குருடன் மகன்; தந்தி வடிவாய் அலைந்தோன்-வழுதி; மணிமுடி துணிந்து மாய்ந்தோன்-சிசுபாலன் என முறையே கூட்டுக. (சஎ)

48. நன்னகர் :

வாவிபல கூபமுடன் ஆறருகு சேர்வதாய்
மலைகாத வழியி னுளதாய்
வாழைகமு கொடுதெங்கு பயிரானவ தாய்ச்செந்நெல்
வயல்கள் வாய்க் கால்கள் உளதாய்
காவி கம லம்குவளை சேரேரி யுள்ளதாய்க்
கனவர்த்த கர்கள் மறைவலோர்
காணரிய பலகுடிகள் நிறைவுள்ள தாய் நல்ல
காவலன் இருக்கை யுளதாய்த்
தேவாலயம் ஆடல் பாடல் அணி மாளிகை
சிறக்கவுள தாய்ச் சற்சனர்
சேருமிட மாகுமோர் ஊர்கிடைத் ததில் அதிக
சீவனமு மே கிடைத்தால்
ஆவலொ டிருந்திடுவ தே சொர்க்க வாசமென்
றறையலாம் அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: வாவி - தடாகம்; ஆற்றில் ஓடை என்பர். கூபம் - கிணறு. அருகு - பக்கத்தில். காதவழியின் - காதவழி தூரத்தில்;

காதம், பத்துமைல் தூரம் உள்ளது. கமுகு - பாக்கு மரம். காவி- செங்குவளை. கமலம் - தாமரை; தண்ணீரை அலங்கரிப்பது. குவளை - கருங்குவளை. சேர் - சேர்ந்துள்ள. கனவர்த்தகர் - பெரிய வியாபாரிகள். மறைவலோர் - வேதம் வல்ல பிராமணர்; மறை - மறைந்த பொருளையுடையது. காவலன் - அரசன்; காத்தலில் வல்லவன். காவலன் இருக்கை - இராஜதானி. அணி - அழகாகிய. சற்சனர் - நல்லோர். அதிக சீவனம் - உயர்ந்த வாழ்க்கை. ஆவல் - விருப்பம். சொர்க்க வாசம் - தேவலோக வாழ்வு. அறையலாம் - சொல்லலாம். (சஅ)

**49. தீ நகர்:**

ஈனசா திகள் குடி யிருப்பதாய் முள்வேலி
இல்லில்லி னுக்கு முளதாய்
இணைமுலை திறந்து தம் தலைவிரித் திடுமாதர்
எங்குநட மாட்ட முளதாய்க்
கானமொரு பக்கமாய் மலையோர மாய் முறைக்
காய்ச்சல் தப் பாத விடமாய்க்
கள்ளர்பய மாய் கெடிய கபிறிட் டிறைக்கின்ற
கற்கேணி நீருண்பதாய்
மானமில் லாக் கொடிய துர்ச்சனர் தமக்கேற்ற
மணியமொன் றுண்டானதாய்
மாநிலத் தோர்தலம் இருந்ததனில் வெகுவாழ்வு
வாழ்வதிலும் அருநரகிலே
ஆனநெடு நாள்கிடந் தமிழ்தலே சுகமாகும்
அமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : ஈனசாதிகள் - தாழ்ந்த குலத்தோர்கள். இல் இல்லி னுக்கும் - ஒவ்வொரு வீட்டிற்கும். இணை - இரண்டு. நடமாட்டம் - சஞ்சாரம். கானம் - காடு. கற்கேணி - பாறையிலுள்ள கிணறு. நெடிய கயிறு இட்டு இறைக்கின்ற கற்கேணி - மிக்க ஆழமான கிணறு. மானம் - பெருமை. துர்ச்சனர் - கொடியோர். மணி யம் - அதிகாரத் தொழில். மாநிலத்து - பெரிய உலகத்தில். ஓர் தலம் இருந்து - ஓர் ஊரில் குடியிருந்து. அருநரகு - இருத்தற்கு அரிய நரகத்தில். அமிழ்தல் - ஆழ்ந்து கிடத்தல். (சுக)

**50.** முழுக்கு நாள் :

வருமாதி வாரம் தலைக்கெண்ணெய் ஆகாது
வடிவமிகும் அழகு போகும்
வளர்திங்க ளுக்கதிக பொருள்சேரும் அங்கார
வாரம் தனக்கிடர்வரும்
திருமேவு புதனுக்கு மிகுபத்தி வந்திடும்
செம்பொனுக் குயரறிவு போம்
தேடிய பொருட்சேத மாம்வெள்ளி சனியெண்ணெய்
செல்வமுண் டாயுளுண் டாம்
பரிகாரம் உளதாதி வாரந் தனக்கலரி
பௌமனுக் கானசெழு மண்
பச்சறுகு பொன்னவற் காம்எருத் தூள்ஒளிப்
பார்க்கவற் காகும் எனவே
அரிதா யறிந்தபேர் எண்ணெய்சேர்த் தேமுழுக்
காடுவார் அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : வரும் - வாரந்தோறும் வருகின்ற. ஆதிவாரம் - ஞாயிற்றுக்கிழமை. வடிவம் - உடலில். அங்கார வாரம் - செவ்

வாய்க்கிழமை. இடர் - துன்பம். திருமேவு - பெருமை பொருந்திய. பொன் - வியாழக்கிழமை. சேதம் - அழிவு. பரிகாரம் - (அதனுல் வரும் துன்பத்தை) நீக்கும் முறை. அலரி - மலர். பௌமன் - செவ்வாய். பச்சறுகு - பச்சையான அறுகம்புல். பொன்னவன் - வியாழன். எருத்தூள் - எருவின் தூள்; எரு - எண்டு, பசுவினது உலர்ந்த சாணம். பார்க்கவன் - சுக்கிரன்; வெள்ளி. அரிது ஆ - அருமையாக. அறிந்தபேர் - (இம் முறையை) அறிந்தவர்கள்.

ஞாயிற்றுக்கிழமைக்கு அலரியும், செவ்வாய்க்கிழமைக்கு மண்ணும், வியாழக்கிழமைக்கு அறுகும், வெள்ளிக்கிழமைக்குப் பசுவின் சாணத்தூளும் பரிகாரமாக எண்ணெயோடு சேர்த்துத் தேய்த்து முழுகினுல், அக் கிழமைகளினுல் உண்டாகும் குற்றம் நீங்கும் என்பதாம்.

'எண்ணெ யிடலாகா தென்றநாள் நான்கினிலும்
எண்ணெயிட லாமென் றியம்பினோம் — அண்ணுகேள்
ஞாயிறுபூ செவ்வாய்மண் நற்பொன்னுக் கே அறுகு
தூயவெள்ளிக் காவின்தூள் சொல்.'

என்பதை அறிக.

இச் செய்யுள், ஆண்பாலார் எண்ணெய் தேய்த்து முழுகுவதைப் பற்றிச் சொன்னதாகும். (ரு௦)

## 51. மருத்துவன்:

தாதுப் பரீக்ஷைவரு காலதே சத்தொடு
சரீரலட் சணமறிந்து
தன்வந்த்ரி கும்பமுனி தேரர்கொங் கணர்சித்தர்
தமதுவா கடமறிந்து
பேதப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப்
பிரயோக மோடுபஸ்மம்

பிழையாது மண்டூர செந்தூர லட்சணம்
பேர்பெறுங் குணவாகடம்
சோதித்து மூலிகா விதநிகண் டுங்கண்டு
தூய தை லம்லேகியம்
சொல்பக்கு வங்கண்டு வருரோக நிண்ணயம்
தோற்றியே அமிர்தகரமாய்
ஆதிப் பெருங்கேள்வி யுடையன் ஆயுர்வேதன்
ஆகும் எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவள்ளர்
அறப்பளீ சுரதேவனே.

குறிப்பு : தாது பரீட்சை - நாடியின் நிதானமறிதல்; தாது பரீக்ஷை என்பது சந்தம் நோக்கி மிகுந்து நின்றது. காலதேசம் - காலமும் இடமும். சரீர லட்சணம் - உடலின் நிலை. தேரர் - தேரையர். வாகடம் - வைத்தியநூல். பேதம் - வேறுபாடுடைய. குளிகை - மாத்திரை. மாத்திரைப் பிரயோகம் - மாத்திரையை உட்கொள்ளச் செய்தல்; பிரயோகம் - செலுத்துதல். பஸ்மம் - பொடி; இது மருந்துகளைப் புடம் வைத்துப் பொடியாக்குதலைக் குறிக்கும். மண்டூரம் - செங்கற் கிட்டம். செந்தூரம் - பொன் முதலியவற்றாலாகிய சுண்ணம். குண வாகடம் - வியாதியின் குணங்களை அறிவிக்கும் ஒரு வைத்திய சாஸ்திரம். மூலிகா வித நிகண்டு - மூலிகை விதங்களைத் தெரிவிக்கின்ற நிகண்டு நூல். தூய - பரிசுத்தமான. தைலம் - எண்ணெய்; அது, இங்கு மருந்திலைச் சாற்றைக் கலந்து காய்ச்சி இறக்கும் எண்ணெயைக் குறித்து நின்றது; திலம் - எள். லேகியம் - பாகாகக் கிண்டிய மருந்து; நக்கப்படுவது என்பது பொருள். ரோகநிண்ணயம் - இன்னநோய் என்று தீர்மானம் செய்தல் நிர்ணயம் என்பது நிண்ணயம் என்றாயிற்று. தோற்றி - தோன்றச்செய்து. அமிர்தகரன் - கைவாசியுள்ளவன். ஆதி - முதன்மையான. கேள்வி - கேள்விச் செல்வம். ஆயுர்வேதன் - வைத்தியன்.

(ருக)

**52. உண்மை உணர் குறி :**

சோதிடம் பொய்யாது மெய்யென்ப தறிவரிய
சூழ்கிரக ணம்சாட்சியாம்
சொற்பெரிய வாகடம் நிசமென்கை பேதிதரு
தூயமாத் திரை சாட்சியாம்
ஆதியிற் செய்ததவம் உண்டில்லை யென்பதற்
காளடிமை யே சாட்சியாம்
அரிதேவ தேவனென் பதையறிய முதனூல்
அரிச்சுவடி யே சாட்சியாம்
நாதனே மாதேவன் என்பதற் கோருத்ர
நமக சமகம் சாட்சியாம்
நாயேனை ரட்சிப்ப துன்பாரம் அரியயன்
நாளுமர்ச் சனைசெய் சரணத்
தாதிநா யகமிக்க வேதநா யகனான
அண்ணலே அருமை மதவேள்
அநுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : சோதிடம் - சோதிஷ சாஸ்திரம். பொய்யாது - பொய் யாகாது. மெய் என்பது - அது மெய்யே என்பது. அறிவு அரிய - அறிதற்கு அருமையான. கிரகணம் - சூரிய சந்திர கிரகணங்கள் ; கிரகணம் - பிடித்தல் என்பது பொருள் ; பாணிக்கிரகணம் என்பது போல. சாட்சி - பார்த்தல் ; கண்கூடு. சொல் - புகழ்தற்குரிய. வாகடம் - வைத்திய நூல். என்கை - என்பது; கை விகுதி பெற்ற தொழிற்பெயர். பேதி தரு - பேதியை யுண்டாக்குகின்ற. ஆதி - முற்பிறப்பு. ஆள் அடிமை - ஆண்டானும் அடிமையும் ; அஃதாவது செல்வனும் வறியனுமான வேற்றுமை. அடிமை ஆள் எனவுமாம். அரி - விஷ்ணு. தேவ தேவன் - தேவர்களுக்குத் தேவன். முதல் நூல் - முதலில் படிக்கும் நூலாகிய. அரிச்சுவடி - அரிச்சுவடி

என்னும் நூல்; இதில் அரிநமோத்து சிந்தம் எனத் தொடங்கு வது காண்க. சுவடி - நூல்; எழுத்துக்களின் வரிவடிவாகிய அடையாளத்தை யுடையது. நாதன் - தலைவன். மாதேவன் - மகாதேவன்; சிவபெருமான். ருத்ர நமக சமகம் - ஓர் உபநிடதத்தின் பகுதிகள். அரி அயன் - திருமாலும் பிரமனும்; உம்மைத்தொகை. சரணம் - பாதம். (ருஉ)

**53.** பிறவிக்குணம் மாருமை :

கலங்காத சித்தமும் செல்வமும் ஞானமும்
கல்வியும் கருணை விளைவும்
கருதரிய வடிவமும் போகமும் த்யாகமும்
கனரூப முள மங்கையும்
அலங்காத வீரமும் பொறுமையும் தந்த்ரமும்
ஆண்மையும் அமுத மொழியும்
ஆன இச் செயலெலாம் சன்மவா சனையினல்
ஆகிவரும் அன்றி நிலமேல்
நலஞ்சேரும் ஒருவரைப் பார்த்தது பெறக்கருதின்
நண்ணுமோ ரஸ்தாளிதன்
நற்சுவை தனக்குவர வேம்புதவ மேநெடிது
நாள்செயினும் வாராது காண்
அலங்கார மாகமலர் கொன்றைமா லிகைசூடும்
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில் நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : சித்தம் - மனம். கருணை விளைவு - அருளுண்டாதல். கருத அரிய-எண்ணுதற்கு அருமையான. வடிவம்-அழகு. போகம்-இன்பநுகர்ச்சி. தியாகம் - கொடை. கன ரூபம் உள மங்கை - மிக்க அழகு வாய்ந்த மனைவி. அலங்காத - அசையாத; பின் வாங்காத.

தந்திரம் - உபாயம். அமுதமொழி - இன்சொல். சனன வாசனை - பிறவிக் குணம். நில மேல் - நிலத்தின் மேல்; பூமியில். நலம் சேரும் - (மேற்கூறிய) நற் குணங்கள் சேர்ந்த. பெறக் கருதின் - அடைய நினைத்தால். நண்ணுமோ - வந்து சேருமோ. ரஸ் தாளி - ஒருவகை வாழைப்பழம். வேம்பு தனக்கு வா என மாற்றுக. வேம்பு - வேப்பங்கனி. நெடிது நாள் - நீண்ட காலம். காண் - அசை. மாலிகை - மாலை. ரஸ்தாளி, வேம்பு, கொன்றை இம் மூன்றும், முதலாகு பெயர்கள். (ருங)

**54. ஊழ்வலி :**

கடலள வுரைத்திடுவர் அரிபிரமர் உருவமும்
காணும் படிக் குரை செய்வார்
காசினியின் அளவு பிர மாணமது சொல்லுவார்
காயத்தின் நிலைமையறிவார்
விடலரிய சீவநிலை காட்டுவார் மூச்சையும்
விடாமல் தடுத் தடக்கி
மேன்மேலும் யோகசா தனை விளைப் பார் எட்டி
விண்மீதி னுந் தாவுவார்
தொடலரிய பிரமநிலை காட்டுவார் எண்வகைத்
தொகையான சித்தி யறிவார்
சூழ்வினை வரும்பொழுது சிக்கியுழல்வார் அது
துடைக்கவொரு நான்முகற்கும்
அடைவல வெனத்தெரிந் துளவில்பல நூல்சொல்லும்
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : கடல் அளவு - கடலின் அளவு; அஃதாவது கடலின் பரப்பையும் ஆழத்தையும் அறியும் அளவு. உரைத்திடுவர் - சொல் லுவர். காணும்படிக்கு - பார்க்கும்படிக்கு. காசினி - உலகு. அளவு

பிரமாணம் - அளவின் எல்லை. காயத்தின் நிலைமை - உடலின் தன்மை. விடல் அரிய - நீக்குதற்கரிய. சீவ நிலை - உயிர் நிலை. யோகசாதனை - யோகாப்பியாசம். விண் - ஆகாயம். தொடல்அரிய - பற்றுதற்கரிய. பிரம நிலை - கடவுள் நிலை. எண்வகைச் சித்தி - எட்டு விதமான சித்தி, அஷ்டமாசித்தி ; அவை : அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், வசித்துவம் என்பன. சிக்கி - அகப்பட்டு. துடைக்க - போக்க. நான் முகன் - நான்கு முகங்களை யுடைய பிரமன். அடைவு அல - வசம் அல்ல. அளவில் - (அளவு இல்) அளவில்லாத. எண்இறந்த நூல், வேதம் முதலாயின. (ருச)

**55.** ஒப்புயர்வு இல்லாமை :

வேதியர்க் கதிகமாம் சாதியும் கனக மக
மேருவுக் கதிக மலையும்
வெண்டிரை கொழித்துவரு கங்கா நதிக்கதிக
மேதினியி லோடு நதியும்
சோதிதரும் ஆதவற் கதிகமாம் காந்தியும்
சூழ்கனற் கதிக சுசியும்
தூயதாய் தந்தைக்கு மேலான தெய்வமும்
சுருதிக் குயர்ந்த கலையும்
ஆதிவட மொழிதனக் கதிகமாம் மொழியும் நுகர்
அன்னதா னந் தனிலுமோர்
அதிகதா னமு மில்லை யென்று பல நூலெலாம்
ஆராய்ந்த பேர் உரைசெய்வார்
ஆதவன் பிரமன் விண் ணவர் முனிவர் பரவவரும்
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தரு சதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : வேதியர் - வேதம் ஓதும் அந்தணர். கனக மக-மேரு- பொன்மயமாகிய மகாமேரு பர்வதம். வெண்திரை - வெண்மை

யாகிய அலை. கொழித்து - பொங்கி. மேதினியில் - உலகத்தில். ஆதவன் - சூரியன். காந்தி - ஒளி. கனல் - நெருப்பு. சுசி - சுத்தம். சுருதி - வேதம்; கேட்கப்படுவது என்பது பொருள். கலை - சாஸ்திரம். ஆதி - முதன்மையான. வடமொழி - சம்ஸ்கிருதம். மொழி - பாஷை. நுகர் - உண்கின்ற. அன்னதானம் - சோறு கொடுத்தல். ஆதவன் - சூரியன். இனி, யாதவன் என்பதன் மரூஉ எனக் கொண்டு கிருஷ்ணன் எனவுமாம். பரவ - துதிக்க. (௫௫)

## 56. வீண் செயல்:

வேட்டகஞ் சேர்வோரும் வீணரே வீணுரை
விரும்புவோர் அவரின் வீணர்
விருந்துகண் டில்லாள் தனக்கஞ்சி யோடிமறை
விரகிலோர் அவரின் வீணர்
நாட்டந் தருங்கல்வி யில்லோரும் வீணரே
நாடியவர் மேற்கவி சொல்வோர்
நானிலந் தனில்வீணர் அவரினும் வீணரே
நரரைச் சுமக்கும் எளியோர்
தேட்டறிவி லாதபெரு வீணரே அவரினும்
சேரொரு வரத்தும் இன்றிச்
செலவுசெய் வோரதிக வீணராம் வீணாய்த்
திரியும் எளி யேனையாட்கொண்
டாட்டம் செயும்பதாம் புய முடியின் மேல்வைத்த
அமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே.

குறிப்பு: வேட்டகம் - கலியாணம் செய்துகொண்ட வீடு; மாமியார் வீடு. சேர்வோர் - சென்று வாழ்வோர். வீண் உரை - பயனற்ற சொல். விருந்து - விருந்தினர்; விருந்து - புதுமை; அது வீட்டுக்குப் புதிதாக வந்தவரைக் குறிக்கும் பண்பாகுபெயர். இல்

லாள் - மனைவி. மறை - மறைந்துகொள்ளும். விரகு இல்லோர் - அறிவில்லாதவர்கள். நாட்டம்தரும் - கண்போன்ற. நாடி - அடைந்து. அவர் - அக்கல்வி இல்லாதவர். நானிலம் - உலகு; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு நிலங்களையுடையது. நரர் - மனிதர். தேட்டு - சம்பாத்தியமும். அறிவு - அறிவும். வரத்து - வருமானம். ஆட்கொண்டு - ஆளாகக்கொண்டு. ஆட்டம் செயும் - ஆடுகின்ற. பதாம்புயம் - பாதமாகிய தாமரை. அம்புயம் - அம்புஜம், தண்ணீரிற் பிறப்பது என்பது பொருள். முடி - தலை. (டுசு)

## 57. உதவியின்றிக் கெடுவன :

மூப்பொருவ ரில்லாத குமரி குடி வாழ்க்கையும்
மூதரண் இலாத நகரும்
மொழியும்வெகு நாயகம் சேரிடமும் வருமெதுகை
மோனை யில் லாத கவியும்
காப்பமை விலாததோர் நந்தவன மும் நல்ல
கரையிலா நிறையேரியும்
கசடறக் கற்காத வித்தையும் உபதேச
காரணன் இலாத தெளிவும்
கோப்புள விநோதமுடை யோருகு புகழாத
கோதையர்செய் கூத்தாட்ட மும்
குளிர்புனல் நிறைந்துவரும் ஆற்றோர மதினின்று
கோடியர்ந் தோங்கு தருவும்
ஆப்பதில் லாததேர் இவையெலாம் ஒன்றாகும்
ஐயனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மூப்பு ஒருவர் - முதுமைப் பருவமுள்ள ஒருவர். குமரி - இளம் பெண். குடி வாழ்க்கை - குடித்தனஞ் செய்தல். மூதரண் -

(மூது அரண்) பழமையாகிய காவல். வெகுநாயகம் - பல தலைமை; அஃதாவது, பல பேர் தலைவராக இருந்து அதிகாரஞ் செய்தல். எதுகை - பாட்டுக்களின் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரும் தொடை. மோனை - அடிகளின் முத லெழுத்துக்கு இனமான எழுத்துக்கள் மற்றைச் சீர்களின் முதலி லும் வரும் தொடை. காப்பு - காவல். நந்தவனம் - பூஞ்சோலை. நிறை எரி - நிறைந்த எரி; வினைத்தொகை. கசடறு - (கசடு அற) குற்றமற. உபதேச காரணன் - உபதேச காரணனாகிய குரு. கோப்பு உள - உல்லாசமுள்ள. விநோதமுடையோர்- ஹாஸ்யக்காரர். அருகு - பக்கத்தில் நின்று. கோதையர் - பெண் கள். கூத்தாட்டம் - கழைக்கூத்தாட்டம்; கழைக்கூத்தாடும் பெண் களின் அருகே ஹாஸ்யக்காரர் நின்று உல்லாசமாகப் பேசி அப் பெண்களுக்குச் சிரமம் தோன்றாதபடி செய்வது வழக்கு. புனல் - தண்ணீர்; வெள்ளம். கோடு - கிளை. தரு - மரம். ஆப்பு - அச்சாணி. ஒன்றாகும் - சமமாகும். (நிஎ)

## 58. இவையே போதும் எனல்:

பொய்யாத வாய்மையும் சீலமும் சார்ந்துளோர்
பூவலஞ் செயவேண்டுமோ
பொல்லாத கொலைகளவிலாத நன் னெறியுளோர்
புகழறம் செயவேண்டுமோ
நையாத கர்மத்தை லோபத்தை விட்டபேர்
நல்லறம் செயவேண்டுமோ
நன்மனது சுத்தியுண் டானபேர் மேலுமொரு
நதிபடிந் திடவேண்டுமோ
மெய்யாநின் அடியரைப் பரவுவோர் உன்பதம்
விரும்பி வழி படவேண்டுமோ
வேதியர் தமைப் பூசை பண்ணுவோர் வானவரை
வேண்டியர்ச் சனை செய்வரோ

ஐயா றுடன் கமலை சோணு சலம் தில்லை
அதிபனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : வாய்மை - உண்மை. சீலம் - ஒழுக்கம். சார்ந்துளோர் - அடைந்துள்ளவர். பூ வலம் - பூமியை வலமாக வருதல்; அஃதாவது, தீர்த்தயாத்திரை தல யாத்திரை செய்தல். நன்னெறி - நல்வழி. புகழ் அறம் - புகழத்தக்க தருமம். நையாத - அழியாத. மனோ சுத்தி - மனத் தூய்மை. படிந்திட - முழுகிட. மெய் ஆ - உண்மையாக. வழி பட - வணங்க. வானவர்-தேவர்கள். வேண்டி-விரும்பி. அர்ச்சனை - பூசனை. ஐயாறு - திருவையாறு. கமலை - திருவாரூர். சோணுசலம் - திருவண்ணுமலை; சோணம் - சிவப்பு, அசலம் - மலை; நெருப்பு வடிவமான மலையாதலின் இப் பெயர் பெற்றது. தில்லை - சிதம்பரம்; தில்லைச்செடியை யுடையது. (ருஅ)

## 59. அரியராவோர் :

பதின்மரில் ஒருத்தர்சபை மெச்சிடப் பேசுவோர்
பாடுவோர் நூற்றிலொருவர்
பார்மீதில் ஆயிரத் தொருவர் விதி தப்பாது
பாடிப்ர சங்கமிடுவோர்
இதனருமை அறிகுவோர் பதினு யிரத்தொருவர்
இதையறிந் திதய மகிழ்வாய்
ஈகின்ற பேர் புவியி லேயருமை யாகவே
இலக்கத்தி லேயொருவராம்
துதிபெருக வருமூன்று காலமும் அறிந்தமெய்த்
தூயர்கோ டியி லொருவராம்
தொல்லுலகு புகழ்காசி ஏகாம் பரம்கயிலை
சூழும் அவினுசி பேரூர்

அதிகமுள வெண்காடு செங்காடு காளத்தி
அத்தனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: பதின்மர் - பத்துப்பேர். ஒருத்தர் - ஒருவர். விதி தப்பாது - முறை தப்பாமல். பிரசங்கம் இடுவோர் - பிரசங்கஞ் செய்வோர். இதன் அருமை - இப்படிப் பிரசங்கஞ் செய்வதின் அருமையை. மகிழ்வால் ஈகின்ற பேர் - மகிழ்ச்சியினாலே கொடுக்கின்றவர். மூன்று காலம் - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன. மெய்த்தூயர் - உண்மையாகப் பரிசுத்தமுள்ளவர். தொல் உலகு - பழமையான உலகத்தவர். ஏகாம்பரம் - காஞ்சிப்புரம்; ஏக ஆம்ரம் - ஒரு மாமரம், ஒரு மாமரம் காஞ்சிப்புரத்திற்கு ஸ்தல விருக்ஷம். கயிலை - கயிலாசம். அவிநாசி வெண்காடு - திருவெண்காடு. செங்காடு - திருச்செங்காடு. (ருக)

## 60. கற்பு மேம்பாடு:

தன்கணவன் உருவமாய்த் தற்புணர வந்தோன்
தனக்கிணங் காத நிறையாள்
தழற்கதிர் எழாமலும் பொழுதுவிடி யாமலும்
சாபங் கொடுத்த செயலாள்
மன்னிவளர் அழன் மூழ்கி உலகறிய வே தனது
மகிழ்நனைச் சேர்ந்த பரிவாள்
மைந்தனைச் சுடவந்த இறைவன் தடிந்த வடி
வாள் மாலை யான கனிவாள்
நன்னதி படிந்திடுவ தென்னவார் அழல்மூழ்கி
நாயகனை மேவு தயவாள்
நானிலம் புகழ்சாலி பேர்பெறு நளாயினி
நளினமலர் மேல் வைதேகி

அன்னமென வருசந்த்ர மதி துரோ பதையென்பர்
ஆதியே அருமை மதவேள்
அநுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : கணவன் உருவமாய் - கணவன் உருவத்தை மேற்கொண்டு. தன் புணர - தன்னைச் சேர, இணங்காத - இசையாத. நிறையாள் - நிறை குணமுள்ளவள் ; கற்புள்ளவள். தழல்கதிர் - உஷ்ணமான கிரகணங்களையுடைய சூரியன். எழாமல் - உதிக்காமல். செயலாள் - செய்கையை யுடையவள். மன்னி - நிலைபெற்று. அழல் மூழ்கி - நெருப்பில் மூழ்கி. தனது மகிழ்நன் - தன் கணவன். பரிவாள் - அன்பினை யுடையவள். இறைவன் - தலைவன் ; கணவன். தடிந்த - வெட்டின. வடிவாள் - கூர்மையான வாள். கனிவாள் - அன்பினை யுடையவள். படிந்திடுவது என்ன - முழுகுவது போல. மேவும் - சேர்ந்த. தயவாள் - தயையினை யுடையவள். நானிலம் - உலகம். சாலி - அருந்ததி. நளின மலர் - தாமரைமலர். வைதேகி - விதேகதேசத்துப் பிறந்தவளாகிய சீதை.

இணங்காத நிறையாள் - சாலி ; சாபங்கொடுத்த செயலாள் - நளாயினி; மகிழ்நனைச் சேர்ந்த பரிவாள் - வைதேகி ; வாள் மாலையான கனிவாள்-சந்திரமதி; அழல் மூழ்கி நாயகனை மேவு தயவாள்-துரோபதை என முறையே கூட்டுக. (௬0)

## 61. கோடி யுடுக்குநாள் :

கறைபடா தொளிசேரும் ஆதிவா ரந்தனில்
கட்டலாம் புதிய சீலை
கலைமதிக் காகாது பலகாலும் மழையினில்
கடிது நனை வுற்றொழி தரும்
குறைபடா திடர்வரும் வீரியம் போம் அரிய
குருதிவா ரந்தனக்குக்

கொஞ்சநா ளிற்கிழியும் வெற்றிபோம் புந்தியில்
குருவார மதிலணிந்தால்
மறைபடா தழகுண்டு மேன்மேலும் நல்லாடை
வருமினிய சுக்கிரற்கோ
வாழ்வுண்டு திருவுண்டு பொல்லாத சனியற்கு
வாழ்வுபோம் மாரணமுண்டாம்
அறைகின்ற வேதாகமத்தின்வடி வாய்விளங்
கமலனே அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : கறை - களங்கம். ஆதிவாரம் - ஞாயிற்றுக்கிழமை. கலைமதி - ஒளியையுடைய சந்திரன்; திங்கட்கிழமை. கடிது - விரைவில். ஒழிதரும் - நீங்கும்; மழைதனில் நனைவுற்று கடிது ஒழிதரும் என மாற்றுக. இடர் - துன்பம். வீரியம் - வீரத்தன்மை. குருதிவாரம்-செவ்வாய்க்கிழமை. புந்தி-புதன்கிழமை. குருவாரம் - வியாழக்கிழமை. சுக்கிரன் - வெள்ளிக்கிழமை. பொல்லாத சனியற்கு - கொடிய சனிக்கிழமைக்கு. அறைகின்ற - சொல்லுகின்ற.

'காரியில் அழுக்க றுது கதிரவன் பீடை காட்டும்
மாரியில் நனையும் திங்கள் வண்புதன் கந்தை யாகும்
வீரியம் இல்லைச் செவ்வாய் வெள்ளியில் மடந்தை சேர்வள்
கூரிய வியாழன் தன்னில் கூறையும் சாத்த நன்றே'

என்பது இங்கே அறியத்தக்கது. (சுக)

62. சகுனம் :

சொல்லரிய கருடன்வா னரம் அரவம் மூஞ்சூறு
சூகரம் கீரி கலைமான்
துய்ய பா ரத்வாசம் அட்டையெலி புன்கூகை
சொற்பெருக மருவும் ஆந்தை

வெல்லரிய காடிகாட் டான்பூனை புலிமேல்
விளங்கும் இருநா வுடும்பு
மிகவுரைசெய் இவையெலாம் வலமிருந் திடமாகில்
வெற்றியுண் டதிக நலமாம்
ஒல்லையின் வழிப்பயணம் ஆகுமவர் தலைதாக்கல்
ஒருதுடை யிருத்தல் பற்றல்
ஒருதும்மல் ஆணையிடல் இருமல்போ கேல்என்ன
உபசுருதி சொல்இவை யெலாம்
அல்லல்தரும் நல்லவல என்பர்முதி யோர்பரவும்
அமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : வானரம் - குரங்கு. அரவம் - பாம்பு. சூகரம் - பன்றி. துய்ய - பரிசுத்தமான. பாரத்துவாசம் - கரிக்குருவி. புன்கூகை - அற்பமாகிய கோட்டான். வெல்லரிய - வெல்லுதற்கரிய. காட்டான் - (காடு ஆன்) காட்டுப் பசு; ஆன் என்பதில், ன் - சாரியை. இருநா உடும்பு - இரண்டு நாக்குகளையுடைய உடும்பு. வலம் இருந்து - வலப்பக்கத்திலிருந்து. இடமாகில் - இடப்புறஞ் சென்றால். ஒல்லை - விரைவு. தலை தாக்கல் - தலை இடிபடுதல். ஒரு தொடை இருத்தல் - ஒரு தொடையினால் உட்காந்திருத்தல். பற்றல் - பிடித்தல். ஒரு தும்மல் - ஒற்றைத் தும்மல். போகேல் - போகாதே. உபசுருதி - ஆகாயவாணி. அல்லல் தரும் - துன்பம் தரும். நல்ல அல - நல்லவை அல்ல; துச்சகுனமாகும். பரவும் - வழிபடும். (சுஉ)

**63.** இதுவுமது (சகுனம்) :

நரிமயில் பசுங்கிள்ளை கோழிகொக் கொடுகாக்கை
நாவிசிச் சிலி ஓந்திதான்
நரையான் கடுத்தவாய்ச் செம்போத் துடன்மேதி
நாடரிய சுரபி மறையோர்

வரியுழுவை முயலிவை யனைத்தும் வல மாயிடின்
வழிப்பயணம் ஆகை நன்றும்
மற்றுமிவை யன்றியே குதிரை யனு மானித்தல்
வாய்ச்சொல் வா வா என்றிடல்
தருவளை தொனித்திடுதல் கொம்பு கிடு முடி முரசு
தப்பட்டை யொலி வல் வேட்டுத்
தனிமணி முழக்கெழுதல் இவையெலாம் ஊர்வழி
தனக்கேக நன்மை யென்பார்
அருணகிர ணோதயத் தருண்பா னுவை யனைய
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : பசுங் கிள்ளை - பச்சைக் கிளி. நாவி - புனுகு பூனை. சிச்சிலி - மீன்குத்திப்பறவை. ஓந்தி - ஓணன். நரையான் - நாரை. கடுத்த வாய் - கடுமையான சத்தத்தையுடைய. செம் போத்து - கள்ளிக்காக்கை. மேதி - எருமை. நாட அரிய - காண்பதற்கு அரியதான. சுரபி - பசு. வரி உழுவை - வரிகளையுடைய புலி. வலமாயிடின் - வலத்திற் சென்றால். ஆகை - ஆதல். அநுமானித்தல் - கனைத்தல். வாய்ச் சொல் - வாய்ச்சொல்லினாலே. வளை - சங்கு. தொனித்தல் - ஊதுதல். கொம்பு - ஊதுகொம்பு. கிடு முடி - ஒருவகைப் பறை. முரசு - பேரிகை. வல் வேட்டு - வலிய வெடி; பீரங்கி முதலியவற்றின் வெடி. தனி - ஒப்பற்ற; ஒரு. மணி முழக்கு எழுதல் - மணி யோசை உண்டாதல். ஏக - போக. அருண கிரணம் - சிவந்த கிரணங்கள். உதயம் - உதய காலத்து. தருண பானுவை அனைய - இளஞ் சூரியனை ஒத்த. (சுங)

64. இதுவும் அது (சகுனம்) :

தலைவிரித் தெதிர்வருதல் ஒற்றைப் பிராமணன்
தவசி சன்னாசி தட்டான்

தனமிலா வெறுமார்பி மூக்கறை புல் விறகுதலை
தட்டைமுடி மொட்டைத்தலை
கலன்கழி மடந்தையர் குசக்கலம் செக்கான்
கதித்த தில தைலம் இவைகள்
காண எதிர் வரவொணு நீர்க்குடம் எருக்கூடை
கனி புலால் உபய மறையோர்
நலமிகு சுமங்கலை கிழங்கு சூதகமங்கை
நாளும் வண் ணுனழுக்கு
நசைபெருகு பாற்கலச மணிவளையல் மலர் இவைகள்
நாடியெதிர் வரநன்மையாம்
அலைகொண்ட கங்கைபுனை வேணியாய் பரசணியும்
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: சன்ஞசி - சந்யாசி என்னும் வடசொல்லின் சிதைவு. தனம் இலா - ஸ்தனங்களில்லாத. வெறு மார்பி - வெறுமையான மார்பையுடையவள். மூக்கறை - மூக்கு அறுபட்டவன்; மூக்கறு பட்டவள். தட்டை முடி - சப்பைத் தலை. கலன்கழி மடந்தையர் - மங்கல நாண் இழந்த பெண்கள்; கைம்பெண்கள். செக்கான் - வாணியன். கதித்த - மிகுந்த; சொல்லப்பட்ட எனவுமாம். தில தைலம் - எண்ணெய்; திலம் - எள்; தைலம் - திலத்திலிருந்து எடுத்தது. வரவொணு - வரக்கூடாதனவாம். எருக்கூடை - குப்பையுள்ள கூடை. கனி - பழம். புலால் - இறைச்சி. உபய மறையோர் - இரண்டு பார்ப்பார். நலம் மிகு - நன்மை மிகுந்த. சுமங்கலை - மங்கல சூத்திரம் உடையவள்; கட்டுக்கழுத்தி. சூதக மங்கை - பூப்படைந்த பெண். வண்ணுன் அழுக்கு - வண்ணுன் அழுக்குத் துணிகளோடு வருதல்; அழுக்கு, அழுக்குத்துணியை யுணர்த்தி நின்றது; உபசார வழக்கு. பால் கலசம் - பாற் பாத்திரம். வேணியாய் - சடையை யுடையவனே. பரசு - மழு; கோடரி. (சுசு)

## 65. உணவில் விலக்கு :

கைவிலக் குக்கொளும் பால் அசப் பால்வருங்
காராக் கறந்த வெண்பால்
காளான் முருங்கை சுரை கொம்மடி பழஞ்சோறு
காந்திக் கரிந்த சோறு
செவ்வையில் சிறுகீரை பீர்க்கத்தி வெள்ளுப்பு
தென்னைவெல் லம் மலாவகம்
சீரிலா வெள்ளுள்ளி ஈருள்ளி இங்குவொடு
சிறப்பில்வெண் கத்தரிக்காய்
எவ்வமில் சிவன்கோயில் நிர்மாலி யம்கிரணம்
இலகுசுடர் இல்லாதவூண்
இவையெலாம் சீலமுடை யோர்களுக் காகா
எனப் பழைய நூலுரை செயும்
ஐவகைப் புலன்வென்ற முனிவர் விண் ணவர்போற்றும்
அமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தரு சதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : கைவிலக்குக் கொளும் பால், விலக்குக் கொள்ளும் கைப்பால் என மாறுக. கைப்பால் - முன் நின்று கறவாமலே கொண்டுவந்த பால் ; உலக வழக்கு. அசப் பால் - ஆட்டுப் பால். கார் ஆ - காராம் பசு. காளான் - காளாம்பி. முருங்கை - முருங்கைக் காய். சுரை - சுரைக்காய். கொம்மடி - கொம்மட்டி; பூசணிக்காய்; பறங்கிக்காய் எனவும் வழங்கும். காந்தி கரிந்த சோறு - பானையில் அடிப்பற்றின சோறு. பீர்க்கு - பீர்க்கங்காய். அத்தி - அத்திக்காய். தென்னை வெல்லம் - தென்னங்கள்ளைக் காய்ச்சி யெடுத்த வெல்லம். மலாவகம் - பிண்ணாக்கு. வெள் உள்ளி - வெள்ளைப் பூண்டு. ஈர் உள்ளி - வெங்காயம். இங்கு - பெருங்காயம். வெண்கத்தரிக்காய் - வெள்ளைநிறமான கத்தரிக்காய். எவ்வம் இல் - குறைவு இல்லாத

நிர்மாலியம் - பரிசுத்தமான பொருள்; பூசித்துக் கழித்த பொருள். கிரணம் இலகு சுடர் - கதிர்கள் விளங்குகின்ற விளக்கு. சீலம் - ஒழுக்கம். நூல் - சாஸ்திரம். ஐவகை புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து புலன்கள்; புலன் - அறிவு. முனிவர் - மனனசீலர். விண்ணவர் - தேவர். (சுரு)

**66** நற்பொருளில் குற்றம்:

பேரான கங்கா நதிக்கும் அதன் மேல்வரும்
பேனமே தோஷமாகும்
பெருகிவளர் வெண்மதிக் குள்ளுட் களங்கமே
பெரிதான தோஷமாகும்
சீராக் தபோதனர்க் கொருவர்மேல் வருகின்ற
சீற்றமே தோஷமாகும்
தீதில் முடி மன்னவர் விசாரித் திடாதொன்று
செய்வ தவர் மேற்றோஷமாம்
தாராள மா மிகத் தந்துளோர் தாராமை
தான் இரப் போர்தோஷமாம்
சாரமுள நற்கருப் பஞ்சாறு கைப்ப தவர்
தாலஞ்செய் தோஷமாகும்
ஆராயும் ஒருநான் மறைக்கும் எட் டாதொளிரும்
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே.

குறிப்பு: பேரான - புகழுடைய. பேனம் - நுரை. தோஷம் - குற்றம். வெண் மதி - வெண்மையான சந்திரன். உள்களங்கம் - உள்ளிடத்துள்ள கறை. தபோதனர் - தபசிகள்; தவத்தையே தனமாகவுடையவர். சீற்றம் - கோபம். தீது இல் - கேடில்லாத. முடிமன்னவர் - பேரரசர்; சக்ரவர்த்திகள். ஒன்று - ஒரு காரியம். தாராளம் ஆ - மிகுதியாக; ஆக என்பது ஆ எனத் தொகுத்தலா

யது. தாராமை - கொடாதிருப்பது. இரப்போர் - யாசகருடைய. கைப்பது - கசப்பது. தாலம் - நாக்கு. ஒளிரும் - விளங்குகின்ற.

தந்துளோர் தாராமை இரப்போர் தோஷமாம் என்றதும், கருப்பஞ்சாறு கைப்பது அவர் தாலம் செய் தோஷமாம் என்றதும் மேல் குறித்தவைகளோடு ஒப்புடையன ஆகாமை யறிக. (சுசு)

**67.** மனை கோலுவதற்கு மாதம் :

சித்திரைத் திங்கள்தனில் மனைகோல மனைபுகச்
செல்வமுண் டதினும் நலமே
சேரும்வை காசிக்கு மேனாள் அரன் புரம்
தீயிட்ட தானி யாகா
வெற்றிகொள் இராகவன் தேவி சிறை சேர் கடகம்
வீறல்ல ஆவணி சுகம்
மேவிடும் கன்னி இர ணியன்மாண்ட தாகாது
மேன்மை யுண் டைப்பசிக்கே
உத்தமம் கார்த்திகைக் காகாது மார்கழியில்
ஓங்கு பா ரதம் வந்த நாள்
உயர்வுண்டு மகரத்தின் மாசிமா தத்தில் விடம்
உம்பர்கோன் உண்ட தாகா
தத்தநீ மாரனை யெரித்த பங் குனி தானும்
ஆகுமோ அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : திங்கள் - மாதம். மனை கோல - வீடு கட்ட ; அடிப் படை போட. மனை புக - குடி யிருக்க. அதினும் - அதைக் காட் டிலும். நலம் - நன்மை ; அதினும் வைகாசிக்கு நலம் சேரும் எனக் கூட்டுக. மேல் நாள் - முற்காலத்தில். அரன் - சிவன் ; (பாவங்களைப்) போக்குபவன் என்பது பொருள். புரம் - முப்புரம்.

இராகவன் - இராமன்; இரகு குலத்தில் பிறந்தவன். இராகவன் தேவி - சீதை. கடகம் - ஆடி மாதம். வீறு - சிறப்பு. மேவிடும் - சேரும். கன்னி - புரட்டாசி மாதம். பாரதம் - பாரதப் போர். மகரத்தில் - தை மாதத்தில். விடம் - (பாற்கடலில் தோன்றிய) விஷம். உம்பர் கோன் - தேவர்கள் தலைவனாகிய சிவபெருமான். அத்த - தலைவனே. மாரன் - மன்மதன்.

சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, தை இவ்வைந்து மாதங்களும் மனை கோலவும், குடி புகவும் ஆகும். மற்றை எழு மாதங்களும் ஆகா. இவ்விஷயத்தில் வேறு நூல்களில் சில மாறுபாடுகள் காண்கின்றன. (சுஎ)

## 68. விருந்து வாரம் :

செங்கதிர்க் குறவுபோம் பகைவரும் விருந்தொருவர்
செய்யொணு துண்ணுது
திங்களுக் குறவுண்டு நன்மையாம் பகைவரும்
செவ்வாய் விருந்தருந்தார்
பொங்கு புதன் நன்மை யுண் டுறவாம் விருந்துணப்
பொன்னவற் கதிக பகையாம்
புகரவற் காகிலோ நெடுநாள் விரோதமாய்ப்
போனவுற வுந் திரும்பும்
மங்குல்நிகர் சனிவாரம் நல்லதாம் இதனினும்
மனமொத் திருந்த விடமே
வாலாய மாய்ப்போய் விருந்துண விருந் துதவ
வாய்த்தநாள் என் றறியலாம்
அங்கையில் விளங்கிவளர் துங்கமழு வாளனே
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : செங்கதிர் - ஞாயிற்றுக்கிழமை. திங்கள் - திங்கட்கிழமை. பகை வரும் - பகை வரக்கூடிய. விருந்து - விருந்து உணவு ; ஆகுபெயர். அருந்தார் - உண்ணமாட்டார். பொன்னவற்கு - வியாழக்கிழமையில். உறவு - சுற்றத்தார். திரும்பும் - (நட்பாகி) மீளவும் வருவர். மங்குல் - மேகம். நிகர் - ஒத்த ; சனி கறுப்பாதலால் மங்குல் நிகர் சனி எனப்பட்டது. வாலாயமாய் - வழக்கமாய். வாய்ந்த - அமைந்த. அம் கையில் - அழகிய கையினிடத்து ; அகங்கை என்பது அங்கை என வந்ததாகக் கொண்டு உள்ளங்கை எனவுமாம். துங்கம் - உயர்வாகிய.

திங்கட்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை இந் நான்கு நாட்களிலும் விருந்து உண்ணுதல் நலம் ; மற்றைக் கிழமைகள் ஆகா. (சூ அ)

**69.** பூப்பு வாரம் :

அருக்கனுக் கதிரோகி யாவள் நற் சோமனுக்
கான கற் புடைய ளாவாள்
அங்கார கற்கு வெகு துக்கியா வாள் புத்தி
யனவில் பைங் குழவி பெறுவாள்
திருத்தகு வியாழத்தின் மிக்க சம் பத்தினொடு
சிறுவரைப் பெற்றெடுப்பாள்
சீருடைய பார்க்கவற் கதிபோக வதியுமாம்
திருவுமுண் டாயிருப்பாள்
கருத்தொழிந் தெழில்குன்றி வறுமைகொண் டலைகு
காரிவா ரத்தி லாகில் [வாள்
களபமுலை மடமாதர் புட்பவதி யாம்வார
காலபலம் என் றுரை செய்வார்
அருத்தியுடன் எளியேனை யாட்கொண்ட சோதியே
அண்ணலே அருமை மதவேள்

அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : அருக்கனுக்கு - ஞாயிற்றுக்கிழமையில்; வேற்றுமை மயக்கம். அதி ரோகி - மிக்க நோயுடையவள். சோமனுக்கு - திங்கட்கிழமையில். அங்காரகற்கு - செவ்வாய்க்கிழமையில். துக்கி - துக்கமுடையவள். புந்தி - புதன்கிழமையில். அளவு இல் - எண்ணிறந்த; பல என்றபடி. பைங்குழவி (பசுமை குழவி) - குழந்தை. திருத்தகு - மேன்மை தங்கிய. சம்பத்து - செல்வம். சிறுவர் - குழந்தைகள். பார்க்கவற்கு - வெள்ளிக்கிழமையில்; பார்க்கவன் - பிருகு வம்சத்தில் பிறந்தவன்; சுக்கிரன். போகவதி - இன்ப நுகர்ச்சியுடையவள். திரு - செல்வம். கருத்து - மனநிலை. எழில் - அழகு. குன்றி - குறைந்து. வறுமை - தரித்திரம். காரிவாரம் - சனிக்கிழமை; காரி - கருநிறமுடையவன். களபம் - கலவைச் சந்தனம். அருத்தி - அன்பு. (சுகூ)

## 70. பூப்பு லக்கினம் :

வறுமைதப் பாதுவரும் மேடத்தில் இடபத்தில்
மாறாது விபசாரியாம்
வாழ்வுண்டு போகமுண் டாகும்மிது னங்கடகம்
வலிதினிற் பிறரை யணைவாள்
சிறுமைசெயும் மிடிசேர்வள் மிருகேந் திரற்கெனிற்
சீர்பெறுவள் கன்னி யென்னில்
செட்டுடையள் துலையெனில் பிணியால் மெலிந்திடுவள்
தேளினுக் குத் தனுசெனில்
நெறிசிதைவள் பூருவத் தபரம் நெறி யுடையளாம்
நீண்மகரம் மான மிலளாம்
நிறைபோக வதி கும்ப மெனின் மீன மென்னிலோ
நெடிய பே ரறிவுடையளாம்

அறிவாளர் மடமாதர் தமையறி இராசி பலன்
அதுவென்பர் அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மேடத்தில் - மேஷ லக்கினத்தில். இடபத்தில் - ரிஷப லக்கினத்தில். மாறுது - தவிராது. மிதுனம் வாழ்வுண்டு போக முண்டாகும் என்க. அணைவாள் - சேர்வாள். மிடி - தரித்திரம். மிருகேந்திரன் - சிங்க லக்கினத்தில். செட்டு - சிக்கெனம். துலை - துலா லக்கினத்தில். தேள் - விருச்சிக லக்கினத்தில். நெறி சிதைவள் - ஒழுக்கந் தவறுவாள். பூருவத்து - முதலில்; பூருவத்து நெறிசிதைவள் என மாற்றுக. அபரம் - பின். நெறியுடையள் ஆம் - ஒழுக்கமுடையவளாவாள். அறிவாளர் - (சோதிட) ஞான முள்ளவர். தமை அறி - தம்மை அறிகின்ற; புத்தி யறிகின்ற; பூப்படைகின்ற. (எ0)

**71.** தீவும் கடலும் :

நாவலந் தீவினைச் சூழ்தருங் கடலளவு
லட்சம்யோ சனையிதனையே
நாடொறுஞ் சூழ்வதில் வந்தீ வதைச்சூழ்தல்
நற்கழைச் சாற்றின் கடல்
மேவுமிது சூழ்வது குசத்தீ வதைச்சூழ்தல்
மிகுமதுக் கடல் அதனையே
விழைவொடுஞ் சூழ்தல் கிர வுஞ்சதீ வம்இதனின்
மேற்சூழ்தல் நெய்க்கடலதாம்
பூவிலிது சூழ்தல் சா கத்தீவம் இங்கிதைப்
போர்ப்பது திருப்பாற்கடல்
போதவது சூழ்தல் சால் மலிதீவ மாம் தயிர்ப்
புணரியப் பாலும் அப் பால்

ஆவலுறு புட்கரத் தீவாம் இதைச்சூழ்வ
தரும்புனற் றருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : நாவலந் தீவு - ஜம்பு த்வீபம். யோசனை - பத்தரை நாழிகை வழி தூரம்; வேறு வேறு அளவு கூறுதலும் உண்டு. கழைச்சாறு - கருப்பஞ்சாறு. மதுக் கடல் - தேன் கடல். பூவில் - உலகத்தில். இங்கு - இவ்வுலகத்தில். போர்ப்பது - சுற்றியிருப்பது. திருப்பாற் கடல் - அழகிய பாற்கடல். போத - மிகவும். தயிர்ப் புணரி - தயிர்க் கடல்; புணரி - ஒன்றன்பின் ஒன்றாக வருவது; அலை; அது, கடலுக்குப் பெயராயிற்று. அரும்புனற்று - கிடைத் தற்கரிய நன்னீரை யுடையது; நன்னீர்க் கடல்.

நாவலந்தீவைச் சுற்றிக் கருங்கடலும்; அதைச்சுற்றி இலவந் தீவும், அதைச் சுற்றிக் கருப்பஞ்சாற்றுக் கடலும்; அதைச் சுற்றிக் குசத் தீவும், அதைச் சுற்றித் தேன்கடலும்; அதைச் சுற்றிக் கிரவுஞ்சத் தீவும், அதைச் சுற்றி நெய்க்கடலும்; அதைச் சுற்றிச் சாகத் தீவும், அதைச் சுற்றிப் பாற்கடலும்; அதைச் சுற்றிச் சால்மலித் தீவும், அதைச் சுற்றித் தயிர்க்கடலும்; அதைச் சுற்றிப் புஷ்கரத் தீவும், அதைச் சுற்றி நன்னீர்க்கடலும் உள்ளன என்க.

நாவல் தீவு - நாவல்மரமுள்ள தீவு; இலவந் தீவு - இது, ப்லக்ஷத்தீவு என்று இருக்கவேண்டும்; ப்லக்ஷம் - அரசமரம் உள்ள தீவு. குசத் தீவு - தருப்பையுள்ள தீவு: கிரவுஞ்சத் தீவு - அன்றிற் பறவையுள்ள தீவு. சாகத் தீவு - தேக்கமரம் உள்ள தீவு. சால் மலி - இலவமரம் உள்ள தீவு. புஷ்கரம் - தாமரையுள்ள தீவு. (எக)

**72.** மேலான பொருள் :

சூழிசுத்த மாயிருந் ததிலும் படைக்கான
தூரகமோர் மாணிக்கமாம்
சூழ்புவிக் காசஞ யதிலே விவேகமுள
துரையுமோர் மாணிக்கமாம்

பழுதற்ற அதிரூப வதியுமாய்க் கற்புடைய
பாவை யோர் மாணிக்கமாம்
பலகலைகள் கற்றறி யடக்கமுள பாவலன்
பார்க்கிலோர் மாணிக்கமாம்
ஒழிவற்ற செல்வனு யதிலே தியாகியாம்
உசிதனோர் மாணிக்கமாம்
உத்தம குலத்துதித் ததினுமோ மெய்ஞ்ஞானம்
உடையனோர் மாணிக்கமாம்
அழிவற்ற வேதாக மத்தின் வடி வாய் விளங்
கமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : சுத்தமா யிருந்து - நல்லவைகளா யிருக்கப் பெற்று. படைக்கு - சேனைக்கு. துரகம் - குதிரை. மாணிக்கம் - மாணிக்க மணிபோல் சிறந்ததாகும். பழுது - குற்றம். அதிரூபவதி - மிக்க அழகுள்ளவள். பாவை - பாவைபோன்ற பெண்; உவமையாகு பெயர். கலை - சாஸ்திரம். அறி - அறிந்த. பாவலன் - கவிவாணன். அறி பாவலன், அடக்க முளபாவலன் எனக் கூட்டுக. பார்க்கில் - ஆராய்ந்தறியு மிடத்து. ஒழிவு அற்ற - அழிவில்லாத. தியாகி - கொடையாளி. உசிதன் - தக்கோன். ஆகமம் - சமயங்களுக் குரிய முதல்நூல்; (கடவுளிடத்திருந்து) வந்தது என்பது பொருள்.
(எ௨)

**73.** உண்டி இலையும் முறையும் :

வாழையிலை புன்னைபுர சுடனற் குருக்கத்தி
மாப் பலாத் தெங்கு பன்னீர்
மாசிலமு துண்ணலாம் உண்ணாத வோ அரசு
வனசம் செழும் பாடலம்
தாழையிலை அத்தி ஆல் எரண்ட பத்திரம்
சாதேவம் முண் முருக்குச்

சாருமிவை யன்றிவெண் பாலெருக் கிச்சிலிலை
தனிலும் உண் டிட வொணுதால்
தாழ்விலாச் சிற்றுண்டி நீரடிக் கடிபருகல்
சாதங்கள் பல வருந்தல்
சற்றுண்டல் மெத்தவூண் இத்தனையும் மெய்ப்பிணி
தனக்கிட மெனப் பருகிடார்
ஆழிபுடை சூழுலகில் வேளாள குலதிலகன்
ஆகும் எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மாசில் (மாசு இல்) - குற்றமில்லாத. அமுது - சோறு. உண்ணுத - அமுது உண்ணத்தகாத இலைகள். வனசம் - தாமரை ; தண்ணீரில் பிறப்பது என்பது பொருள். பாடலம் - பாதிரிமரம். எரண்ட பத்திரம் - ஆமணக்கு இலை. சாதேவம் - சிறு நாவல். வெண்பால் - வெண்மையான பாலுள்ள. இச்சில் - இத்தி. பருகல் - குடித்தல். சாதங்கள் பல - பலவகையான சாதங்கள் ; புளியோரை முதலியன. அருந்தல் - உண்ணுதல். சற்று உண்ணல் - அளவில் குறைய உண்ணுதல். மெத்த ஊண் - அதிகமாக உண்ணுதல். மெய் - உடம்பிலுண்டாகின்ற. பிணி - நோய். பருகிடார் - உண்ணர் ; பருகுதல் என்பது ஈண்டு உண்ணுதல்மேல் நின்றது. ஆழி - சமுத்திரம்; ஆழமானது என்பது பொருள். புடை - (நான்கு) பக்கங்களிலும். திலகன் - திலகம் போற் சிறந்தவன் ; திலகம் - நெற்றியிலிடும் பொட்டு.

புன்னை, புரசு முதலியவை அவற்றின் இலைகளுக்கு ஆதலால் முதலாகு பெயர்கள்.

வாழை, புன்னை, புரசு, குருக்கத்தி, மா, பலா, தெங்கு, பன்னீர் இம் மரத்தின் இலைகள் அமுது உண்ணுதற்கு ஆகும்.

அரசு, தாமரை, பாதிரி, தாழை, அத்தி, ஆல், ஆமணக்கு, சிறு நாவல், முள் முருக்கு, எருக்கு, இத்தி இவற்றின் இலைகள் அமுதுண்ணுதற்கு ஆகா. (எங)

## 74. கவிஞர் வறுமை :

எழுதப் படிக்கவகை தெரியாத மூடனை
இணையிலீச் சேடனென்றும்
ஈவதில் லாதகன லோபியைச் சபைதனில்
இணையிலாக் கர்ணனென்றும்
அழகற்ற வெகுகோர ரூபத்தை யுடையோனை
யதிவடிவ மாரனென்றும்
ஆயுத மெடுக்கவுந் தெரியாத பேடிதனை
ஆண்மைமிகு விஜயனென்றும்
முழுவதும் பொய்சொல்லி அலைகின்ற வஞ்சகனை
மொழியரிச் சந்த்ரனென்றும்
மூதுலகில் இவ்வணஞ் சொல்லியே கவிராசர்
முறையின்றி யேற்பதென்னோ
அழலென வுதித்துவரு விடமுண்ட கண்டனே
அமலனே அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே.

குறிப்பு : வகை - முறை. இணை - ஒப்பு. சேடன் - ஆதிசேஷன் ; ஆதிசேடன் அறிவிற் சிறந்தவன் என்பர். கர்ணன் - சிறந்த கொடையாளி என்பது பிரசித்தம். கோர ரூபம் - விகாரமான வடிவம். அதி வடிவம் - நல்ல உருவத்தையுடைய. மாரன் - மன் மதன். பேடி - பெண் தன்மையுள்ளவன் ; தைரிய மில்லாதவன். விஜயன் - அருச்சுனன் ; மிக்க வெற்றியை யுடையவன் என்பது பொருள். மூதுலகில் (முதுமை உலகில்) - பழமையான உலகத்தில். ஏற்பது - யாசகஞ் செய்வது. என்னோ - என்ன காரணமோ. அழல் - அக்கினி. உதித்து - உண்டாகி. (எச)

**75. கவிஞன் :**

தெள்ளமிர்த தாரையென மதுரங் கதித்தபைந்
தேன்மடை திறந்ததெனவே
செப்புமுத் தமிழினொடு நாற்கவிதை நாற்பொருள்
தெரிந் துரைசெய் திறமையுடனே
விள்ளரிய காவியத் துட்பொருள் அலங்கார
விரிவிலக் கண விகற்பம்
வேறுமுள தொன்னூல் வழக்கம் உலகத்தியல்பு
மிக்கப்ர பந்த வண்மை
உள்ளவெல் லாமறிந் தலையடங் குங்கடலை
ஒத்ததிக சபை கண்டபோ
தோங்கலை யொலிக்கின்ற கடல்போற் ப்ர சங்கம
துரைப்பவன் கவிஞனாகும்
அள்ளிவிட முண்டகனி வாயனே நேயனே
அமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : தெள் அமிர்த தாரை என - தெளிவாகிய அமிர்த்தாரை போல ; தாரை - நேராக ஒழுகுதல். மதுரம் - இனிமை. கதித்த - மிகுந்த. முத் தமிழ் - இயல், இசை, நாடகத் தமிழ்கள். நாற் கவிதை - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் கவிகள். நாற் பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு என்பன. உரை செய்திறமை - சொல் வன்மை. விள்ளரிய - சொல்லுதற்கரிய. இலக்கண விகற்பம் - இலக்கண வேறுபாடுகள். தொல் நூல் வழக்கு - பழைய சாஸ்திரங்களில் கூறப்பட்டவை ; செய்யுள் வழக்கு. உலகத்து இயல் - உலக வழக்கு. பிரபந்தம் - பிள்ளைத் தமிழ், அந்தாதி முதலிய சிறுகாப்பியங்கள் ; நன்றாகயாக்கப்பட்டது என்பது பொருள். பிரபந்த வண்மை - காவிய வளம். (எரு)

**76.** நற் சார்பு :

காணரிய பெரியோர்கள் தரிசனம் லபிப்பதே
கண்ணிணைகள் செய் புண்ணியம்
கருணையா யவர்சொல்மொழி கேட்டிட லபிப்பதே
காதுசெய் திடு புண்ணியம்
பேணியவர் புகழையே துதிசெய லபித்திடுதல்
பேசில்வாய் செய் புண்ணியம்
பிழையாமல் அவர்தமைத் தொழுதிட லபிப்பது கை
பெரிது செய் திடு புண்ணியம்
வீணெறி செலாமலவர் பணிவிடை லபிப்பது தன்
மேனிசெய் திடு புண்ணியம்
விழைவொடவர் சொற்படி நடந்திட லபிப்பதே
மிக்க பூ ருவ புண்ணியம்
ஆணவம் எனுங் களை களைந்தறி வினைத் தந்த
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தரு சதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : காண் அரிய - காணக் கிடைத்தற்கு அரிய. லபிப்பது - கிடைப்பது. கண் இணை - இரண்டு கண்கள். அவர் சொல்மொழி - அந்தப் பெரியவர்கள் சொல்லும் வார்த்தைகள். பேசில் - சொல்லு மிடத்து. பிழையாமல் - தவறில்லாமல். வீண் நெறி - பயனற்ற வழி. பணிவிடை - தொண்டு. விழைவு - விருப்பம். பூர்வ புண்ணியம் - முற் பிறப்பிற் செய்த நல்வினைப்பயன். ஆணவம் - அகங் காரம். ஆணவத்தைக் களை என்றதற் கேற்ப அறிவினைப் பயிர் என் னுமையால், ஏகதேச வுருவகம். (எசு)

**77.** பிறந்தநாளோடு வருகின்ற வாரபலம் :

சென்மநட் சத்திரத் தாதிவா ரம்வரில்
தீரா அலைச்ச லுண்டாம்

திங்களுக் காகில்வெகு சுகபோ சனத்திேெடு
திருமாதின் அருளும் உண்டாம்
வன்மைதரும் அங்கார வாரம்வந் தாற்சிறிதும்
வாராது சுகமதென்பார்
மாசில்பல கலைபயில்வர் மேன்மையாம் புந்தியெனும்
வாரத்து டனகூடிஞல்
நன்மைதரு குருவார மதுசேர்ந்து வரில்ஆடை
நன்மையுட னேவந்திடும்
நாரிய ருடன்போகம் மிகவுமுண் டொருவெள்ளி
நல்லவா ரத்தில் வந்தால்
அன்மருவு பீடையுண் டாமென்பர் சநியனுக்
கமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே.

குறிப்பு : சென்ம நட்சத்திரம் - தான் பிறந்த நட்சத்திரம். தீரா த அலைச்சல் - இங்கு அகரம் தொகுத்தல்விகாரம். தீராத - ஒழியாத. திங்களுக்கு - திங்கட் கிழமையில்; வேற்றுமை மயக்கம். சுக போசனம் - சிறந்தவுணவு. திருமாது - இலக்குமி. அங்காரவாரம் - செவ்வாய்க்கிழமை. பலகலை - பலசாஸ்திரம். பயில்வர் - நன்ருகக் கற்பர். புந்தி - புதன். நாரியர் - பெண்கள். அல்மருவு - மயக்கம் பொருந்திய. பீடை - நோய். (எள)

**78.** இதனை உடையவர்க்கு இஃது இல்லையெனல் :

பொன்னுசை யுள்ளவர்க் குறவேது குருவேது
பொங்குபசி யுள்ளபேர்க்குப்
போதவே சுசியேது ருசியேது மயல்கொண்டு
பொதுமாதர் விழிவலையிலே
எந்நாளும் அலைபவர்க் கச்சமொடு வெட்கமே
தென்றென்றும் உறுகல்விமேல்

இச்சையுள பேர்க்கதிக சுகமேது துயிலேது
எளிதா யிருந்துகொண்டே
பன்னாளும் அலைபவர்க் கிகழேது புகழேது
பாரில் ஒரு வர்க்கதிகமே
பண்ணியிடு மூடருக் கறமேது மறமலால்
பகர் நிரயம் ஒன்றுளதுகாண்
அன்னாண வருகரி யுரித்தணியும் மெய்யனே
அமலனே அருமை மதவேள்
அநுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : உறவு - சுற்றத்தார். போத - மிகவும். சுசி - சுத்தம். மயல்-ஆசை. பொது மாதர்-ஒருவர்க்கே உரிமையில்லாத பெண்டிர்; வேசையர். விழி வலை - கண் பார்வையாகிய வலை. அச்சம் - பயம், கூச்சம் எனவுமாம். உறு - மிக்க ; பொருந்திய எனவுமாம். துயில் - தூக்கம். பன்னாளும் (பல்நாளும்) - பலநாளும். இகழ் - இகழ்ச்சி. பாரில் - உலகத்தில். அதிகம் - மிகை ; குற்றம். மறம் - பாவம். பகர் - சொல்லுகின்ற. நிரயம் - நரகம். அல் - இருள். நாண - வெட்கப்பட. கரி - யானைத்தோலை; அல் நாண வரு கரி - மிகவுங் கருநிறமுடையதாய் வந்த யானை என்பது கருத்து. (எஅ)

**79.** மழை நாள் குறிப்பு :

சித்திரைத் திங்கள் பதின் மூன்றுக்கு மேல் நல்ல
சிரான பரணி மழையும்
தித்தில் வை காசியில் பூரணை கழித்தபின்
சேரு நா லாம் நாளினில்
ஒத்துவரு மழையும் அவ் வானியிற் தேய்பிறையில்
ஓங்கும் ஏ காதசியினில்
ஒளிர் பரிதி வீழ்பொழுதில் மந்தா ரமும் மழையும்
உண்டாயி ருந்தாடியில்

பத்திவரு தேதி ஐந் தினில் ஆதி வாரமும்
பகரும் ஆ வணி மூலநாள்
பரிதியும் மறைந்திடக் கனமழை பொழிந்திடப்
பாரில் வெகு விளைவும் உண்டாம்
அத்தனே பைங்குவளை மாலையணி மார்பனும்
அண்ணல் எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: பதின்மூன்றுக்கு மேல் - பதின்மூன்றாந் தேதிக்குமேல். பரணி மழை - பரணிநட்சத்திரத்தில் பெய்யும் மழை. தீதில் (தீது இல்) - குற்றமில்லாத. பூரணை - பௌர்ணமி. நாலாம் நாள் - சதுர்த்தி; பூரணை கழித்த நாலாம் நாள் - அபரபட்சத்துச் சதுர்த்தி. தேய் பிறை - அபரபட்சம்; பௌர்ணமிக்குப் பின் அமாவாசை வரையிலுமுள்ள பக்கம். ஒளிர் - விளங்குகின்ற. பரிதி - சூரியன்; பரிதிவீழ் பொழுது - அஸ்தமனசமயம். மந்தாரம் - மேகம் மூடிக் கொண்டிருத்தல். பத்தி - வரிசை. பகரும் - சொல்லுகின்ற. மூல நாள் - மூல நட்சத்திரம். குவளை மாலை, வேளாளர்க்கு உரியது.

சித்திரைமாதத்தில் பதின்மூன்றாந்தேதிக்குமேல் பரணிநட்சத்திரத்தில் மழை பெய்யினும், வைகாசியில் பௌர்ணமிக்குப் பின் சதுர்த்தியில் மழை பெய்யினும், ஆனி மாதத்தில் கிருஷ்ண பட்சத்து ஏகாதசியில் அஸ்தமன சமயத்தில் மந்தாரமாயிருப்பினும் மழை பெய்யினும், ஆடி மாதத்தில் ஐந்தாந்தேதி ஞாயிற்றுக்கிழமையில் சூரியன் மறைந்திருப்பினும், ஆவணியில் மூலநட்சத்திரத்தன்று சூரியன் மறைந்திருப்பினும் அந்த வருடத்தில் நன்றாக மழை பெய்யும்; விளைவும் உண்டாகும் என்று அறிக. (எசு)

## 80. இருந்தும் உதவாமை:

சமயத்தில் உதவாத நிதியமேன் மிக்க துயர்
சார்பொழு திலாத கிளையேன்

சபைமுகத் துதவாத கல்வியேன் எதிரிவரு
சமரத் திலாத படையேன்
விமலனுக் குதவாத பூசையேன் நாளும் இருள்
வேளைக் கிலாத சுடரேன்
வெம்பசிக் குதவாத அன்னமேன் நீடு குளிர்
வேளைக் கிலாத கலையேன்
தமது தளர் வேளைக் கிலாதவோர் மனைவியேன்
சரசத்தி லாத நகையேன்
சாம்ரண காலத்தில் உதவாத புதல்வனேன்
தாணிமீ தென்பர் கண்டாய்
அமரர்க்கும் முனிவர்க்கும் ஒருவர்க்கும் எட்டாத
ஆதியே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : சமயம் - (ஆபத்தான) வேளை. நிதியம் - செல்வம். என் - என்ன பயன். துயர் சார் பொழுது - துன்பம் சேர்ந்த காலத்தில். இலாத - இல்லாத, உதவாத. கிளை - உறவினர்; உவமையாகு பெயர். சபைமுகத்து - சபையில்; முகம் - ஏழனுருபு. எதிரி - பகைவன். சமரம் - சண்டை. விமலன் - மலமற்றவன்; ஈசுவரன். இருள் வேளை - இருட்டுக் காலம். சுடர் விளக்கு - ஒளியுள்ள விளக்கு. வெம்பசி - கொடிய பசி. நீடு - நீண்ட; மிக்க. கலை - உடை. தளர் வேளை - தளர்ச்சியடைந்த காலம். சரசத்து - பரிகாச காலத்தில். நகை - சிரிப்பு. சாம் மரண காலம் - சாகப்போகின்ற மரண காலம்; சா - தமிழ்மொழி, மரணம் - வடமொழி, ஒரு பொருட்பன்மொழியாக இங்கே கொள்ளப்படும். புதல்வ்ன் - மகன். தாணிமீது - உலகத்தில். என்பர் - என்று சொல்லுவர். கண்டாய் - முன்னிலையசை. அமரர் - மரணமில்லாதவர்; தேவர். முனிவர் - மனனசீலமுடையவர். ஒருவர்க்கும் - வேறு ஒருவருக்கும்; பிரமன் முதலானோருக்கும் என்றபடி. எட்டாத - புலப்படாத. (அ.0)

**81.** மறையோர் சிறப்பு :

ஓராறு தொழிலையும் கைவிடார் சௌசவிதி
ஒன்றுதப் பாது புரிவார்
உதயாதி யிற்சென்று நீர்படிகு வார்காலம்
ஒருமூன்றி னுக்கும் மறவா
தாராய்ந்து காயத்ரி யதுசெபிப் பார்நாளும்
அதிதிபூ சைகள் பண்ணுவார்
யாகாதி கருமங்கள் மந்த்ர கிரி யாலோபம்
இன்றியே செய்து வருவார்
போராசை கொண்டிடார் வைதிக நன் மார்க்கமே
பிழையா திருக்கும் மறையோர்
பெய்யெனப் பெய்யுமுகில் அவர்மகிமை எவர்களும்
பேசுதற் கரிதரிதுகாண்
ஆரார் நெடுஞ்சடில அமலனே எனையாளும்
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே.

குறிப்பு : ஆறு தொழில் - ஆறு வகைப்பட்ட தொழில் ; ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பனவாம். சௌச விதி - சுத்திசெய்துகொள்ளும் முறை; கை கால் அலம்புதல் முதலியன. புரிவார் - செய்வார். உதயாதியில் - ஆதி உதயத்தில் ; அதிகாலையில். நீர் படிகுவார் - நீரில் மூழ்குவார். காலம் ஒரு மூன்றும் - காலை, பகல், மாலை என்னும் மூன்று காலத்தும். காயத்ரி - காயத்திரி என்னும் மந்திரத்தை. செபிப்பார் - உருப்போடுவார். அதிதி பூசை - விருந்தினரை உபசரித்தல் ; அதிதி - ஓர் ஊரில் ஒரு நாளுக்குமேல் தங்கியிராதவர். யாகாதி கருமங்கள் - யாகம் முதலிய செயல்கள் ; யாகம் - விடுதல், தேவதைகளைக் குறித்து நெய் அவிசு முதலியவற்றை அக்கினியில் விடுத்தல். மந்த்ர கிரியா லோபம் -

மந்தரலோபம், கிரியாலோபம்; என்பன. மந்தர லோபம் - மந்திரத்தில் குறைவு. கிரியா லோபம் - செய்கைகளில் குறைவு. வைதிக மார்க்கம் - வேத மார்க்கம்; வேதத்திற் சொல்லிய நெறியே நடத்தல். முகில் - மேகம். காண் - முன்னிலையசை. ஆர் ஆர் - ஆத்திமலர் நிறைந்த; ஆர் - ஆத்திமலர், முதலாகு பெயர். நெடும் சடிலம் - நீண்ட சடை. (அக)

82. அரசர் சிறப்பு :

மநுநீதி முறைமையும் பரராசர் கொண்டாட
வரும் அதிக ரணவீரமும்
வாள் விஜய மொடு சரச சாதன விசேஷமும்
வாசி மத கரியேற்றமும்
கனமாம் அமைச்சரும் பலமான துர்க்கமும்
கைகண்ட போர்ப் படைஞரும்
கஜ ரத பதாதியும் துரகப்ர வாகமும்
கால தேசங்கள் எவையும்
இனிதா யறிந்த தா னுபதிக ளொடு சமர்க்
கிளையாத தளகர்த்தரும்
என்றும் வற்றாத தன தானிய சமுத்ரமும்
ஏற்றமுள குடி வர்க்கமும்
அனைவோரும் மெச்ச இங் கிவையெலாம் உடையபேர்
அரசராம் அருமை மதவேள்
அநுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மனுநீதி முறைமை - மனுதர்ம சாஸ்திரத்தின் கிரமம். பர ராசர் - வேற்றரசர். ரணவீரம் - போரில் வீரத்தன்மை. விஜயம் - வெற்றி. சரச சாதன விசேஷம் - சாமம், தானம் இவற்றின் சிறப்பு. வாசி - குதிரை. மத கரி - மதத்தையுடைய யானை. கரி ஏற்றம் - யானை யேற்றம். கனம் - மேன்மை. அமைச்சர் - மந்திரிகள்.

பலமான - உறுதியான. துர்க்கம் - அரண். அரண் நான்கு வகைப்படும்: மதிலரண், நீரரண், காட்டரண், மலையரண் என்பன. போர்ப்படைஞர் - போர்வீரர். கஜம் - யானை. ரதம் - தேர். பதாதி - காலாள். துரகப்ரவாகம் - குதிரை வெள்ளம். கால தேசம் - காலமும் இடமும். இனிது ஆ - நன்றாக. ஸ்தானு பதி - தூதர்களுக்குத் தலைவன். சமர்க்கு இளையாத - சண்டை செய்வதற்குப் பின்வாங்காத. தளகர்த்தர் - சேனபதிகள். வற்றாத - குறையாத. தன தான்ய சமுத்திரம் - செல்வப் பெருக்கும், தான்யப் பெருக்கும். எற்றம் உள - மேன்மை பொருந்திய. குடி வர்க்கம் - குடித்தொகை. அனைவோரும் - எல்லாரும். மனு நீதி - மனு என்பவரால் செய்யப்பட்ட நீதி சாஸ்திரம். (அஉ)

## 83. வைசியர் சிறப்பு :

நீள்கடல் கடந்திடுவர் மலையாள மும்போவர்
  நெடிது தூ ரந் திரிந்தும்
நினைவுதடு மாறார்கள் சலியார்கள் பொருள் தேடி
  நீணிலத் தரசு புரியும்
வாணுழவ ரைத் தமது கைவசஞ் செய்வார்கள்
  வருமிடம் வராத இடமும்
மனதையும் அறிந்துதவி ஒன்று நூ றாயிட
  வளர்ப்பர் வரு துலை துலைக்கும்
ஆள்விடுவர் மலிவுகுறை வது விசா ரித்திடுவர்
  அளவில் பற் பல சாக்கும்
அமைவுறக் கொள்வர் விற் பார் கணக் கதில் அணுவும்
  அறவிடார் செலவு வரிலோ
ஆளியொத் தே மலையின் அளவுங் கொடுத்திடுவர்
  அருள்வைசியர் அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
  அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : நினைவு தடுமாறார் - மனம் தடுமாற்றம் அடையார். சலியார் - வெறுப்பு அடையமாட்டார். நீணிலம் (நீள் நிலம்) - நீண்ட பூமி. வாள் உழவர் - வாளைக் கருவியாகக் கொள்பவர்; அரசர். கைவசம் - தம்வசமாக; கை - முன்மொழியசை (உபசர்க்கம்). வரும் இடம் - (கொடுத்த பொருள் திரும்பி) வரக்கூடிய இடம். உதவி - கொடுத்து. தொலை தொலைக்கும் - வெகு தூரத்துக்கும். மலிவு குறைவு - அதிகமும் குறைவும். அணு அளவும் அற விடார் - அணுவளவும் போகவிடார். ஆளியொத்து - யாளி என்னும் விலங்கை ஒத்து; சிங்கத்தை ஒத்து எனவுமாம். மலையின் அளவும் - மலையளவு பொருளையும். (அ௩)

84. வேளாளர் சிறப்பு :

யசனாதி கருமமும் தப்பாமல் வேதியர்
இயற்றிநல் லோர் பெறுவதும்
இராச்யபா ரஞ்செய்து முடிமன்னர் வெற்றிகொண்
டென்று நல் லோர் பெறுவதும்
வசனாதி தப்பாது தனதானி யந்தேடி
வைசியர் நல் லோர் பெறுவதும்
மற்றுமுள பேரெலாம் மிடியென் றிடாததிக
வளமைபெற் றோர் பெறுவதும்
திசைதோறும் உள்ளபல தேவாலயம் பூசை
செய்ய நல் லோர் பெறுவதும்
சீர்கொண்ட பைங்குவளை மாலைபுனை வேளாளர்
செய்யும்மே ழிப் பெருமைகாண்.
அசையாது வெள்ளிமலை தனின்மேவி வாழ்கின்ற
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : யசனாதி கருமம் - யாகம் முதலிய தொழில் ; யசனம் - தான் செய்யும் வேள்வி ; யாசனம் - தான் செய்விக்கும் வேள்வி. வேதியர் - வேதம் ஓதுபவர். நல் ஏர் - நல்ல அழகு, சிறப்பு. ராஜ்யபாரம் செய்து - ராஜ்யத்தைத் தாங்கி அரசு செய்து. முடி மன்னர் - முடியையுடைய அரசர் ; சக்கரவர்த்திகள். வசனாதி தப்பாது - வாக்கு முதலியவை தப்பாமல். மிடி - வறுமை. திசை தோறும் - திக்குகள் முழுதும். பல தேவாலயம் ஏர் பெறுவதும் எனக் கூட்டுக. ஆலயம் - கோவில் ; லயம் - தங்குமிடம், ஆ - உபசர்க்கம். பைங்குவளை - பசுமையான குவளை ; வாடாத குவளை. புனை - அணிகின்ற. மேவி - பொருந்தி ; அமர்ந்து. மேழி - கலப்பை. வெள்ளிமலை - கைலாசமலை. (அச)

## 85. தானாதிபதி மந்திரி சேனாதிபதிகள் இயல்பு :

தன்னரசன் வலிமையும் பரராசர் எண்ணமும்
சாலமேல் வருகருமமும்
தானறிந் ததிபுத்தி யுத்தியுண் டாயினேன்
தானாதி பதியாகுவான்
மன்னவர் மனத்தையும் காலதே சத்தையும்
வாழ்குடி படைத்திறமையும்
மந்திரா லோசனையும் எல்லாம் அறிந்தவன்
வளமான மதிமந்திரி
துன்னிய படைக்குணம் கரிபரி பரீக்ஷையே
சூழ்பகைவர் புரி சூழ்ச்சியும்
தோலாத வெற்றியும் திடமான சித்தியுள
சூரனே சேனாதிபன்
அன்னையினும் நல்மலை மங்கைபங் காளனே
அனகனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே.

குறிப்பு : பராசர் - வேற்றரசர். சால - மிகவும். மேல் வரு கருமம் - மேல் வரப்போகும் செயல். அதி புத்தி - மிக்க அறிவு. தானுபதி - தூதர்களுக்குத் தலைவன். கால தேசம் - காலமும் இடமும். படை - சேனை. மந்திராலோசனை - ரகசியமான சூழ்ச்சி. துன்னிய - நெருங்கிய. கரி - யானை; தும்பிக்கையாகிய கரத்தை யுடையது. பரி - குதிரை; விரைந்துசெல்வது. புரி - செய்யும். சூழ்ச்சி - ஆலோசனை. தோலாத - தோற்றுப்போகாத. சித்தி - (காரியம்) பலித்தல். சூரன் - வீரன். சேனாதிபன் - சேனைக்குத் தலைவன். மலை மங்கை - பர்வதராசன் புத்திரி; பார்வதி. பங்காளன் - இடப்பாகத்தில் உடையவன். மதி மந்திரி - புத்தியுள்ள அமைச்சன். வளம் - (அறிவின்) பெருக்கு. (அடு)

## 86. இராஜ கருணீகர் சிறப்பு :

வருமோலை யுத்தரத் தெழுதிவரு பொருளினால்
வரவிடுப் போன் மனதையும்
மருவிவரு கருமமும் தேசகா லத்தையும்
வருகாத லாமலகமாய்
விரைவா யறிந்தரசர் எண்ணியெண் ணினையளவு
விடஎழுத வாசிக்கவும்
வெற்றிகொண் டேபெரிய புத்தியுடையோன் புவியின்
மேன்மை ராயசகாரனும்
கருவா யறிந்துதொகை ஈராறு நொடியினில்
கடிதேற் றிடக் குறைக்கக்
கடுகை ஒரு மலையாக மலையை ஒரு கடுகுமாக்
காட்டுவோன் கருணீகனும்
அருவாகி உருவாகி ஒளியாகி வெளியாகும்
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : ஓலை உத்தரத்து-ஓலையின் புறத்தில். பொருள்-விஷயம். வரவிடுப்போன்-வரவிட்டவன், அனுப்பினவன். மருவி-பொருந்தி. தேச காலம் - இடமும் காலமும். கரதலாமலகம் - (கரதல ஆமலகம்) கையிலுள்ள நெல்லிக்கனி; நெல்லிக்கனியைக் கையில் வைத்துப் பார்த்தால் உள்ளும் புறமும் ஊடுருவத் தெரியும்; அதுபோல ஒரு விஷயம் உள்ளும் புறமும் நன்றாகத் தெரிவதற்கு இஃது உபமானம்; உள்ளங்கை நெல்லிக்கனி யென்பது தமிழ். விரைவாய் - சீக்கிரமாய். எண்ணில் - மனத்திலுள்ள. எண்ணினை - எண்ணத்தை. எழுத வாசிக்கவும் - எழுதவும் படிக்கவும். பெரிய புத்தி - பேரறிவு. ராயசகாரன் - எழுதுவோன், அஃதாவது கணக்கன். கரு - நுட்பம். கடிது - விரைவாக. ஏற்றிட குறைக்க- கூட்டவும் குறைக்கவும். கருணீகன் - கணக்கன். (அசு)

## 87. கோபத்தின் கொடுமை :

கோபமே பாவங்க ளுக்கெலாம் தாய்தந்தை
கோபமே குடி கெடுக்கும்
கோபமே ஒன்றையும் கூடிவர வொட்டாது
கோபமே துயர் கொடுக்கும்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே உறவறுக்கும்
கோபமே பழிசெயும் கோபமே பகையாளி
கோபமே கருணை போக்கும்
கோபமே ஈனமாம் கோபமே எவரையும்
கூடாமல் ஒருவ னாக்கும்
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக் குழியி னில்தள்ளு மால்
ஆபத்தெ லாந்தவிர்த் தென்னையாட் கொண்டருளும்
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு ; ஒன்றையும் - ஒரு காரியத்தையும் ; எண்ணலளவை ஆகுபெயர். துயர் - துன்பம். சீர் கெடு - புகழைக் கெடுப்பது. உறவு அறுக்கும் - உறவினரை விலக்கும். ஈனம் ஆம் - இழிவை யுண்டாக்கும். மறலி - யமன். ஆபத்து - துன்பம். (அஎ)

88. பல்துறை :

தான்புரி தவத்தையும் கொடையையும் புகழுவோர்
தங்களுக் கவை தழைவுறா
சற்றும் அறி வில்லாமல் அந்தணரை நிந்தனைசெய்
தயவிலோர் ஆயுள் பெருகார்
மேன்படு நறுங்கலவை மாலை தயிர் பால் புலால்
வீடுநற் செந்நெல் இவைகள்
வேறொருவர் தந்திடினும் மனுமொழி யறிந்தபேர்
விலைகொடுத் தே கொள்ளுவார்
தேன்கனி கிழங்கு விறகு இலை இவை யனைத்தையும்
தீண்டரிய நீச ரெனினும்
சீர்பெற அளிப்பரேல் இகழாது கைக்கொள்வர்
சீலமுடை யோர் என்பரால்
ஆன்கொடி உயர்த்தவுமை நேசனே ஈசனே
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : புரி தவம் - செய்கின்ற தவம். கொடை - கொடுத்தல், ஈகை. தழைவுறா - விருத்தியடையா. நறும் கலவை - நல்ல வாசனையுள்ள கலவைச் சாந்து. புலால் - மாமிசம். தந்திடினும் - கொடுத்தாலும். மனுமொழி - மனுதர்ம சாஸ்திரம். அளிப்பரேல் - கொடுப்பாரானால். சீலம் - ஆசாரம். கைக்கொள்வர் - பெற்றுக் கொள்வர். ஆன்கொடி - இடபக்கொடி. (அஅ)

## 89. தத்துவத் திரயம் :

பூதமோர் ஐந்துடன் புலனைந்து ஞானம்
பொருந்தும் இந்திரியம் ஐந்து
பொருவில்கன் மேந்திரியம் ஐந்துமனம் ஆதியாம்
புகலரிய கரண நான்கும்
ஓதினோர் இவையான்ம தத்துவம் எனச்சொல்வர்
உயர்கால நியதி கலையோ
டோங்கிவரு வித்தை ராகம்புருடன் மாயையென்
றுரைசெய்யும் ஓரேழுமே
தீதில் வித் யாதத்வம் என்றிடுவர் இவையலால்
திகழ்சுத்த வித்தை ஈசன்
சீர்கொள்சா தாக்கியம் சத்தி சிவம் ஐந்துமே
சிவதத்வம் என் றறைகுவார்
ஆதிவட நீழலிற் சனகாதி யர்க்கருள்செய்
அண்ணலே அருமை மதவேள்
அநுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : பூதம் ஓர் ஐந்து - ஐந்து பூதங்கள் ; நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பன. புலன் ஐந்து - ஐம்புலன்கள் ; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. ஞானம் பொருந்தும் இந்திரியம் ஐந்து - ஞானேந்திரியம் ஐந்து ; மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. பொருவு இல் - ஒப்பில்லாத. கர்மேந்திரியம் ஐந்து - கர்மேந்திரியங்கள் ஐந்து ; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்பன. மனம் ஆதியாம் - மனம் முதலான. புகல் அரிய - சொல்லுவதற்கு அரிதான. கரணம் நான்கு - அந்தக் கரணங்கள் நான்கு ; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. ஓதினோர் - கற்றுணர்ந்தோர். இருபத்துநான்கோடு - காலம், நியதி, கலை, வித்தை, ராகம், புருடன், மாயை என்னும் ஏழும் கூடியது வித்தியா

தத்துவம் என்று கூட்டுக. திகழ் - விளங்குகின்ற. வித்யாதத்து வத்தோடு, சுத்தவித்தை, ஈசன், சாதாக்கியம், சத்தி, சிவம் ஆகிய ஐந்தும் கூடியது சிவதத்துவம் என்று. அறைகுவர் - சொல்லுவர். ஆதி - முற்காலத்தில், வடநீழலில் - கல்லாலின் நீழலில். சனகாதியர் - சனகர் முதலானவர்; சனகன், சனற்குமாரன், சனந்தரன், சனாதரன் என்னும் நால்வர். அருள்செய் - உபதேசம் செய்த.

சிவபெருமான் தக்ஷிணா மூர்த்தியாகிக் கல்லாலமரத்தின் நீழலில் அமர்ந்து சனகர் முதலான நால்வர்க்கும் சின்முத்திரையால் அருளிச்செய்த கதை இங்கே அறியத்தக்கது. (அகூ)

**90. மன்மத பாணமும் அவற்றின் குணம் முதலியவும் :**

வனசம் செழுஞ்சூத முடன் அசோ கம் தளவ
மலர் நீலம் இவை யைந்துமே
மாரவேள் கணைகளாம் இவைசெயும் குணம் முளரி
மனதில் ஆ சையை யெழுப்பும்
வினவிலொண் சூதமலர் மெய்ப்பசலை யுண்டாக்கும்
மிக அசோ கம் துயர் செயும்
வீழ்த்திடும் குளிர்முல்லை நீலம் உயிர் போக்கிவிடும்
மேவும் இவை செயும் அவத்தை
நினைவிலது வே நோக்கம் வேறொன்றில் ஆசையற
நெட்டுயிர்ப் பொடு பிதற்றல்
நெஞ்சந் திடுக்கிடுதல் அனம்வெறுத் திடல் காய்ச்சல்
நேர்தல் மௌனம் புரிகுதல்
அனையவுயிர் உண்டில்லை யென்னல் ஈரைந்துமாம்
அத்தனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : வனசம் - தாமரை, தண்ணீரிற் பிறப்பது. சூதம் - மாம்பூ. அசோகம் - அசோகமலர், தளவமலர் - முல்லைமலர். நீலம் -

குவளைமலர். மாரவேள் - மன்மதனாகியவேள் ; வேள் விருப்பத்தை யுண்டாக்குபவன். முளரி - தாமரைமலர் ; முள்ளாகிய அலரையை யுடையது ; அன்மொழித்தொகை. வினவில் - கேட்குமிடத்து. ஒள் - ஒள்ளிய. மெய் - சரீரத்தில். பசலை - பசலைநிறம். துயர் செயும் - துன்பம் செய்யும். வீழ்த்திடும் - கிடத்திவிடும். உயிர் போக்கி விடும் - உயிர் நீங்கச் செய்யும். மேவும் - பொருந்திய. அவத்தை - துன்பம். அது நோக்கம் - அதுவே நோக்கமாயிருத்தல். வேறு ஒன்றில் - வேறு ஒரு பொருளிலும். ஆசை அறல் - ஆசை யற்றிருத்தல். நெட்டுயிர்ப்பு - பெருமூச்சு. பிதற்றல் - வாய் பிதற்றுதல். காய்ச்சல் - உடல் வெதும்புதல். மௌனம் புரிகுதல் - மௌனமா யிருத்தல். அனைய - அப்படிப்பட்ட. உண்டு இல்லை எனல் - உண்டோ இல்லையோ எனல். ஈரைந்தும் - பத்தும்.

வனசம், சூதம், அசோகம், முளரி, முல்லை இவை மலர்களை உணர்த்தலால் முதலாகு பெயர்கள். நீலம் - நீல நிறத்தையுடைய மலரை உணர்த்தலால் பண்பாகு பெயர். (கூo)

**91.** மன்மதன் உபகரணங்கள் :

வெஞ்சிலை செழுங்கழைவில் நாரிகரு வண்டினம்
மேல்விடுங் கணைகள் அலராம்
வீசிடுந் தென்றல்தேர் பைங்கிள்ளை யேபரிகள்
வேழங் கெடாத இருளாம்
வஞ்சியர் பெருஞ்சேனை கைதையுடை வாள்கொடிய
வண்மைபெறு கடல் முரசமாம்
மகரம் பதாகை வரு கோகிலம் காகளம்
மனதே பெரும் போர்க்களம்
சஞ்சரிக இசைபாடல் குமுதநே யன் கவிகை
சார் இரதி யேமனைவியாம்
தறுகண்மட மாதர் இள முலைமகுட மாம் அல்குல்
தவறு திருக்கும் இடமாம்

அஞ்சுகணை மாரவேட் கென்பர் எளி யோர்க்கெலாம்
அமுதமே அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : வெம்சிலை - விருப்பத்தைத் தருகின்ற வில். கழை - கரும்பு. வில் நாரி - வில் நாண். மேல்விடும் - மேலே எய்கின்ற. கணைகள் - பாணங்கள். பைங்கிள்ளை - பச்சைக்கிளி. பரி - குதிரை. வேழம் - யானை. வஞ்சியர் - பெண்கள். கைதை - தாழைமடல் உடைவாள் - இடையிற் செருகிய வாள். முரசம் - பேரிகை. மகரம் - சுறாமீன். பதாகை - கொடி. கோகிலம் - குயில். காகளம் - ஊது கொம்பு. போர்க்களம் - சண்டை செய்யுமிடம். சஞ்சரிக இசை - வண்டின் ஓசை. குமுதநேயன் - சந்திரன், அல்லிமலருக்கு நாயகன். கவிகை - குடை. சார் - சேர்ந்த. தறுகண் - அஞ்சாமை யுள்ள. மடமாதர் - இளம் பெண்கள். மகுடம் - கிரீடம்.

சிலை - கழை, வில்நாரி - கருவண்டினம், கணைகள் - அலர், தேர் - தென்றல், பரி - பைங்கிள்ளை, வேழம் - இருள், பெருஞ் சேனை - வஞ்சியர், உடைவாள் - கைதை, முரசம் - கடல், பதாகை-மகரம், காகளம் - கோகிலம், போர்க்களம் - மனம், பாடல் - சஞ்சரிகை இசை, கவிகை - குமுதநேசன், மனைவி - இரதி, மகுடம் - மாதர் இளமுலை, இருக்கும் இடம் - அல்குல் எனக் கொள்க. (௯௧)

## 92. பகைகோளத் தகாதவர் :

மன்னவர் அமைச்சர் குர்ச் சனர் கோளர் தூதரொடு
மாருதி மர்மமுடையோர்
வலுவர் கரு ணீகர் மிகு பாகஞ்செய் தன்னமிடு
மடையர் மந்திர வாதியர்
சொன்னமுடை யோர் புலையர் உபதேச மதுசெய்வோர்
சூழ்வயித் தியர் கவிதைகள்
சொற்றிடும் புலவர் இவர் பதினைந்து பேரொடும்
சொப்பனந் தனிலாகினும்

நன்னெறி யறிந்தபேர் பகைசெய் திடார்கள் இந்
நானிலத் தென்பர் கண்டாய்
நாரியோர் பாகனே வேதாகம மம் பரவு
நம்பனே அன்பர் நிதியே
அன்னமூர் பிரமனும் கண்ணனும் காணாத
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : துர்ச்சனர் - கொடியோர். கோளர் - கோள் சொல்லு வோர். மர்மம் - வர்மம். வலுவர் - பலமுள்ளவர். பாகம் - சமையல். மடையர் - சமையல் செய்வோர். சொன்னமுடையோர் - பொன் னுள்ளவர்; பொருளாளிகள்; சொர்ணம் - பொன். உபதேசமது சொய்வோர் - உபதேசிப்பவர்; குருமார். சூழ் - ஆலோசிக்கின்ற. கவிதைகள் சொற்றிடும் புலவர் - கவிகள் பாடும் அறிஞர். சொப் பனம் - கனவு. நாரி - உமாதேவி. பாவும் - துதிக்கின்ற. நம்பன் - சிவன். அன்னம் ஊர் - அன்னத்தை ஏறி நடத்துகின்ற. அண் ணல் - பெரியோன். (கூஉ)

**93. இதாகிதஞ் செய்து பயன் கோள்வன :**

சுவைசேர் கரும்பைவெண் பாலைப் பருத்தியைச்
சொல்லு நன் னெல்லை எள்ளைத்
தூய தெங் இன்கனியை எண்ணாத துட்டரைத்
தொண்டரைத் தொழு தொழும்பை
நவைதிரு மாறுகண் டித்தே பயன்கொள்வர்
நற்றமிழ்க் கவி வாணரை
நலமிக்க செழுமலரை ஓவியம் எனத்தக்க
நயமுள்ள நாரியர் தமைப்
புவிமீதுபல் உபகார நெஞ்சரைச் சிறுவரைப்
போர்வீர ரைத் தூயரைப்

போதவும் பரிவோ டிதஞ்செய்து மிகுபயன்
புகழ்பெறக் கொள்வர் கண்டாய்
அவமதி தவிர்த்தென்னை யாட்கொண்ட வள்ளலே
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : தூய - பரிசுத்தமான. தெங்கின்கனி - தேங்காய். எண்ணாத - மதிக்காத. தொண்டர் - வேலைக்காரர். தொழு தொழும்பு - தொழுகின்ற அடிமைகள்; தொழும்பு, ஆகுபெயர். நவை தீருமாறு - குற்றம் நீங்கும்படி. கண்டித்து - தண்டித்து. ஓவியம் - சித்திரம். நாரியர் - பெண்கள். புவி - பூமி. தூயர் - பரிசுத்தரான ஞானிகள். போதவும் - மிகவும். பரிவு - அன்பு. இதம் - நன்மை. அவமதி - துர்ப்புத்தி. தவிர்த்து - நீக்கி. (௯௩)

**94.** தருமம் :

பெறுமில் பெறு வித்தலொடு காதோலை நாடொறும்
பிள்ளைகள் அருந்திடும் பால்
பேசரிய சத்திரம் மடம் ஆ வுரிஞ்சுகல்
பெண்போகம் நாவிதன் வண்ணான்
மறைமொழி கணாடிதண் ணீர் தலைக் கெண்ணெய் பசு
வாயினுறை பிணம் அடக்கல்
வாவி யிறும் உயிர்மீட்டல் தின்பொருள் அடைக்காய்
வழங்கல் சுண் ணாம்புதவுதல்
சிறையுறு பவர்க்கமுது வேற்றிலங் காத்தல் பொழில்
செய்தல் முன் னூலின்மணம்
திகழ்விலங் கூண் பிச்சை அறுசமய ருக்குண்டி
தேவாலயம் அவுஷதம்

அறைதல்கற் போர்க்கன்னம் நாலெட் டறங்களும்
அன்னைசெயல் அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : பெறும் இல் - பிள்ளை பெறுதற்கு வீடுவிடுதல். பெறுவித்தல் - பிள்ளை பெறுங்காலத்தில் உதவுதல். அருந்திடும் - குடிக்கின்ற. ஆவுரிஞ்சுகல் - பசுக்கள் தினவைப் போக்கிக்கொள்ள உராய்தற்கு நாட்டிய கற்றூண். பெண்போகம் - பெண்போகம் அநுபவிக்கச் செய்தல். நாவிதன் - அம்பட்டனால் க்ஷவரஞ் செய்வித்தல். வண்ணான் - வண்ணானால் ஆடை வெளுத்துக் கொடுத்தல். மறைமொழி - வேதம் ஓதுவித்தல். கண்ணாடி - முகம்பார்க்கக் கண்ணாடி கொடுத்தல். தண்ணீர் - தண்ணீர்ப்பந்தல் வைத்தல்; தாகத்துக்குத் தண்ணீர் தருதல் எனவுமாம். பசு வாயின் உறை - பசுவுக்குத் தீனி கொடுத்தல். பிணம் அடக்கல் - அனாதைப் பிணத்தை அடக்கம் செய்தல். வாவி - குளம் வெட்டுவித்தல். இறும் உயிர்மீட்டல் - பிறர் கைவசப்பட்டு இறக்கும் பறவை முதலிய உயிர்களைப் பொருள் கொடுத்து மீட்டல். தின்பொருள்-தின்பண்டம் கொடுத்தல். அடைக்காய் வழங்கல் - வெற்றிலை பாக்குத் தின்னக்கொடுத்தல். சிறை உறுபவர்க்கு - சிறைப்பட்டவர்க்கு. அமுது - உணவளித்தல். வேறு இல்லம் காத்தல் - வேறு வீட்டினரைக் காப்பாற்றுதல். பொழில் செய்தல் - சோலைவைத்தல். முன்நூலின் மணம் - வேதவிதிப்படி கன்னிகாதானம் செய்வித்தல். திகழ் - விளங்குகின்ற. விலங்கு ஊண் - விலங்குகளுக்கு உணவு அளித்தல். அறுசமயருக்கு உண்டி - அறுவகை மதத்தினருக்கும் உணவு கொடுத்தல். தேவர் ஆலயம் - கோயில் கட்டுவித்தல். அவுஷதம் - நோய்க்கு மருந்து கொடுத்தல்; வைத்தியசாலை வைத்தல் எனவுமாம். அறைதல் - கற்பித்தல். கற்போர்க்கு அன்னம் - படிக்கும் மாணவர்க்கு அன்னம் அளித்தல். நாலெட்டு அறங்கள் - முப்பத்திரண்டு தருமங்கள். அன்னை செயல் - உலகமாதாவாகிய பார்வதி செய்த தருமங்களாம்.

அறம் முப்பத்திரண்டாவன :

1. பிரசவத்திற்கு வீடு விடுதல்
2. பிரசவ காலத்தில் உதவி செய்தல்
3. காதோலை கொடுத்தல்
4. பிள்ளைகளுக்குப் பால் உதவுதல்
5. சத்திரம் கட்டி வைத்தல்
6. மடம் கட்டி வைத்தல்
7. ஆவுரிஞ்சு கல் நாட்டி வைத்தல்
8. பெண்ணின்பம் அனுபவிக்கச் செய்தல்
9. க்ஷவரம் செய்வித்தல்
10. ஆடை வெளுப்பித்துக் கொடுத்தல்
11. வேதம் ஓதுவித்தல்
12. கண்ணாடி கொடுத்தல்
13. தண்ணீர் உதவுதல்
14. தலைக்கெண்ணெய் கொடுத்தல்
15. பசுவுக்கு உணவு கொடுத்தல்
16. அநாதைப் பிணம் அடக்கம் செய்தல்
17. குளம் தோண்டி வைத்தல்
18. சாகும் உயிர்களைப் பொருள் கொடுத்து மீட்டல்
19. தின்பண்டம் கொடுத்தல்
20. வெற்றிலை பாக்குக் கொடுத்தல்
21. சுண்ணாம்பு கொடுத்தல்
22. சிறையில் இருப்பவர்கட்கு உணவு கொடுத்தல்
23. வேறு வீட்டினரைப் பாதுகாத்தல்
24. சோலை வைத்தல்
25. கல்யாணம் செய்வித்தல்
26. விலங்குகளுக்கு உணவு கொடுத்தல்
27. பிச்சை யிடுதல்
28. அறுசமயத்தவர்க்கும் உணவு கொடுத்தல்
29. கோயில் கட்டுதல்
30. நோய்க்கு மருந்து கொடுத்தல்
31. கற்பித்தல்
32. கற்போருக்கு உணவு கொடுத்தல்

பார்வதிதேவியார், சிவபெருமான் வழங்கிய இருநாழி நெல்லைக்கொண்டு காஞ்சிப்புரத்தில் இம் முப்பத்திரண்டு தருமங்களையும் செய்தனர் என்பது ஈண்டு அறியத்தக்கது. (கூ௯)

**95.** இல்லறம் :

தந்தைதாய் சற்குருவை இட்டதெய் வங்களைச்
சன்மார்க்க முளமனைவியைத்
தவறாத சுற்றத்தை ஏவாத மக்களைத்
தனைநம்பி வருவோர்களைச்
சிந்தைமகிழ் வெய்தவே பணிவிடைசெய் வோர்களைத்
தென்புலத் தோர் வறிஞரைத்
தீதிலா அதிதியைப் பரிவுடைய துணைவரைத்
தேனுவைப் பூசுரர்தமைச்
சந்ததஞ் செய்கடனை என்றுமிவை பிழையாது
தான்புரிந் திடல் இல்லறம்
சாருநல முடையராம் துறவறத் தோருமிவர்
தம்முடன் சரியாயிடார்
அந்தரி உயிர்க்கெலாம் தாய்தனினும் நல்லவட்
கன்பனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : சன்மார்க்கம் - நல்லொழுக்கம். சுற்றத்தை - சுற்றத்தவரை. ஏவாத மக்களை - ஏவாமலே அறிந்து செய்யும் பிள்ளைகளை. சிந்தை - மனம். மகிழ்வு எய்த - மகிழ்ச்சியடைய. பணிவிடை செய்வோர் - ஏவலாளர். தென்புலத்தோர் - பிதிர்கள். வறிஞரை - எளியவரை. அதிதி - தேசாந்தரிகள் ; ஓரூரில் பலநாள் தங்கியிராமல் ஊர்தோறும் செல்பவர். பரிவு - அன்பு. துணைவர் - சகோதரர். தேனு - பசு. பூசுரர் - பிராமணர் ; பூமியிலிருக்கும் தேவர். சந்ததம் - எப்பொழுதும். செய் கடன் - செய்யவேண்டிய கடமைகள். பிழையாது - தவறாமல். புரிந்திடல் - செய்தல். சாரும் - சேர்ந்த. நலமுடையராம் - நன்மையுடையவராவார். இவர் தம்முடன் - இப்படிப்பட்ட இல்லறத்தாருக்கு. தாய்தனினும் - தாயைப் பார்க்கிலும். தாய்தனினும் நல்லவள், பார்வதி என்க. (கூரு)

162932



**96. புராணம் :**

தலைமைசேர் பௌடிகம் இலிங்கம் மார்க் கண்டம் எழில்
சாரும் வா மனம் மச்சமே
சைவம் பெருங்கூர்மம் வரு வரா கம் கந்த
சரிதமே பிரமாண்டமும்
நிலைமைசேர் இப்பத்தும் உயர் சிவ புராணமாம்
நெடியமால் கதை வைணவம்
நீதிசேர் காருடம் நாரதம் பாகவதம்
நீடிய புராணம் நான்காம்
கலைவலர்சொல் பதுமமொடு பிரம கை வர்த்தமே
கமலா லயன் காதையாம்
கதிரவன் காதையே சூரிய புராணமாம்
கனல்காதை ஆக்கி னேயம்
அலைகொண்ட நதியும் வெண் மதியும் அறு கும் புனையும்
அத்தனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : தலைமை - முதன்மை. பௌடிகம் - பௌடிக புராணம். இலிங்கம் - இலிங்க புராணம். மார்க்கண்டம் - மார்க்கண்டேய புராணம். எழில் சாரும் - அழகு வாய்ந்த. வாமனம் - வாமன புராணம். மச்சம் - மச்சபுராணம். சைவம் - சைவபுராணம். கூர்மம் - கூர்மபுராணம். வராகம் - வராக புராணம். காந்தசரிதம் - கந்தபுராணம். பிரமாண்டம் - பிரமாண்ட புராணம். நிலைமைசேர் - நிலைபொருந்திய. சிவபுராணம் ஆம் - சிவபுராணங்கள் ஆகும். நெடியமால் கதை - விஷ்ணு புராணங்களாவன. வைணவம் - விஷ்ணு புராணம். காருடம் - கருட புராணம். நாரதம் - நாரதீய புராணம். பாகவதம் - பாகவதபுராணம். நீடிய புராணம் - பெரியன வாகிய புராணங்கள். கலைவலர் சொல் - நூலில்வல்லவர் புகழும்.

O-,16M ,A
N32

பதுமம் - பதுமபுராணம். பிரமகைவர்த்தம் - பிரமகைவர்த்த புராணம். கமலாலயன் கதை - பிரமபுராணம்; கமல ஆலயன் - தாமரையை இடமாகவுடையவன். கதிரவன் காதை - சூரியன் சரித்திரத்தைச் சொல்லும் புராணம். சூரிய புராணம் ஆம் - சூரிய புராணம் ஆகும். கனல்காதை - அக்கினியின் சரித்திரத்தைச் சொல்லுவது. ஆக்கினேயம் - ஆக்கினேய புராணம்; அக்கினி சம்பந்தம் உள்ளது. நதி - கங்கை. அறுகு - அறுகம்புல். புனையும் - தரித்த.

பௌடிகம், இலிங்கம், மார்க்கண்டம், வாமனம், மச்சம், சைவம், கூர்மம், வராகம், காந்தம், பிரமாண்டம் இப் பத்தும் சிவ புராணங்கள்.

வைணவம், காருடம், நாரதம், பாகவதம் ஆகிய நான்கும் விஷ்ணு புராணங்களாம்.

பதுமம், பிரமகைவர்த்தம் ஆகிய இரண்டும் பிரம புராணங்களாம்.

சூரிய புராணம் — சூரியனைப் பற்றியது.

ஆக்கினேய புராணம்—அக்கினியைப் பற்றிய புராணம். (கூசு)

## 97. புகழ்ச்சி :

பருகாத அமுதொருவர் பண்ணாத பூஷணம்
　　பாரில் மறையாத நிதியம்
பரிதிகண் டலராத நிலவுகண் டுலராத
　　பண்புடைய பங்கேருகம்
கருகாத புயல்கலைகள் அருகாத திங்கள் வெங்
　　கானில் உறையாத சீயம்
கருதரிய இக்குணம் அனைத்தும் உண் டானபேர்
　　காசினியில் அருமை யாகும்

தெரியவுரை செய்யின்மொழி சீர்த்தி வரு கல்வியொடு
சீரிதயம் ஈகை வதனம்
திடமான வீரமிவை யென்றறிகு வார்கள் இச்
செகமெலாங் கொண்டாடவே
அருள்கற்ப தருவென்ன வோங்கிடுந் தானதுரை
யாகும் எமு தருமை மதவேள்
அநுதினமும் மனதில்நினை தரு சதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: பருகாத அமுது - உண்ணுத அமிர்தம். பூஷணம் - ஆபரணம். பாரில் மறையாத நிதியம் - பூமியில் மறைந்துபோகாத பொருள். பரிதி கண்டு - சூரியனைப் பார்த்து. அலராத - மலராத. உலராத - வாடிப்போகாத. பண்பு - தன்மை. பங்கேருகம் - தாமரை; சேற்றில் வளர்வது. புயல் - மேகம். கலைகள் அருகாத திங்கள் - கலைகள் குறையாத சந்திரன். வெம் கானில் - கொடிய காட்டில். உறையாத - வசிக்காத. சீயம் - சிங்கம். கருத அரிய - எண்ணுதற்கு அருமையான; அகரம் தொகுத்தல். காசினி - உலகம்; கசியப முனிவருக்குத் தத்தஞ் செய்யப்பட்டது. உரை செயின் - சொன்னல். வருகல்வி - வளரும் கல்வி. சீர் இதயம் - சிறந்த இருதயம். ஈகை - கொடை. வதனம் - முகம். திடமான - உறுதியான. செகம் (ஜகம்) - உலகம். கற்பதரு என்ன - கற்பகத் தருவைப்போல. தான துரை - கொடைக்குப் பிரபுவாகிய. (கஎ)

**98.** திருமால் அவதாரம் :

சோமுகா சுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச்
சுருதிதந் தநு மச்சமாம்
சுரர்தமக் கமுதீந்த தாமையாம் பாய்போற்
சுருட்டிமா நிலம் எடுத்தே
போமிரணி யாக்கனை உயிருண்ட கேனமாம்
பொல்லாத கனகன் உயிரைப்

போக்கியது நரசிங்கம் உலகளந் தோங்கியது
புனித வாமன மூர்த்தியாம்
எழுறும் இராவணனை வென்றவன் இராகவன்
இரவிகுலம் வேரறுத்தோன்
ஏர்பாசி ராமன் வரு கண்ணனொடு பலராமன்
இப்புவி பயந் தவிர்த்தோர்,
ஆமினிய கற்கியினி மேல்வருவ திவைபத்தும்
அரிவடிவம் அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு: சோமுகாசுரன் - சோமுகன் என்னும் அசுரன். அமரர் - தேவர்; மாணமில்லாதவர். துயர் கெட - துன்பம் நீங்க. சுருதி தந்தது - வேதங்களை மீட்டுக் கொடுத்தது. மச்சம் ஆம் - மச்சாவதாரமாகும். சுரர் - தேவர்கள். அமுது ஈந்தது - அமுதங் கொடுத்தது. ஆமையாம்-கூர்மாவதாரமாகும். மா - பெரிய. போம் - போன. இரணியாக்கன் - இரணியாட்சன்; பொன்போன்ற கண்ணை யுடையவன். ஏனம் ஆம் - வராகாவதாரமாகும். கனகன் - இரணியன்; பொன் போன்றவன். நரசிங்கம் - நரசிங்காவதாரமாகும். அளந்து - திருவடியால் அளந்து. ஓங்கியது - உயர்ந்தது. வாமன மூர்த்தி ஆம் - வாமனவதாரமாகும்; வாமனன் - குறளன், மூர்த்தி - உருவமுள்ளவன். எழுறும் - இறுமாந்திருந்த. இராகவன் - ஸ்ரீரா மன்; இரகு வமிசத்தில் பிறந்தவன். இரவி குலம் - சூரியகுலம். வேர் அறுத்தோன் - அடியோடு நாசஞ்செய்தவன். ஏர் பாசி ராமன் - அழகிய பரசுராமனும். வரு - அவதரித்த. புவி பயம் தவிர்த்தோர் - பூமியிலுள்ளோரது அச்சத்தை ஒழித்தவர். இனிய கற்கி - நல்ல கற்கி அவதாரம்; கற்கி - குதிரைமுகமுள்ள உருவம். இனிமேல் வருவது ஆம் - இனிமேல் வரப்போவதாகும். அரிவடிவம் - திருமாலின் உருவுகள்; அரி - (பாவங்களைப்) போக்குபவன்.

மச்சாவதாரம் — சோமுகாசுரன், பிரமனிடத்திலிருந்து வேதங்களைப் பற்றிக்கொண்டு கடலிற்போய் ஒளிந்துகொண்டான். அதனால், திருமால் மச்சமாகப் பிறந்து, கடலுள் அவனைக் கொன்று வேதங்களைக் கொணர்ந்து பிரமனுக்கு உதவினார் என்பதாம்.

கூர்மாவதாரம் — தேவர்கள், மந்தரமலையை மத்தாகக் கொண்டு பாற்கடலைக் கடைகையில், அம்மலை கடலில் ஆழ்ந்து விடாதபடி திருமால் ஆமையாகி முதுகில் அந்த மலையைத் தாங்கினார். திருமால் ஆமை வடிவமாய் இவ்வுலகத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிறார் எனவும் கூறுவர். (௯அ)

## 99. சிவமூர்த்தி :

பிறைசூடி உமைநேசன் விடையூர்தி நடமிடும்
பெரியன் உயர் லதுவை வடிவன்
பிச்சாட னன் காம தகனன் மற லியை வென்ற
பெம்மான் புரந்தகித்தோன்
மறமலி சலந்தரனை மாய்த்தவன் பிரமன்முடி
வௌவினோன் வீரேசுரன்
மருவுநர சிங்கத்தை வென்றவன் உமைபாகன்
வனசரன் கங்காளனே
விறன்மேவு சண்டேச ரக்ஷகன் கடுமாந்தி
மிக்க சக்கரம் உதவினோன்
விநாயகற் கருள்செய்தோன் குகன் உமை யுடன்கூடி
மிளிர் ஏக பாதன் சுகன்
அறிவரிய தக்ஷிண மூர்த்தியொ டிலிங்கமாம்
ஐயனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : பிறைசூடி - பிறையைச் சூடினவன்; சந்திரசேகரன். விடையூர்தி - இடபத்தை வாகனமாகக் கொண்டவன். நடம் இடும் - நடனம் செய்கின்ற. வதுவை வடிவன் - திருமணக் கோலத்தை யுடையவன். பிச்சாடனன் - பிச்சையெடுப்பவன். காமதகனன் - காமனையெரித்தவன். மறலியைவென்றபெம்மான் - எமனைவென்ற பெருமான்; பெம்மான் - பெருமான் என்பதன் மரூஉ. புரம் தகித்தோன் - முப்புரங்களை எரித்தவன். மறம் மலி - வலிமைமிகுந்த. சலந்தரனை மாய்த்தவன் - சலந்தராசுரனைக் கொன்றவன். முடி - தலை. வவ்வினோன் - கவர்ந்தவன். மருவும் - பொருந்திய. வனசரன் - வேடுவன். கங்காளன் - எலும்பை அணிந்தவன். விறல் மேவு - வெற்றிபொருந்திய. சண்டேச ரக்ஷகன் - சண்டேச நாயனாரைக் காத்தவன். கடுமாந்தி - விஷத்தை யுண்டவன். மிக்க - பெருமைபொருந்திய. சக்கரம் உதவினோன் - திருமாலுக்குச் சககரத்தைக் கொடுத்தோன். விநாயகற்கு அருள்செய்தோன் - மூத்த பிள்ளையாருக்கு அருள்செய்தவன். குகன் - சுப்பிரமணியன். மிளிர் - விளங்குகின்ற. ஏகபாதன் - ஒற்றைத் திருவடியையுடையவன். சுகன் - சுகமேவடிவாகவுள்ளவன். ஐயன் - தலைவன்.

சலந்தராசுரனைக் கொன்ற கதை — தேவேந்திரன் இறுமாப்புக்கொண்டு கைலையை அடைகையில், சிவபெருமான் பூதவுருவுடன் கோபங்கொண்டுவர, இந்திரன் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொண்டான். அதனால் சிவபெருமான் கோபத்தைக் கடலில் விடுத்தார். அஃது ஒரு குழந்தை வடிவாயிற்று; ஜலத்தால் தாங்கப் பெற்றமையால் ஜலந்தரன் எனப் பெயர் வந்தது. ஜலந்தரன் தவம் புரிந்து பிரமனிடம் வரம்பெற்றுத் தேவர்களை வருத்திக் கடைசியில் சிவபெருமானோடு போர்புரியச் சென்றான். சிவபெருமான் வேதியர் உருவத்தோடு எதிர் சென்று அவனை நோக்கி, 'இவ்வளவு பூமியைப் பெயர்த்து எடு' என்று பூமியில் வட்டமாகக் கோடு கீறினார். அவன் அதைப் பெயர்த்துத் தலையில் வைத்துக்கொள்ள, அதுவே சக்கரமாகி அவனுடலைக் கிழித்தது. அதனால் அவன் இறந்தான். (கக)

## 100. கவி வணக்கம் :

மலரிதழி பைங்குவளை மென்முல்லை மல்லிகை
மருக்கொழுந் துயர் கூவிளம்
மற்றுமுள வாசமலர் பத்திரம் சிலர்சூட
மணிமுடி தனிற் பொறுத்தே
சிலரெருக் கொடுவனத் துட் பூளை பச்சறுகு
செம்முள்ளி மலர் சூடவே
சித்தம்வைத் திடவும் அங் கீகரித் திடுமகா
தேவதே வா தெரிந்தே
கலைவலர் உரைக்குநன் கவியொடு அம் பலவாண
கவிராயன் ஆகும் என்புன்
கவியையும் சூடியே மனமகிழ்ந் திடுவதுன்
கடனாகும் அடல் நாகமும்
அலைபெருகு கங்கையும் செழுமதிய மும் புனையும்
அமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

குறிப்பு : மலர் இதழி - இதழிமலர், கொன்றைமலர். பைங் குவளை - பசிய குவளைமலர். மருக்கொழுந்து - மருக்கொழுந்து என்னும் ஒரு வாசனைத்தழை ; மரு - வாசனை. கூவிளம் - வில்வம். வாசமலர் - மணமுள்ள மலர்கள். பத்திரம் - இலை. சூட - சூட்ட. மணிமுடிதனில் பொறுத்து - அழகிய தலையில் தாங்கி. எருக்கு - எருக்கமலர் ; முதலாகுபெயர். வனத்துள் - காட்டிலுள்ள. பூளை - பூளைமலர். பச்சறுகு - பசிய அறுகம்புல். சித்தம் வைத்து - திருவுளம் வைத்து. அங்கீகரித்திடும் - எற்றுக்கொள்ளும். கலை வல்லோர் - நூல் வல்லோர். தெரிந்து - ஆராய்ந்து. நன்கவியொடு - நல்லகவிகளோடு. புன்கவி - அற்பமான கவி. அடல் நாகம் - வலிமை பொருந்திய பாம்பு. மதியம் - சந்திரன். புனையும் - தரித்த.

சிலர், கொன்றை முதலிய மணமலர்களைச் சூட்டவும், சிலர் மணமற்ற எருக்கு முதலிய மலர்களைச்சூட்டவும் அவ்விரண்டனையும் ஒன்றாகவே கொண்டு நீ அணிந்ததைப்போல, கற்று வல்லோர் கூறிய சிறந்த கவிகளோடொப்ப, கற்றறியாதவனாகிய அடியேன் கூறிய புன்கவிகளையும் ஏற்றருளவேண்டும் என்பது கருத்து. (௧௦௦)

18/8/55

அறப்பளீசுர சதகம்

முற்றிற்று.

# தலைப்பு வரிசை


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| அடங்காதவற்றை அடக்கும் உபாயம் | 42 |
| அதற்கு வெற்றியிடம் | 33 |
| அது அதுவாகாமை | 26 |
| அரசர் சிறப்பு | 85 |
| அரிது இஃது எனல் | 1 |
| அரியராவோர் | 60 |
| அவரவரிடத்து நடக்கும் முறை | 29 |
| இதற்கு இது வேண்டும் எனல் | 36 |
| இதற்கு உதவிசெய்வது இது வேனல் | 24 |
| இதனால் இன்ன முறையனும் எனல் | 28 |
| இதனை உடையவர்க்கு இஃது இல்லையேனல் | 80 |
| இதனைக்கண்டு மகிழ்வது இதுவேனல் | 25 |
| இதாகிதஞ் செய்து பயன் கொள்வன | 96 |
| இதுவும் அது (சற்புருடராவோர்) | 18 |
| இதுவும் அது (சகுனம்) | 64 |
| இதுவும் அது (சகுனம்) | 65 |
| இல்லறம் | 99 |
| இவர்க்கு இஃது இல்லையேனல் | 19 |
| இவையே போதும் எனல் | 59 |
| இராஜ கருணீகர் சிறப்பு | 89 |
| இருந்தும் உதவாமை | 82 |
| ஈனத்துவம் | 38 |
| உடல் முதலியவைநிலையாமை | 20 |
| உண்டி இலையும் முறையும் | 75 |
| உண்மை உணர் குறி | 53 |
| உணவில் விலக்கு | 67 |
| உதவியின்றிக் கெடுவன | 58 |
| உயர்வன்றித் தாழ்வும் சிறக்கும் இடம் | 45 |
| ஊழ்வலி | 55 |
| ஒப்புயர்வு இல்லாமை | 56 |
| ஒளியின் உயர்வு | 43 |
| ஒன்றற்கொன்று அழகு செய்வன | 10 |
| ஒன்று இல்லாமையாற் பயன்படாதவை | 11 |
| ஒன்று இல்லாமையால் பாழ்படல் | 34 |
| கற்புடைய மனைவியின் பண்பு | 2 |
| கற்பு மேம்பாடு | 61 |
| கவிஞர் வறுமை | 77 |
| கவிஞன் | 78 |
| கவி வணக்கம் | 104 |
| காப்பு | 1 |
| குணத்தை விட்டுக் குற்றத்தைக் கவர்தல் | 30 |
| குணம் காண் குறி | 31 |
| குணம் குற்றமாதல் | 44 |
| குறைகுணம் இரண்டினும் பயன்படாமை | 22 |
| குறைவுற்றும் குணம்கெடாமை | 23 |
| கூடிற் பயன்படல் | 32 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| கோடி யுடுக்கும் நாள் | 62 |
| கோபத்தின் கொடுமை | 90 |
| சகுனம் | 63 |
| சகோதரர் இயல்பு | 5 |
| சற்குருவின் இயல்பு | 6 |
| சற்சீடர் இயல்பு | 7 |
| சற்புருடராவோர் | 17 |
| சிவமூர்த்தி | 103 |
| செய்யவொண்ணுதவை | 9 |
| தகாத சேர்க்கை | 12 |
| தத்துவத் திரயம் | 92 |
| தருமம் | 97 |
| தானுதிபதி மந்திரி சேனுதி பதிகள் இயல்பு | 88 |
| திருமங்கை இருப்பிடம் | 21 |
| திருமால் அவதாரம் | 102 |
| தீ நகர் | 49 |
| தீவினை செய்தோர் | 47 |
| தீவும் கடலும் | 73 |
| தூய்மையிடமும் தூய்மைசெய் வனவும் | 41 |
| தேவர்கள் கால அளவை | 40 |
| நல்வினை செய்தோர் | 46 |
| நற்குணங்களுக்கிடமாகாதவர் | 27 |
| நற் சார்பு | 79 |
| நற்புதல்வர் இயல்பு | 4 |
| நற்பொருளில் குற்றம் | 68 |
| நன்னகர் | 48 |
| பகைகொளத் தகாதவர் | 95 |
| பதர் எனப்படுவோர் | 13 |
| பல்துறை | 91 |
| பிறந்தநாளோடுவருகின்றவார பலம் | 79 |
| பிறவிக்குணம் மாருமை | 54 |
| புகழ்ச்சி | 101 |
| புராணம் | 100 |
| பூப்பு லக்கினம் | 72 |
| பூப்பு வாரம் | 71 |
| பொருள் தேடிச் செலவு செய்யும் வகை | 8 |
| மருத்துவன் | 51 |
| மழை நாள் குறிப்பு | 81 |
| மறைப்பனவும் வெளிப்படுத்து வனவும் | 39 |
| மறையோர் சிறப்பு | 84 |
| மன்மத பாணமும் அவற்றின் குணம் முதலியவும் | 93 |
| மன்மதன் உபகரணங்கள் | 94 |
| மணே கோலுவதற்கு மாதம் | 69 |
| முழக்கு நாள் | 50 |
| மூடர் தாரதம்மியம் | 35 |
| மூடரைத் திருத்தமுடியா தெனல் | 16 |
| மூதேவி இருப்பிடம் | 22 |
| மேலான பொருள் | 74 |
| மேன்மேல் உயர்ச்சி | 15 |
| வறுமையின் கொடுமை | 37 |
| விருந்து வாரம் | 70 |
| வீண் செயல் | 57 |
| வேண்டத்தக்கவை | 14 |
| வேளாளர் சிறப்பு | 87 |
| வைசியர் சிறப்பு | 86 |

# செய்யுள் முதற் குறிப்பு


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| அடைக்கலம் எனத்தேடி | 18 |
| அருக்கனுக் கதிரோகி | 71 |
| இரப்பவன் புவிமீதில் | 38 |
| ஈனசா திகள்குடி | 49 |
| உம்பர்கோன் எம்பெருமான் | 1 |
| உள்ளன் பிலாதபேர் | 26 |
| எழுதப் படிக்கவகை | 77 |
| ஓராறு தொழிலையும் | 84 |
| கடலள வுரைத்திடுவர் | 55 |
| கடலுலகில் வாழுமுயிர் | 1 |
| கணவனுக் கினியளாய் | 2 |
| கலங்காத சித்தமும் | 54 |
| கலைவலா ருக்கதிக | 33 |
| கற்றோர்கள் என்பதைச் | 31 |
| கறைபடா தொளிசேரும் | 62 |
| காணரிய பெரியோர்கள் | 79 |
| காமிக்கு முறையில்லை | 19 |
| காயமொரு புற்புதம் | 20 |
| குணமற்ற பேய்முருங் | 22 |
| கூடப் பிறந்தவர்க் | 5 |
| கைவிலைக் குக்கொளும் | 67 |
| கொடியபொலி யெருதை | 42 |
| கோபமே பாவங்க | 90 |
| கோவிலில் லாதவூர் | 11 |
| சதுர்யுகம் ஓரிரண் | 40 |
| சமயத்தில் உதவாத | 82 |
| சரணெனக் காத்தவன் | 46 |
| சித்திரைத் திங்கள்தனில் | 69 |
| சித்திரைத் திங்கள்பதின் | 81 |
| சுவைசேர் கரும்பை | 96 |
| சுழிசுத்த மாயிருந் | 74 |
| செங்கதிர்க் குறவுபோம் | 70 |
| செத்தைபல கூடியொரு | 32 |
| செய்நன்றி மறவாத | 17 |
| செழுமணிக் கொளி | 43 |
| சென்மநட் சத்திரத் | 79 |
| சென்மித்த வருடமும் | 39 |
| சொல்லரிய கருடன் | 63 |
| சோதிடம் பொய்யாது | 53 |
| சோமுகா சுரனைமுன் | 102 |
| தங்குலம் விளங்கிடப் | 4 |
| தந்தைதாய் சற்குருவை | 99 |
| தந்தைதாய் மலர்முகம் | 25 |
| தலைமைசேர் பௌடிகம் | 100 |
| தலைவிரித் தெதிர்வருதல் | 65 |
| தறிபட்ட சந்தனக் | 23 |
| தன்கணவன் உருவமாய்த் | 61 |
| தன்மட்டில் இராவாது | 15 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| தன்னாசன் வலிமையும் | 88 |
| தன்னால் முடிக்கவொண் | 28 |
| தனக்குவெகு புத்தியுண் | 36 |
| தாதுப் பரீக்ஷைவரு | 51 |
| தாம்பூல தாரணம் | 34 |
| தான்புரி தவத்தையும் | 91 |
| துட்ட விக டக்கவியை | 30 |
| தெள்ளமிர்த தாரையென | 78 |
| நரிமயில் பசுங்கிள்ளை | 64 |
| நற்பரி முகத்திலே | 21 |
| நாவலந் தீவினைச் | 73 |
| நீர்மேல் நடக்கலாம் | 16 |
| நீள்கடல் கடந்திடுவர் | 86 |
| பதின்மரில் ஒருத்தர்சபை | 60 |
| பருகாத அமுதொருவர் | 101 |
| பிறைசூடி உமைநேசன் | 103 |
| புண்ணிய வசத்தினல் | 8 |
| பூததயை யில்லாத | 12 |
| பூதமோர் ஐந்துடன் | 92 |
| பெண்புத்தி கேட்கின்ற | 35 |
| பெறுமில் பெறு | 97 |
| போரான கங்கா | 68 |
| பொய்யாத வாய்மையும் | 59 |
| பொன்னாசை யுள்ளவர்க் | 80 |
| மநுநீதி முறைமையும் | 85 |
| மலரிதழி பைங்குவளை | 104 |
| மன்னவர் அமைச்சர் | 95 |
| மாதா பிதாவினுக் | 29 |
| மாருத கலைகற்றும் | 13 |
| மிதமின்றி அன்னம் | 22 |
| மூப்பொருவ ரில்லாத | 58 |
| மேலான சாதியில் | 37 |
| யசனாதி கருமமும் | 87 |
| வஞ்சகர் தமைக்கூடி | 9 |
| வருமாதி வாரம் | 50 |
| வருமோலை யுத்தரத் | 89 |
| வறுமைதப் பாதுவரும் | 72 |
| வனசம் செழுஞ்சுத | 93 |
| வாம்பரி தனக்கதிக | 41 |
| வாயிகழ்வு பேசிமிகு | 47 |
| வாலிபந் தனில்வித்தை | 14 |
| வாவிபல கூபமுடன் | 48 |
| வாழ்மனை தனக்கழகு | 10 |
| வாழையிலை புன்னைபுர | 75 |
| வான்மதியை நோக்கிடிற் | 44 |
| வானவர் பிதிர்கள்முச் | 24 |
| வெகுமான மாகிலும் | 45 |
| வெஞ்சிலை செழுங்கழை | 94 |
| வெறிகொண்ட மர்க்கடம் | 27 |
| வேட்டகஞ் சேர்வோரும் | 57 |
| வேதாந்த சித்தாந்த | 6 |
| வேதியர்க் கதிகமாம் | 56 |
| வைதாலுமோகொடுமை | 7 |

# குமரேச சதகம்

## முன்னுரை :

திருப்புல்வயல் என்னும் திருப்பதி, சோழ வளநாட்டில் புதுக்கோட்டையை அடுத்துள்ள ஒரு தலம்; அங்கேயுள்ள மலைமேல் முருகக் கடவுளுக்கான ஆலயம் ஒன்று அமைந்துளது. இத் தலத்தைச் சுட்டி அருணகிரிநாதர் அருளிய திருப்புகழும் ஒன்றுளது என்பர். இத் தலம் சோணாட்டிலுள்ளது என்பதற்கு அகச்சான்றுகள் சில கிடைக்கின்றன.

அவை,

‘மாடமிசை யன்னக் கொடித்திரள்கொள் சோணாடு
வாழவந் திடுமுதல்வனே.’ (செய் - 51.)

‘வாணாடு புகழுமொரு சோணாடு தழையவிவண்
வந்தவ தரித்தமுதலே.’ (செய் - 60.)

‘மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவுசோ ணாட்டதிபனே.’ (செய் - 68.)

என்பவை முதலாயின.

குமரேசன்: இது குமாரனாகிய ஈசன் என, இருபெயரொட்டுப் பண்புத்தொகை. குமாரன் என்பது குமரன்

எனக் குறுகி நின்றது. குமாரன் (கு + மாரன்) மன்மதனை அழகினால் குற்சிதமாகச் செய்பவன்; கு-குற்சிதம், அற்பம்.

குமர + ஈசன் — குமரேசன் என வடமொழிக் குணசந்தி.

**சதகம்:** நூறு செய்யுட்களையுடையது. சதம் - நூறு; க - பிரத்தியயம்.

**திருப்புல்வயல் குமரேச சதகம்:** திருப்புல் வயலில் கோயில் கொண்டருளியுள்ள குமரேசனை விஷயமாகவுடைய நூறு செய்யுட்களாலான ஒரு பிரபந்தம் என்பதாம்.

திருப்புல்வயல் குமரேசன் - இஃது ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

குமரேச சதகம் - இஃது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. வடநூலார், ஆறும் வேற்றுமைத்தொகையாகவே விரிப்பர்.

இந் நூல், காப்பு வெண்பா ஒன்றும், அவையடக்கம் ஒன்றும் நீங்க, ஒரு நூறு ஆசிரிய விருத்தங்களாலானது. ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு நீதியை எடுத்துக் கூறி, இறுதியில், 'மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு மலைமேவு குமரேசனே' என்னும் கட்டுடன் முடிகின்றது.

**நூலாசிரியர்:** இந் நூலைச் செய்தவர் **குருபாத தாசர்** என்பவர். இஃது, இந் நூலின் நூறும் செய்யுளினால் நன்கு விளங்கும். இவ்வாசிரியர் முருகக் கடவுளிடத்து நீங்காத மெய்யன்பு பூண்டவர் என்பது வெளிப்படை. ஆயினும் இவர் இந் நூலில்,

'வல்லமையினால், எண்ணத்தி னாலொன்றும் வாராது
பரமசிவன் எத்தனப்படி முடியுமாம்.' (செய் - 44.)

'வாடாம லிவையெலாஞ் சிவன்செயல்க ளல்லாது
மனச்செயலி னாலும் வருமோ.' (செய். - 85.)

எனச் சிவபெருமானைப் பாராட்டி யுரைத்தலால், சைவப் பற்றுடையவரெனல் போதரும். குமாரனை வணங்குவோர், கௌமார சமயத்தினராக இருப்பினும், குமாரன் சிவபுத்திரனாதல்பற்றிக் கௌமார மதத்தினரும் தம்மைச் சிவ மதத்தினரெனக் கூறிக்கொள்வது பெருவழக்கு.

குருபாத தேசிகரது இயற்பெயர் முத்து மீனாட்சிக் கவிராயர் எனவும், அவர் வேளாள வகுப்பினர் எனவும் கூறுவர். அவரைப்பற்றிய மற்றை விவரங்கள் புலப்படவில்லை.

இந்நூல் சுமார் 160 - வருடங்களுக்குமுன் செய்தது என்ப.

'கடலகம்'
மயிலை, சென்னை. } கா. நமச்சிவாயன்.

# குமரேச சதகம்

காப்பு :

பூமேவு புல்வலைப் பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமே வியசதகம் செப்பவே — கோமேவிக்
காக்குஞ் சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

குறிப்பு : பூமேவு - அழகு பொருந்திய, பூமியிற் பொருந்திய. புல்வலை - புல்வயல் என்பதன் மரூஉ. பொருந்து - அமர்ந்துள்ள. தேன் மேவிய - இனிமை பொருந்திய. செப்ப - சொல்ல, பாட. கோ மேவி - தலைமை பெற்று. சரவணத்தான் - சரவணபவனாகிய சுப்பிரமணியக் கடவுள் ; சர + வனம் - நாணற் காடு ; கந்தமூர்த்தி, சிவபெருமான் நெற்றிக் கண்ணினின்றும் ஆறு தீப்பொறிகளாகத் தோன்றி, ஆறு குழந்தைகளாகச் சரவணப் பொய்கையில் தவழ்ந்துகொண் டிருந்தனர் என்பது வரலாறு. கம்பம் - அசைவு. கும்பம் - மத்தகம். ஐந்து கரம் - ஐந்து கைகள். கா - கற்பகவிருக்ஷம். குஞ்சரம் - யானை. வணத்தான் - வண்ணத்தான், வடிவினையுடையவனாகிய விநாயகன். அசைதலையுடையதும், மத்தகத்தையுடையதும் ஆகிய குஞ்சரத்தின் வண்ணத்தான் எனக் கூட்டுக. ஐந்து கைகளும் ஐந்து கற்பக விருக்ஷங்கள்போல் இருக்கின்றன என்க. குஞ்சரம் - காட்டுப் புதலில் திரிவது.

## அவையடக்கம் :

மாரிக்கு நிகரென்று பனிசொரிதல் போலவும்
மனைக்குநிக ரென்று சிறுபெண்
மணல்வீடு கட்டுவது போலவும் சந்த்ரன்முன்
மருவு மின் மினி போலவும்
பாருக்குள் நல்லோர்மு னே பித்தர் பலமொழி
பகர்ந்திடுஞ் செயல்போலவும்
பச்சைமயி லாடுதற் கிணையென்று வான்கோழி
பாரி லா டுதல் போலவும்
பூரிக்கும் இனிய கா வேரிக்கு நிகரென்று
போது வாய்க் கால் போலவும்
புகல்சிப்பி முத்துக்கு நிகராப் பளிங்கைப்
பொருந்தவைத் தது போலவும்
வாரிக்கு முன் வாவி பெருகல்போ லவும் இன்சொல்
வாணர்முன் உகந்து புல்லை
வாலகும ரேசர்மேற் சதகம் புகன்றனன்
மனம்பொறுத் தருள்புரிகவே.

குறிப்பு : மாரி - மழை. நிகர் - ஒப்பு. சொரிதல் - பெய்தல். மனை - வீடு. மருவும் - சேர்கின்ற. பார் - பூமி. பகர்ந்திடும் செயல் - சொல்லும் செய்கை. பூரிக்கும் - நீர் நிறைந்து வரும். போது வாய்க்கால் - ஓடிவரும் கால்வாய். புகல் - சொல்லு கின்ற. சிப்பி முத்து - சிப்பியில் தோன்றும் முத்து. பளிங்கு - பளிங்குக்கல். வாரி - கடல். வாவி - குளம். இன் சொல் வாணர்- இனிய சொற்களால் வாழ்பவர், புலவர் ; வாழ்நர் என்பது வாணர் என மருவிற்று. உகந்து - விரும்பி. வால குமரேசர் - பாலசுப்பிர மணியர்; பால - வால ; பகரத்திற்கு வகரம் போலி.

# குமரேச சதகம்

## நூல் :

### 1. குமரேசர் மகிமை :

பூமிக்கொ ராறுதலை யாய்வந்து சரவணப்
பொய்கைதனில் விளையாடியும்
புனிதற்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும்
போதனைச் சிறையில் வைத்தும்
தேமிக்க அரிகரப் பிரமாதி கட்கும்
செயிக்கமுடி யா வசுரனைத்
தேகங் கிழித்து வடி வேலினால் இருகூறு
செய்தமரர் சிறைதவிர்த்தும்
நேமிக்குள் அன்பரிடர் உற்ற சம யந்தனில்
நினைக்குமுன் வந்துதவியும்
நிதமுமெய்த் துணையாய் விளங்கலால் உலகிலுனை
நிகரான தெய்வமுண்டோ

மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியு மணி
மார்பனே வள்ளி கணவா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: பூமிக்கு - பூமியில். ஆறு தலையாய் - ஆறு தலைகளை யுடையவனாய்; தலை - சினையாகு பெயர். சரவணப் பொய்கை - நாணற்காடு சூழ்ந்த மடு. புனிதன் - பரிசுத்தன்; சிவன். மந்த்ர உபதேச மொழி - பிரணவமாகிய மந்திரத்தின் உபதேச வார்த்தையை. போதன் - தாமரை மலரில் வசிப்பவன்; பிரமன். தேமிக்க-தெய்வத்தன்மை மிகுந்த. அரிகரர் (ஹரி ஹரன்)-விஷ்ணுவும் சிவனும். வடி வேல் - வடித்த வேல்; அழகிய வேல். அமரர் - தேவர். தவிர்த்து - நீக்கி. நேமி - உலகம். இடர் உற்ற சமயம் - துன்பமுற்ற வேளை. நிதம் - நிதமும், தினமும். மா - வண்டு. பருகு - உண்ணுகின்ற. பூ கடம்பு - அழகிய கடம்பு; அது முதலாகுபெயராய் மலரையுணர்த்திற்று. அணியும் - அணிகின்ற. மணி மார்பன் - அழகிய மார்பையுடையவன்.

## 2. அந்தணர் இயல்பு:

குறையாத காயத்ரி யாதிசெப மகிமையும்
கூறுசுருதிப் பெருமையும்
கோதிலா ஆகமபு ராணத்தின் வளமையும்
குலவுயா காதிபலவும்
முறையா நடத்தலால் சகலதீ வினைகளையும்
முளரிபோ லேதகிப்பார்
முதன்மைபெறு சிலைசெம்பு பிருதிவி களிற்றெய்வ
மூர்த்தமுண் டாக்குவிப்பார்
நிறையாக நீதிநெறி வழுவார்கள் ஆகையால்
நீள்மழை பொழிந்திடுவதும்
நிலமது செழிப்பதும் அரசர்செங் கோல்புரியும்
நிலையும்மா தவர்செய்தவமும்

மறையோர்க ளாலே விளங்கு மிவ் வுலகத்தில்
மானிடத் தெய்வமிவர்காண்
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : காயத்ரி - இருபத்து நான்கு அட்சரங்களாலாகிய ஒரு வேத மந்திரம். ஆதி - முதலிய. செபமகிமை - ஜபமகிமை; ஜபித்தலினு லுண்டாகிய பெருமை. கூறு - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற. சுருதி - கேட்கப்படுவது; வேதம். கோது - குற்றம். ஆகமம் - வேதசாரமான சமயநூல்கள். குலவு - விளங்குகின்ற. மூளரி - நெருப்பு, சூரியன். தகிப்பார்-எரித்துவிடுவர். முதன்மை-தலைமை. சிலை - கல். பிருதிவி - மண். தெய்வ மூர்த்தம் - தெய்வத்தின் உருவம், ஆவாஹனம். நிறை-நிறைகுணம். வழுவார்கள்-தவறமாட்டார்கள். நீள் மழை - பெரு மழை. செங்கோல் - நீதி; அடையடுத்த உவமையாகுபெயர். மறையோர் - வேதியர். மானிடத் தெய்வம் - மனிதர்களுக்குள் தெய்வம் போல்பவர்.

### 3. அரசர் இயல்பு :

குடிபடையில் அபிமானம் மந்திரா லோசனை
குறிப்பறிதல் சத்யவசனம்
கொடைநித்தம் அவரவர்க் கேற்ற மரியாதை பொறை
கோடாத சதுருபாயம்
படிவிசா ரணையொடு ப்ரதானிதள கர்த்தரைப்
பண்பறிந் தேயமைத்தல்
பல்லுயி ரெலாந்தம் உயிர்க்கு நிக ரென்றே
பரித்தல் குற் றங்கள்களைதல்
துடிபெறு தமக்குறுதி யானநட் பகமின்மை
சுகுணமொடு கல்வி யறிவு
தோலாத காலமிடம் அறிதல் வினை வலிகண்டு
துஷ்டநிக் ரக சௌரியம்

வடிவுபெறு செங்கோல் நடத்திவரும் அரசர்க்கு
வழுவாத முறைமை யிவைகாண்
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேச னே.

குறிப்பு : குடி படையில் - குடிகளிடத்தும், படைகளிடத்தும். அபிமானம் - பற்று. மந்திராலோசனை - ரகசியமான ஆலோசனை. குறிப்பறிதல் - குறிப்பினால் அறிதல். சத்திய வசனம் - உண்மையே பேசுதல். கொடை - கொடுத்தல். பொறை - பொறுமை. கோடாத - மாறுபடாத. சதுர் உபாயம் - நான்கு உபாயங்கள்; அவை, சாம தான பேத தண்டம் என்பன; சாமம் - சமாதானம்; தானம் - பொருள் முதலிய கொடுத்தல்; பேதம் - மாறுபடுத்தல்; தண்டம் - தண்டித்தல். படி விசாரணை - உலக விசாரணை. பிரதானி - மந்திரிகள். தளகர்த்தர் - படைத்தலைவர். பண்பு அறிந்து - தன்மை அறிந்து. அமைத்தல் - நியமித்தல். பரித்தல் - தாங்குதல். களைதல் - நீக்குதல். துடி பெறு - மேன்மை பெற்ற. நட்பு - சிநேகம். அகம் இன்மை - கருவம் இல்லாமை. சுகுணம் - நற்குணம். தோலாத - தோல்வி யடையாத. துஷ்ட நிக்ரகம் - துஷ்டரைத் தொலைத்தல். சௌரியம் - சூரத்தனம். வடிவு - அழகு. வழுவாத - தவறாத.

## 4. வணிகர் இயல்பு :

கொண்டபடி போதும் விலை பேசிலா பஞ்சிறிது
கூடிவர நயமுரைப்பார்
கொள்ளுமொரு முதலுக்கு மோசம் வாராதபடி
குறுகவே செலவுசெய்வார்
வண்டப் புரட்டர்தாம் முறிதந்து பொன்னடகு
வைக்கினுங் கடனீந்திடார்
மருவு நா ணயமுளோர் கேட்டனுப் புகினு மவர்
வார்த்தையி லெலாங்கொடுப்பார்

கண்டெழுது பற்றுவர வினில் மயிர் பிளந்தே
கணக்கி லணு வாகிலும்விடார்
காசுவீ ணிற்செலவி டா ருசித மானதிற்
கனதிரவி யங்கள்விடுவார்
மண்டலத் தூடு கன வர்த்தகஞ் செய்கின்ற
வணிகர்க்கு முறைமை யிவைகாண்
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : கொண்டபடிபோலும் - தாம் பொருள்களை விலைக்கு வாங்கிய விதமாக. நயம் - இனிய மொழி முதல் - முதற் பொருள் ; மூலதனம். மோசம் - அழிவு. குறுக - சுருக்கமாக. வண்டப் புரட்டர் - தீயரான பொய்யர்கள். முறி - கடன்பத்திரம். அடகு - ஈடு, அடைமானம். மருவும் - பொருந்திய. நாணயம் - சொல் தவறாமை. கண்டெழுது - குறிப்பிட்டு எழுதுகின்ற. பற்று-பிறர் பெற்றுக் கொள்வது. வரவு - வந்தது, வரப்பெற்றது. மயிர் பிளந்தே - மயிரை இரண்டாகப் பிளந்ததுபோல ; (சரியாகப் பார்த்து). உசிதம் ஆனதில் - தகுதியான காரியத்தில். கனம் - மிகுதியான. மண்டலத்தூடு - உலகத்தில் ; ஊடு - ஏழாம் வேற்றுமை யுருபு. கன வர்த்தகம் - பெரிய வர்த்தகம்.

## 5. வேளாளர் இயல்பு :

நல்லதே வாலயம் பூசனை நடப்பதும்
நாடோறும் மழைபொழிவதும்
நாடிய தபோதனர்கள் மாதவம் புரிவதும்
நவில் வேத வேதியரெலாம்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதும்
தொல்புவி செழிக்கு நலமும்
சுபசோ பனங்களுங் கொற்றவர்கள் செங்கோல்
துலங்குமனு நெறிமுறைமையும்

வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்
விற்பனையும் அதிக புகழும்
மிக்கவதி காரமும் தொழிலாளர் சீவனமும்
வீரரண சூரர்வலியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவனன்றோ
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: தேவாலயம் - கோயில். பூசனை - பூசை. நாடிய - விரும்பிய. தபோதனர்கள் - தவத்தையே செல்வமாக வுடையவர்; முனிவர். புரிவது - செய்வது. நவில் - சொல்லப்படுகின்ற. யாகாதி கருமம் - யாகம் முதலிய செய்கைகள். தொல் - பழமை. புவி - பூமி. சுப சோபனங்கள் - மங்களகரமான கலியாண முதலியவை. கொற்றவர் - அரசர். மனுநெறி - மனு தரும சாத்திரத்தின் முறை. சுகிர்தம் - புண்ணியம். வீர ரண சூரர் வலி - வீரத்தன்மையுள்ள போர் வீரர் வன்மையும். சகலமும் - எல்லாச் செயல்களும். மேழி - கலப்பையோடு சேர்த்துள்ள கருவி; இதனைக் கையாற் பிடித்து உழுவர். வாழ்வு - செல்வம். விளைவ - உண்டாவன.

## 6. பிதாக்கள்:

தவமதுசெய் தே பெற் றெடுத்தவன் முதற்பிதா
தனைவளர்த் தவ னொரு பிதா
தயையாக வித்தையைச் சாற்றினவன் ஒருபிதா
சார்ந்த சற் குரு வொரு பிதா
அவமறுத் தாள்கின்ற அரசொரு பிதா நல்ல
ஆபத்து வேளை தன்னில்
அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோன் ஒருபிதா
அன்புள முனோன் ஒரு பிதா

கவளமிடு மனைவியைப் பெற்றுளோன் ஒருபிதா
கலிதவிர்த் தவன் ஒரு பிதா
காசினியில் இவரை நித் தம் பிதா என்றுளங்
கருதுவது நீதியாகும்
மவுலிதனில் மதியரவு புனை விமலர் உதவு சிறு
மதலையென வருகுருபரா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : முதல் பிதா-முதல் தந்தை, பெற்ற தந்தை. வித்தை - கல்வி. சாற்றினவன் - சொல்லிக்கொடுத்த உபாத்தியாயன். சற்குரு - சன்மார்க்கத்தைப் போதிக்கும் ஆசாரியன். அவம் அறுத்து- குற்றம் நீக்கி. அரசு - அரசன்; சொல்லால் அஃறிணை. ஆபத்து வேளை - துன்பம்வந்த காலம். அஞ்சல் - பயப்படாதே. முனோன் - முன்னோன்; தமையன். கவளம் - சோற்றுத்திரளை. கலி-வறுமை. காசினி-பூமி. நித்தம் - எந்நாளும். உளம் - மனம். கருதுவது - எண்ணுவது. நீதி - முறை. மவுலி - முடி. மதி - சந்திரன். அரவு- பாம்பு. புனை - அணிந்த. விமலர் - மலமற்றவர்; சிவபிரான். உதவு - பெற்ற. சிறு மதலை - சிறு குழந்தை. வரு - வந்த.

## 7. ஒன்றையொன்று பற்றியிருப்பன :

சத்தியந் தவறு திருப்பவ ரிடத்தினிற்
சார்ந்து திரு மாதிருக்கும்
சந்ததந் திருமா திருக்குமவி டந்தனில்
தனதுபாக் கியமிருக்கும்
மெய்த்துவரு பாக்கியம் இருக்குமவி டந்தனில்
விண்டுவின் களையிருக்கும்
விண்டுவின் களைபூண் டிருக்குமவி டந்தனில்
மிக்கான தயையிருக்கும்

பத்தியுடன் இனியதயை யுள்ளவ ரிடந்தனில்
பகர் தருமம் மிகவிருக்கும்
பகர்தருமம் உள்ளவ ரிடந்தனிற் சத்துரு
பலாயனத் திறலிருக்கும்
வைத்திசை மிகுந்ததிறல் உள்ளவ ரிடத்தில் வெகு
மன்னுயிர் சிறக்குமன்றோ
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

**குறிப்பு :** திருமாது - இலக்குமி. சந்ததம் - எப்பொழுதும். அவ்விடந்தனில் என்று மிக வேண்டுவது மிகாது அவிடந் தனில் என நின்றது ; மேலும் இவ்வாறே கொள்க. தனது - அந்த இலக்குமியினது. மெய்த்து - உண்மையாகி. விண்டுவின் கலை - விஷ்ணுவின் பொலிவு ; அஃதாவது, அருள். பூண்டு - சேர்ந்து. பகர்-சொல்லுகின்ற. சத்துரு-பகையாளி. பலாயனத் திறல்-பகைவரைப் புறங் காட்டி யோடச் செய்யும் வல்லமை. இசை - புகழ். மன்னுயிர் - நிலைபெற்ற உயிர்கள். சிறக்கும் - சிறந்து வாழும்.

## 8. இவர்க்கு இவர் தேய்வம் எனல் :

**ஆ**துலர்க் கன்னம் கொடுத்தவர்க ளேதெய்வம்
அன்பான மாணுக்கருக்
கரியகுரு வேதெய்வம் அஞ்சினோர்க் காபத்
தகற்றினோ னே தெய்வமாம்
காதலுறு கற்புடைய மங்கையர் தமக்கெலாம்
கணவனே மிக்க தெய்வம்
காசினியில் மன்னுயிர் தமக்கெலாங் குடிமரபு
காக்கு மன் னன் தெய்வமாம்
ஓதரிய பிள்ளைகட் கன்னை தந் தையர் தெய்வம்
உயர்சாதி மாந்தர் யார்க்கும்
உறவின்முறை யார்தெய்வம் விசுவாச முள்ளபேர்க்
குற்றசிவ பத்தர் தெய்வம்

மாதயையி னூற்சூத் திரர்க்கு மறையோர் தெய்வம்
வானவர்க் குத்தெய்வம் நீ
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: ஆதுலர் - இரப்பவர், வறியவர். அன்னம் - சோறு. அஞ்சினோர் - பயந்தவர். அகற்றினேன் - நீக்கினவன். காதல் - ஆசை. காசினி - பூமி. மரபு - முறை. மன்னவர் - அரசர். ஓது அரிய - சொல்லுதற்கு அரிய. அன்னை தந்தையர் - தாய் தகப்பன்மார். மாந்தர் - மனிதர். உறவின் முறையார் - பந்துக்கள். விசுவாசம் - அன்பு. சிவபத்தர் - சிவனடியார். மா தயை - மிக்க அன்பு. மறையோர் - அந்தணர். வானவர் - தேவர்.

## 9. இவர்க்கு இதில் நினைவு எனல்:

ஞானநெறி யாளர்க்கு மோட்சத்தி லேநினைவு
நல்லறிவு ளோர்தமக்கு
நாடொறுந் தருமத்தி லேநினைவு மன்னர்க்கு
ராச்சியந் தன்னில் நினைவு
ஆனகா முகருக்கு மாதர்மே லேநினைவுள்
அஞ்சாத திருடருக்கிங்
கனுதினங் களவிலே நினைவு தன வணிகருக்
காதாய மீதுநினைவு
தானமிகு குடியாள ருக்கெலாம் வேளாண்மை
தான்நினைவு கற்பவர்க்குத்
தருகல்வி மேல்நினைவு வேசியர்க் கினியபொருள்
தருவோர்கள் மீதுநினைவு
மானபர னுக்குமரி யாதைமேல் நினைவெற்கு
மாறுநின் மீதுநினைவு
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : ஞானநெறியாளர் - ஞானமார்க்கத்தில் நிற்பவர். நாள் தோறும் - எந்நாளும். காமுகர் - காமத்தில் விருப்பமுள்ளவர். உள் அஞ்சாத - மனத்தில் அஞ்சுதலில்லாத. அநுதினம் - எந்நாளும். தனவணிகர் - பொருள் சம்பாதிக்கும் வியாபாரிகள். ஆதாயம் - வரும்படி. குடியாளர் - குடிகள் ; உழவர். வேளாண்மை - உழு தொழில். கற்பவர் - படிப்போர். மானபரன் - மானம் மிகுந்தவன். எற்கு - எனக்கு. மாறுது - நீங்காமல்.

## 10. இன்னவர்க்கு இன்னது இல்லை யெனல் :

வேசைக்கு நிசமில்லை திருடனுக் குறவில்லை
வேந்தற்கு நன்றியில்லை
மிடியற்கு விலைமாதர் மீது வங் கணமிலை
மிலேச்சற்கு நிறையதில்லை
ஆசைக்கு வெட்கமிலை ஞானியா னவனுக்குள்
அகமில்லை மூர்க்கன்றனக்
கன்பில்லை காமிக்கு முறையில்லை குணமிலோற்
கழகில்லை சித்த சுத்தன்
பூசைக்கு நவிலங்க சுத்தியிலை யாவுமுணர்
புலவனுக் கயலோரிலை
புல்லனுக் கென்றுமுசி தானுசித மில்லை வரு
புலையர்க் கிரக்கமில்லை
மாசைத் தவிர்த்தமதி முகதெய்வ யானையொடு
வள்ளிக் கிசைந்த அழகா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : நன்றி - நன்றியை யறியுந்தன்மை. மிடியன் - வறுமை யுள்ளவன். விலைமாதர் - வேசியர். வங்கணம் இல்லை - அன்பு பயன்தருதலில்லை. மிலேச்சர் - அறிவில்லாதவர். நிறை - நிறை குணம்; அஃதாவது, மனத்தை நன்னெறியில் நிறுத்துதல்.

உள் - மனத்தில். அகம் - நான் என்னும் செருக்கு. மூர்க்கன் - பிடிவாதக்காரன். குணம் இலோன் - நற்குணம் இல்லாதவன். அழகு - முகப்பொலிவு. அழகுடையவன், நற்குணமுடையவனு யிருப்பான் என்பது நூற் கொள்கை; இதனை, 'இலங்கெழி லளவே குணமென வுரைப்பர் இதற்குமேற் கோளென நின்னைத், துலங்குறக் கண்டேன்' என்னும் நைடதச் செய்யுளால் அறிக. சித்த சுத்தன்-மனத்தூய்மை யுடையவன். நவில்-சொல்லுகின்ற. அங்க சுத்தி - உடலின் தூய்மை. புலவன் - அறிவுடையவன். அயலோர் இலை-பிறரும் உறவினர்போலாவர் என்றபடி. புல்லன்-கீழ் மகன். உசிதம் அநுசிதம்-தகுதியுடைமை தகுதியின்மை. புலையர்-சண்டாளர். மாசு - களங்கம். மாசைத்தவிர்த்த மதிமுகம் - களங்கமற்ற சந்திரனைப்போன்ற முகம்; இல்பொருளுவமை.

**11.** இப்படிப்பட்டவர் இவர் எனல்:

ஞாயநெறி தவறாமல் உலகபரி பாலனம்
நடத்துமவ னே யரசனும்
ராசயோ சனை தெரிந் துறுதியா கிய செய்தி
நவிலுமவ னே மந்திரி
நேயமுட னேதன் சரீரத்தை யெண்ணுத
நிர்வாகி யே சூரனும்
நிலைபெறும் இலக்கணம் இலக்கியம் அறிந்துசொலும்
நிபுணகவி யே கவிஞனும்
ஆயதொரு வாகடம் தாதுவின் நிதானமும்
அறியுமதி யோன்வைத்தியன்
அகமின்றி மெய்யுணர்ந் தைம்புலன் ஒழித்துவிட்
டவனே மெய்ஞ் ஞானியெனலாம்
மாயவர் சகோதரி மனோன்மணிக் கன்பான
வரபுத்ர வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: ஞாயம் (நியாயம்) - நீதி. பரிபாலனம் - பாதுகாத்தல். உறுதி - நன்மை. நவிலுமவன் - சொல்லுபவன். நேயம் - அன்பு. எண்ணாத - மதியாத. நிர்வாகி - தொழிலை மேற்கொண்டு நடத்துபவன். இலக்கணம் - தொல்காப்பியம் நன்னூல் முதலியவை. இலக்கியம் - செய்யுள்; நிகண்டும் காவியங்களும். நிபுணன் - திறமையுள்ளவன். கவி - கவிஞன். வாகடம் - வைத்திய நூல். நாது - நாடி. நிதானம் - நிலை. முதியோன் - வயது மூத்தவன்; 'விருத்த வைத்தியன்' என்பது வழக்கு. அகம் - செருக்கு. மெய் யுணர்ந்து - உண்மை யறிவை யுணர்ந்து. ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். மாயவர் - திருமால். சகோதரி - உடன் பிறந்தவள்; பார்வதி. மனோன்மணி - மன + உன்மணி = மனத்திற்குச் சிறந்த மணிபோல்பவள் எனப் பொருள் கொள்ள வேண்டும். இச் சொல், வடமொழி இலக்கணத்தின்படி அமைதி யுடையதன்று. வரபுத்ரன் - சிறந்த புதல்வன்.

பார்வதிதேவியை விஷ்ணுவுக்குத் தங்கையாகக் கூறுவது மரபு.

## 12. விரைந்து அடக்கத் தகுவன இவையெனல்:

அக்கினியை வாய்முந்து துர்ச்சனரை வஞ்ச மனை
யாளை வளர் பயிர்கொல்களையை
அஞ்சா விரோதிகளை அநியாய முடையோரை
அகிருத்யப் பெண்கள் ஆர்ப்பைக்
கைக்கினிய தொழிலாளி யைக்கொண்ட அடிமையைக்
களவுசெய் யுந்திருடரைக்
கருதிய விசாரத்தை அடக்கமில் பலிசையைக்
கடிதான கோபந்தனை
மெய்க்கினித லாப்பிணியை அவையுதா சீனத்தை
வினைமூண்டி டுஞ்சண்டையை
விஷமேறு கோரத்தை அன்றடக் குவதலால்
மிஞ்சவிட லாகாதுகாண்

மைக்கினிய கண்ணிகுற வள்ளிதெய் வானையை
மணஞ்செய்த பேரழகனே
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: வாய் முந்து - முற்பட்டுப் பேசுகின்ற. வஞ்சம் - கபடமுள்ள. பயிர் கொல் - பயிரை அழிக்கின்ற. அகிருத்தியம் - கெட்ட செய்கையுள்ள. ஆர்ப்பு - ஆரவாரம், பேரொலி. விசாரம் - கவலை. பலிசை - பெண். இது, படுசு என்னும் தெலுங்குச்சொல் போலும். இனி, வட்டி என்றல் அமையும். மெய்க்கு இனிது அல்லா - உடலுக்கு நன்மையல்லாத. பிணி - நோய். அவை - சபையிலுள்ளோர் செய்கின்ற. உதாசீனம் - அலட்சியம்; வெறுப்பு. வினை மூண்டிடும் - தீவினை விளைகின்ற. கோரம் - கொடுமை. அன்று - அப்பொழுதே. மிஞ்ச விடல் - அதிகமாக விடுதல். மைக்கு இனிய கண்ணி - மைக்கு அழகு செய்யும் கண்களையுடையவள்; மற்றையோருடைய கண்களுக்கு மை அழகு செய்வதாயிருப்ப, வள்ளி நாயகியின் கண்கள் மைக்கு அழகு செய்வதாகும் என்பது கருத்து.

**13. இவர்க்கு இது துரும்பு எனல்:**

தாராள மாகக் கொடுக்குந் தியாகிகள்
தமக்கு நற் பொருள் துரும்பு
தன்னுயிரை யெண்ணாத சூரனுக் கெதிராளி
தளமெலாம் ஒரு துரும்பு
போரான பெரியருக் கற்பாது கையினிற்
பிரயோசன னந் துரும்பு
பெரிதான மோக்ஷசிந் தனையுள்ள வர்க்கெலாம்
பெண்மோகம் ஒரு துரும்பு
தீராத சகலமும் வெறுத்ததுற விக்கு விறல்
சேர்வேந்தன் ஒரு துரும்பு
செய்யகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாம்
செந்தமிழ்க் கவி துரும்பாம்

வாராரு மணிகொள்முலை வள்ளிதெய் வானையை
மணம்புணரும் வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : தாராளம் - மிகுதி. தியாகி-கொடையாளி. துரும்பு-துரும்புக்குச் சமம். எண்ணாத - மதியாத. எதிராளி - பகைவன். தளம் - சேனை. கையினில் - கையினின்று வருகின்ற. மோக்ஷ சிந்தனை - முத்தியில் விருப்பம். போகம்-இன்பம். தீராத சகலம் - நீங்காத எல்லாப் பற்றுக்களையும். விறல் சேர் வேந்தன் - வெற்றி பொருந்திய அரசன். செய்ய கலை - சிறந்த கலைகளுக்குத் தலைவியாகிய. நாமகள் - நாக்கில் தங்கும் மகள்; சரசுவதி. செந்தமிழ்க் கவி - செந்தமிழில் கவி பாடுவது. துரும்பு - எளிமை. கடாக்ஷம் - கடைக் கண் அருள். வார் ஆரும் - கச்சு அணிந்த. அணி - அழகு. மணம் புணரும் - திருமணம் செய்த. வடி - வடித்த. வேலவன் - வேலாயுதமுடையவன்.

## 14. இதனை விளக்குவது இது எனல் :

பகல்விளக் குவதிரவி நிசிவிளக் குவது மதி
பார்விளக் குவது மேகம்
பதிவிளக் குவதுபெண் குடிவிளக் குவ தரசு
பரிவிளக் குவது வேகம்
இகல்விளக் குவது வலி நிறைவிளக் குவது நலம்
இசைவிளக் குவது சுதி ஊர்
இடம்விளக் குவது குடி உடல்விளக் குவ துண்டி
இனியசொல் விளக்குவ தருள்
புகல்விளக் குவது கொடை தவம்விளக் குவ தறிவு
பூவிளக் குவது வாசம்
பொருள்விளக் குவதுதிரு முகம்விளக் குவதுநகை
புத்தியை விளக்குவது நூல்

மகம்விளக் குவது மறை சொல்விளக் குவது நிசம்
வாவியை விளக்குவது நீர்
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : பகல் விளக்குவது - பகலில் எல்லாப் பொருளையும் விளக்கிக் காட்டுவது. இரவி - சூரியன். நிசி - இரவு. மதி - சந்திரன். பார் - பூமி. மேகம் - மழை. பதி - கணவன். குடி - குடிகள். அரசு - அரசன். பரி - குதிரை. இகல் - சண்டை. வலி - உடல் வன்மை. நிறை - நிறைகுணம். இசை - இராகம். சுதி - தம்புரு முதலியவற்றின் சுருதி. ஊரிடம் - ஊர். உண்டி - உணவு. இனிய - இனிமையான. அருள் - கருணை. புகல் - அடைக்கலம். கொடை - கொடுத்தல். திரு - இலக்குமி. நூல் - சாத்திரங்கள். மகம் - யாகம். மறை - வேதம்; மறைவான பொருளையுடையது. வாவி - குளம்.

## 15. பிறப்பிட நன்மையால் நன்மை பெறாமை :

சிங்கார வனமதில் உதிப்பினும் காகமது
தீஞ்சொல் புகல் குயிலாகுமோ
திரையெறியும் வாவியிற் பூத்தாலு மேகொட்டி
செங்கஞ்ச மலராகுமோ
அங்கான கத்திற் பிறந்தாலும் முயலான
தானையின் கன்றாகுமோ
ஆண்மையா கிய நல்ல குடியிற் பிறந்தாலும்
அசடர் பெரி யோராவரோ
சங்காடு பாற்கடல் பிறந்தாலும் நத்தைதான்
சாலக்கி ராம மாமோ
தடமேவு கடல்நீரி லேயுப்பு விளையினும்
சாரசர்க் கரை யாகுமோ

மங்காத செந்தமிழ் குறுமுனிக் குபதேசம்
வைத்தமெய்ஞ் ஞான குருவே
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: சிங்காரம்-அழகு. வனம் - சோலை. உதிப்பினும்-பிறந்தாலும். தீஞ் சொல் - இனிய சொல். புகல் - கூவுகின்ற. திரை எறியும் - அலை வீசுகின்ற. கொட்டி - கொட்டிப்பூ; முதலாகு பெயர். செங்கஞ்சம் - செந்தாமரை; கஞ்சம் - நீரிற்பிறப்பது. அம் கானகம் - அழகிய காடு. அசடர் - கீழ் மக்கள். சங்கு ஆடு - சங்கு சஞ்சரிக்கின்ற. சாலக்கிராமம் - ஒரு வகை உயிர்ப்பொருள்; தண்ணீரில் வாழ்வது. தடம் - விசாலம். மங்காத - அழியாத. தமிழ் - தமிழ் மொழி. குறுமுனி - அகத்தியர். உபதேசம் வைத்த - உபதேசம் செய்த. சுப்ரமணியர் அகத்திய முனிவருக்குத் தமிழ் மொழியை அருளிச் செய்தார் என்பது புராணம்.

## 16. பலர்க்கும் பயன்படுவன:

கொண்டல்பொழி மாரியும் உதார சற் குணமுடைய
கோவும் ஊ ருணியின் நீரும்
கூட்டமிடும் அம்பலத் துறுதருவின் நிழலும்
குடியாளர் விவசாயமும்
கண்டவர்க ளெல்லாம் வரும் பெருஞ் சந்தியில்
கனிபல பழுத்த மரமும்
கருணையுட னே வைத் திடுந்தணீர்ப் பந்தலும்
காவேரி போலூற்றமும்
விண்டலத் துறைசந்தி ராதித்த கிரணமும்
வீசு மா ருத சீதமும்
விவேகியெனும் நல்லோ ரிடத்திலுறு செல்வமும்
வெகுசனர்க் குபகாரமாம்

வண்டிமிர் கடப்பமலர் மாலையணி செங்களப
மார்பனே வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: கொண்டல் - மேகம். மாரி-மழை. உதாரம்-கொடை. கோ - அரசன். ஊருணி - குளம்; ஊரரால் உண்ணப்படுவது; இ - செயப்படுபொருள் விகுதி. அம்பலம் - பொதுவான இடம். தரு - மரம். குடியாளர் - குடிகள். விவசாயம் - பயிர்த்தொழில். சந்தி - தெருக்கள் கூடு மிடம். காவேரி - காவேரியாறு. ஊற்றம் - ஊற்று நீர். விண்தலத்து உறை - ஆகாயத்தில் உறைகின்ற. சந்திர ஆதித்த கிரணமும் - சந்திர சூரியருடைய கிரணங்களும். மாருதம் - காற்று. சீதம் - குளிர்ச்சி. விவேகி - அறிவுள்ளவர். வண்டு இமிர் - வண்டு ஒலிக்கப் பெற்ற. செங்களபம் - சிவப்பாகிய சந்தனம்.

**17.** தாம் அழியினும் தம்குணம் அழியாதவை:

தங்கமா னதுதழலி னின்றுருகி மறுகினும்
தன்னொளி மழுங்கிடாது
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமே
தன்மணம் குன்றிடாது
பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமே
பொலிவெண்மை குறைவுறாது
போதவே காய்ந்து நன் பால் குறுகி னாலும்
பொருந்து சுவை போய்விடாது
துங்கமணி சாணையில் தேய்ந்துவிட் டாலும்
துலங்கு குணம் ஒழியாது பின்
தொன்மைதரு பெரியோர் மடிந்தாலும் அவர்களது
தூயநிறை தவறுகுமோ

மங்களகல் யாணிகுற மங்கைசுர குஞ்சரியை
மருவுதிண் புய வாசனே
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: தழலில் - நெருப்பில். மறுகினும் - நிலைமை கலங்கினாலும். ஒளி - பிரகாசம். சந்தனக்குறடு - சந்தனக்கட்டை. மணம் - வாசனை. பொங்கம் - உயர்வு. செந்தழல் - சிவந்த நிறமுள்ள தீ. பொலி - மிக்க. போத - மிகவும். குறுகினாலும் - குறைந்தாலும், சுண்டினாலும். சுவை - உருசி. துங்கம் - உயர்வு. மணி - இரத்தினம். சாணை - சாணைபிடிக்குங்கல். தொன்மை - பழமை. மடிந்தாலும் - வறுமையடைந்தாலும். தூய - பரிசுத்தமான. நிறை - நற்குணங்கள். கல்யாணி - கலியாணகுணமுடையவள். குறமங்கை - வள்ளியம்மை. சுரகுஞ்சரி - தெய்வயானை. மருவு - அணைகின்ற. திண் - வலிமையான. புயம் - புஜம், தோள்.

## 18. நரகில் வீழ்வோர் இன்னவர் எனல் :

மன்னரைச் சமரில்விட் டோடினவர் குருமொழி
மறந்தவர் கொலைப்பாதகர்
மாதா பிதாவைநிந் தித்தவர்கள் பரதார
மருவித் திரிந்தபேர்கள்
அன்னங் கொடுத்தபே ருக்கழிவை யெண்ணினோர்
அரசடக் கிய அமைச்சர்
ஆலயம் இகழ்ந்தவர்கள் விசுவாச காதகர்
அருந்தவர் தமைப்பழித்தோர்
முன்னுதவி யாய்ச்செய்த நன்றியை மறந்தவர்
முகஸ்துதி வழக்குரைப்போர்
முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினந்தவர்கள்
முழுதும்பொய் யுரைசொல்லுவோர்

மன்னெருவர் வைத்தபொருள் அபகரித் தோரிவர்கள்
மாநரகில் வீழ்வரன்றோ
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: சமரில் - போரில். குருமொழி - ஆசாரியரது உபதேசமொழி. கொலைப்பாதகர் - கொல்லுதலைச் செய்யும் பாவிகள். மாதா பிதா-தாய் தந்தையர். பரதாரம்-பிறர் மனைவியர். மருவி - சேர்ந்து. அழிவை - கெடுதியை. அரசு அடக்கிய அமைச்சர் - அரசனை ஒடுக்கிய மந்திரிகள். ஆலயம் - கோயில். விசுவாசகாதகர் - நம்பிக்கைத் துரோகஞ் செய்பவர். அருந்தவர்-செய்தற்கரிய தவம்செய்பவர். நன்றி - உபகாரம். முகஸ்துதிவழக்கு உரைப்போர் - முகமன்வார்த்தை (உபசார வார்த்தை) யாக ஓரவழக்குப் பேசுவோர். சினந்தவர்கள் - கோபித்தவர்கள். மன் - நிலையாக. மாநரகில் - பெரிய நரகத்தில்.

## 19. சரீர சுகத்திற்கு ஏதுவானவைகள் :

மாதத் திரண்டுவிசை மாதரைப் புல்குவது
மறுவறு விரோசனந்தான்
வருஷத் திரண்டுவிசை தைலம் தலைக்கிடுதல்
வாரத் திரண்டு விசையாம்
மூதறிவி னொடுதனது வயதினுக் கிளையவொரு
மொய்குழ லுடன் சையோகம்
முற்றுதயிர் காய்ச்சுபால் நீர்மோர் உருக்குநெய்
முதிரா வழுக்கை யிளநீர்
சாதத்தி லெவ்வளவா னாலும் புசித்தபின்
தாகந் தனக்கு வாங்கல்
தயையாக வுண்டபின் உலாவல் இவை மேலவர்
சரீரசுக மாமென்பர் காண்

மாதவ குமாரி சா ரங்கத் துதித்த குற
வள்ளிக் குகந்த சரசா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: இரண்டுவிசை - இரண்டு முறை. புல்குவது - சேர்வது. மறு அறு - குற்றம் அற்ற. விரோசனம் - கழித்தல், பேதி. தைலம்-எண்ணெய்; திலத்திலிருந்து எடுக்கப்பட்டது; திலம்-எள். மூதறிவினொடு - முதிர்ந்த அறிவினால். மொய்குழல் - நெருங்கிய கூந்தலையுடைய பெண்; அன்மொழித் தொகை. சையோகம் - கூட்டம். முற்று தயிர் - முதிர்ந்த தயிர்; அஃதாவது, கன்றீன்று சிலகாலமான மாட்டின்பாலைக் காய்ச்சிய தயிர். முதிரா-முதிராத. எவளவு-எவ்வளவு என்றிருக்க வேண்டும். தயை-அன்பு. மேலவர்-பெரியோர். மாதவ குமாரி - திருமாலின் மகள். சாரங்கம் - மான். சரசா - இன்பமுள்ளவனே.

ஒரு மாதத்தில் இரண்டு முறை மனைவியோடு கூடுதலும், வருடத்திற்கு இரண்டு முறை பேதிக்கு மருந்து சாப்பிடுதலும், வாரத்துக்கு இரு முறை எண்ணெய் தேய்த்துக் குளித்தலும், தன் வயதுக்கு இளையாளோடு கூடுதலும், முற்று தயிர், காய்ச்சிய பால், நீர் விட்டுப் பெருக்கிய மோர், அப்போது உருக்கிய நெய், வழுக்கை இளநீர் இவற்றை யுண்ணுதலும், உணவுண்ட பின் தண்ணீர் குடித்தலும், உண்ட பின் உலாவுதலும் ஆகிய இவை சரீரசுகத்தை யுண்டாக்கும்.

## 20. யார்க்கும் அனுபோகம் விடாமை:

தேசுபெறு மேருப்ர தக்ஷிணஞ் செய்தும் மதி
தேக வடு நீங்கவில்லை
திருமா லுறங்கிடுஞ் சேடனுக் குவணன்
செறும் பகை யொழிந்ததில்லை

ஈசன் கழுத்திலுறு பாம்பினுக் கிரை வே
றிலாமலே வாயுவாகும்
இனியகண் ணாகிவரு பருதியா னவனுக்
கிராகுவோ கனவிரோதி
ஆசிலாப் பெரியோ ரிடத்தினில் அடுக்கினும்
அமைத்தபடி யன்றிவருமோ
அவரவர்க ளனுபோகம் அனுபவித் திடல்வேண்டும்
அல்லால் வெறுப்பதெவரை
வாசவனும் உம்பரனை வரும் விசய சயவென்று
வந்துதொழு தேத்துசரணா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: தேசு - ஒளி. மேரு - மேரு மலையை. பிரதக்ஷிணம் செய்தும் - வலம் வந்தும். மதி - சந்திரனுக்கு. வடு - களங்கம். சேடன் - ஆதிசேடன். உவணன் - கருடன். சுபர்ணன் என்னுஞ் சொல்லின் திரிபு. செறும் பகை - அழிக்கும் பகை. ஈசன் - சிவபெருமான். பருதி - சூரியன். ஆசு - குற்றம். அடுக்கினும் - அடுத்திருந்தாலும். வாசவன் - தேவேந்திரன். உம்பர் - தேவர்கள். ஏத்து - துதிக்கின்ற. சரணா - பாதங்களை யுடையவனே.

சூரியன் சிவபெருமானது வலக்கண்ணாயிருப்பவன் என்பது அறிக.

## 21. இது இன்றி இது சிறவாது எனல் :

குருவிலா வித்தை கூர் அறிவிலா வாணிபம்
குணமிலா மனைவியாசை
குடிநல மிலாநாடு நீதியில் லாவரசு
குஞ்சரம் இலாதவெம்போர்

திருவிலா மெய்த்திறமை பொறையிலா மாதவம்
தியானமில் லாத நிஷ்டை
தீபமில் லாத மனை சோதரம் இலாத வுடல்
சேகரம் இலாத சென்னி
உருவிலா மெய்வளமை பசியிலா வுண்டி புகல்
உண்மையில் லாத வசனம்
யோசனையி லா மந்த்ரி தைரிய மிலா வீரம்
உதவியில் லாத நட்பு
மருவிலா வண்ணமலர் பெரியோர் இலாதசபை
வையத் திருந்தென் பயன்
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: குரு இலா வித்தை-ஆசிரியரிடத்துக் கல்லாத கல்வி. கூர் - மிகுதி. வாணிபம் - வர்த்தகம். குஞ்சரம் - யானை. வெம் போர் - கொடிய சண்டை. திரு - செல்வம். மெய்த் திறமை - உண்மையின் வன்மை. பொறை - பொறுமை. தியானம்-சிந்தனை. நிஷ்டை - யோகம். மனை - வீடு. சோதரம் (ச + உதரம்) - சகோதரர். சேகரம் - முடி. சென்னி - தலை. உரு - அழகு. மெய் - உடம்பு. யோசனை - ஆலோசனை. தைரியம்-திடம். நட்பு-சிநேகம். மரு - வாசனை. வண்ணம் - அழகு. வையத்து - பூமியில். என் பயன் - என்ன பயன்; பயனில்லை.

## 22. பகைக்கத் தகாதவர் இவர் எனல்:

அரசர்பகை யுந்தவம் புரிதபோ தனர்பகையும்
அரிய கரு ணீகர் பகையும்
அடுத்துக்கெடுப்போர் கொடும்பகையும் உட்பகையும்
அருளிலாக் கொலைஞர் பகையும்

விரகுமிகும் ஊரினுள் ளோருடன் பகையு மிகு
விகடப்ர சங்கி பகையும்
வெகுசனப் பகையு மந் திரவாதி யின்பகையும்
விழை மருத் துவர்கள் பகையும்
உரமருவு கவிவாணர் பகையு மா சான்பகையும்
உறவின்முறை யார்கள் பகையும்
உற்றதிர வியமுளோர் பகையு மந் திரிபகையும்
ஒருசிறிதும் ஆகாது காண்
வரநதியின் மதலையென இனியசர வணமிசையில்
வருதருண சிறு குழவியே
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : தவம் புரி-தவம் செய்கின்ற. தபோதனர்-தபசிகள் ; தவமே பொருளாகவுடையவர். கருணீகர்-கிராமக் கணக்கு எழுது வோர். உட்பகை - வெளிக்கு நட்புக் காட்டி உள்ளே பகைமை உடையவர். அருள் இலா - கருணையில்லாத. கொலைஞர் - கொலை செய்வோர். விரகு மிகும்-தந்திரம் மிக்க. விழை - விரும்புகின்ற. மருத்துவர்கள் - வைத்தியர்கள். உரம் - அறிவு. கவிவாணர் - கவி பாடி வாழ்வோர் ; வாணர் என்பது வாழ்நர் என்பதன் மரூஉ. ஆசான் - உபாத்தியாயன். உறவின்முறையார்-பந்துக்கள். திரவிய முளோர் - பணக்காரர்கள். வரநதி-மேன்மையுள்ள நதி ; கங்கை. மதலை - பிள்ளை. சரவணமிசையில் - தருப்பைப் புல் நிறைந்த பொய்கையின் மேலிடத்தில். வரு - வந்த. தருணம் - இளமை. குழவி - குழந்தை.

விகடப் பிரசங்கி ; விகடம் - வேறுபாடு ; ஈண்டு, விநோதம். மிசை - ஏழனுருபன்று.

சுப்பிரமணியர் சரவணப் பொய்கையில் அவதரித்த கதை ஈண்டு அறியத்தக்கது.

**23. பேயெனப்படுவோர் இவரேனல் :**

கடனுதவு பேர்வந்து கேட்கும்வே ளையில்முகம்
கடுகடுக் கின்ற பேயும்
கனமருவு பெரியதனம் வந்தவுடன் இறுமாந்து
கண்விழிக் காத பேயும்
அடைவுடன் சத்ருவின் பேச்சைவிசு வாசித்
தகப்பட் டுழன்ற பேயும்
ஆசைமனை யாளுக்கு நேசமா யுண்மைமொழி
யானதை யுரைத்த பேயும்
இடரிலா நல்லோர்கள் பெரியோர்க ளைச்சற்றும்
எண்ணு துரைத்த பேயும்
இனியபரி தானத்தி லாசைகொண் டொருவற்
கிடுக்கண்செய் திட்ட பேயும்
மடமனை யிருக்கப் பரத்தையைப் புணர்பேயும்
வசைபெற்ற பேய்க ளன்றோ
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேச னே.

குறிப்பு : கடன் உதவுபேர்-கடன் கொடுத்து உதவினோர். கனம் மருவு - பெருமை பொருந்திய. பெரிய தனம்-மிக்க செல்வம். இறுமாந்து-இறுமாப்படைந்து. அடைவு-முறை. விசுவாசித்து - நம்பி. உழன்ற-வருந்திய. இடர் - துன்பம். எண்ணுது - மதியாது. பரிதானம்-லஞ்சம். இடுக்கண்-துன்பம். மடமனை-அழகுடைய மனையாள். மடம்-இளமையும், நற்குணமுமாம். பரத்தை-வேசி. வசை-நிந்தை.

**24. அவ்வவ் வினத்தில் உயர்ந்தவை :**

தாருவிற் சந்தானம் நதியினிற் கங்கை விர
தத்தினிற் சோம வாரம்
தகைபெறு நிலத்தினிற் காஸ்மீர கண்டம்
தலத்திற் சிதம்பர தலம்

சீருலவு ரிஷிகளில் வசிட்டர் பசு விற்காம
தேனு முனி வரினாரதன்
செல்வநவ மணிகளிற் றிகழ்பதும ராகமணி
தேமலரி லம்போருகம்
பேருலவு கற்பினி லருந்ததி கதித்திடு
பெலத்தின் மா ருதம் யானையிற்
பேசிலை ராவதம் தமிழினி லகத்தியம்
பிரணவம் மந்திரத்தில்
வாரிதியி லே திருப் பாற்கடல் குவட்டினின்
மகமேரு வாகு மன்றோ
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: தாரு - விருக்ஷங்கள். தகை - மேன்மை. சீர் உலவு - சிறப்பு விளங்கிய. திகழ் - விளங்குகின்ற. தேமலர் - தேன் பொருந்திய பூ. அம்போருகம் - தாமரை; தண்ணீரில் வளர்வது என்பது பொருள். பேர் - புகழ். கதித்திடு - சொல்லுகின்ற; விரைகின்ற எனவுமாம். மாருதம் - காற்று. அகத்தியம் - அகஸ்தியராற் செய்யப்பட்ட இலக்கணம். பிரணவம் - ஓம் என்னும் மந்திரம். வாரிதி - கடல்; நீரையுடையது. குவடு - மலை.

## 25. அவரவர்க்குப் பெலமாவன:

அந்தணர்க் குயர்வேத மேபெலங் கொற்றவர்க்
கரியசௌ ரியமே பெலம்
ஆனவணி கர்க்குநிதி யேபெலஞ் சூத்திரர்க்
காயி னே ருழவே பெலம்
மந்திரிக் குச் சது ருபாயமே பெலம் நீதி
மானுக்கு நடுவே பெலம்
மாதவர்க் குத்தவசு பெல மடவி யர்க்குநிறை
மானமிகு கற்பே பெலம்

தந்திர மிகுத்தகன சேவகர் தமக்கெலாஞ்
சாமிகா ரியமே பெலஞ்
சான்றவர்க் குப் பொறுமை யேபெலம் புலவோர்
தமக்கு நிறை கல்வி பெலமாம்
வந்தனை செயும்பூசை செய்பவர்க் கன்புபெலம்
வாலவடி வான வேலா!
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: பெலம் - பலமாகும். கொற்றவர் - அரசர். சௌரியம் - சூரத்தனம். ஆன - விருத்தியான. நிதி - செல்வம். சூத்திரர்க்கு ஆயின் - சூத்திரர்க்கானல். ஏர் உழவே - ஏருழுதலே. சதுர் உபாயம் - நான்கு உபாயங்கள்; அவை - சாம, தான, பேத, தண்டம் என்பன. நீதிமான் - நீதியுள்ளவன். நடுவு - நடுநிலைமை. மடவியர்க்கு - பெண்களுக்கு. நிறைமானம் - நிறையும் மானமும். மிகு - மிக்க. தந்திரம் - உபாயம். கன சேவகர் - பெரிய சேவகர். சாமிகாரியம் - தலைவனது வேலை. சான்றவர் - பெரியோர். புலவோர் - அறிவுடையோர். வந்தனை - வணக்கம். வாலவடிவு - பாலவடிவு. பகரத்திற்கு வகரம் வந்தது.

## 26. இருந்தும் பயன் படாதவை:

தருணத்தி லுதவிசெய் யாதநட் பாளர்பின்
தந்தென் தாராம லென்ன
தாதா மறிந்துமுறை செய்யாத மன்னரைச்
சார்ந்தென்ன நீங்கி லென்ன
பெருமையுட னாண்மையில் லாதவொரு பிள்ளையைப்
பெற்றென் பெறாம லென்ன
பிரியமா யுள்ளன்பி லாதவர்கள் நேசம்
பிடித்தென் விடுக்கி லென்ன

தெருளாக மானமில் லாததொரு சீவனம்
செய்தென செயாம லென்ன
தேகியென வருபவர்க் கீயாத செல்வம்
சிறந்தென முறிந்து மென்ன
மருவிளமை தன்னிலில் லாதகன் னிகைபின்பு
வந்தென வராம லென்ன
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : தருணம் - சமயம். நட்பாளர் - சிநேகிதர். தாரதரம் அறிந்து - தகுதியும் தகுதியின்மையும் அறிந்து. முறைசெய்யாத - வரிசை செய்யாத. ஆண்மை - ஆண் தன்மை; ஆளுந் தன்மை. நேசம் - நட்பு. தெருளாக - தெளிவாக. மானம் - பெருமை. தேகி - தியாகி; கொடையாளி. இனி, தேகி என - கொடு என்று எனவுமாம். ஈயாத - கொடாத. முறிந்தும் என்ன - அழிந்தா லென்ன. இளமை - வாலிபம். கன்னிகை - பெண்.

## 27. உபகாரம் இல்லாதவை:

கடனீர் மிகுந்தென்ன ஓதிதான் பெருத்தென்ன
காட்டிலவு மலரி லென்ன
கருவேல் பழுத்தென்ன நாய்ப்பால் சுரந்தென்ன
கானில்மழை பெய்துமென்ன
அடர் கழுதை லத்தி நில மெல்லாங் குவிந்தென்ன
அரியகுண மில்லாத பெண்
அழகா யிருந்தென்ன ஆஸ்தான கோழை பல
அரியநூல் ஓதி யென்ன
திடமினிய பூதம் வெகு பொன்காத் திருந்தென்ன
திறல்மிகுங் காடி மயிர்தான்
செறிவாகி நீண்டென்ன வஸ்த்ரபூ ஷணமெலாம்
சித்திரத் துற்று மென்ன

மடமிகுந் தெவருக்கும் உபகார மில்லாத
வம்பர்வாழ் வுக்கு நிகராம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: ஓதி - ஓதியமரம். காட்டிலவு-காட்டில் உள்ள இலவ மரம்; முள் முருக்கு. மலரில் - மலர்ந்தால். கருவேல் - கருவேல மரம். சுரந் தென்ன - சுரந்தாலென்ன. கானில் - காட்டில். அடர் - நெருங்கிய. கழுதைலத்தி - கழுதையின் மலம். ஆஸ்தான கோழை - சபைக் கோழை; சபையைக் கண்டு அஞ்சுவோன். அரிய நூல்-அருமையான நூல்கள். ஓதிலென்ன-படித்தாலென்ன. திடம் இனிய - வலியில் சிறந்த. திறல்மிகும் - வலிமை மிகுந்த. செறிவாகி - அடர்த்தியாய். வஸ்திரம் - ஆடை. பூஷணம் - ஆபரணம். சித்திரத்துற்றும் - சித்திரப் பதுமையில் அமைந் திருந்தாலும். மடம் - அறியாமை. வம்பர் வாழ்வுக்கு - வீணருடைய செல்வத்திற்கு. நிகராம் - ஒப்பாகும்.

## 28. பதர் எனப்படுவோர்:

தன்பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர்
சமர்கண் டொளிக்கும் பதர்
தக்கபெரி யோர்புத்தி கேளாத பதர் தோழர்
தம்மொடு சலிக்கும் பதர்
பின்பு கா ணுவிடந் தன்னிலே புறணிபல
பேசிக் களிக்கும் பதர்
பெற்றதாய் தந்தைதுயர் படவாழ்ந் திருந்த பதர்
பெண்புத்தி கேட்கும் பதர்
பொன்பண மிருக்கவே போயிரக் கின்றபதர்
பொய்ச்சாட்சி சொல்லும் பதர்
புவியோர் நடத்தையை யிகழ்ந்தபதர் தன்மனைவி
புணர்தல் வெளி யாக்கும் பதர்

மன்புணரும் வேசையுடன் விபசரிக் கின்றபதர்
மனிதரிற் பதரென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: பதர் - உள்ளீடற்ற நெல்; கருக்காய்; ஈண்டு அறிவில்லாதவன். சமர் - சண்டை, போர். தோழர் - சிநேகிதர். சலிக்கும் - வெறுத்துக் கொள்ளும். புறணி பேசி - புறங் கூறி. இரக்கின்ற - யாசிக்கின்ற. புவியோர் - பூமியிலுள்ள பெரியோர். மன் - அரசன். வேசை - விலைமாது. விபசரிக்கின்ற - விபசாரஞ் செய்கின்ற; ஒழுக்கம் தப்பி நடக்கின்ற. காண், முன்னிலையசை.

## 29. தமக்குரியவற்றைக் காணுவிடில் துயரப்படுபவை:

இரவிகா ணுவனசம் மாரிகா ணுதபயிர்
இந்துகா ணுத குமுதம்
ஏந்தல்கா ணு நாடு கரைகள்கா ணுவோடம்
இன்சொல்கா ணு விருந்து
சுரபிகா ணுத கன் றன்னைகா ணு மதலை
சோலைகா ணுத வண்டு
தோழர்கா ணுநேயர் கலைகள்கா ணுதமான்
சோடுகா ணுத பேடு
குரவர்கா ணுத சபை தியாகிகா ணு வறிஞர்
கொழுநர்கா ணுத பெண்கள்
கொண்டல்கா ணுதமயில் சிறுவர்கா ணுவாழ்வு
கோடைகா ணுத குயில்கள்
வரவுகா ணுதசெல விவையெலாம் புவிமீதில்
வாழ்வுகா ணுவிளமையாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: இரவி காணு வனசம் - சூரியனைக் காணுத தாமரை; வனசம் - தண்ணீரிற் பிறப்பது. மாரி - மழை. இந்து - சந்திரன். குமுதம் - செவ்வல்லி மலர். எந்தல் - அரசன். ஓடம் - படகு. விருந்து - விருந்தினர்; விருந்து-புதுமை, பண்பாகுபெயர். சுரபி-தாய்ப் பசு. மழலை - குழந்தை. சோலை - பூங்காவனம். நேயர் - அன்புள்ளோர். கலை-ஆண்மான். சோடு-துணை. பேடு-பெட்டை; எனவே, சேவலைக் காணுத பெட்டை என்பதாம். குரவர் - பெரியோர். தியாகி-கொடையாளி. வறிஞர்-தரித்திரர். கொழுநர்-கணவர். கொண்டல் - மேகம். சிறுவர் காணு - குழந்தைகளை அடையப் பெருத. கோடை - கோடைக் காலம்; வசந்த காலம். வரவு காணுத செலவு - வரவில்லாமல் செலவு செய்தல். வாழ்வு காணு இளமை ஆம் - செல்வத்தை அனுபவிக்காத இளமைக்குச் சமானமாம்.

**30.** வியாதிக்கு மூலங்கள்:

கல்லினுல் மயிரினுல் மீதூண் விரும்பலால்
கருதிய விசாரத்தினுல்
கடுவழி நடக்கையால் மலசலம் அடக்கையால்
கனி பழங் கறி புண்ணலால்
நெல்லினுல் உமியினுல் உண்டபின் மூழ்கலால்
நித்திரைக ளில்லாமையால்
நீர்ப்பகையி னுற் பனிக் காற்றினுடல் நோதலால்
நீடுசரு கிலையூறலால்
மெல்லிநல் லார்கலவி யதிகமுள் விரும்பலால்
வீழ்மலம் சிக்குகையினுல்
மிகுசுமை யெடுத்தலால் இளவெயிற் காய்தலால்
மெய்வாட வேலை செயலால்
வல்லிரவி லேதயிர்கள் சாகாதி யுண்ணலால்
வன்பிணிக் கிடமென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: மீதூண் விரும்பல் - மிக்க வுணவை விரும்பிப் புசித்தல். கருதிய - எண்ணிய. விசாரத்தினுல் - கவலையினுல். கடு வழி நடக்கை - மிக்க வேகமாகவும் தூரமாகவும் நடத்தல். கனி - அதிகமாகக் கனிந்த பழம். பழங்கறி - முதனுள்வைத்த கறி. உண்டபின் மூழ்கல் - உணவு உண்ட பின் ஸ்நானஞ்செய்தல். நீர்ப்பகை - உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாத நீர். பனிக்காற்று - குளிர் காற்று. நீடு சருகு - பழைய சருகு. மெல்லி நல்லார் - பெண்கள். கலவி-கலத்தல்; சேர்தல். மெய் வாட-உடம்பு வருந்த. சாகாதி - கறிகாய் முதலியவை. வல் பிணிக்கு - வலிய நோய்க்கு. இடம் என்பர் - இடமாகுமென்று சொல்லுவர்.

**31.** சேத்தும் சாகாதவர்:

அனைவர்க்கும் உபகார மாம் வாவி கூவமுண்
டாக்கினோர் நீதி மன்னர்
அழியாத தேவால யங்கட்டி வைத்துளோர்
அகரங்கள் செய்த பெரியோர்
தனையொப்பி லாப்புதல்வ னைப்பெற்ற பேர் பொருது
சமர்வென்ற சுத்த வீரர்
தரணிதனில் நிலைநிற்க எந்நாளும் மாருத
தருமங்கள் செய்த பேர்கள்
கனவித்தை கொண்டவர்கள் ஓயாத கொடையாளர்
காவியஞ் செய்த கவிஞர்
கற்பினில் மிகுத்தவொரு பத்தினி மடந்தையைக்
கடிமணஞ் செய்தோர்களிம்
மனிதர்கள் சரீரங்கள் போகினுஞ் சாகாத
மனிதரிவ ராவரன்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: வாவி - குளம். கூவம் - கிணறு. தேவாலயம் - கோயில். அகரங்கள் - பிராமணர் வீடுகள். செய்த - உண்டாக்

கிய. சமர் பொருது - போர் செய்து. தாணிதனில் - பூமியில். கனவித்தை கொண்டவர்கள் - மிக்க கல்வி கற்றவர்கள். ஓயாத கொடையாளர் - சலியாமல் பொருள் கொடுப்பவர்கள். காவியஞ் செய்த கவிஞர் - பெருநூல்கள் செய்த புலவர்கள். மடந்தை - பெண். கடிமணம் - விவாகம்; கடி - சிறப்பு. போகினும் - அழிந் தாலும். இவர்கள் பெயர் அழியாது நிற்கும் என்பதாம்.

**32. சாகாதிருந்துஞ் செத்தவர்:**

மாருத வறுமையோர் தீராத பிணியாளர்
வருவேட் டகத்தில் உண்போர்
மனைவியை வழங்கியே சீவனஞ் செய்குவோர்
மன்னுமொரு ராச சபையில்
தூருக நிந்தைசெய் துய்குவோர் சிவிகைகள்
சுமந்தே பிழைக்கின்றபேர்
தொலையா விசாரத் தழுந்துவோர் வார்த்தையிற்
சோர்வுபட லுற்ற பெரியோர்
வீருக மனையாள் தனக்கஞ்சி வந்திடு
விருந்தினை யொழித்து விடுவோர்
வீம்புடன் செல்லாத விவகார மதுகொண்டு
மிக்கசபை யேறும் அசடர்
மாருக இவரெலாம் உயிருடன் செத்த சவ
மாகி யொளி மாய்வர் கண்டாய்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: மாருத - நீங்காத. வறுமையோர் - தரித்திரர். பிணி யாளர் - நோயாளர். வேட்டகம் - கலியாணம் செய்துகொண்ட வீடு; மாமியார் வீடு. வேட்டல்-தீ முன் மணம் செய்துகொள்ளல். வழங்கி - பிறனொருவனுக்குச் சேர்த்து வைத்து. மன்னும் - நிலை பெற்ற. தூருக-பழியுண்டாக. உய்குவோர்-பிழைப்பவர். சிவிகை-

பல்லக்கு. தொலையா - ஒழியாத. விசாரத்து - கவலையில். சோர்வு படல் உற்ற-தளர்வுண்டாகிய. வீறாக-இறுமாப்பாக. மனையாள் - மனைவி. வந்திடு விருந்தினை - வருகின்ற விருந்தாளியை. செல்லாத - ஜயிக்காத. விவகாரம் - வழக்கு. அசடர் - மூடர். செத்த சவம் ஆகி - செத்த பிணமாகி. ஒளி மாய்வர் - புகழ் கெடுவர். கண்டாய், முன்னிலை அசை.

## 33. சிறிதும் பயன்படாதவர்:

பதராகி னுங்கன விபூதிவிளை விக்கும்
 பழமைபெறு சுவராகினும்
பலருக்கும் மறைவாகும் மாடுரிஞ் சிடும் மலம்
 பன்றிகட் குபயோகமாம்
கதமிகு கடாவென்னில் உழுதுபுவி காக்கும் வன்
 கழுதையும் பொதிசுமக்கும்
கல்லெனில் தேவர்களும் ஆலயமு மாம் பெருங்
 கான்புற்றும் அரவ மனையாம்
இதமிலாச் சவமாகி னுஞ் சிலர்க் குதவிசெயும்
 இழிவுறு குரங் காயினும்
இரக்கப் பிடித்தவர்க் குதவிசெயும் வாருகோல்
 ஏற்ற மாளிகை விளக்கும்
மதமது மிகும்பரம லோபரால் உபகாரம்
 மற்றொருவ ருக்கும் உண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
 மலைமேவு குமரேசனே.

குறிப்பு: பதர் - நெல்லின் பதர், கருக்காய். கனவிபூதி-சிறந்த திருநீறு. விளைவிக்கும்-உண்டாக்கும். பழமை பெறு சுவர்-பழைய சுவர். உரிஞ்சிடும் - உராய்ந்துகொள்ளும். கதம் - கோபம். புவி - பூமியிலுள்ள உயிர்கள்; இடவாகு பெயர். பொதி - மூட்டை. கான் புற்றும் - காட்டிலுள்ள புற்றும். அரவம் மனை ஆம் - பாம்

புக்கு இடமாகும். இதம் - நன்மை. சவம்-பிணம். பிணம் சிலர்க்கு உதவி செய்யுமென்பது, இறுதிச் சடங்கு செய்யும் தொழிலாளிகளுக்குப் பயன்தரும் என்பதாம்; இனி, உடலை அறுத்துச் சோதிக்கும் வயித்தியர் முதலியவர்களுக்கு உதவியாம் எனவும் கூறலாம். இரக்க - யாசித்துப் பிழைக்க. பிடித்தவர்க்கு - குரங்காட்டிகளுக்கு. வாருகோல் - துடைப்பம். ஏற்றம் - மேன்மை பொருந்திய. மாளிகை - வீடு. விளக்கும் - குப்பையைத் தள்ளி அழகுபடுத்தும். மதம் - செருக்கு. பரமலோபர் - மிக்க லோபிகள்.

## 34. உலுத்தர் இயல்பு:

திரவியங் காக்குமொரு பூதங்கள் பொற்பணந்
தேடிப் புதைத்து வைப்பார்
சீலைநல மாகவுங் கட்டார்கள் நல்லமுது
செய்துணார் அறமுஞ் செயார்
புரவலர்செய் தண்டந் தனக்கும் வலு வாகப்
புகுந் திருட ருக்கும் ஈவார்
புலவரைக் கண்டவுடன் ஓடிப் பதுங்குவார்
புராணிகர்க் கொன்றும் உதவார்
விரகறிந் தேபிள்ளை சோறுகறி தினுமளவில்
வெகுபணஞ் செலவாகலால்
விளையாடு கிழவனும் பிள்ளையே பிள்ளையென
மிகுசெட்டி சொன்ன கதைபோல்
வரவுபார்க் கின்றதே யல்லாது லோபியர்கள்
மற்றொருவ ருக்கீவரோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: திரவியம் - பொருள். சீலை - வஸ்திரம். நல்லமுது - நல்லுணவு. அறம் - தருமம். புரவலர் - அரசர். தண்டம் - தண்டனை. ஈவார் - கொடுப்பார். புலவர் - அறிவுடையோர்; வித்து

வான்கள். புராணிகர் - புராணஞ் சொல்லுவோர். விரகு அறிந்து - உபாயம் அறிந்து. விளையாடு கிழவனுகிய பிள்ளையே நல்ல பிள்ளை எனச் செட்டி சொன்ன கதைபோல் என்றது, பிள்ளைகளால் மிக்க செலவு நேருகின்றதென்று அவர்களை வெறுத்தும், கிழவர் களால் செலவு சுருங்குகின்றதென்று அக் கிழவர்களை விரும்பியும் ஒரு செட்டி தனது லோப குணம் விளங்க வுரைத்த கதை.

## 35. திரு வாழும் இடங்கள்:

கடவா ரணத்திலும் கங்கா சலத்திலும்
கமலா சனந்தன்னிலும்
காகுத்தன் மார்பிலும் கொற்றவ ரிடத்திலும்
காலியின் கூட்டத்திலும்
நடமாடு பரியிலும் பொய்வார்த்தை சொல்லாத
நல்லோ ரிடந்தன்னிலும்
நல்லசுப லக்ஷண மிகுந்தமனை தன்னிலும்
ரணசுத்த வீரர்பாலும்
அடர்கே தனத்திலும் சுயவரந் தன்னிலும்
அருந்துளசி வில்வத்திலும்
அலர்தரு கடப்பமலர் தனிலும் இர தத்திலும்
அதிககுண மான ரூப
மடவா ரிடத்திலும் குடிகொண்டு திருமாது
மாரு திருப்ப ளன்ரூ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: கடவாரணம் - மதயானை; கடம்-மதம்.. கமலாசனம் - தாமரைப் பீடம். காகுத்தன் - திருமால். ககுஸ்தன் வமிசத்திற் பிறந்த ஸ்ரீ ராமன் பெயராகிய காகுத்தன் என்பது ஈண்டுத் திருமாலையுணர்த்திற்று. கொற்றவர்-அரசர். காலி-பசு. நடமாடு - (பயிரிடுவோன்) பல முறை சென்று வருகின்ற. சுப லட்சணம் -

மிகுந்த மங்களகரமான; அழகு மிகுந்த. ரணம் - போர் செய்ய வல்ல. வீரர்பால் - வீரரிடத்தும்; பால் ஏழனுருபு. கேதனம் - கொடி. இரதம் - தேர். ரூபம் - அழகுள்ள. மடவார் - பெண்கள். மாருது - நீங்காமல்.

## 36. மூதேவி வாழும் இடங்கள்:

சோரமங் கையர்கள் நிசம் உரையார்கள் வாயினில்
சூதகப் பெண்கள் நிழலில்
சூளையிற் சூழ்தலுறு புகையில் களேபரஞ்
சுடுபுகையில் நீசர் நிழலில்
காரிரவில் அரசுநிழ லிற் கடா நிழலினொடு
கருதிய விளக்கு நிழலில்
காமுகரில் நிட்டையில் லாதவர் முகத்தில்
கடுஞ்சினத் தோர் சபையினில்
ஈரமில் லாக் களர் நிலத்தினில் இராத்தயிரில்
இழியும் மது பானர்பாலில்
இலைவேல் விளாநிழலில் நிதமழுக் கடைமனையில்
ஏனம் நாய் அச கரத்துள்
வாரிய முறத்தூள் பெருக்குதூள் மூதேவி
மாருது திருப்பள் என்பர்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: சோர மங்கையர் - கெட்ட நடக்கையுள்ள பெண்டிர். சூதகப் பெண்கள் - பூப்பு வாய்ந்துள்ள பெண்டிர்கள். களேபரம் - உடல்; பிணம். நீசர் - சண்டாளர். கார் இரவு - கரிய இராக்காலம். அரசு நிழல் - அரச மரத்தின் நிழல். கடா நிழல் - எருமைக் கடாவின் நிழல். கருதிய - மதிக்கத் தகுந்த. காமுகர் - காமிகள். நிட்டை (நிஷ்டை)- தியானம். கடுஞ்சினத்தோர் - மிக்க கோபமுள்ளவரது. ஈரம் - நீர்ப் பசை. களர் நிலம் - உவர் நிலம்.

இராத் தயிர்-இராக்காலத்திலுண்ணப்படும் தயிர். மதுபானர்பால் - கட்குடியரிடம். வேல்-வேலமரம். விளா-விளாமரம். அழுக்கடை மனை-அழுக்கு அடையும் மனை. ஏனம்-பன்றி. அசம்-ஆடு. கரம் - கழுதை. வாரிய - குப்பையை வாரி எடுத்த.

## 37. திருத்தினும் திருந்தாதவை:

கட்டியெரு விட்டுச் செழுந்தேனை வார்க்கினும்
காஞ்சிரம் கைப்பு விடுமோ
கழுதையைக் கட்டிவைத் தோமம் வளர்க்கினும்
கதிபெறுங் குதிரை யாமோ
குட்டியர வுக்கமு தளித்தே வளர்க்கினும்
கொடுவிட மலாது தருமோ
குக்கல் நெடு வாலுக்கு மட்டையைக் கட்டினும்
கோணுமலே நிமிருமோ
ஒட்டியே குறுணிமை யிட்டாலும் நயமிலா
யோனிகண் ணாகிவிடுமோ
உலவுகன கர்ப்பூர வாடைபல கூட்டினும்
உள்ளியின் குணமாறுமோ
மட்டிகட் காயிரம் புத்திசொன் னாலுமதின்
மார்க்கமறி யாதை வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: கட்டி - பாத்தி கட்டி. செழுந்தேன்-செழுமையாகிய தேன். காஞ்சிரம்-எட்டிக்காய். கைப்பு-கசப்பு. கதி-வேகம்; ஐந்து கதியுமாம். குட்டியரவு - பாம்புக்குட்டி. கொடுவிடம் - கொடிய விஷம். குக்கல் - நாய். மட்டை-தெங்கு முதலியவற்றின் மட்டை. கோணுமல் - வளையாமல். கர்ப்பூரம் - பச்சைக் கர்ப்பூரம். வாடை - மணம். உள்ளி - வெங்காயம். மட்டி - அறிவில்லாதவன். அதின் - அதனல். மார்க்கம் - சன்மார்க்கம், நல்வழி.

**38. குறிப்பறிதல் :**

மனதிற் கடும்பகை முகத்தினு லறியலாம்
மாநிலப் பூடுக ளெலாம்
மழையினு லறியலாம் நல்லார்பொ லார்தமை
மக்களால் அறிய லாகும்
கனமருவு சூரரைச் சமரினு லறியலாம்
கற்றவொரு வித்துவானைக்
கல்விப்ர சங்கத்தி னூலறிய லாம் குணங்
களை நடையி னூலறியலாம்
தனதகம் அடுத்தது பளிங்கினு லறியலாம்
சாதிசொல் லாலறியலாம்
தருநீதி கேள்வியா லறியலாம் பிணிகளைத்
தாதுக்க ளாலறியலாம்
வனச விக சித வதன பரிபூர ணுனந்த
வாலவடி வான வேலா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : மாநிலம் - பூமியிலுள்ள. பூடு - புல் முதலியவை. பொலார் - துஷ்டர். மக்கள் - பிள்ளைகள் ; 'தக்கார் தகவிலார் என்பதவரவர், எச்சத்தாற் காணப்படும்' என்பது அறிக. கனம் - பெருமை. சூரர் - வீரர். சமர் - போர். நடை - ஒழுக்கம். தனது அகம் - தன்னிடத்தில் ; அகம் - எழனுருபு. அடுத்தது - சார்ந்த பொருளை. பளிங்கு - கண்ணுடி. 'அடுத்தது காட்டும் பளிங்கு' என்பது அறிக. தருநீதி-நூல்களால் தரப்பட்ட நீதிகளை. கேள்வி யால் - பெரியோர்களிடம் கேட்கும் அறவுரையால். தாது - நாடி ; வாதநாடி, பித்தநாடி, சிலேத்துமநாடி என்பன. வனசம் - தாமரை ; தண்ணீரிற் பிறப்பது. விகசிதம் - மலர்ச்சி. வதனம் - முகம். பரிபூரண ஆனந்தம் - நிறைவாகிய ஆனந்தம்.

## 39. குணம் மாறாமை :

குணமிலாத் துஷ்டமிரு கங்களையும் நயகுணம்
கொண்டுட் படுத்தி விடலாம்
கொடியபல விடநோய்கள் யாவும்ஔ ஷதமது
கொடுத்துத் திருப்பி விடலாம்
உணர்விலாப் பிரமராட் சசிமுதற் பேய்களை
உகந்துகூத் தாட்டி விடலாம்
உபாயத்தி னாற்பெரும் பறவைக்கு நற்புத்தி
. உண்டாக்க லாம் உயிர் பெறப்
பிணமதை யெழுப்பலாம் அக்கினி சுடாமல்
பெரும்புன லெனச் செய்யலாம்
பிணியையும் அகற்றலாம் கால தூ துவரையும்
பின்புவரு கென்று சொலலாம்
மணலையுங் கயிறாத் திரிக்கலாம் கயவர்குணம்
மட்டுந் திருப்ப வசமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : குணம்-நற்குணம். நய குணம்-நல்ல குணம். துஷ்ட மிருகங்கள் - புலிகாடி முதலியன; 'கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம் கரடி வெம்புலி வாயையும், கட்டலாம் ஒரு சிங்க முது கின்மேற் கொள்ளலாம்' என்பது முதலாயின காண்க உட்படுத்தி விடலாம் - அகப்படச் செய்யலாம்; அடக்கிவிடலாம். விடநோய்- விஷ நோய்கள். ஔஷதம் - மருந்து. திருப்பிவிடலாம். உயிரை மீட்டுவிடலாம். உணர்விலா - அறிவில்லாத. பிரமராட்சசி - துர் மரண மடைந்த பிராமண னுயிராகிய பேய். உகந்து - மகிழ்ந்து. பறவை - பட்சி. அக்கினி - நெருப்பு. புனலென - நீரைப்.போல. பிணியை அகற்றலாம் - நோயை நீக்கலாம். கால தூதுவர் - எம தூதர். வருகென்று - வருக என்று; அகரம் தொகுத்தல் விகாரம். கயவர் - மூடர். குணம் - துர்க்குணம்.

## 40. இத் தீக்குணத்தோர் இவ்விலங்கு போல்வர் எனல் :

தான்பிடித் ததுபிடிப் பென்று மே லவர்புத்தி
தள்ளிச்செய் வோர் குரங்கு
சபையிற் குறிப்பறிய மாட்டாமல் நின்றவர்
தாம்பய னிலாத மரமாம்
வீம்பினல் எளியவரை எதிர்பண்ணி நிற்குமொரு
வெறியர் குரை ஞமலியாவார்
மிகநாடி வருவோர் முகம்பார்த் திடாலோபர்
மேன்மையில் லாத கழுதை
சோம்பலொடு பெரியோர் சபைக்குட் படுத்திடும்
தூங்கலே சண்டிக்கடா
சூதுட னடுத்தோர்க் கிடுக்கணே செய்திடும்
துஷ்டனே கொட்டு தேளாம்
மாம்பழந் தனைவேண்டி யந்நாளில் ஈசனை
வலமாக வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : மேலவர் - பெரியோர். வீம்பு - ஆணவம். வெறியர்- மயக்கம் பிடித்தவர். ஞமலி - நாய். நாடி - எண்ணி. தூங்கல் - சோம்பேறி. சண்டிக்கடா - முரட்டுக்கடா. இடுக்கண் - துன்பம்.

### மாம்பழந்தனை வேண்டிய கதை :

சிவபெருமான், மாங்கனியொன்றை விநாயகருக்கும் முருகக் கடவுளுக்கும் காண்பித்து, 'உங்களிருவருள், உலகமுழுவதும் சுற்றி முதலில் வருகின்றவர் இக் கனியைப் பெறக்கடவர்' என்று கூற, உடனே குமாரக்கடவுள் மயிலின்மேலேறி உலகமுழுவதும் சுற்றி வருவதன் முன்னே விநாயகர் சிவபெருமானை மும்முறை வலம் வந்து அக் கனியைப் பெற்றனர். குமாரக் கடவுள் உலகமுற்றுஞ் சுற்றி வந்து, பழம் வேண்ட, பெருமான் 'நீயே பழம்' எனக் கூறி மகிழ்வித்தனர்.

**41. அற்பருக்கு வாழ்வு வரில் குணம் வேறுபடும் எனல் :**

அற்பர்க்கு வாழ்வுசற் றதிகமா னல்விழிக்
கியாவருரு வுந் தோன்றிடா
தண்டிநின் றேநல்ல வார்த்தைக ளுரைத்தாலும்
அவர்செவிக் கேறிடாது
முற்பட்ச மானபேர் வருகினும் வாருமென
மொழியவும் வாய் வராது
மோதியே வாதப் பிடிப்புவந் ததுபோல
முன்காலை யகல வைப்பார்
விற்பன மிகுத்தபெரி யோர்செய்தி சொன்னாலும்
வெடுவெடுத் தேசி நிற்பார்
விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
விழும்போது தீருமென்பார்
மற்புயந் தனில்நீப மாலையணி லோலனே
மார்பனே வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

**குறிப்பு :** அற்பர்-அற்ப புத்தியுள்ளவர்; கீழ்மக்கள். வாழ்வு-செல்வம். விழி - கண்கள். யாவர் உருவும் - எவர் வடிவமும். தோன்றிடாது - தெரியாது. 'பெருத்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடின், உருத்தெரி யாமலே ஒளிம ழுங்கிடும்' என்பதனை ஈண்டு ஒப்பிடுக. அண்டி - நெருங்கி. முன் பட்சமான பேர் - முன்னே அன்பாயிருந்தவர். வருகினும் - வந்தாலும்; இதில், கு-சாரியை. மொழியவும் - சொல்லவும். மோதி - தாக்கி, வருத்தி. வாதப் பிடிப்பு - வாயுவால் வரும் கை கால் பிடிப்பு. அகல வைப்பார் - அகலமாக வைப்பார். விற்பனம் - அறிவு. செய்தி - நற்செய்தி. ஏசி - பழித்து. விருதா - பயனில்லாத. மகத்துவம் - மேன்மை. மல் புயம் - வலிமையுள்ள தோள். நீப மாலை - கடப்ப மாலை. லோலன் - சிருங்காரமுள்ளவன்.

**42.** இன்ன தீங்குள்ளோர் இன்ன கிரகம் போல்வர் எனல் :

அன்னைதந் தையர்புத்தி கேளாத பிள்ளையோ
அஷ்டமச் சனியாகுவான்
அஞ்சாம லெதிர்பேசி நிற்குமனை யாள் வாக்கில்
அங்கார கச்சன்மமாம்
தன்னைமிஞ் சிச்சொன்ன வார்த்தைகே ளாஅடிமை
சந்திராட் டகமென்னலாம்
தன்பங்கு தாவென்று சபையேறு தம்பியோ
சார்ந்த சன் மச்சூரியன்
நன்னயமி லாதவஞ் சனைசெய்த தமையன்மூன்
றுமிடத் தில் வியாழன்
நாடொறும் விரோதமிடு கொண்டோன் கொடுத்துளோன்
ராகுகே துக்க ளெனலாம்
மன்னயனை யன்றுசிறை தனிலிட்டு நம்பற்கு
மந்திரம் உரைத்த குருவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: அஷ்டமச் சனி - எட்டாம் வீட்டிலுள்ள சனி. அஞ்சாமல் - அச்சமின்றி. எதிர் பேசி - எதிர்த்துப் பேசி. வாக்கில் - இரண்டாமிடத்தில். அங்காரகச் சன்மம்-அங்காரகனிருக்கப் பிறத்தல். தன்னை மிஞ்சி - எசமானனை மீறி. சந்திராஷ்டகம் - எட்டாமிடத்துச் சந்திரன். சன்மச் சூரியன் - லக்கினத்திலுள்ள சூரியன். நன்னயம் - நல்ல நீதி. வியாழன் - குரு. கொண்டோன் - பெண் கொண்டவன். கொடுத்துளோன் - பெண் கொடுத்தவன். மன் - நிலையான. அயன் - பிரமன். நம்பன் - சிவபெருமான். மந்திரம் - பிரணவமந்திரம்.

இந்த இடங்களில் நிற்கும் கிரகங்கள் தீங்குசெய்யும் என்பது சோதிட நூலால் அறியப்படுகின்றது.

**43. நல்வினைஞ் சேர் பயன் :**

சந்தன விருக்ஷத்தை யண்டிநிற் கின்றபல
தருவுமவ் வாசனை தரும்
தங்கமக மேருவை யடுத்திடுங் காக்கையும்
சாயல்பொன் மயமே தரும்
பந்தமிகு பாலுடன் விளாவிய தணீரெலாம்
பால்போல் நிறங்கொடுக்கும்
படிகமணி கட்குளே நிற்கின்ற வடமுமப்
படியே குணங்கொடுக்கும்
அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடின்
அடுத்ததும் பசுமை யாகும்
ஆனபெரி யோர்களொடு சகவாச மதுசெயின்
அவர்கள்குணம் வருமென்பர் காண்
மந்தர நெடுங்கிரியின் முன்கடல் கடைந்த அரி
மருகமெய்ஞ் ஞான முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

**குறிப்பு :** தரு - மரம். சாயல் - உருவம். பந்தமிகு - விருப்ப மிகுந்த தணீர் - தண்ணீர். படிக மணி - படிகக் கல்லாலாகிய மணி. வடம் - கயிறு. குணம் - நிறம். அந்தம்-அழகு. மரகதக் கல்- பச்சை ரத்தினம். தரித்திடின் - அணிந்தால். அடுத்தது - அடுத்துள்ள பொருள். மந்தர நெடுங்கிரி - மந்தரம் என்னும் நெடிய மலை. அரி - திருமாலின்.

**44. வலியோரையும் ஊழ் விடாதெனல் :**

அன்றுமுடி சூடுவ திருக்கரகு ராமன்முன்
அருங்கா டுறைந்த தென்ன
அண்டரெல் லாமமிர்த முண்டிடப் பரமனுக்
காலம் லபித்த தென்ன

வென்றிவரு தேவர் சிறை மீட்டநீ களவில்வே
டிச்சியைச் சேர்ந்த தென்ன
மேதினி படைக்குமய னுக்கொரு சிரம்போகி
வெஞ்சிறையி லுற்ற தென்ன
என்றுமொரு பொய்சொலா மன்னவன் விலைபோன
தென்னகாண் வல்லமையினால்
எண்ணத்தி னால்ஒன்றும் வாராது பரமசிவன்
எத்தனப் படிமுடியுமாம்
மன்றுதனில் நடனமிடு கங்கா தரன்பெற்ற
வரபுத்ர வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: அன்று - அக்காலத்தில். ரகுராமன் - ரகுகுலத்திற் பிறந்த ராமன், அருங்காடு - வசித்தற்கு அரியகாடு, தண்டகாரணியம். அண்டர் - தேவர். பரமனுக்கு - சிவனுக்கு. ஆலம் - விஷம். லபித்த தென்ன - கிடைத்த தென்ன. வென்றி-வெற்றி. சிறை - சிறைச்சாலை. களவில் - பிறரறியாமல். வேடிச்சியை - வேடர் குலத்தில் வளர்ந்த வள்ளியம்மையை. மேதினி - பூமி. படைக்கும் - உண்டாக்கும். அயன் - பிரமன். சிரம் - தலை. போகி - போய்; கிள்ளப் பெற்று. வெம்சிறை - கொடிய சிறைச்சாலை. பொய்சொலா மன்னவன் - அரிச்சந்திரன். எத்தனம் - பிரயத்தனம், முயற்சி. மன்று - சபை; சிதம்பரம். கங்காதரன் - கங்கையைத் தரித்தவன். வரபுத்ரா - சிறந்த புதல்வனே.

## 45. பெரியோர் வாக்கிய பரிபாலனஞ் செய்தோர்:

தந்தைதாய் வாக்யபரி பாலனஞ் செய்தவன்
தசரத குமார ராமன்
தமையனருள் வாக்யபரி பாலனஞ் செய்தோர்கள்
தருமனுக் கிளைய நால்வர்

சிந்தையி லுணர்ந்துகுரு வாக்யபரி பாலனஞ்
செய்தவன் அரிச்சந்திரன்
தேகியென் ஞேர்க்கிலை யெனுவாக்ய பாலனஞ்
செய்தவன் தான கன்னன்
நிந்தைதவிர் வாக்யபரி பாலனஞ் செய்தவன்
நீள்பெல மிகுத்த அநுமான்
நிறையுடன் பத்தாவின் வாக்யபரி பாலனம்
நிலத்தில் நளாகினி செய்தாள்
மந்தவழி கோயில்குள முங்குலவு தும்பிமுகன்
மகிழ்தர வுகந்த துணைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

தறிப்பு: வாக்யம் - சொல்லை. பரிபாலனம் செய்தல் - பாதுகாத்தல். தமையன் - மூத்தோன். நால்வர் - பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன். சிந்தையில் - மனத்தால். குரு - வசிஷ்டன். தேகி - தியாகி ; கொடையாளி. தான கன்னன் - கொடையாளி யாகிய கர்ணன். நிந்தை தவிர் - பழி நீங்கிய. நீள் பலம் - மிக்க பலம். நிறை - கற்பு. குலவு - விளங்குகின்ற. தும்பி முகன் - யானை முகக்கடவுள் ; விநாயகன். துணைவா - சகோதரனே.

46. முயற்சியின் மிக்கது ஊழெனல் :

வங்காள மேறுகினும் வாருகோல் ஒருகாசு
மட்டன்றி யதிக மாமோ
வானேறி யுயரப் பறந்தாலும் ஊர்க்குருவி
வண்ணப் பருந்தாகுமோ
கங்கா சலந்தன்னில் மூழ்கினும் பேய்ச்சுரைக்
காய்நல்ல சுரையாகுமோ
கடலுக்குள் நாழியை யமுக்கியே மொண்டிடிற்
காணுமோ நாழிதான்

ஐங்காத மோடினுந் தன்வினைகள் தன்னோடே
யடையாமல் நீங்கி விடுமோ
யாரிடஞ் சென்றாலும் வெகுதொலைகள் சுற்றினும்
அமைத்தபடி யன்றி வருமோ
மங்காத செந்தமிழ் கொண்டு நக் கீரர்க்கு
வந்ததுயர் தீர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: வங்காளம் ஏறுகினும் - வங்காள தேசத்திற்குக் கப்பல் மேல் ஏறிச் சென்றாலும். வாருகோல் - துடைப்பம். ஒரு காசு மட்டன்றி - ஒரு காசு அளவேயல்லாமல். அதிகம் - அதிக விலை. வான் ஏறி - ஆகாயத்தில் உயர்ந்து. வண்ணம் - அழகுள்ள. கங்கா சலம் - கங்கையாற்றின் நீர். வெகு தொலை - வெகு தூரம். அமைத்தபடி - விதியினால் ஏற்பட்ட அளவு. மங்காத - அழியாத. செந்தமிழ் - செந்தமிழ்ப் பாடல்.

## 47. இடும்பால் அழிவு நேரும் எனல்:

சூரபத் மன்பெலமும் ராவணன் தீரமும்
துடுக்கான கஞ்சன் வலியும்
துடியான இரணியன் வரப்ரசா தங்களும்
தொலையாத வாலி திடமும்
பாரமிகு துரியோத னாதிநூற் றுவாது
பராக்ரமமு மது கைடவர்
பாரிப்பும் மாவலிதன் ஆண்மையும் சோமுகன்
பாங்கினுறு வல்லமைகளும்
ஏரணவு கீசகன் கனதையும் திரிபுரரின்
எண்ணமும் தக்கன் எழிலும்
இவர்களது சம்பத்தும் நின்றவோ அவரவர்
இடும்பா லழிந்த வன்றோ

மாரனைக் கண்ணு லெரித்தருள் சிவன்தந்த
வரபுத்ர வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: சூரபத்மன் - ஓர் அரக்கன்; சுப்பிரமணியக் கடவுளைப் பகைத்தவன். இராவணன் - இலங்கையரசன், இராமனைப் பகைத்தவன். கஞ்சன் - கம்சன்; கண்ணபிரானுக்கு வைரி யானவன். இரணியன் - திருமாலுக்கு விரோதி; பிரகலாதன் தந்தை. வரப் பிரசாதம் - அநுக்கிரகம். வாலி - கிஷ்கிந்தாபுரியாண்டவன். பாரம் மிகு - பூமிக்குப் பாரம் மிகுந்த. துரியோதனன் - பாண்டவர்களின் பங்காளி. மது கைடவர் - திருமாலுக்கு எதிரிகளாகிய அசுரர். பாரிப்பு - பெருமை. பாங்கில் உறு - இடத்திற் பொருந்திய. ஏர் அணவு - அழகு பொருந்திய. கனதை - பெருமை. எழில் - அழகு. சம்பத்து - ஐசுவரியம். இடும்பு - தீச் செயல். மாரன் - மன்மதன்.

## 48. நல்லோர் நட்பு நிலை:

மாமதியின் முயலான ததுதேய் வுழித்தேய்ந்து
வளருமப் போது வளரும்
வாவிதனில் ஆம்பல் கொட் டிகளதனில் நீர்வற்றின்
வற்றிடும் பெருகில் உயரும்
பூமருவு புதல்பூடு கோடையிற் றீந்திடும்
பொங்குகா லந் தழைக்கும்
புண்டரிகம் இரவிபோ மளவிற் குவிந்திடும்
போதுதய மாகில் மலரும்
தேமுடல் இளைக்கிலுயிர் கூடவு மிளைக்கு மது
தேறிலுயி ருஞ்சிறக்கும்
சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தாலும் நல்லோர்
சிநேகமிப் படியாகுமே

வாமனசொ ரூபமத யானைமுக னுக்கிளைய
வாலகுரு பரவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : மா மதி - பெரிய சந்திரன். முயல் - முயற்களங்கம். தேய்வுழி - தேயும்போது. வாவி - குளம். ஆம்பல் - அல்லி. பெருகில் - நீர் பெருகினால். பூ மருவு - பூமியில் பொருந்திய. புதல் - புதர். தீந்திடும் - கருகிப்போம். புண்டரிகம் - தாமரை. இரவி - சூரியன். போது - சூரியன் ; ஆகுபெயர் ; போது சாய்ந்தது என்பது காண்க. தேம் உடல் - (உயிர்க்கு) இடமான உடல். அது - அவ்வுடம்பு. தேறில் - தேறினால். இடுக்கண் - துன்பம். வாமன சொரூபம் - குறள் வடிவமாகிய. யானை முகன் - விநாயகன்.

**49. கைப்பலனமைவை :**

பருவத்தி லேபெற்ற சேயும் புரட்டாசி
பாதிசம் பாநடுகையும்
பலமினிய ஆடிதனில் ஆனைவால் போலவே
பயிர்கொண்டு வரு கரும்பும்
கருணையொடு மிக்க நா ணயமுளோர் கையினிற்
கடனிட்டு வைத்த முதலும்
காலமது நேரிற் றனக்குறுதி யாகமுன்
கற்றுணர்ந் திடுகல்வியும்
விருதரச ரைக்கண்டு பழகிய சிநேகமும்
விவேகிகட் குபகாரமும்
வீணல்ல இவையெலாங் கைப்பலன தாக அபி
விர்த்தியாய் வருமென்பர் காண்
மருவுலா வியநீப மாலையும் தண்டாள
மாலையும் புனைமார்பனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: பருவத்தில் - உரிய காலத்தில். சேய் - பிள்ளை. புரட்டாசி பாதி சம்பா நடுகை - புரட்டாசி பதினைந்தில் நட்ட சம்பாப் பயிர். பலம் இனிய - பலன் தருதலில் மிக்க. கருணை - இருபை. நாணயம் - வாக்குத் தவறாமை. உறுதியாக - நன்மை யாக. விருது - விருதுகளையுடைய. விவேகிகள் - அறிவாளிகள். கைப்பலனதாக - கையிற் கண்ட பலனாக. மரு - வாசனை. நீபமாலை- கடப்பமாலை. தண் - குளிர்ச்சி பொருந்திய. தாளமாலை - முத்து மாலை. புனை - அணிந்த.

## 50. சமயத்துக்கு உதவாதவை:

கல்லாது புத்தகந் தனிலெழுதி வீட்டினிற்
கட்டிவைத் திடு வித்தையும்
காலங்க ளுக்குதவ வேண்டுமென் றன்னியன்
கையிற் கொடுத்த பொருளும்
இல்லாளை நீங்கியே பிறர்பாரி சதமென்
றிருக்கின்ற குடிவாழ்க்கையும்
ஏறுமா றாகவே தேசாந் தரம்போ
யிருக்கின்ற பிள்ளை வாழ்வும்
சொல்லான தொன்றுமவர் மனமான தொன்றுமாச்
சொல்லு வஞ் சகர் நேசமும்
சுகியமா யுண்டென் றிருப்பதெல் லாந்தருண
துரிதத்தில் உதவாது காண்
வல்லான கொங்கைமட மாதுதெய் வானைகுற
வள்ளிபங் காள நேயா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: கல்லாது - கற்காமல். காலங்களுக்கு - கஷ்ட காலங் களுக்கு. அன்னியன்-பிறன். இல்லாள் - மனைவி. பிறர்பாரி - பிறர் மனைவி. சதமென்று - நிலையென்று. ஏறுமாறாக - தாறுமாறாக.

தேசாந்தரம் - அன்னிய தேசம். சுகியம் (ஸ்வகீயம்) - சொந்தமானது. தருணம் - சமயத்தில். துரிதத்தில் - அவசரமாக. வல் ஆன - சூதாடுங்காய் போன்ற. பங்காள - பக்கத்தில் ஆள்பவனே.

**51. திரும்பமாட்டாதவை :**

ஆடரவின் வாயினில் அகப்பட்ட தவளையும்
ஆனைவா யிற் கரும்பும்
அரிதான கப்பலிற் பாய்மரக் காற்றினில்
அகப்பட்டு மெலி காக்கையும்
நாடறிய வேதாரை வார்த்துக் கொடுத்ததும்
நமன்கைக்கு ளான வுயிரும்
நலமாக வே யணை கடந்திட்ட வெள்ளமும்
நாய்வேட்டை பட்ட முசலும்
தேடியுண் பார்கைக்கு ளானபல வுடைமையும்
தீவாதை யான மனையும்
திரள்கொடுங் கோலரசர் கைக்கேறு பொருளும்
திரும்பிவா ராவென்பர் காண்
மாடமிசை யன்னக் கொடித்திரள்கொள் சோணாடு
வாழவந் திடுமுதல்வனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

**குறிப்பு :** ஆடு அரவு - ஆடுகின்ற பாம்பு. மெலி - மெலிகின்ற. நாடு - நாட்டிலுள்ளவர். கொடுத்ததும் - கொடுத்த பொருளும். நமன் - எமன். பட்ட - அகப்பட்ட. முசல் - முயல் என்பதன் மரூஉ. உடைமை - பொருள். தீவாதையான - தீப்பட்ட. கைக்கு எறு - கையிலகப்பட்ட. திரள் பொருளும் எனக்கூட்டுக. மாட மிசை - வீடுகளின்மேல். அன்னக் கொடித் திரள்கொள் - அன்ன தானத்துக்காகக் கட்டிய கொடிகளின் கூட்டங்களைக் கொண்ட. சோணாடு - சோழ நாடு ; மரூஉமொழி.

**52. இதினும் இது நன்று என்பவை:**

கடுகடுத் தாயிரஞ் செய்குவதில் இன்சொலாற்
களிகொண் டழைத்தல் நன்று
கனவேள்வி ஆயிரஞ் செய்வதில் பொய்யுரை
கருத்தொடு சொலாமை நன்று
வெடுவெடுக் கின்றவோ ரவிவேகி யுறவினில்
விவேகியொடு பகைமை நன்று
வெகுமதிக ளாயிரஞ் செய்வதின் அரைக்காசு
வேளைகண் டுதவல் நன்று
சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கிங்கு
சற்றுமிலை யென்னல் நன்று
சம்பத் துடன்பிணியின் மெலிகுவதின் நோயற்ற
தாரித் திரியம்நன்று காண்
மடுவினிற் கரி ஓலம் என்னவந் தருள்செய்த
மால்மருக னான முதல்வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: கடுகடுத்து - கோபித்து. ஆயிரம் - அநேக உபகாரம். களிகொண்டு - மகிழ்வுற்று. வேள்வி - யாகம். கருத்தொடு சொலாமை - மனமறியச் சொல்லாதிருத்தல். அவிவேகி - அறிவில்லாதவன். விவேகியோடு - அறிவுள்ளவனோடு. வெகுமதி - சன்மானம். வேளைகண்டு - சமயங்கண்டு. உதவல் - உதவுதல். சடுதி - விரைவு. பக்குவம் - பருவம், கெடுவு. சம்பத்துடன் - செல்வத்துடன். பிணியால் - நோயினால். தாரித்திரியம - வறுமை. மடு - பொய்கை. கரி - கஜேந்திரன். ஓலமென்ன - அபயம் என்று முறையிட. மால் - திருமால். கஜேந்திரன் முதலையால் பிடிக்கப்பட்டு வருந்தி ஆதிமூலம் என்று ஓலமிட, உடனே திருமால் வந்து முதலையைக்கொன்று கஜேந்திரனைக் காத்தார் என்பது கதை.

**53. பல கூடினும் ஒன்றற்கு ஈடாகாதவை :**

தாரகைக ளொருகோடி வானத் திருக்கினுஞ்
சந்திரற் கீடாகுமோ
தாருவிற் கொடிதொனிகள் பலகூடி னாலுமொரு
தம்பட்ட வோசை யாமோ
கோரமிகு பன்றியின் குட்டிபல கூடினொரு
குஞ்சரக் கன்றாகுமோ
கொட்டிமலர் வாவியிற் பலகூடி னாலுமொரு
கோகனக மலராகுமோ
பாரமிகு மகமலைகள் பலகூடி னாலுமொரு
பைம்பொன்மக மேருவாமோ
பலனிலாப் பிள்ளைகள் அனேகம் பிறந்தும் விற்
பனனொருவ னுக்கு நிகரோ
வாரணக் கொடியொரு கரத்திற் பிடித்தொன்றில்
வடிவே லணிந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : தாரகைகள் - நட்சத்திரங்கள். வானம் - ஆகாயம். ஈடாகுமோ - சரியாகுமோ. 'எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர், வெண்ணிலாவாமோ' என்பது அறியத் தக்கது. தாருவில் - மரத்தில் சுற்றிய. கொடி - கொடிகளின். தொனிகள் - ஓசைகள். தம்பட்டம் - பறை. கோரம் - கொடுமை. குஞ்சரம் - யானை. 'பன்றி பலகுட்டி பயந்ததனால் எதுபயன், ஒன்றமை யாதோ கரிக்கு' என்பது அறிக. வாவி - தடாகம். கோகனகம் - தாமரை. பாரம்மிகு - பெருமை மிகுந்த. பைம்பொன் மகமேரு - பசிய பொன்மயமாகிய மகாமேருமலை. விற்பனன் - அறிவுடை யோன். வாரணக் கொடி - கோழிக் கொடி. கரத்தில் - கையில். ஒன்றில் - ஒரு கையில்.

**54. அருமை யறிதல் :**

மணமாலை யருமையைப் புனைபவர்க ளேயறிவர்
மட்டிக் குரங் கறியுமோ
மக்களுடை யருமையைப் பெற்றவர்க ளேயறிவர்
மலடிதா னறிவ துண்டோ
கணவருடை யருமையைக் கற்பான மாதறிவள்
கணிகையா னவள் அறிவளோ
கருதுமொரு சந்தியின் பாண்டமென் பதைவருங்
களவான நாயறியுமோ
குணமான கிளியருமை தனைவளர்த் தவரறிவர்
கொடியபூ னையும் அறியுமோ
குலவுபெரி யோரருமை நல்லோர்க ளேயறிவர்
கொடுமூடர் தாமறிவரோ
மணவாள நீயென்று குறவள்ளி பின்றொடர
வனமூடு தழுவுமழகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : மணம் - வாசனை. மாலை - பூமாலை. புனைபவர்கள் - அணிபவர்கள். மலடி - பிள்ளை பெறாதவள். கணவன் - புருஷன். கற்பான மாது - கற்புடைய பெண். கணிகை - வேசி. ஒருசந்தி - ஒருபொழுது; விரதம். பாண்டம் - மண்பாத்திரம். குலவு விளங்குகின்ற. வனம் ஊடு - வனத்தில். தழுவும் - தழுவிய.

**55. தீச்சார்பாற் பயன் படாதவை :**

மடுவினிற் கஞ்சமலர் உண்டொருவ ரணுகாமல்
வன்முதலை யங்கிருக்கும்
மலையினிற் றேனுண்டு சென்றெருவர் கிட்டாமல்
மருவியதில் வண்டிருக்கும்

நெடுமைதிகழ் தாமைமல ருண்டொருவர் அணுகாமல்
நீங்காத முள்ளிருக்கும்
நீடுபல சந்தன விருக்ஷமுண் டணுகாது
நீளரவு சூழ்ந்திருக்கும்
குடிமல்கி வாழ்கின்ற வீட்டினிற் செல்லாது
குரைநாய்க ளங்கிருக்கும்
கொடுக்குந் தியாகியுண் டிடையூறு பேசுங்
கொடும்பாவி யுண்டு கண்டாய்
வடுவையும் கடுவையும் பொருவுமிரு கண்ணிகுற
வள்ளிக் குகந்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: மடுவினில் - குளத்தில். கஞ்சமலர் - தாமரை மலர். வன்முதலை - வலிய முதலை. மருவி - சேர்ந்து. நெடுமை திகழ் - நீளமாய் விளங்குகின்ற. அணுகாமல் - கிட்டாமல். நீள் அரவு - நீளமான பாம்பு. குடி மல்கி - குடிகள் பெருகி. குரை நாய்கள் - குரைக்கின்ற நாய்கள். தியாகி - கொடையாளி. இடையூறு - தடை. வடு - மாம்பிஞ்சின் பிளவு. கடு - விஷம். பொருவும் - ஒக்கும். இருகண்ணி - இரண்டு கண்களையுடையவளாகிய.

## 56. வேசையர் இழிவு:

பூவில்வே சிகள்வீடு சந்தைப் பெரும்பேட்டை
புனைமலர் படுக்கை வீடு
பொன்வாசல் கட்டில் பொது வம்பலம் உடுத்ததுகில்
பொருவில்சூ தாடு சாலை
மேவலா கியகொங்கை கையாடு திரள்பந்து
விழி மனங் கவர் தூண்டிலாம்
மிக்கமொழி நீர்மே லெழுத்ததிக மோக மொரு
மின்னல் இரு தொடை சர்ப்பமாம்

ஆவலா கிய வல்கு லோதண்டம் வாங்குமிடம்
அதிக படமாம் மனது கல்
அமிர்தவா யிதழ் சித்ர சாலையெச் சிற்குழி
அவர்க்காசை வைக்கலாமோ
மாவடிவு கொண்டே யொளித்தவொரு சூரனை
வதைத்தவடி வேலாயுதா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: பூவில் - உலகத்தில். சந்தை பெரும் பேட்டை - சந்தை கூடுகின்ற பெரிய இடம். புனை - அலங்கரித்த. மலர் - விளங்குகின்ற. மலர்ப் படுக்கை என்றிருப்பின் மலரா லாகிய படுக்கை எனப் பொருள் படும். பொது அம்பலம் - எல்லாரும் தங்குதற்குரிய இடம்; மன்று. பொருவு - ஒப்பு. மேவல் - விரும்புதல். விழி - பார்வை. மனம் கவர் - ஆடவர் மனத்தைக் கவர்கின்ற. அதிக மோகம்-மிக்க மயல். கபடம்-வஞ்சனை. மா-மாமரம்.

## 57. கலிகாலக் கொடுமை:

தாய்புத்தி சொன்னால் மறுத்திடுங் காலம் உயர்
தந்தையைச் சீறு காலம்
சற்குருவை நிந்தைசெய் காலம் மெய்க் கடவுளைச்
சற்றுமெண் ணாத காலம்
பேய்தெய்வ மென்றுப சரித்திடுங் காலம்
புரட்டருக் கேற்ற காலம்
பெண்டாட்டி வையினுங் கேட்கின்ற காலம் நல்
பெரியர்சொல் கொளாத காலம்
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலம்மிகு
சிறியவன் பெருகு காலம்
செருவில்விட் டோடினோர் வரிசைபெறு காலம் வசை
செப்புவோர்க் குதவு காலம்

வாய்மதம் பேசிவிடும் அநியாய காரர்க்கு
வாய்த்த கலி காலமையா
மயிலிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: மறுத்திடும் - தடுக்கும். உயர் தந்தை - உயர்வான தகப்பன். சீறு - கோபிக்கின்ற. சற்குரு - ஆசாரியர். மெய்க் கடவுள் - உண்மையான கடவுள். சற்றும் எண்ணாத - சிறிதும் நினைக்காத. பேய் - பேயை. புரட்டர் - மோசக்காரர். கொளாத-ஏற்றுக் கொள்ளாத. செரு - போர். வரிசை - பரிசு. வசை - பழி மொழி. வாய் மதம் - சொற்செருக்கு. வாய்த்த - ஏற்ற.

## 58. அவரவர்க்கு உரியவை:

கல்வியொடு கனமுறச் சபையின்மேல் வட்டமாக்
காணவைப் போன் பிதாவாம்
கற்றுணர்ந் தேதனது புகழாற் பிதாவைப்ர
காசஞ்செய் வோன் புத்திரன்
செல்வமிகு கணவனே தெய்வமென் றனுதினம்
சிந்தைசெய் பவள் மனைவியாம்
சிநேகிதன் போலவே யன்புவைத் துண்மைமொழி
செப்புமவ னே சோதரன்
தொல்வள மிகுந்தநூற் கரைதெரிந் துறுதிமொழி
சொல்லுமவ னே குரவனும்
சொன்னநெறி தவறாமல் வழிபாடு செய்துவரு
துய்யனே யினிய சீஷன்
வல்விரக மிஞ்சு சுர குஞ்சரி யுடன் குறவர்
வஞ்சியை மணந்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: கல்வி - வித்தை. கனம் - பெருமை. மேல் வட்டம் - உயர்ந்த நிலை. ப்ரகாசஞ் செய்வோன் - விளங்கச் செய்வோன். புத்திரன் - மகன்; பெற்றோர்களைப் புத்தென்னும் நரகத்தினின்று நீக்குபவன். சிந்தை செய்பவள் - தியானஞ் செய்பவள். சோதரன் (ஸ + உதரன்) உடன் - பிறந்தவன். தொல் - பழமையாகிய. வள மிகுந்த - சொல் வளம் பொருள் வளம் மிகுந்த. நூல் கரை - நூலின் எல்லை. குரவன் - ஆசிரியன். வழிபாடு - பின்னின்று தொழில் புரிதல். துய்யன் - பரிசுத்தன். சீஷன் - மாணுக்கன். வல் வீரகம் - மிக்க காமம். மிஞ்சு - அதிகரித்த. சுர குஞ்சரி - தெய்வ யானை. குறவர் வஞ்சி - வள்ளியம்மை.

குரவ: என்னும் வட சொல், பலர்பாலைக் குறிப்பதாதலின், அது தமிழில் குரவர் எனப் பலர்பாலிலேயே வழங்கல் முறை. அச் சொல்லைத் தமிழ்ச்சொற்போலக் கொண்டு, ஒருமையில் குரவன் எனக் கூறுதல் தகுதியன்று.

## 59. சிறுமையிற் பெருமை:

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக்கும்
திகழ்சிப்பி யுடலிற் சனித்தமுத் தாசரது
தேகத்தின் மேலிருக்கும்
போற்றியிடு பூச்சியின் வாயினால் பட்டென்று
பூசைக்கு நேச மாகும்
புகலரிய வண்டெச்சி லானதேன் தேவர்கொள்
புனிதவபி டேக மாகும்
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபுழு கனைவர்க்கு மாம்
சாதியீ னத்திற் பிறக்கினுங் கற்றோர்கள்
சபையின்மேல் வட்ட மன்றோ

மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞான முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: கமலமலர் - தாமரை மலர். திகழ் - விளங்குகின்ற. சனித்த - பிறந்த. தேகம் - உடம்பு. பூச்சி - பட்டுப் பூச்சி. பட்டுப் பூச்சியைப் பேணி வளர்த்து விருத்தி செய்கின்றனராதலால், 'போற்றியிடு பூச்சி' என்றார். புகலரிய - சொல்லுதற்கு அரிய. புனிதம் - பரிசுத்தம். அபிஷேகம் - திருமஞ்சனம். புலால் - மாமிசம். கோரோசனை, சவாது, புழுகு இவைகள் உயர் பொருள்களாகக் கொள்ளப்படுகின்றன. சாதி யீனத்தில் - இழிவாகிய குலத்தில். சுரம் - வெப்பு நோய். விபூதியால் - திருநீற்றால்.

சுப்பிரமணியக் கடவுள் ஞானசம்பந்தராக அவதரித்த காலத்தில் மதுரையில் கூன்பாண்டியனது சுரநோயை விபூதியால் தீர்த்து உடல் குளிரவைத்தார்; இதைப் பெரிய புராணத்துக் காண்க.

## 60. செய்யத் தகாதவை:

தானு சரித்துவரு தெய்வமிது வென்றுபொய்ச்
சத்தியஞ் செயில்விடாது
தன்வீட்டி லேற்றிய விளக்கென்று முத்தந்
தனைக்கொடுத் தாலது சுடும்
ஆனாலு மேலவர்கள் மெத்தவுந் தனதென்
றடாதது செயிற் கெடுதியாம்
ஆனைதான் மெத்தப் பழக்கமா னாலுஞ்செ
யாதுசெய் தாற் கொன்றிடும்
தீனான தினிதென்று மீதூண் விரும்பினால்
தேகபீ டைகளே தரும்
செகராசர் சனுவென்ன ஏலாத காரியம்
செய்தால் மனம்பொறார் காண்

வாஞடு புகழுமொரு சோணுடு தழையவிவண்
வந்தவ தரித்த முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: ஆசரித்து-அடைந்து, சேர்ந்து; ஆசிரயித்து என்னும் வட சொல்லின் சிதைவு, வரு - வருகின்ற. செயில் - செய்தால். அது - அவ்விளக்கு. அடாது - தகாத காரியம். கெடுதி - துன்பம். செயாது செய்தால் - செய்யத் தகாதன செய்தால். தீன் - உணவு. தேகம் - உடம்பு. பீடை - வியாதி. தரும் - கொடுக்கும். சனு - நேசம். எலாத - எற்காத. சோணுடு - சோழ நாடு. தழைய - செழிக்க. இவண் - இவ்விடத்து. அவதரித்த - திருஞான சம்பந்தராக தோன்றிய. முதலே - முதல்வனே.

## 61. நடுவு நிலைமை:

வந்தவிவ காரத்தில் இனியபரி தானங்கள்
வருமென்றும் நேசரென்றும்
வன்பகைஞ ரென்றும் அயலோரென்றும் மிக்கதன
வானென்றும் ஏழையென்றும்
இந்தவகை யைக்குறித் தொருபக்ஷ பாதமோர்
எள்ளள வுரைத்திடாமல்
எண்ணமுடனே லிகித புத்தியொடு சாக்ஷிக்கும்
ஏற்கச் சபா சமதமா
முந்தவிரு தலையுஞ் சமன்செய்த கோல்போல்
மொழிந்திடில் தர்மமது காண்
முனைவீம னுடல்பாதி மிருகந் தனக்கென்று
முன்தருமர் சொன்ன தலவோ
மைந்தனென அன்றுமை முலைப்பால் கொடுத்திட்
வளர்ந்தருள் குழந்தை வடிவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: விவகாரத்தில் - வழக்கில். பரிதானம் - கைக்கூலி, லஞ்சம். வன்பகைஞர் - கடும்பகைவர். அயலோர் - அந்நியர்; முகமறியாதவர். பக்ஷபாதம் - ஒருதலை; ஓரம். லிகிதம் - எழுத்து, அஃதாவது, பத்திரம் சீட்டு முதலியன. லிகித புத்தியொடு - லிகிதத்தையறியும் புத்தியொடு. சாட்சி (ஸ + அக்ஷி) - கண்ணால் பார்த்தவன். ஏற்க-பொருந்த. சபா சமதம் - சபைக்குச் சம்மதமாக. இருதலையும் - இரண்டு பக்கமும். கோல்போல் - துலாக்கோல் போல். முனை - போருக்குரிய. உமை - உமாதேவி.

## கதை:

காண்டாமிருகத்தைக் கொண்டுவரச் சென்ற வீமன், இமய மலையில் அநுமானைக் கண்டு கூற, அநுமான், 'அஃது உன்னைக் கண்டால் கொல்ல ஓடிவரும். அதற்குத் தப்பிப் பிழைக்க உன்னாலாகாது. யான், என் உடலினின்று ஏழு உரோமங்களைக் கொடுக்கின்றேன். அம் மிருகம் உன்னை நெருங்குகையில் இவற்றுள் ஒன்றை எறி, அது, சிவலிங்கமாய்விடும். அம்மிருகம் சிவலிங்கத்தைப் பூசனை செய்து, அதன் பின்தான் உன்னைத் தொடரும்; அதற்குள் நீ நெடுந்தூரம் சென்றுவிடலாம். இவ்வாறு செய்', என்று கொடுத்தான். அப்படியே வீமன், அப் புருஷமிருகத்தினிடம் செல்ல, அஃது அவனைத் துரத்திற்று. அவன் அநுமான் சொன்ன உபாயத்தின்படியே தப்பி வந்து கொண்டிருந்தான். கடைசியில், தன் நாட்டுக்குள் ஒரு காலும் அதன் எல்லையில் ஒரு காலுமாயிருக்கையில், அஃது அவனைப் பற்றிக்கொண்டது. வீமன், 'நான் என்னாட்டில் வந்து விட்டேன்; நீ பிடிப்பது முறையன்று' என்றான். அது, 'நீ என் எல்லையில் இருந்ததனால் நான் பிடித்தேன்' என்றது. அதனால், தருமபுத்திரரிடம் வழக்குக்கூற, அவர் தம்பி என்று பக்ஷபாதமாகக் கூறாமல், வீமனுடலில் ஒரு பாதியைப் பிளந்து அம் மிருகத்துக்குக் கொடுக்கும்படி தீர்ப்புக் கூறினார். அந்த நீதியை வியந்து, அம் மிருகம் தருமரைப் புகழ்ந்து, வீமனை விட்டுவிட்டுச் சென்றது என்பது மகாபாரதத்துக் கதை.

**62. பக்ஷபாதத்தால் வருபயன் :**

ஓரவிவ காரமா வந்தவர் முகம்பார்த்
துரைப்போர் மலைக்குரங்கே
உயர்வெள் ளெருக்குடன் முளைத்துவிடு மவரில்லம்
உறையுமூர் பாழ்நத்தமாம்
தாரணியி லிவர்கள்கிளை நெல்லியிலை போலுகும்
சமானமா எழுபிறப்பும்
சந்ததியி லாதுழல்வர் அவர்முகத் தினின்மூத்த
தையலே குடியிருப்பாள்
பாரமிவ ரென்றுபுவி மங்கையும் நடுங்குவள்
பழித்ததுர் மரணமாவார்
பகர்முடிவி லே ரவுர வாதிநர கத்தனு
பவிப்பரெப் போது மென்பார்
வாரமுடன் அருணகிரி நாதருக் கனுபூதி
வைத்தெழுதி யருள் குருபரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : ஓரம் - பக்ஷபாதம். அவர் - ஓரவழக்கு உரைத்தவர். வெள் எருக்கு உடனே முளைக்கும் என்க. உறையும் ஊர் - அவர் வாழும் ஊர். பாழ் நத்தம் - பாழ் மனை. கிளை - சுற்றம். உகும் - உதிரும். சந்ததி - பிள்ளைகள். மூத்த தையல் - மூதேவி. கொடிய பாவிகளைச் சுமத்தலே தனக்குப் பெரும் பாரம் எனப் பூமிதேவி எண்ணுவா ளென்பது புராண கதை. புவிமங்கை - பூமி தேவி. துர் மரணம் - கெட்ட சாவு; தீ, இடி, பாம்பு முதலிய வற்றால் சாதல். முடிவில் - கடைசியில். ரவுரவ ஆதி நரகம் - ரவுரவம் முதலிய இருபத்தேழு நரகம். வாரமுடன் - அன்புடன். அனுபூதி - அனுபூதியாகிய செல்வத்தை. அருணகிரிநாதர், முருகக் கடவுள் திருவருளால் கந்தானுபூதி பாடினார் என்பதை அறிக.

**63.** ஒன்றில்லாமையாற் சிறவாதவை :

கொங்கையில் லாதவட் கெத்தனைப் பணியுடைமை
 கூடினும் பெண்மை யில்லை
கூறுநிறை கல்வியில் லாமலெத் தனைகவிதை
 கூறினும் புலமை யில்லை
சங்கையில் லாதவர்க் கெத்தனை விவேகந்
 தரிக்கினுங் கனதை யில்லை
சட்சுவை பதார்த்தவகை யுற்றாலும் நெய்யிலாச்
 சாதமும் திருத்தி யில்லை
பங்கய மிலாமலெத் தனைமலர்கள் வாவியிற்
 பாரித்தும் மேன்மை யில்லை
பத்தியில் லாமல்வெகு நியமமா யர்ச்சனைகள்
 பண்ணினும் பூசை யில்லை
மங்கைய ரிலாமனைக் கெத்தனை யருஞ்செல்வம்
 வரினுமில் வாழ்க்கை யில்லை
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
 மலைமேவு குமரேசனே.

குறிப்பு : பணி - அழகான ஆபரணங்கள். பெண்மை - பெண் தன்மை. நிறை கல்வி - நிறைந்த கல்வி. சங்கை - மரியாதை. தரிக்கினும் - மேற்கொண்டாலும். கனதை-பெருமை. சட்சுவை - ஆறு சுவை; புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு, துவர்ப்பு, கைப்பு என்பன. திருப்தி - மனநிறைவு. பங்கயம் - தாமரை. பாரித்தும் - பரவியும், அதிகப்பட்டும்.

**64.** அளவுபடாதவை :

வாரியா ழத்தையும் புனலெறியும் அலைகளையும்
 மானிடர்கள் சனனத்தையும்
மன்னவர்கள் நினைவையும் புருஷர்யோ கங்களையும்
 வானினுயர் நீளத்தையும்

பாரிலெழு மணலையும் பலபிரா ணிகளையும்
படியாண்ட மன்னவரையும்
பருப்பதத் தின்னிறையும் ஈசுரச் செயலையும்
பனிமாரி பொழிதுளியையும்
சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழு கவியையும்
சித்தர்தம துள்ளத்தையும்
தெரிவையர்கள் சிந்தையையும் இவ்வள வெனும்படி
தெரிந்தள விடக்கூடுமோ
வாரிச் மடந்தைகுடி கொண்டநெடு மாலுக்கு
மருகனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : வாரி-தண்ணீர், ஈண்டுக் கடலைக் குறித்தது. புனல் - நீர். யோகம் - அதிர்ஷ்டம். வான் - ஆகாயம். பார் - பூமி. படி - உலகம். பருப்பதம் - மலை. மாரி - மழை. சீரிய - சிறப்புடைய. சித்தர் - சித்தி பெற்றவர். தெரிவையர் - பெண்கள். வாரிச மடந்தை - இலக்குமி ; வாரிசம் - தாமரை, தண்ணீரில் பிறப்பது.

## 65. பிறர்மனை நயப்பார்க்கு உறுபயன் :

தந்தார மன்றியே பரதார மேநினைவு
தனைவைத்த காமுகர்க்குத்
தயையில்லை நிசமில்லை வெட்கமிலை சமரினில்
தைரியஞ் சற்று மில்லை
அந்தார மில்லை தொடர் முறையில்லை நிலையில்லை
அறிவில்லை மரபு மில்லை
அறமில்லை நிதியில்லை இரவினிற் றனிவழிக்
கச்சமோ மனதி லில்லை

நந்தாத சனமில்லை இனமில்லை எவருக்கும்
நட்பில்லை கனதை யில்லை
நயமில்லை இளமைதனில் வலிமையிலை முத்திபெறு
ஞானமிலை யென்பர் கண்டாய்
மந்தார பரிமள சுகந்தாதி புனையுமணி
மார்பனே அருளாளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: தாரம் - மனைவி. பர தாரம்-பிறர் மனைவியர். சமர்-போர். அம் தாரம் - அழகிய (தம்) மனைவி. நிலை-ஒரு நிலை. மரபு-சந்ததி; பழைய முறைமை எனவுமாம். அறம் - தருமம். நிதி - பொருள். தனி வழி - (பிறர் மனைவியைக் கருதித்) தான் தனியே செல்லும் வழி. நந்தாத - கெடாத. இனம் - உறவினர். வலிமை - பலம். மந்தாரம் - பஞ்ச தருக்களில் ஒன்று. சுகந்தம் - நல்ல வாசனைப் பொருள். ஆதி - முதலானவை. புனையும் - தரிக்கின்ற.

## 66. மானம் விடாமை:

கனபார மேறிற் பிளந்திடுவ தன்றியே
கற்றூண் வளைந்திடாது
கருதலர்க ளாலுடைந் தாலுமுயி ரளவிலே
கனசூரன் அமரில் முறியான்
தினமோ ரிடுக்கண்வந் துற்றாலும் வேங்கைதோல்
சீவனள விற்கொடாது
திரமான பெரியோர் சரீரங்கள் போகினும்
செப்புமுறை தவறிடார்கள்
வனமேறு கவரிமா வுயிர்போகு மளவுந்தன்
மயிரினொன் றுங்கொடாது
வாராத ஆபத்து வருகினுங் கற்புடைய
மாதுநிறை தவறி நடவாள்

மனதார வுனதடைக் கலமென்ற கீரற்கு
வண்சிறை தவிர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: கனபாரம் - மிக்க பாரம். ஏறில் - ஏறினல். கருதலர்கள் - பகைவர்கள். கனசூரன் - மிக்க சூரத்தனமுள்ளவன். அமரில்-போரில். முறியான்-தோற்ருேடான். தினம் - நாள்தோறும். இடுக்கண் - துன்பம். வேங்கை - புலி. தோல் - தனது தோலை. சீவனளவில் - தன் உயிரிருக்கும் வரை. வனம் - காடு. நிறை - கற்பு. மனதார-மனமறிய. கீரற்கு-நக்கீரனுக்கு. தவிர்த்த-நீக்கிய.

## நக்கீரரைக் காத்த கதை:

மதுரையம்பதியினின்று திருக்காளத்தியை நோக்கிச் சென்ற நக்கீரர் ஒரு தடாகத்தின் கரையில் சிவபூசை செய்திருக்கையில் அருகிலிருந்த மரத்திலிருந்து இலையொன்று நீருட் பாதியும் கரையிற் பாதியுமாக விழுந்தது. நீருட் கிடந்தது மீனுகியும், கரையிற் கிடந்தது பறவையாகியும் ஒன்றை ஒன்று வலித்திழுக்க, சிவபூசையை மறந்து அவ் வியப்பைப் பார்த்து நின்ற நக்கீரரைக் கண்டு, சிவபூசையில் தவறிய தொளாயிரத்துத் தொண்ணூற்ருென்பது சிவனடியார்களை அடைத்து வைத்திருந்த ஒரு பூதம் நக்கீரரையும் பிடித்து அக் குகையில் அடைத்து வைத்து, நீராடச் சென்றிருக்கையில், அப் புலவர் பெருமான் திருமுருகாற்றுப்படை என்னும் பிரபந்தம் பாட, முருகக்கடவுள் எழுந்தருளி அப்பூதத்தைக் கொன்று, நக்கீரர் முதலியோரைக் காத்தனர் என்பது கதை.

## 67. திருவருட் சிறப்பு:

திருமகள் கடாக்ஷமுண் டாகு லெவர்க்கும்
சிறப்புண்டு கனதை யுண்டு
சென்றவழி யெல்லாம் பெரும்பாதை யாய்விடும்
செல்லாத வார்த்தை செல்லும்

பொருளொரு துரும்பு மரி யாதையாம் செல்வமோ
புகல்பெருக் காறு போலாம்
புவியில்முன் கண்டு மதி யாதபேர் பழகினவர்
போலவே நேச மாவர்
பெருமையொடு சாதியி லுயர்ச்சிதரும் அனுதினம்
பேரும்ப்ர திஷ்டையுண்டாம்
பிரியமொடு பகையாளி கூட வுற வாகுவான்
பேச்சினிற் பிழைவராது
வருமென நினைத்தபொருள் கைகூடி வரும் அதிக
வல்லமைகள் மிகவு முண்டாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: திருமகள்-இலக்குமி. கடாக்ஷம் - கடைக்கண் பார்வை. கனதை - மேன்மை. பொருள் ஒரு துரும்பு - அரிய பொருள்களும் துரும்புபோல எளிதிற் கிடைக்கும். புகல்-சொல்லுகின்ற. பெருக் காறு போலாம் - ஆற்றில் வெள்ளம் வருதல்போல விரைவில் மிக்குவரும். புவி - பூமி. அனுதினம்-நாடோறும். பிரதிஷ்டை யுண்டாம் - நிலைத்திருப்பதாகும். பிழை - குற்றம். வல்லமை - திறமை.

**68. நட்பு நிலை:**

கதிரவ னுதிப்பதெங் கே நளின மெங்கே
களித்துள மலர்ந்த தென்ன
கார்மேக மெங்கே பசுந்தோகை யெங்கே
கருத்தினட் பான தென்ன
மதியமெங் கே பெருங் குமுதமெங் கே முக
மலர்ந்துமகிழ் கொண்ட தென்ன
வல்லிரவு விடிவதெங் கே கோழி யெங்கே
மகிழ்ந்துகூ விடுத லென்ன

நிதியரச ரெங்கே யிருந்தாலும் அவர்களொடு
நேசமொன் றுயிருக்கும்
நீதிமிகு நல்லோர்க ளெங்கிருந் தாலுமவர்
நிறைபக்ஷ மறவார்கள் காண்
மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவுசோ ணாட்டதிபனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: கதிரவன் - சூரியன். நளினம் - தாமரை. களித்து - மகிழ்ந்து. கார் மேகம் - கரிய மேகம். பசுந் தோகை - பசிய தோகையையுடையது; மயில். கருத்தில்-மனத்தில். நட்பு-சிநேகம். மதியம் - சந்திரன். குமுதம் - அல்லி. வல் இரவு-கொடிய இராக் காலம். கூவிடுதல்-கூப்பிடுதல். நிதி-செல்வம். நேசம்-அன்பு. நீதி - நியாயம். பக்ஷம் - அன்பு. மருவு - சேர்ந்திருக்கின்ற. அதிபனே - தலைவனே.

## 69. காலம் அறிதல்:

காகம் பகற்காலம் வென்றிடுங் கூகையைக்
கனகமுடி யரசர் தாமும்
கருதுசய காலமது கண்டந்த வேளையில்
காரிய முடித்து விடுவார்
மேகமும் கார்கால மதுகண்டு பயிர்விளைய
மேன்மேலும் மாரி பொழியும்
மிக்கான அறிவுளோர் வருதருண காலத்தில்
மிடியாள ருக்குதவுவார்
நாகரிக முறகுயில் வசந்த காலத்திலே
நலமென் றுகந்து கூவும்
நல்லோர் குறித்ததைப் பதறும லந்தந்த
நாளையின் முடிப்பார் கண்டாய்

வாகினிய காலைகல் மாலைபுல் லெனுமுலக
வாடிக்கை நிசமல்லவோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: கூகை - கோட்டான். கனகமுடி - பொன்முடி. கருது - நினைக்கின்ற. தருணகாலம் - தக்கசமயம். மிடியாளர் - தரித்திரர். நாகரிகம் - உயர்வு. வசந்தகாலம் - இளவேனிற் காலம்; சித்திரை, வைகாசி மாதங்கள். உவந்து - மகிழ்ந்து. வாகு - அழகான. வாடிக்கை - வழக்கம். 'காலைக்கல், மாலைப் புல்' என்பது பழமொழி; காலையில் கல்லின்மேலும் மாலையில் புல் தரையிலும் இருக்கவேண்டும் என்பதாம்.

## 70. இடம் அறிதல்:

தரையதனி லோடுதேர் நீள்கடலி லோடுமோ
சலதிமிசை யோடு கப்பல்
தரைமீதி லோடுமோ தண்ணீரி லுறுமுதலை
தன்முனே கரிநிற்குமோ
விரைமலர் முடிப்பாமர் வேணியர விளைவெல்ல
மிகுகருட னுலாகுமோ
வேங்கைக ளிருக்கின்ற காடுதனி லஞ்சாமல்
வேறொருவர் செல்ல வசமோ
துரைகளைப் பெரியோரை யண்டிவாழ் வோர்தமைத்
துஷ்டர்பகை யென்ன செய்யும்
துணைகண்டு 'சேரிட மறிந்துசேர்' என்றெளவை
சொன்னமொழி பொய்யல்லவே
வரையூது மாயனை யடுத்தலாற் பஞ்சவர்கள்
வன்போர் செயித்த தன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : தரை - பூமி. ஓடு - ஓடுகின்ற. சலதிமிசை - சமுத்திரத்தின் மேல். கரி - யானை. விரை - வாசனை. பாமர் - சிவபெருமான். வேணி-சடையிலுள்ள. அரவினை-பாம்பை. வேங்கை-புலி. துணை கண்டு - நட்பினையறிந்து. 'சேரிடமறிந்து சேர்' என்பது ஔவையார் பாடிய ஆத்திசூடியிலுள்ள வாக்கியம். வரை-மூங்கில் ; புல்லாங்குழல். மாயன் - கண்ணன். பஞ்சவர்கள்-பாண்டவர்கள் ; தொகைக்குறிப்பு. வன் போர் - வலிய பாரதப் போரில்.

## 71. யாக்கை நிலையாமை :

மனுநன்மாந் தாதாமுன் ஆனவர்க ளெல்லாரும்
 மண்மே லிருந்து வாழ்ந்து
மடியா திருந்தபே ரில்லையவர் தேடியதை
 வாரிவைத் தவரு மில்லை
பனியதனை நம்பியே ஏர்பூட்டு கதையெனப்
 பாழான உடலை நம்பிப்
பார்மீதி லின்னம்வெகு நாளிருப் போமென்று
 பல்கோடி நினைவை யெண்ணி
அனிதமாய் விருதாவில் மாய்வதே யல்லாமல்
 அன்பாக நின்பதத்தை
அர்ச்சித்து முத்திபெறல் வேண்டுமென் றெண்ணுர் [கள்
 ஆசைவலை யிற்சுழலுவார்
வனிதையர்கள் காம விகாரமே பகையாகும்
 மற்றுமொரு பகைமை யுண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
 மலைமேவு குமரேசனே.

குறிப்பு : மனு - மனுச்சக்கரவர்த்தி. மாந்தாதா - ஓரரசன். மடியாது - மாண்டுபோகாமல். தேடியது - தேடிவைத்த பொருள். வாரி வைத்தவர் - வாரிச் சேர்த்து வைத்தவர். 'பனியை நம்பி ஏர் கட்டலாமா' என்பது பழமொழி. பார் - பூமி. அனிதமாய் -

அநீதமாய், அனியாயமாய். விருதா - வீண். மாய்வது - மடிவது. அர்ச்சித்து - அர்ச்சனைசெய்து. முத்தி - முக்தி, வீடு. வனிதையர்- மாதர். காம விகாரம் - காமத்தா லுண்டாகும் வேறுபாடு.

## 72. வேட்டகத்து இகழ்ச்சி :

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திடுமளவில்
மேன்மேலும் உபசரித்து
விருந்துகள் சமைத்துநெய் பால்தயிர் பதார்த்தவகை
வேண்டுவ வெலாம் அமைப்பார்
ஊட்டமிகு வர்க்கவகை செய்திடுவர் தைலமிட்
டுறுதியாய் முழுகுவிப்பார்
ஓயாது தின்னவே பாக்கிலை கொடுத்திடுவர்
உற்றநாள் நாலாகிலோ
நாட்டமொரு படியிறங் குவதுபோல் மரியாதை
நாளுக்கு நாள்குறைவுறும்
நகைசெய்வர் மைத்துனர்க ளலுவல்பார் போவென்று
நாணாமல் மாமி சொல்வாள்
வாட்டமனை யாளொரு துரும்பாய் மதிப்பளவன்
மட்டியினு மட்டி யன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : வேட்டகம் - வேட்ட அகம் ; கலியாணம் செய்து கொண்ட வீடு ; மாமியார் வீடு. மருகன் - மருமகன். விருந்துகள் சமைத்து - புதிதாக உணவை உண்டாக்கி. ஊட்டம் - உண்பித் தற்குரிய வர்க்கவகை - பலகாரக் கூட்ட வகைகள். தைலம் - எண்ணெய். உறுதியாய் - நன்றாக. 'விருந்தும் மருந்தும் மூன்று நாள்' என்பது பழமொழி. நாட்டம் - அன்பு. மைத்துனர் - மனைவியுடன் பிறந்தவர். நாணாமல் - வெட்கமில்லாமல். அலுவல்- வேலை. வாட்டம் - மனச் சோர்வு ; அழகு எனவுமாம்.

## 73. செல்வம் நிலையாமை :

ஓடமிடு மிடமது மணற்சுடும் சுடுமிடமும்
ஓடமிக வேநடக்கும்
உற்றதோ ராற்றின்மடு மேடாகும் மேடெலாம்
உறுபுனல்கொள் மடுவாயிடும்
நாடுகா டாகும் உயர் காடுநா டாகிவிடும்
நவில்சகடு மேல்கீழதாய்
நடையுறும் சந்தைபல கூடும் உட னே கலையும்
நன்னிலவும் இருளாய்விடும்
நீடுபகல் போயபின் பிரவாகும் இரவுபோய்
நிறைபகற் போதாய்விடும்
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர்
நிசமல்ல வாழ்வு கண்டாய்
மாடுமனை பாரி சனம் மக்கள் நிதி பூஷணமும்
மருவு கன வாகு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : ஓடம் இடும் இடம் - படகைச் செலுத்தும் இடம்; பெருக்காறு. சுடும் இடம் - நடப்போர் கால் சுடும் மணலிடமா யிருக்கும் ஆறு. நடக்கும் - செல்லும். மடு - பள்ளம். உறுபுனல் - மிக்க தண்ணீர். நவில் - சொல்லுகின்ற. சகடு - சக்கரம், வண்டி யுருளை. நடையுறும் - செல்லும். இரவு - இராக் காலம். நிதியோர் - செல்வர். மிடித்திடுவர் - தரித்திரமடைவர். செழித்திடுவர் - ஓங் கிச் செல்வராவர். நிசமல்ல வாழ்வு என்பதை வாழ்வு நிசமல்ல என மாற்றுக. பாரி - மனைவி. சனம் - வேலையாட்கள். நிதி - செல்வம். பூஷணம் - ஆபரணம். மருவு கனவாகும் - உறக்கத்தில் வருகின்ற கனவுபோலாகும்.

'ஆறிடு மேடும் மடுவும்போ லாஞ்செல்வம்' என்பது ஈண்டு அறியத்தகும்.

**74. பிறந்தார் பெறும்பேறு :**

சடமொன் றெடுத்தாற் புவிக்குநல் லவனென்று
தன்பேர் விளங்க வேண்டும்
சதிருடனி தல்லாது மெய்ஞ்ஞானி யென்றவ
தரிக்கவே வேண்டு மல்லால்
திடமினிய ரணசூர வீரனிவ னென்னவே
திசைமெச்ச வேண்டும் அல்லால்
தேகியென வருபவர்க் கில்லையென் னாமலே
செய்யவே வேண்டும் அல்லால்
அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்துவான்
ஆகவே வேண்டும் அல்லால்
அறிவான துரைமக்க ளாகவே வேண்டுமிவர்
அதிகபூ பால ராவார்
வட குவடு கிடுகிடென எழுகடலும் அலையெறிய
மணியுரகன் முடிகள் நெரிய
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : சடம் - மானிட உடல். புவிக்கு - பூமியில். சதுர்-சாமர்த்தியம். ரணம் - போர். தேகிஎன - கொடு என்று. அடைவு-முறைமை. துரைமக்கள்-பெருஞ்செல்வர், அதிகாரிகள். பூபாலர்-பூமியைப் பரிபாலிப்பவர். வடகோடு - வடக்கிலுள்ள மகமேரு மலை. மணி உரகன் - (தலையில்) மணிகளையுடைய ஆதிசேடன் ; உரகம் - மார்பால் ஊர்வது.

**75. வேசை நிந்தை :**

தேடித்தம் வீட்டிற் பணக்காரர் வந்திடில்
தேகசீ வன்போலவே
சினேகித்த வும்மையொரு பொழுதுகா ணாவிடிற்
செல்லுறு தன்ன மென்றே

கூடிச் சுகிப்பர் என் னுசையுன் மேலென்று
கூசாம லாணை யிடுவர்
கொங்கையை வெடிக்கப் பிடிக்கக் கொடுத்திதழ்
கொடுப்பர் சும் பன முகப்பர்
வேடிக்கை பேசியே கைமுதல் பறித்தபின்
வேறுபட நிந்தை செய்து
விடவிடப் பேசுவார் தாய்கலக மூட்டியே
விட்டுத் துரத்தி விடுவார்
வாடிக்கை யாயிந்த வண்டப் பரத்தையர்
மயக்கத்தை நம்ப லாமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: தேகசீவன் - உடலும் உயிரும்போல். செல்லுறுது - செல்லாது. ஆணை - சத்தியம். இதழ் - உதடு. உகப்பர்-விரும்புவர். விடவிட பேசுவர் - வெடுவெடு என்று பேசுவார்கள். தாய்கலகம் மூட்டி - தாய்க்கிழவியால் கலகத்தை அதிகப்படுத்தி. மூட்டி - மூள் தன்வினைப்பகுதி; மூட்டு (மூள் + து) - பிறவினைப் பகுதி. வாடிக்கை-வழக்கம். வண்டப் பரத்தையர் (வண்டர் பரத்தையர்) - துஷ்டத்தனமுள்ளவராகிய வேசிகள்.

## 76. இதற்கு இது உறுதி யெனல்:

கைக்குறுதி வேல்வில் மனைக்குறுதி மனையாள்
கவிக்குறுதி பொருளடக்கம்
கன்னியர் தமக்குறுதி கற்புடைமை சொற்குறுதி
கண்டிடிற் சத்ய வசனம்
மெய்க்குறுதி முன்பின் சபைக்குறுதி வித்வசனம்
வேசையர்க் குறுதி தேடல்
விரகருக் குறுதிபெண் மூப்பினுக் குறுதியூண்
வீரருக் குறுதி தீரம்

செய்க்குறுதி நீரரும் பார்க்குறுதி செங்கோல்
செழும்படைக் குறுதி வேழம்
செல்வந் தனக்குறுதி பிள்ளைகள் நகர்க்குறுதி
சேர்ந்திடுஞ் சர்ச்சனர்களே
மைக்குறுதி யாகிய விழிக்குற மடந்தைசுர
மங்கைமரு வுந்தலைவனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேச னே.

குறிப்பு: உறுதி - வன்மை. பின் வருவனவற்றிற்கும் இப் பொருளே கொள்க. வேல் வில் - வேலாயுதமும் வில்லும். மனைக்கு - வீட்டிற்கு. கவிக்கு - செய்யுட்களுக்கு. கன்னியர் - பெண்கள். சொற்கு-சொல்லுக்கு. கண்டிடில் - ஆராயின். சத்ய வசனம் - மெய்யுரை. மெய்க்கு உறுதி - உடம்புக்கு வன்மை. முன்பின் - முன்னும் பின்னும் பிறந்தவர்களாகிய அண்ணனும் தம்பியும். வித்வசனம் - கற்றறிந்தவர்கள். தீரம் - தைரியம். விரகருக்கு - காமுகருக்கு. செய்க்கு - வயல்களுக்கு. அரும்- அரிதாகிய. பார்க்கு - பூமிக்கு. படைக்கு - சேனைகளுக்கு. வேழம் - யானை. சற்சனர் - நல்லவர். விழி - கண். சுரமங்கை - தேவயானை.

## 77. வறுமையிற் சிறுமை:

வறுமைதான் வந்திடில் தாய்பழுது சொல்லுவாள்
மனையாட்டி சற்று மெண்ணாள்
வாக்கிற் பிறக்கின்ற சொல்லெலாம் பொல்லாத
வசனமாய் வந்து விளையும்
சிறுமையொடு தொலையா விசாரமே யல்லாது
சிந்தையில் தைரிய மிலை
செய்யசபை தன்னிலே சென்றுவர வெட்கமாம்
செல்வரைக் காணில் நாணும்

உறுதிபெறு வீரமுங் குன்றிடும் விருந்துவரில்
உயிருடன் செத்த பிணமாம்
உலகம் பழித்திடும் பெருமையோர் முன்புசென்
றொருவரொடு செய்தி சொன்னால்
மறுவசன முஞ்சொலார் துன்பினிற் றுன்பமிது
வந்தணுகி டாதருளுவாய்
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: வறுமை - தரித்திரம். பழுது-குற்றம். மனையாட்டி-மனைவி. சற்றும் - சிறிதும். வசனம் - சொல். 'இல்லானை, இல்லாளும் வேண்டாள் மற் றீன்றெடுத்த தாய் வேண்டாள், செல்லாதவன்வாயிற் சொல்' என்பது அறிக. சிறுமை - துன்பம். தொலையா - நீங்காத. விசாரம் - கவலை. நாணம் - வெட்கம். குன்றிடும் - குறையும். உலகம் - உலகத்தில் உள்ளவர். மறு வசனம் - பதில் வார்த்தை. வந்து அணுகிடாது - வந்து சேராமல்.

## 78. தீச்சார்பால் நன்மை யிழப்பு:

ஆனைதண் ணீரில் நிழல் பார்த்திடத் தவளைசென்
றங்கே கலக்கி யுலவும்
ஆயிரம் பேர்கூடி வீடுகட் டிடில்ஏதம்
அறைகுறளும் உடனே வரும்
ஏனைநற் பெரியோர்கள் போசனஞ் செயுமளவில்
ஈகிடந் திசைகேடதாம்
இன்பமிகு பசுவிலே கன்றுசென் றூட்டுதற்
கினியகோன் அதுதடுக்கும்
சேனைமன் னவரென்ன கருமம் நிய மிக்கினும்
சிறியோர்க ளாற் குறைபடும்
சிங்கத்தை யும்பெரிய ருஷபத்தை யும்பகைமை
செய்ததொரு நரியல்லவோ

மானையும் திகழ்தெய்வ யானையும் தழுவுமணி
மார்பனே அருளாளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

**குறிப்பு:** பார்த்திட - பார்க்க. ஏதம் - குற்றம். குறள் - குறளை கூறுபவன். ஏனை - மற்ற. இசை-சுவை யமைதி. கோன் - இடையன். அது - அந்தக் கன்றை. கருமம் - தொழில். ருஷபம் - காளை. மான்-மான் மகளாகிய வள்ளி. திகழ்-அழகு விளங்குகின்ற.

நரி, சிங்கத்திற்கும் ருஷபத்திற்கும் பகை செய்ததை பஞ்ச தந்திரத்தில் மித்திரபேதத்தால் அறிக.

## 79. இடையூறு உற்றும் பயன்படுபவை:

ஆறுதண் ணீர்வற்றி விட்டாலும் ஊற்றுநீர்
அமுதபா னங் கொடுக்கும்
ஆதவனை யொருபாதி கட்செவி மறைத்தாலும்
அப்போதும் உதவிசெய்வன்
கூறுமதி தேய்பிறைய தாகவே குறையினும்
குவலயத் திருள்சிதைக்கும்
கொல்லைதான் சாவிபோய் விட்டாலும் அங்குவரு
குருவிக்கு மேய்ச்சலுண்டு
வீறுடன் உதாரிதான் மிடியான போதிலும்
மிகநாடி வருபவர்க்கு
வேறுவகை யில்லையென் றுரையா தியன்றளவு
வியந்துள மகிழ்ந்துதவுவான்
மாறுபடு சூரசங் கார கம் பீரனே
வடிவே லணிந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: அமுதபானம் - இனிதாகிய நீர்; பானம் - குடிப் பது. ஆதவன் (ஆதபன்) - சூரியன். கட்செவி - பாம்பு, கண் ணையே செவியாக வுடையவை; இராகு கேதுக்கள். மதி-சந்திரன். குவலயம் - பூமி. சிதைக்கும் - அழிக்கும். கொல்லை - விளைநிலம். சாவிபோய் விட்டாலும் - சாவியானாலும், விளையாமற் பதரா யினும். உதாரி - கொடையாளி. மிடி - தரித்திரம். சூர சங்கார கம் பீரனே - சூரபத்மனைச் சங்கரித்த பெருந்தகைமை யுடையவனே.

## 80. இன்னவர்க்கு ஈது இல்லை யெனல்:

சார்பிலா தவருக்கு நிலையேது முதலிலா
தவருக் கிலாபம் ஏது
தயையிலா தவர்தமக் குறவேது பணமிலா
தார்க்கேது வேசையுறவு
ஊரிலா தவர்தமக் கரசேது பசிவேளை
உண்டிடார்க் குறுதிநிலையே
துண்மையில் லாதவர்க் கறமேது முயல்விலார்க்
குறுவதொரு செல்வம் ஏது
சோர்விலா தவருக்கு மற்றுமொரு பயமேது
சுகமிலார்க் காசை யேது
துர்க்குணமி லாதவர்க் கெதிராளி யேதிடர்செய்
துஷ்டர்க் கிரக்கம் ஏது
மார்புருவ வாலிமேல் அஸ்திரம் விடுத்தநெடு
மால்மருக ஞன முருகா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: சார்பு - தெய்வ பலம். முதல் - மூதலாகிய பொருள். தயை - அன்பு. உறவு - பந்துக்கள். வேசை - விலைமாது. ஊர் இலாதவர் தமக்கு - பரதேசிகளுக்கு. அரசு ஏது - அரசாட்சி இல்லை. அறம் - புண்ணியம். முயல்வு - முயற்சி. சோர்வு-தளர்ச்சி.

எதிராளி - பகைவர். மார்பு உருவ - மார்பில் உருவும்படி. வாலி மேல்-கிட்கிந்தை யரசனாகிய வாலியின்மீது. அஸ்திரம் - பாணம். நெடுமால் - திருமால்.

## 81. இதனினும் இது நன்று எனல்:

பஞ்சரித் தருமையறி யார்பொருளை எய்தலின்
பலர்மனைப் பிச்சை நன்று
பரிவாக வுபசார மில்லா விருந்தினின்
பட்டினி யிருக்கை நன்று
தஞ்சமொரு முயலை யடு வென்றிதனின் யானையொடு
சமர்செய்து தோற்றல் நன்று
சரசகுண மில்லாத பெண்களைச் சேர்தலின்
சன்னியா சித்தல் நன்று
அஞ்சலார் தங்களொடு நட்பா யிருப்பதனின்
அரவினொடு பழகுவது நன்
றந்தணர்க் காபத்தில் உதவா திருப்பதனின்
ஆருயிர் விடுத்தல் நன்று
வஞ்சக ருடன்கூடி வாழ்தலின் தனியே
வருந்திடுஞ் சிறுமை நன்று
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: பஞ்சரித்து - தொந்தரவுசெய்து. அருமையறியார் - தமது மேன்மையை அறியாதவர்களிடம். எய்தலின் - அடைதலைக் காட்டினும்; இன் - எல்லைப் பொருளது. பரிவு - அன்பு. தஞ்சம் - எளிமையான. அடு - கொல்லுகின்ற. சமர் - போர். சரசம் (ச + ரசம்) - இனிமையுடைய. சந்நியாசித்தல் - சந்நியாசங்கொள்ளுதல். அஞ்சலார் - பகைவர்; இனி, அஞ்சவேண்டுதற்கு அஞ்சுதலில்லாதவர் எனவுமாம். அரவு - பாம்பு. அந்தணர் - துறவிகள். ஆர் உயிர் - அருமையான உயிர்.

## 82. நிலையாதவை:

கொற்றவர்கள் ராணுவமும் யாறுநே ராகிய
குளங்களும் வேசை யுறவும்
குணமிலார் நேசமும் பாம்பொடு பழக்கமும்
குலவுநீர் விளையாடலும்
பற்றலார் தமதிடை வருந்து விசு வாசமும்
பழைய தா யாதி நிணறும்
பாதார மாதரது போகமும் பெருகிவரு
பாங்கான ஆற்று வரவும்
நத்துமொரு தூர்ப்புத்தி கேட்கின்ற பேருறவும்
நல்லமத யானை நட்பும்
நாவிநல் லுறவும் ஒரு நாள்போல் இரா இவைகள்
நம்பப் படாது கண்டாய்
மற்றுமொரு துணையில்லை நீதுணை யெனப் பரவும்
வானவர்கள் சிறைமீட்டவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: கொற்றவர்-அரசர்; கொற்றம்-வெற்றி. யாறுநேரான-ஆற்றுக்கு எதிரான. பற்றலார் - பகைவர். வருந்தும் - இரக்கங் கொள்கின்ற. தாயாதி - பங்காளி. நிணறு - அன்பு. பாதார மாதர் - பிறர் மனைவியாகிய பெண்கள்; தாரம் - மனைவி. பாங் கான - அழகான. நத்தும் - விரும்புகின்ற. நாவி - கஸ்தூரிமிருகம். பரவும் - வாழ்த்துகின்ற.

## 83. நற்புலவர் தீப்புலவர் செயல்:

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங்கனி
விருப்பமொடு தேடி நாடும்
மிடைகருங் காகங்கள் எக்கனி யிருந்தாலும்
வேப்பங் கனிக்கு நாடும்

எக்காலும் வரிவண்டு பங்கேரு கத்தினில்
இருக்கின்ற தேனை நாடும்
எத்தனை சுகந்த வகை யுற்றாலும் உருள்வண்
டினந்தூர் மலத்தை நாடும்
தக்கோர் பொருட்சுவை நயங்களெங் கேயென்று
தாம்பார்த் துகந்து கொள்வார்
தாழ்வான வன்கண்ணர் குற்றமெங் கேயென்று
தமிழிலா ராய்வர் கண்டாய்
மைக்காவி விழிமாது தெய்வானை யும் குறவர்
வள்ளியும் தழுவு தலைவா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: மிக்கான - மரங்கள் மிகுந்த. நாடும் - ஆராயும். மிடை - நெருங்கிய. எக்கனி - எத்தகைய சிறந்த பழம். கனிக்கு - பழத்தை; வேற்றுமை மயக்கம். வரி - புள்ளி. பங்கேருகம் - தாமரை; சேற்றில் வளர்வது. சுகந்தம் - நல்ல வாசனை. உருள் வண்டு இனம் - மலம் உருட்டும் வண்டின் கூட்டம். உகந்து - விரும்பி. வன்கண்ணர் - கொடியவர். மை காவி விழி - மையிடப்பெற்றதும் குவளை மலரை யொத்ததும் ஆகிய கண்.

## 84. தாழ்தற்பெருமை :

வேங்கைகள் பதுங்குதலும் மாமுகில் ஒதுங்குதலும்
விரிசிலை குனிந்திடுதலும்
மேடம தகன்றிடலும் யானைகள் ஒடுங்குதலும்
வெள்விடைகள் துள்ளி விழலும்
மூங்கில்கள் வணங்குதலும் மேலவர் இணங்குதலும்
முனிவர்கள் நயந்துகொளலும்
முதிர்படை ஒதுங்குதலும் வினைஞர்க ளடங்குதலும்
முதலினர் பயந்திடுதலும்

ஆங்கரவு சாய்குதலும் மகிழ்மலர் உதிர்த்திடலும்
ஆயர்குழல் சூடுபடலும்
அம்புவியில் இவை காரி யங்களுக் கல்லாமல்
அதனால் இளைப்பு வருமோ
மாங்கனிக் கா அரனை வலமது புரிந்துவளர்
மதகரிக் கிளைய முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: வேங்கைகள் - புலிகள். மா - கருமையான. முகில் - மேகம். விரி சிலை - பெரிய வில். குனிந்திடுதலும் - வளைதலும். மேடம் - ஆடு. விடை - எருது. படை - சேனை. வினைஞர் - தொழிற்றிறம் உடையவர். முதலினர் - செல்வம் மிகுதியா யுள்ளோர். அரவு - பாம்பு. சாய்குதல் - தலை ஒடுக்கிக் கொள்ளுதல். மகிழ் மலர் - மகிழம் பூ. ஆயர் - இடையர். குழல் - புல்லாங்குழல். சூடு படலும் - நெருப்பில் காய்ச்சப் படுதலும். இளைப்பு - தாழ்ச்சி. அரனை - சிவபிரானை. வலமது புரிந்து - பிரதட்சிணம் வந்து. மத கரிக்கு - மதம் பொருந்திய யானை ; விநாயகன்.

விநாயகர், மாங்கனிக்காக அரனை வலம் வந்த கதையை 40-ஆம் பாட்டின் உரையிற்காண்க.

## 85. தெய்வச் செயல் :

சோடாய் மரத்திற் புறவிரண் டிருந்திடத்
துருவுகண் டேவேடுவன்
தோலாமல் அவையெய்ய வேண்டுமென் றுருகணை
தொடுத்து வில் வாங்கி நிற்க
ஊடாடி மேலே யெழும்பிடில் அடிப்பதற்
குலவு ரா சாளிகூட
உயரப் பறந்துகொண் டேதிரிய அப்போ
துதைத்தசிலை வேடனடியில்

சேடாக வல்விடந் தீண்டவே அவன்விழச்
சிலையிற் றொடுத்த வாளி
சென்றிரா சாளிமெய் தைத்துவிழ அவ்விரு
சிறைப்புரு வாழ்ந்த வன்றோ
வாடாமல் இவையெலாம் சிவன்செயல்க ளல்லால்
மனச்செயலி னாலும் வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: சோடு - இணை. புறவு - புறா. துருவு கண்டு - ஆராய்ந்து பார்த்து. எய்ய-அம்பு எய்ய. கணை-அம்பு. வில் வாங்கி - வில்லை வளைத்து. ஊடாடி - இடையே அசைந்து. ராசாளி - வல்லூறு. உதைத்த - உதைத்து உந்தின. சிலை - வில். அடியில் - காலில். சேடு - பெருமை. வல்விடந் தீண்ட - கொடிய விடத்தை யுடைய பாம்பு கடிக்க; வல்விடம் - பாம்பு; அன்மொழித்தொகை. மெய்-உடம்பு. வாளி-அம்பு. இரு சிறை புறா-இரண்டு சிறகுகளை யுடைய புறாக்கள்; இருபுறா எனக் கூட்டுக. வாழ்ந்த - வாழ்ந்தன.

'எல்லாம், எனை யாளும் ஈசன் செயல்' என்பது ஈண்டைக் குக் கருதத் தகும்.

## 86. பாடல் இயல்பு:

எழுத்தசைகள் சீர்தளைகள் அடிதொடைகள் சிதையா
திருக்கவே வேண்டும் அப்பால்
ஈரைம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்
பினியசொற் கமைய வேண்டும்
அழுத்தமிகு குறளினுக் கொப்பாக வே பொருள்
அடக்கமும் இருக்க வேண்டும்
அன்பான பாவினம் இசைந்துவரல் வேண்டும் முன்
அலங்காரம் உற்ற துறையில்

பழுத்துளம் உவந்தோசை யுற்றுவரல் வேண்டும்
படிக்குமிசை கூடல் வேண்டும்
பாங்காக இன்னவை பொருந்திடச் சொற்கவிதை
பாடிற் சிறப்பென்பர்காண்
மழுத்தினஞ் செங்கைதனில் வைத்த கங் காள னருள்
மைந்தனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: எழுத்து - உயிரெழுத்து, மெய்யெழுத்து முதலியன. அசை - எழுத்தாலாகிய உறுப்பு; நேரசை, நிரையசை என்பன. சீர் - இரண்டு, மூன்று அசைகூடி வருவது. தளை - சீர்கள் ஒன்றோ டொன்று ஓசையமையத் தளைப்பது; தளைத்தல் - கட்டுதல். அடி - குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்பன. தொடை - பல அடிகளிலாகிலும், ஓரடியிலேயே பல சீர்களிலாயி னும் பல எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது; அஃது, எது கைத்தொடை, முரண்தொடை, இயைபுத்தொடை, மோனைத் தொடை முதலாயின. சிதையாது - கெடாமல். பத்துவகைப் பொருத்தம் ஆவன: மங்கலம், சொல், பால், வருணம், உண்டி, தானம், எழுத்து, நாள், கதி, கணம் என்பன. அழுத்தம் - பொரு ளாழம். பா இனம் - தாழிசை, துறை, விருத்தம். அலங்காரம் - அணி; சொல்லணி, பொருளணி என்பன. பழுத்து - கனிவாகி. ஓசை - அவ்வப்பாவிற்குரிய ஓசை. இசை - இராகம். பாங்கு - அழகு. மழு - மழுப்படை, எரியிரும்பு. கங்காளன் - முழு எலும் பணிந்தவன்; சிவபெருமான்.

## 87. விபூதி வாங்கும் முறைமை :

பரிதனி லிருந்தும் இயல் சிவிகையி லிருந்தும் உயர்
பலகையி லிருந்தும் மிகவே
பாங்கான அம்பலந் தனிலே யிருந்தும்
பருத்ததிண் ணையிலிருந்தும்

தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேல்நின்று
திருநீறு வாங்கி யிடினும்
செங்கையொன் றாலும் விரல் மூன்றாலும் வாங்கினும்
திகழ்தம் பலத்தினோடும்
அரியதொரு பாதையில் நடக்கின்ற போதிலும்
அசுத்தநில மானவதிலும்
அங்கே தரிக்கிலும் தந்திடில் தள்ளினும்
அவர்க்குநர கென்பர் கண்டாய்
வரிவிழி மடந்தைகுற வள்ளிநா யகிதனை
மணந்துமகிழ் சகநாதனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: பரி - குதிரை. இயல் - செல்லுகின்ற. சிவிகை-பல்லக்கு. அம்பலம் - பொதுவிடம். தம்பலம் - வெற்றிலைத் தம்பலம். வரி - செவ்வரிபரந்த. சகம் - உலகம்.

## 88. விபூதி தரிக்கும் முறைமை:

பத்தியொடு சிவசிவா என்றுதிரு நீற்றைப்
பரிந்து கை யாலெடுத்துப்
பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதிலொழுக
நித்தமுமூ விரல்களால் நெற்றியின் அழுந்தலுற
நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீடுவினை அணுகாது தேகபரி சுத்தாய்
நீங்காமல் நிமலனங்கே
சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே
தாண்டவஞ் செய்யும் திரு
சஞ்சலம் வராதுபர கதியுதவும் இவரையே
சத்தியும் சிவனும்எனலாம்

மத்தினிய மேருவென வைத்தமு தினைக்கடையும்
மால்மருக னான முருகா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: பரிந்து - அன்புகொண்டு. பார் - பூமி. புயம் - மேற்றோள். வினை - பாவம். நிமலன் - மலமற்றவன். சத்தி - உமாதேவி. தாண்டவம் - நடனம். செய்யும் - செய்வாள். திரு - இலக்குமி. பாகதி - மேலான கதி, முத்தி. இனிய - நல்ல; இனிய மத்து எனமாறுக. மால் - திருமால்.

மந்தரமலையை மத்தாகக் கொண்டு பாற்கடலைக் கடைந்த கதையை யறிக.

## 89. இன்ன உறுப்புக்களாற் பயனில்லை யெனல்:

தேவால யஞ்சுற்றி டாதகால் என்னகால்
தெரிசியாக் கண்ணென்ன கண்
தினமுமே நின்கமல பாதத்தை நினையாத
சிந்தைதான் என்ன சிந்தை
மேவாக மம் சிவ புராணமவை கேளாமல்
விட்டசெவி என்ன செவிகள்
விமலனை வணங்காத சென்னிஎன் சென்னி பணி
விடைசெயாக் கைஎன்ன கை
நாவார நினையேத் திடாதவாய் என்னவாய்
நற்றீர்த்தம் மூழ்கா வுடல்
நானிலத் தென்ன வுடல் பாவியா கிய சனனம்
நண்ணினுற் பலனேது காண்
மாவாகி வேலைதனில் வருசூரன் மார்புருவ
வடிவேலை விட்ட முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

**குறிப்பு:** தேவாலயம் - கோயில். சுற்றிடாத - வலம்வாராத. கமல பாதம் - தாமரைப்பூப் போன்ற பாதம். சிந்தை - மனம். ஆகமம் - சைவாகமம்; கடவுளிடத்திருந்து உபதேசமுறையாக வந்தது. சிவபுராணம் - சைவபுராணங்கள்; அவை: சிவபுராணம், மார்க்கண்டேயம், பௌஷியம், இலிங்கம், வராகம், காந்தம், வாமநம், கூர்மம், மச்சம், வாயவியம் என்பன. விமலன் - மலமற்றவன். சென்னி - தலை. பணிவிடை - தொண்டு. எத்திடாத - துதிக்காத. தீர்த்தம் - கங்கை முதலியவை. நானிலம் - பூமி; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. சனனம் - பிறவி. நண்ணினால் - அடைந்தால். மா ஆகி - மாமரமாகி. வேலைதனில் - கடலில். வரு - வந்த. சூரன் - சூரபத்மன்.

## 90. நற்பொருளோடு தீப்பொருள் பிறத்தல்:

கோகனக மங்கையுடன் மூத்தவள் பிறந்தென்ன
குலவும் ஆட் டின்கண் அதர்தான்
கூடப் பிறந்தென்ன தண்ணீரி னுடனே
கொடும்பாசி யுற்றுமென்ன
மாக ருணும் அமுதினொடு நஞ்சம் பிறந்தென்ன
வல்லிரும் பில் துருத்தான்
வந்தே பிறந்தென்ன நெடுமரந் தனின்மொக்குள்
வளமொடு பிறந்தென்ன உண்
பாகமிகு நெல்லினொடு பதர்தான் பிறந்தென்ன
பண்ணுமொரு தாய்வயிற்றில்
பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன
பலனேதும் இல்லை யன்றோ
மா கனக மேருவைச் சிலையென வளைத்தசிவன்
மைந்தனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: கோகநக மங்கை - தாமரைப்பூவி லிருக்கும் இலக்குமி. மூத்தவள் - மூதேவி. ஆட்டின்கண் - ஆட்டினிடத்து. அதர் - கழுத்தில் நீளமாகத் தொங்கும் உறுப்பு. மாகர் - தேவர்; மாகம் - தேவலோகம். தரு - களிம்பு. மொக்குள் - புல்லுருவி. பாகம் - பக்குவம். பதர்-உள்ளீடில்லாத நெல். பன்னும் - சொல்லுகின்ற. விவேகி - அறிவுடையவன். கயவர் - அறிவில்லாதவர். மா கனகம் - சிறந்த பொன். சிலை - வில்.

## 91. இனத்தை அழிப்பவை:

குலமான சம்மட்டி குறடுகைக் குதவியாய்க்
கூரிரும் புகளை வெல்லும்
கோடாலி தன்னுளே மரமது நுழைந்துதன்
கோத்திர மெலாம் அழிக்கும்
நலமான பார்வைசேர் குருவிபா னதுவந்து
நண்ணி பற வைகளை யார்க்கும்
நட்புடன் வளர்த்தகலை மானென்று சென்றுதன்
நவில்சாதி தனை யிழுக்கும்
உலவுநற் குடிதனிற் கோளர்கள் இருந்துகொண்
டுற்றுரை யிடமழிப்பர்
உளவனில் லாமலூர் அழியா தெனச்சொல்லும்
உலகமொழி நிசமல்லவோ
வலமாக வந்தர னிடத்தினிற் கனிகொண்ட
மதயானை தன்சோதரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: குலம் ஆன - தன் இனமான. குறடு - பிடிகருவி. கோத்திரம் - வமிசம். பார்வைசேர் குருவி - பார்வைக் குருவி; இது, தன்னை வளர்ப்பவனுக்காக பறவைகள் தம் இனமென எண்ணி வந்து கண்ணியில் சிக்கும்படி அமைத்து வைக்கும்

ஆர்க்கும் - கட்டும். நட்பு - சிநேகம். நவில் - சொல்லப்படுகின்ற. உலவு - விளங்குகின்ற. கோளர் - கோள் சொல்லுவோர். உற்றார்- உறவினர். ஈடு அழிப்பர்-பெருமையை அழிப்பர். உளவன் - உளவு சொல்லுவோன். 'உளவ னில்லாமல் ஊர் அழியுமா?' என்பது பழமொழி; பழமொழியை லோகோக்தி என்பர் வட நூலார். கனி - மாங்கனி. மதயானை - விநாயகன்.

## 92. வீணுக்கு உழைத்தல்:

குயில்முட்டை தனதென்று காக்கையடை காக்கும்
குணம்போலும் ஈக்களெல்லாம்
கூடியே தாமுண்ண வேண்டுமென் றேதினம்
கூடுய்த்த நறவு போலும்
பயில்சோர ருக்குப் பிறந்திடத் தாம்பெற்ற
பாலனென் றுட்கருதியே
பாராட்டி முத்தமிட் டன்பாய் வளர்த்திடும்
பண்பிலாப் புருடர் போலும்
துயிலின்றி நிதிகளைத் தேடியே யொருவர்பால்
தொட்டுத் தெரித்திடாமல்
தொகைபண்ணி வைத்திடுவர் கைக்கொண்டு போகவரு
சொந்தமா னவர் வேறு காண்
வயிரமொடு சூரனைச் சங்கார மே செய்து
வானவர்க் குதவு தலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: அடைகாத்தல்-அவயங்காத்தல். ஈக்கள்-தேனீக்கள். கூடு உய்த்த - கூட்டில் சேர்த்த. நறவு - தேன். பயில் -பழகிய, சிநேகஞ் செய்த. சோரர்-சோர புருஷர். பாராட்டி-கொண்டாடி. பண்பு இலா - நற்குணம் இல்லாத. துயில் இன்றி - தூக்கம் இல்

லாமல். நிதி - செல்வம். ஒருவர்பால் - ஒருவரிடத்து ; பால் - ஏழனுருபு. தொட்டுத் தெரித்தல் - விரலால் தொட்டுத் துளியாகச் சிதறுதல். தொகை பண்ணி - தொகையாகச் சேர்த்து. சொந்தமானவர் - அப்பொருளுக்கு உரிமையுள்ளவர். வயிரமொடு - வீரத்தோடு. சூரன் - சூரபத்மன். சங்காரம் - கொல்லுதல்.

## 93. இது சேரின் இது பயன்படாது எனல்:

அழலுக்கு ளே விட்ட நெய்யும் பெருக்கான
ஆற்றிற் கரைத்த புளியும்
அரிதான கமரிற் கவிழ்த்திட்ட பாலும் வரும்
அலகைகட் கிடுபூசையும்
சுழல்பெருங் காற்றினில் வெடித்தபஞ் சும் மணற்
சொரிதரும் பனிநீரும் நீள்
சொல்லரிய காட்டுக் கெரித்தநில வும் கடற்
சுழிக்குளே விடுகப்பலும்
விழலுக் கிறைத்திட்ட தண்ணீரும் மூகமாய
வேசைக் களித்த பொருளும்
வீணருக் கேசெய்த நன்றியும் பலனில்லை
விருதா வி தென்பர் கண்டாய்
மழலைப் பசுங்கிள்ளை முன்கை மலை மங்கைதரும்
வண்ணக் குழந்தை முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: அழல் - நெருப்பு. பெருக்கான - வெள்ளப் பெருக்கினையுடையதான. கமர் - நில வெடிப்பு. அலகை - பேய். சுழல் பெருங்காற்று - சுழல்காற்று. மணல் சொரிதரும்-மணலிற்பெய்த. காட்டுக்கு - காட்டில், வேற்றுமை மயக்கம். கடற்சுழி - கடலில் சுழியுள்ள இடம். விழல்-பயனில்லாத ஒருவகைக் கோரை. மோகமாய்-மிக்க ஆசைப்பட்டு. விருதா - வீண். மழலை-பொருள் நிரம்பாத

சொல். பசுங் கிள்ளை - பச்சைக் கிளி. முன் கை - முன் கையிலே யுடைய .மலை மங்கை-பார்வதி. தரு - பெற்ற. வண்ணக் குழந்தை- அழகிய குழந்தையாகிய.

**94. கைவிடத் தகாதவர் :**

அன்னைசுற் றங்களையும் அற்றைநாள் முதலாய்
அடுத்துவரு பழையோரையும்
அடுபகைவ ரிற்றப்பி வந்தவொரு வேந்தனையும்
அன்பான பெரியோரையும்
தன்னைநம் பினரையும் ஏழையா னவரையும்
சார்ந்தமறை யோர்தம்மையும்
தருணமிது என்றுநல் லாபத்து வேளையில்
சரணம் புகுந்தோரையும்
நன்னயம தாகமுன் உதவிசெய் தோரையும்
நாளுந் தனக்குறுதியாய்
நத்து சே வகனையும் காப்பதல் லாது கை
நழுவவிட லாகாது காண்
மன்னயிலும் இனியசெஞ் சேவலும் செங்கைமலர்
வைத்தசர வணபூபனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : சுற்றம் - உறவினர் ; ஆகுபெயர். அற்றை நாள் முதலா - பண்டை நாள் முதலாக. பழையோர் - பழமையானவர். அடு பகைவரில் - கொல்ல வந்த பகைவரிடத்திலிருந்து. வேந்தன்- அரசன். மறையோர் - வேதியர். சரணம் புகுந்தோர் - அடைக் கலமாகப் புகுந்தவர். நல் நயம்-மிக்க இனிமை. நத்து சேவகன் - விரும்பும் சேவகன். மன் அயிலும்-விளக்கமான வேலும். சேவல்- சேவற் கொடியும். கைமலர் - மலராகிய கை. சரவண பூபன் - சரவணமாகிய இடத்திலுதித்த தலைவன்.

## 95. தகாச் செயல்கள் :

அண்டிவரும் உற்றார் பசித்தங் கிருக்கவே
அன்னியர்க் குதவுவோரும்
ஆசுதபு பெரியோர்செய் நேசத்தை விட்டுப்பின்
அற்பரை யடுத்தபேரும்
கொண்டவொரு மனையா ளிருக்கப் பரத்தையைக்
கொண்டாடி மருவுவோரும்
கூறுசற் பாத்திரம் இருக்கமிகு தானமது
குணமிலார்க் கீந்த பேரும்
கண்டுவரு புதியோரை நம்பியே பழையரைக்
கைவிட் டிருந்தபேரும்
கரிவாலை விட்டுநரி வால்பற்றி நதிநீர்
கடக்கின்ற மரியாதைகாண்
வண்டடர் கடப்பமலர் மாலிகா பரண மணி
மார்பனே அருளாளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: அண்டி வரும் - நெருங்கி வருகின்ற; ஆதரவாக எண்ணி வருகின்ற. உற்றார் - உறவினர். ஆசு தபு - குற்றம் நீங்கிய. கொண்ட - பெண்டாகக் கொண்ட. பரத்தை - விலை மாது. கொண்டாடி - புகழ்ந்து. மருவுவோர் - அணைவோர். கூறு-சொல்லப்படுகின்ற. சற்பாத்திரம் - தானம் பெறத் தகுதி யுடையவர். தானம் - ஈகை, கொடை. குணமிலார் - நற்குணமில்லாதவர். ஈந்த பேர் - கொடுத்தவர்கள். கரி வால் - யானையின் வால். நதி நீர் - ஆற்று வெள்ளம். மரியாதை - தன்மை. காண் - முன்னிலை யசை. வண்டு அடர் - வண்டுகள் நெருங்கிய. மாலிகா ஆபாரணம் - மாலையாகிய ஆபரணம். அணி-அணிந்த. அருளாளன்-அருளை ஆள்பவன்.

'யானைவாலை விட்டு நரிவாலைப் பிடித்தாற்போல' என்னும் பழமொழி ஈண்டைக்கு அறியத்தகும்.

**96. நல்லோர் முறைமை :**

கூடியே சோதரர்கள் வாழ்தலா லும்தகு
குழந்தைபல பெறுதலாலும்
குணமாக வேபிச்சை யிட்டுண்கை யாலும்
கொளும் பிதிர்க் கிடுதலாலும்
தேடியே தெய்வங் களுக்கீத லாலும்
தியாகங் கொடுத்தலாலும்
சிறியோர்கள் செய்திடும் பிழையைப் பொறுத்துச்
சினத்தைத் தவிர்த்தலாலும்
நாடியே தாழ்வாய் வணங்கிடுத லாலும்மிக
நல்வார்த்தை சொல்லலாலும்
நன்மையே தருமலால் தாழ்ச்சிகள் வரா இவை
நல்லோர்கள் செயும் முறைமைகாண்
வாடிமனம் நொந்துதமிழ் சொன்ன நக் கீரன்முன்
வந்துதவி செய்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு : சோதரர் - சகோதரர் ; ஒரே வயிற்றிற் பிறந்தவர். கொள்ளும்-ஏற்றுக்கொள்ளும். பிதிரர்-பிதிர் தேவதைகள். ஈதல்-கொடுத்தல். தியாகம் - தானம். சினம் - கோபம். நாடி - தேடி. தாழ்ச்சி - தாழ்வு. தமிழ் சொன்ன - தமிழ் நூல் சொன்ன ; திருமுருகாற்றுப்படை சொன்ன. நக்கீரன் - சங்கப் புலவருள் ஒருவர்.

**97. அடைக்கலங் காத்தல் :**

அஞ்சலென்னும் நாயினுடல் தருமன் சுமந்துமுன்
ஆற்றைக் கடத்துவித்தான்
அடைக்கல மெனுங் கயற் காகநெடு மாலுடன்
அருச்சுனன் சமர்புரிந்தான்

தஞ்சமென வந்திடு புறவுக்கு முன் சிபி
சரீரந் தனைக்கொடுத்தான்
தடமலைச் சிறகரிந் தவனைமுன் காக்கத்
ததீசி முது கென்பளித்தான்
இன்சொலுட னே பூத தயவுடைய ராயினோர்
எவருக்கும் ஆபத்திலே
இனிய தம் சீவனை விடுத்தாகி லும் காத்
திரங்கி ரட் சிப்பரன்றோ
வஞ்ச கிர வுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன்
வளர்சூரன் உடல்கீண்டவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: அஞ்சல் - அடைக்கலம். கயன் - கயன் என்னும் கந்தருவன். சமர்புரிந்தான் - சண்டை செய்தான். சிபி - சிபிச் சக்கரவர்த்தி. தஞ்சம் - அடைக்கலம். சரீரம் - உடல். ததீசி - ததீசி என்னும் முனிவன். தடமலை- விசாலமாகிய மலை. தடமலை சிறகு அரிந்தவன் - இந்திரன். முதுகு என்பு - முதுகு எலும்பு. பூத தயை - உயிர்களிடத்து அன்பு. சீவன் - உயிர். காத்து இரங்கி ரட்சிப்பர் - காப்பாற்றுவர். வஞ்ச கிரவுஞ்சம் - வஞ்சனையுடைய கிரவுஞ்ச மலை. வளர் சூரன் - வளர்ந்து வந்த சூரன். கீண்டவா - பிளந்தவனே.

தருமபுத்திரர் சொர்க்கத்திற்குச் செல்லும்போது, அவர் குணத்தைச் சோதிக்க யமன் நாயாகி வந்தான் என்பது கதை.

## 98. யோக்கியாயோக்கியம்:

பாலினொடு தேன்வந்து சேரில் ருசி அதிகமாம்
பருகுநீர் சேரில் என்னும்
பவளத்தி னிடைமுத் தமைத்திடிற் சோபிதம்
படிக மணி கோக்கில் என்னும்

மேலினிய மன்னர்பால் யானைசேர் வது கனதை
மேடமது சேரில் என்னும்
மிக்கான தங்கத்தில் நவமணி யுறிற் பெருமை
வெண்கல் அழுத்தில் என்னும்
வாலிப மினார்களுடன் இளையோர்கள் சேரின் நலம்
வளைகிழவர் சேரில் என்னும்
மருவுநல் லோரிடம் பெரியோர் வரிற்பிரியம்
வருகயவர் சேரில் என்னும்
மாலிகை தரித்தமணி மார்பனே தெய்வானை
வள்ளிக்கு வாய்த்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: பருகுநீர் - குடிக்கின்ற தண்ணீர். சோபிதம் - ஒளியுடையதாம். படிகமணி - வெள்ளைமணி. கனதை - பெருமை. மேடம் - ஆடு. உறின் - பொருந்தினால். வாலிப மினார்கள் - வாலிபப்பெண்கள்; மின்னார் என்பது மினார் என ஆயிற்று; மின்னலை ஒத்த ஒளியுள்ளவர்கள் என்பது பொருள். வளை - உடல் வளைந்த. மருவும் - பொருந்திய. கயவர் - கீழ்மக்கள். மாலிகை - மாலை. மணி - அழகிய. வாய்ந்த - பொருந்திய.

## 99. பெரியோர் இயல்பு:

அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல் வழிநிற்றல்
ஆபத்தின் வந்தபேருக்
கபயங் கொடுத்திடுதல் நல்லினஞ் சேர்ந்திடுதல்
ஆசிரியன் வழிநின்றவன்
சொன்னமொழி தவறாது செய்திடுதல் தாய்தந்தை
துணையடி அருச்சனை செயல்
சோம்பலில் லாமலுயிர் போகினும் வாய்மைமொழி
தொல்புவியில் நாட்டியிடுதல்

மன்னரைச் சேர்ந்தொழுகல் கற்புடைய மனைவியொடு
வைகினும் தாமரையிலை
மருவுநீ ரெனவுறுதல் இவையெலாம் மேலவர்தம்
மாண்பென் றுரைப்பரன்றோ
வன்னமயில் மேலிவர்ந் திவ்வுலகை யொருநொடியில்
வலமாக வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு: ஆபத்து-துன்பம். அபயம்-பயமின்மை. நல்லினம் - நல்லோர் கூட்டம். ஆசிரியன் வழி நின்று - உபாத்தியாயர் பின் நின்று. அவன் - ஆசிரியன். துணை அடி-இரண்டு பாதங்கள். அருச்சனை-பூசனை; மலர்தூவல். வாய்மை மொழி-உண்மையான சொல். தொல் - பழமையான. நாட்டி யிடுதல் - நிலை நிறுத்தி யிடுதல்; சோம்பலில்லாமல் நாட்டி யிடுதல் எனக் கூட்டுக. மன்னர்-அரசர். சேர்ந்தொழுகல் - சேர்ந்து நடத்தல்; மன்னரைத் துணையாகக் கொண்டு நடத்தல். வைகினும் - தங்கி யிருந்தாலும். தாமரையிலை மருவு நீர் என - தாமரையிலையைச் சேர்ந்த தண்ணீர்போல் பற்றில்லாமல். மாண்பு - குணம். வன்னம் - அழகு. இவர்ந்து - ஏறி.

உலகை ஒரு நொடியிற் சுற்றி வந்தது மாம்பழத் திற்காக.

## 100. நூலின் பயன்:

வன்னமயி லேறிவரு வேலா யுதக்கடவுள்
மலைமேல் உகந்த முருகன்
வள்ளிக் கொடிக்கினிய வேங்கைமர மாயினோன்
வானவர்கள் சேனைபதி
கன்னல்மொழி யுமையாள் திருப்புதல்வன் அரன்மகன்
கங்கைபெற் றருள் புத்திரன்
கணபதிக் கிளையவொரு மெய்ஞ்ஞான தேசிகன்
கடவுள் ஆவி நன்குடியினன்

பன்னரிய புல்வயலில் வாலகும ரேசர்மேல்
பரிந்து குரு பாத தாசன்
பாங்கான தமிழாசி ரியவிருத் தத்தின் அறை
பாடலொரு நூறும் நாடி
நன்னயம தாகப் படித்தபேர் கேட்டபேர்
நாடொறுங் கற்ற பேர்கள்
ஞான யோ கம்பெறுவர் பதவி யா வும் பெறுவர்
நன்முத்தி யும் பெறுவரே.

குறிப்பு: உகந்த - விரும்பின. வள்ளிக் கொடிக்கு - வள்ளியாகிய பெண்ணுக்கு; கொடி - ஆகுபெயர். வானவர் - தேவர். கன்னல் மொழி - கருப்பஞ்சாறுபோன்ற சொல். ஆவி நன்குடி - திருவாவி நன்குடி; ஆறு படைவீடுகளுள் ஒன்று; பழநி; போதினி என்பது பழநி எனமாறி வழங்குகின்றது. பன்னரிய - சொல்லுதற்கரிய. பரிந்து - விரும்பி. பாங்கான - அழகான. அறை - சொன்ன. நல்நயம் - நல்ல விருப்பத்தொடு. பதவி - இந்திர பதவி முதலானவை.

V.G.T. 6/5/79

குமரேச சதகம்

முற்றிற்று.

9-9-55

# தலைப்பு வரிசை


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| அடைக்கலங் காத்தல் | 210 |
| அந்தணர் இயல்பு | 120 |
| அரசர் இயல்பு | 121 |
| அருமை யறிதல் | 171 |
| அவ்வவ் வினத்தில் உயர்ந் தவை | 142 |
| அவரவர்க்கு உரியவை | 174 |
| அவரவர்க்குப் பெலமாவன | 143 |
| அளவு படாதவை | 180 |
| அற்பருக்கு வாழ்வு வரில் குணம் வேறுபடும் எனல் | 159 |
| இடம் அறிதல் | 186 |
| இடும்பால் அழிவு நேரும் எனல் | 164 |
| இடையூறு உற்றும் பயன் படுபவை | 194 |
| இத் தீக்குணத்தோர் இவ் விலங்குபோல்வர் எனல் | 158 |
| இதற்கு இது உறுதி யெனல் | 191 |
| இதனினும் இது நன்று எனல் | 196 |
| இதனை விளக்குவது இது எனல் | 132 |
| இதினும் இது நன்று என்பவை | 169 |
| இது இன்றி இது சிறவாது எனல் | 139 |
| இது சேரின் இது பயன்படாது எனல் | 207 |
| இப்படிப்பட்டவர் இவர் எனல் | 129 |
| இருந்தும் பயன் படாதவை | 144 |
| இவர்க்கு இதில் நினைவு எனல் | 127 |
| இவர்க்கு இது துரும்பு எனல் | 131 |
| இவர்க்கு இவர் தெய்வம் எனல் | 126 |
| இன்ன உறுப்புக்களாற் பயனில்லை யெனல் | 203 |
| இன்ன தீங்குள்ளோர் இன்ன கிரகம் போல்வர் எனல் | 160 |
| இன்னவர்க்கு ஈது இல்லை யெனல் | 195 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| இன்னவர்க்கு இன்னது இல்லை யெனல் | 128 |
| இனத்தை அழிப்பவை | 205 |
| உபகாரம் இல்லாதவை | 145 |
| உலுத்தர் இயல்பு | 152 |
| ஒன்றில்லாமையாற் சிறவாதவை | 180 |
| ஒன்றையொன்று பற்றியிருப்பன | 125 |
| கலிகாலக் கொடுமை | 173 |
| காலம் அறிதல் | 185 |
| குணம் மாறுமை | 157 |
| குமரேசர் மகிமை | 119 |
| குறிப்பறிதல் | 156 |
| கைப்பலனுமவை | 166 |
| கைவிடத் தகாதவர் | 208 |
| சமயத்துக்கு உதவாதவை | 167 |
| சரீர சுகத்திற்கு எதுவானவைகள் | 137 |
| சாகாதிருந்துஞ் செத்தவர் | 150 |
| சிறிதும் பயன் படாதவர் | 151 |
| சிறுமையிற் பெருமை | 175 |
| செத்தும் சாகாதவர் | 149 |
| செய்யத் தகாதவை | 176 |
| செல்வம் நிலையாமை | 189 |
| தகாச் செயல்கள் | 209 |
| தமக்குரியவற்றைக் காணுவிடில் துயரப் படுபவை | 147 |
| தாம் அழியினும் தம் குணம் அழியாதவை | 135 |
| தாழ்தற்பெருமை | 198 |
| திருத்தினும் திருந்தாதவை | 155 |
| திரும்பமாட்டாதவை | 168 |
| திருவருட் சிறப்பு | 183 |
| திரு வாழும் இடங்கள் | 153 |
| தீச் சார்பால் நன்மையிழப்பு | 193 |
| தீச் சார்பாற் பயன் படாதவை | 171 |
| தெய்வச் செயல் | 199 |
| நட்பு நிலை | 184 |
| நடுவு நிலைமை | 177 |
| நரகில் வீழ்வோர் இன்னவர் எனல் | 136 |
| நல்வினைஞ் சேர் பயன் | 161 |
| நல்லோர் நட்பு நிலை | 165 |
| நல்லோர் முறைமை | 210 |
| நற்புலவர் தீப் புலவர் செயல் | 197 |
| நற்பொருளொடு தீப் பொருள் பிறத்தல் | 204 |
| நிலையாதவை | 197 |
| நூலின் பயன் | 213 |
| பகைக்கத் தகாதவர் இவர் எனல் | 140 |
| பதர் எனப்படுவோர் | 146 |
| பல கூடினும் ஒன்றற்கு ஈடாகாதவை | 170 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| பலர்க்கும் பயன்படுவன | 134 |
| பக்ஷபாதத்தால் வருபயன் | 179 |
| பாடல் இயல்பு | 200 |
| பிதாக்கள் | 124 |
| பிறந்தார் பெறும் பேறு | 190 |
| பிறப்பிட நன்மையால் நன்மை பெறுமை | 133 |
| பிறர் மனை நயப்பார்க்கு உறுபயன் | 181 |
| பெரியோர் இயல்பு | 212 |
| பெரியோர் வாக்கிய பரிபாலனஞ் செய்தோர் | 162 |
| பேயெனப்படுவோர் இவரெனல் | 142 |
| மானம் விடாமை | 182 |
| முயற்சியின் மிக்கது ஊழெனல் | 163 |
| மூதேவி வாழும் இடங்கள் | 154 |
| யாக்கை நிலையாமை | 187 |
| யார்க்கும் அனுபோகம் விடாமை | 138 |
| யோக்கியாயோக்கியம் | 211 |
| வணிகர் இயல்பு | 122 |
| வலியோரையும் ஊழ் விடாதெனல் | 161 |
| வறுமையிற் சிறுமை | 192 |
| விபூதி தரிக்கும் முறைமை | 202 |
| விபூதி வாங்கும் முறைமை | 201 |
| வியாதிக்கு மூலங்கள் | 148 |
| விரைந்து அடக்கத் தகுவன இவை யெனல் | 130 |
| வீணுக்கு உழைத்தல் | 206 |
| வேசை நிந்தை | 190 |
| வேசையர் இழிவு | 172 |
| வேட்டகத்து இகழ்ச்சி | 188 |
| வேளாளர் இயல்பு | 123 |

# செய்யுள் முதற் குறிப்பு :


| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| அக்கினியை | - 130 | கதிரவ | - 184 |
| அஞ்சலெனும் | - 210 | கல்லாது | - 167 |
| அண்டிவரும் | - 209 | கல்வினால் | - 148 |
| அந்தணர் | - 143 | கல்வியொடு | - 174 |
| அரசர்பகை | - 140 | கனபார | - 182 |
| அழலுக்கு | - 207 | காகம் பகற் | - 185 |
| அற்பர்க்கு | - 159 | குடிபடையில் | - 121 |
| அனைவர்க்கும் | - 149 | குணமிலா | - 157 |
| அன்றுமுடி | - 161 | குயில்முட்டை | - 206 |
| அன்னதானஞ் | - 212 | குருவிலா வித்தை | - 139 |
| அன்னைசுற் | - 208 | குலமான | - 205 |
| அன்னைதங் | - 160 | குறையாத | - 120 |
| ஆடரவின் | - 168 | கூடியே | - 210 |
| ஆதுலர்க் கன்னம் | - 126 | கைக்குறுதி | - 191 |
| ஆறுதண் | - 194 | கொங்கையில் | - 180 |
| ஆனைதண் | - 193 | கொண்டபடி | - 122 |
| இரவிகாணு | - 147 | கொண்டல் பொழி | - 134 |
| எழுத்தசைகள் | - 200 | கொற்றவர்கள் | - 197 |
| ஓடமிடு | - 189 | கோகனக | - 204 |
| ஓரவிவகார | - 179 | சடமொன் | - 190 |
| கட்டியெரு | - 155 | சத்தியந் தவறு | - 125 |
| கடவாரண | - 153 | சந்தனவிருக்ஷ | - 161 |
| கடனீர் | - 145 | சார்பிலா | - 195 |
| கடனுதவு | - 142 | சிங்கார வனந் | - 133 |
| கடுகடுத் | - 169 | சூரபத்மன் | - 164 |

| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| சேற்றிற் | - 175 | பத்தியொடு | - 202 |
| சோடாய் | - 199 | பதாகிலும் | - 151 |
| சோரமங்கையர் | - 154 | பரிதனி | - 201 |
| ஞாயநெறி | - 129 | பருவத்திலே | - 166 |
| ஞானநெறி | - 127 | பாலிஞெடு | - 211 |
| தங்கமானது | - 135 | பூமிக்கொ | - 119 |
| தந்தார | - 181 | பூமேவு | - 117 |
| தந்தைதாய் | - 162 | பூவில்வேசி | - 172 |
| தருணத்தி | - 144 | மடுவினிற் | - 171 |
| தரையதனி | - 186 | மணமாலை | - 171 |
| தவமதுசெய்தே | - 124 | மன்னரைச் | - 136 |
| தன்பெருமை | - 146 | மனதிற் | - 156 |
| தாய்புத்தி | - 173 | மனுநன்மாங் | - 187 |
| தாரகைக | - 170 | மாதத்திரண்டு | - 137 |
| தாராளமாக | - 131 | மாமதியின் | - 165 |
| தாருவிற் | - 142 | மாரிக்கு | - 118 |
| தான்பிடித் | - 158 | மாறுத | - 150 |
| தானுசரித்து | - 176 | மிக்கான | - 197 |
| திரவியங் | - 152 | வங்காள | - 163 |
| திருமகள் | - 183 | வந்தவிவ | - 177 |
| தேசுபெறு | - 138 | வறுமைதான் | - 192 |
| தேடித்தம் | - 190 | வன்னமயி | - 213 |
| தேவாலயஞ் | - 203 | வாரியாழத் | - 180 |
| நல்லதேவாலயம் | - 123 | வேங்கைகள் | - 198 |
| பகல்விளக் | - 132 | வேசைக்கு | - 128 |
| பஞ்சரித் | - 196 | வேட்டகங் | - 188 |


Printed at the 'Aurora Press,' Madras — 1932.

162932

தமிழ்க்கடல் வெளியீடுகள்

# இப்போது வெளிவரும் நூல் வரிசைகள்

இந் நூல் வரிசைகளில் ஒவ்வொன்றும் க்ரௌன் அளவில் சுமார் 16 பாரங்கள் கொண்டவை. அஃதாவது, இப் புத்தக அளவில் 260 பக்கங்கள் அடங்கியிருக்கும். நூல்கள் இதே மாதிரியான கடிதத்தில் அச்சிடப்பட்டு, கா... என்னும் துணியினுல் பயிண்டு செய்யப்படும்.

இதன் விலை ஒவ்வொன்றும் ஒரு ரூபாய்

I. ஆத்திசூடி
கொன்றை வேந்தன்

II. வெற்றி வேற்கை
உலக நீதி
நீதி வெண்பா

III. வாக்குண்டாம்
நல்வழி
நன்னெறி
நீதிசாரம்

IV. அறப்பளீசுர சதகம்
குமரேச சதகம்

V. நீதிநெறி விளக்கம்
அறநெறிச்சாரம்

VI. திருவேங்கட சதக...
கைலாசநாதர் சதகம்

VII. அண்ணுமலை சதகம்
மீனுட்சி சுந்தரேசர் சதகம்

VIII. திரிகடுகம்
நான்மணிக்கடி...

IX. சிறுபஞ்ச மூலம்
ஏலாதி

X. ஆசாரக்கோவை
முதுமொழிக்காஞ்சி

மற்ற வரிசைகள் பின்னர் வெளியிடப்படும். இடையிடையே வசன நூல்களும் வெளிவரும்.

O-,16M .A
N32,

4A
8-33